

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நெஞ்சமடி நெஞ்சம்... ★ முத்துலட்சுமி ராகவன்



# முத்துலட்சுமி ராகவன்

# நெஞ்சமடி நெஞ்சம்..

லட்சுமி பாலாஜி பதிப்பகம்


முத்துலட்சுமி ராகவன்
நெஞ்சமடி நெஞ்சம்..
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நெஞ்சமடி நெஞ்சம்... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய நெஞ்சமடி நெஞ்சம்...

## 1

'மகாலெட்சுமி ஜவுளி ஸ்டோர்ஸ்' என்ற பெயர் பலகையைப் பார்த்தபடி அந்த நெரிசலான ரோட்டில் நடந்தாள் ரூபிணி. விழுப்புரம் ரெயில்வே ஜங்ஷனிலிருந்து அவளைப் போலவே வெளியே வந்த மக்கள் கூட்டம் ஏற்கனவே நெரிசல் மிகுந்த ஜனக் கூட்டத்தில் கலந்தது. ரெயில் நிலையத்திற்கு முன்னாலிருந்த சாலை பாண்டிச்சேரி செல்லும் சாலையாக இருந்ததால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தது. ஒரு கையில் பெரிய சூட்கேஸுடனுன் மறு கையில் டிராவல் பேக்குடனும் இருந்த ரூபிணி பற்றாக்குறைக்கு தோளில் ஹேண்ட் பேகோடு இன்னும் இரண்டு தோள் பைகளை மாட்டியிருந்தாள்.. ஆட்டோ ஸ்டாண்ட் அருகே வந்ததும் "ஆட்டோ..." என்று அழைத்தாள்.

"ஏறுங்கம்மா... " என்றான் முதலில் நின்று கொண்டிருந்த ஆட்டோவின் அருகே நின்று கொண்டிருந்த டிரைவர்.

ஆட்டோவுக்குள் தன் கையிலிருந்த பெட்டி, பைகளை அடுக்கி விட்டு அதன் பக்கத்திலேயே ஏறி அமர்ந்து கொண்டாள் ரூபிணி.

ஆட்டோவைக் கிளப்பிள டிரைவர் அவளைத் திரும்பிப் பார்த்து "எங்கே போகனும்மா?" என்று கேட்டான்..

"கலைவாணி லேடிஸ் ஹாஸ்டலுக்குப் போகணும்.."

ஆட்டோ நேராகச் சென்று வளைந்து திரும்பி சென்னை செல்லும் மெயின் ரோட்டின் போக்குவரத்தில் கலந்தது. சற்று தூரம் சென்றதும் திரும்பி அகலமான சாலையில் சென்று ஒரு பெரிய மூன்று மாடிக் கட்டிடத்தின் முன்னால் நின்றது.

சுற்றிலும் காம்பவுண்டு சுவருடன் உள்ளே விஸ்தீரமான தோட்டத்தின் நடுவே நின்றிருந்த அக்கட்டிடத்தின்

முகப்பிலும் வெளியே காம்பவுண்டு சுவரிலும்,

'கலைவாணி லேடிஸ் ஹாஸ்டல்' என்ற பெயர் இருந்தது.. பைகளை இறக்கி வாசலில் வைத்த ரூபிணி.

"எவ்வளவு ஆச்சு?" என்று வினவினாள்.

ஆட்டோ டிரைவர் கேட்ட பணத்தை வாக்குவாதம் செய்யாமல் எடுத்துக் கொடுத்து விட்டுத் தன் பெட்டி பைகளை தூக்கிக் கொள்ள ரூபிணி குனிந்தாள்.

"இருங்கம்மா.. நான் பெட்டியை எடுத்துக்கிட்டு வருகிறேன்..."

ஆட்டோ டிரைவர் அவளது பதிலை எதிர்பார்க்காமல் குனிந்து பெட்டியை ஒரு கையிலும்... டிராவல் பேக்கை மற்றொரு கையிலும் எடுத்துக் கொண்டு காம்பவுண்டு வாசலைத் தாண்டி உள்ளே நடந்து சென்றான்.

சுமை குறைந்ததால் நிம்மதி பெருமூச்சு விட்ட ரூபிணி மீதிமிருந்த பைகளையும் ஹேண்ட் பேகையும் எடுத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள். உள்ளே நீண்ட முன்புற ஹாலில் சேர்கள் போடப்பட்டிருக்க நடுவிலிருந்த டீப்பாயில் வார.. மாதப் பத்திரிகைகளும் தினசரியும் கிடந்தன. ஹாலின் மூலையில் இருந்த ஸ்டாண்டில் டி.வி. வைக்கப்பட்டிருந்தது. அது அதிகாலை நேரம்.. அதனால் நைட்டியுடன் இருந்த பெண்கள் காபியை உறிஞ்சியவாறு அங்கிருந்த சேர்களில் அமர்ந்து படித்துக் கொண்டும்... டி.வி. பார்த்துக் கொண்டும் இருந்தனர்.

ஆட்டோ டிரைவர் ஹாலில் பெட்டியையும்... டிராவல் பேக்கையும் வைத்தான்..

"தேங்க்ஸ்..." என்றாள் ரூபிணி உண்மையான நன்றியுடன்.

"தேங்க்ஸ்ஸெல்லாம் எதுக்கும்மா... காலங்கார்த்தால.. விடிஞ்சும் விடியாம இருக்கிற இந்தப் பொழுதில என் ஆட்டோவில் ஏறிய முதல் சவாரியே நீங்கதான்.. கேட்ட துட்டை வாக்குவாதம் பண்ணாம கொடுத்திங்க... முதல் போணியே தகராறா இருந்தால் அன்னைக்கு நாள் பூராவும் தகராறா பூடும்மா.. இன்னைக்கு எந்த விடியா மூஞ்சியும் என் ஆட்டோவில் முத முதலா ஏறிடக் கூடாதேன்னு

பயந்துகிட்டு நின்னேன். மகாலட்சுமி போல நீங்க வந்து நாளைத் தொடங்கி வைச்சிருக்கீங்க... இன்னைக்கு பொழுது நல்ல பொழுதா எனக்கு விடிஞ்சிருச்சு. மனுசருக்கு மனுசர் இந்த உதவிகூடச் செய்யலைன்னா எப்படிம்மா?"

"நீங்க கேட்டது கரெக்டான ரேட்தான். கூடக் கேட்கலையே..."

"அது உங்களுக்குத் தெரிந்த மாதிரி எத்தனை பேருக்குத் தெரியுது? ஆட்டோக்காரன்னா... அடாவடிக் காரன்னு பெயராகிப் போச்சு. எங்களோட நாணயம் பத்தி உங்களுக்குத் தெரிந்தது போல் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறதுன்னு சொல்லுங்க...? வரேன்ம்மா..."

ஆட்டோ டிரைவர் போய்விட ரூபிணி தயக்கமாய் அங்கே அமர்ந்து காபி சாப்பிட்டுக் கொண்டிருந்த பெண்களைப் பார்த்தாள். அவர்களில் ஒரு பெண்.

"ஹாய்... ஐ ஆம் ஜமுனா..." என்றாள்.

"ஐ ஆம் ரூபிணி... வார்டனைப் பார்க்கணுமே.."

"என்கூட வாங்க போகலாம்.."

"பெட்டி பையெல்லாம்..."

"ஆளுக்கு ஒன்னாய் தூக்கிக் கொண்டு போனால் போகிறது."

"உங்களுக்கேன்ன வீண் சிரமம்."

"அட.. இதில் என்னங்க சிரமம்? ஒரு ஆட்டோ டிரைவர் அரை மணி நேரமாய் டயலாக் பேசி பெட்டி பைகளை தூக்கிக் கொண்டு வந்து வைக்கும்போது.. ஹாஸ்டல் மேட். நான் உதவி செய்ய மாட்டேனா..."

அவளின் இயல்பான பேச்சில் கவரப்பட்ட ரூபிணி அவள் பின்னால் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்தாள். ரூபிணியின் டிராவல் பேக்கைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்த ஜமுனா நீண்டிருந்த வராண்டாவில் ஒரு அறையின் முன் நின்று கொண்டு கதவை ஒரு விரலால் மிக மெதுவாய்... நாசுக்காய் தட்டினாள்.

"யார் அது?"

"ஜமுனா மேடம்..."

"பேஸ் வாஷ் பண்ணிக்கிட்டு இருக்கேன்.. என்ன விஷயம்"

"நியூ பேஸ் ஒருத்தங்க வந்திருக்காங்க... அதுதான் விசயம்.."

ரூபிணிக்கு சிரிப்பு வந்துவிட்டது. ஜமுனாவோ இயல்பாய் முகத்தை வைத்துக் கொண்டு ரூபிணியைப் பார்த்து,

"எத்தனை முறை வாஷ் பண்ணினாலும் அந்த பேஸ் தடித்த பேஸாத்தான் இருக்கப் போகுது.. இவங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை..?" என்று கூறினாள்.

இப்போது ரூபிணி வாய் விட்டே சிரித்தாள். அறைக் கதவு திறந்தது. ஈர முகத்தை டவலால் துடைத்தபடி ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி வந்து நின்றாள்.

"ரூபிணி... இவங்கதான் மணிமேகலை மேடம். நம்ம வார்டன். நான் இப்போது உங்கள்கிட்ட சொல்லிக்கிட்டு இருந்தேனே.. பால் வடியும் முகம் இவங்களுடையதுன்னு.. அந்த அழகு முகத்தைக் கொண்டவங்க இவங்கதான்."

"என்னைப் புகழா விட்டால் உனக்குப் பொழுதே போகாது. ஜமுனா... உன் பெயர் என்னம்மா?"

"ரூபிணி மேடம்..."

"எங்கே வேலை பார்க்கிறாய்?"

"எல்.ஐ.ஸி.யில் வேலை கிடைத்திருக்கிறது மேடம். போனில் உங்களிடம் போன வாரம் பேசினேனே... நீங்கள் தான் ரூம் இருக்கிறது உடனே வந்து சேர்ந்து கொள்ளலாம் என்று சொன்னீர்கள்."

"யெஸ்.. யெஸ்.. ஐ ரிமம்பர் இட்.. சும்மா உன்னை வெரி பை பண்ண கேட்டேன். நீதானா.. அது என்று கன்பர்ம் பண்ணிக் கொண்டேன்." மணிமேகலை சமாளித்தாள்.

"பொய்.. பொய்.. அம்மணிக்கு மறதி அதிகம். மூக்குக் கண்ணாடியை போட்டுக் கொண்டே கண்ணாடியைத் தேடும் ரகம். ஞாபகசக்தி பிட்டுக்குச்சுன்னு ஒத்துக்காது. கப்ஸா விடும் பாருங்களேன். நீங்க பேசின விவரத்தை மறந்துவிட்டு நீதானா அந்தக் குயில்ன்னு டெஸ்ட்

பண்ணினேன் என்று கதை விடுவதை..." ரூபிணியின் காதோரமாய் ஜமுனா முணுமுணுத்தாள்.

"ஜமுனா என்ன சொல்கிறாள்?" மணிமேகலை வினவ ரூபிணி சங்கடத்துக்கு உள்ளானாள்.

"உங்களைப் பற்றி பெருமையாய் சொல்லிக் கொண்டிருந்தேன் மேடம். உங்களுக்கு அபார ஞாபக சக்தின்னு எனக்குத் தெரியும். ரூபிணிக்குத் தெரியாதே..." ஜமுனா சிரிக்காமல் கூறினாள்.

"ஜமுனாவிற்கு என்னைப் பற்றிப் பேசுவதென்றால் அல்வா சாப்பிடுவது மாதிரி... அவ்வளவு பிடிக்கும். நீ உன் அப்பாயிண்ட்மென்ட் ஆர்டரின் ஜெராக்ஸ் காபி இருந்தால் கொடும்மா... மற்ற பயோ டேட்டாவைச் சொல்லு..."

மணிமேகலை ஒரு விண்ணப்பப் படிவத்தை எடுத்து ரூபிணியிடம் விவரம் கேட்டுக் கொண்டே மளமளவென்று பூர்த்தி செய்தாள். ரூபிணி தயாராய் வைத்திருந்த அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரின் ஜெராக்ஸ் காபியைக் கொடுத்தாள்.

"பரவாயில்லையே ரெடியாய் வைத்திருக்கிறாயே.."

"நீங்கள் அப்பாயின்ட்மென்ட் ஆர்டரின் ஜெராக்ஸ் காபி வேண்டுமென்று போனில் சொல்லியிருந்தீர்கள் மேடம்."

"மேடம் அவங்க சொன்னதை நீங்க நினைவில் வைத்திருந்தீங்களான்னு செக் பண்ணுகிறாங்க ரூபிணி. நான் சொல்வது சரிதானே மேடம்..." மீண்டும் ஜமுனா சிரிக்காமல் கூற ரூபிணிக்கு அவளை மிகவும் பிடித்து விட்டது.

"கரெக்டாகச் சொல்லி விட்டாய் ஜமுனா. நீ நான் சொன்னதை மறந்து விடாமல் இருக்கியான்னு செக்பண்ணினேன்ம்மா... இங்கே கையெழுத்துப் போடு..."

மணிமேகலை நீட்டிய விண்ணப்ப படிவத்தில் கையொப்பம் இட்டு அவளிடம் திருப்பிக் கொடுத்தாள் ரூபிணி.

"சரி நீ போம்மா..." மணிமேகலை எதையோ தேடியவாறு கூற,

"எங்கே போவது?" என்று தெரியாமல் ரூபிணி விழித்தாள்.

"பார்த்தீர்களா... மறதி மணிமேகலை பண்ணும் அட்டகாசத்தை. ரூமை அலாட் பண்ணாமல் போகச் சொல்லுதே.." சன்னமாய் ரூபிணியிடம் கூறிவிட்டு மணிமேகலையிடம் சத்தமாய்,

"மேடம் நீங்க எந்த ரூமுன்னு சொன்னீங்க. எனக்கு மறந்து விட்டதே. நான்தான் இவங்களுக்கு வழிகாட்டணும்?" என்று கேட்டாள் ஜமுனா.

'எந்த ரூமைச் சொன்னோம்?' என்று மணிமேகலை விழித்தவாறு ஜமுனாவைப் பார்த்துக் கேட்டாள்.

"உன் ரூமில் யார் யார் இருக்கிறீங்க."

"நான் மட்டும்தான் மேடம்."

"ஏன் உன் ரூம் மேட் என்ன ஆனாள்."

"வேலை மாறுதல் வாங்கிக் கொண்டு போனாள்."

"எப்போது...?"

"நேற்றுச் சாயங்காலம்தான் மேடம்.. நீங்கள் கூட அவளைக் கட்டித் தழுவி பிரியா விடை கொடுத்தீங்களே.."

ஜமுனா எடுத்துக் கொடுக்கவும் அதைப் பிடித்துக் கொண்ட மணிமேகலை.

"யெஸ்.. யெஸ்.. இவங்களை உன் ரூமில்தான் தங்க வைக்கப் போகிறேன்.. அழைத்துக் கொண்டு போ.." என்று கூறினாள்.

"தேங்க் யு மேடம்..." என்று மணிமேகலையிடம் கூறி விட்டு,

"வாங்க... ஓடிப்போயிடலாம்... இன்னும் கொஞ்சம் நேரம் இங்கேயே நின்றால் நம்மையே யாருன்னு கேட்டு விடும் இந்தம்மா..." என்று ரூபிணியிடம் கிசுகிசுத்தவாறு பெட்டியை எடுத்துக் கொண்டாள் ஜமுனா.. அவளைப் பின் தொடர்ந்து அறையை விட்டு வெளியே வந்த ரூபிணிக்கு 'அப்பாடி...' என்றிருந்தது.

"இவங்க எப்பவுமே இப்படித்தான் பேசுவாங்களா?" ரூபிணி கவலையாய் விசாரித்தாள்.

"இப்படித்தான் எப்பவுமே பேசும். அதுக்கு நீங்க ஏன் கவலைப்படறீங்க? அது மறதி அதுக்கு. நமக்கென்ன

வந்தது?" என்றவாறு மாடிப்படியில் கால் வைத்த ஜமுனா.

"ஆமாம்.. நீங்க இன்னும் காபி சாப்பிடலையே.." என்று கேட்டு விட்டு அங்கே மாடிப்படியை பெருக்கிக் கொண்டிருந்த வேலையாளிடம்,

"ரோஸ்.. எங்க ரூமுக்கு ரெண்டு காபி வாங்கிட்டு வாயேன்.." என்று கூறினாள்.

"ஏம்மா... என் பெயர் எவ்வளவு அழகா இருக்கும். அதை ரோஸ் ரோஸ்ன்னு கொலை பண்றியே.. என் பேரை சரியாச் சொல்லிக் கூப்பிட்டால்தான் வாங்கிக்கிட்டு வருவேன்" அந்த ரோஸ் என்று அழைக்கப்பட்ட வேலையாள் நொடித்தாள்.

"இதுக்குப் போய் ஸ்டிரைக் பண்ணலாமா? உன் பெயர் ரோஜாரமணிதான். முழுப் பெயரையும் சொல்லி ரோஜாரமணின்னு கூப்பிட எனக்கும் ஆசைதான். அதில பாரு ரோஸ்.. எனக்கு வாய் தவறி ஜில் ஜில் ரமாமணின்னே உன்னைக் கூப்பிட வருது..."

"சரி சரி.. போ.. ரூமுக்கு காபியைக் கொண்டாரேன். ஆமாம் இது யாரு புதுமுகமாய் இருக்கே.."

"இந்த புதுமுகத்தை அறிமுகம் செய்து வைக்கிறேன் கேள்.. இவங்க பெயர் ரூபிணி எல்.ஐ.ஸி.யில் வேலை பார்க்கிறாங்க."

"ஆமாம். இது என்னா புதுசா கீது? உன் ரூம் மேட் எல்லாத்தையும் வாடி போடின்னு கூப்பிடுவே. இதைப் போயி அவங்க இவங்கன்னு மரியாதையாய் கூப்பிடுறயே.. என்னா விஷயம்?"

"உன்னைப் போல் நாலு பெரிய மனிதர்கள் இந்த விஷயத்தை இவங்க காதில் போட்டு வாடி போடின்னு கூப்பிட பெர்மிசன் வாங்கிக் கொடுக்கட்டும்ன்னு வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேன். அதுதான் விஷயம்." ரூபிணியைப் பார்த்தவாறு ரோஜாரமணியிடம் கூறினாள் ஜமுனா.

"பெர்மிசன் கிராண்டட்" ரூபிணி சிரித்தாள்.

"அப்பா.. இப்போதுதான் நிம்மதியாச்சு. தேங்க் யூ ரோஸ். நீ போய் எனக்கும் இவளுக்கும் காபி கொண்டு வா.."

இப்படித்தான் விழுப்புரத்தில் ரூபிணி காலடி எடுத்து வைத்த ஒரு மணி நேரத்திற்குள் ஜமுனா அவளுக்குத் தோழியானாள்.

## 2

"இதுதான் உங்கள் சீட். வேலையில் சந்தேகம் வந்தால் ப்ரீதியிடம் கேளுங்கள். ஷி இஸ் எக்ஸ்பர்ட்." என்று கூறியவாறு பக்கத்து சீட்டிலிருந்த ப்ரீதியை பார்வையால் விழுங்கினான் ஜவஹர்.

அவன் கூறிய எக்ஸ்பர்ட் அவனை மேல் பார்வை பார்த்து முறைத்தாள். ரூபிணி பேசாமல் தன் சீட்டில் அமர்ந்து கொண்டாள். ஜவஹர் தன் முயற்சியைத் தொடர்ந்தான்.

"ஆள் பார்க்க சிம்பிளா இருக்காங்கன்னு நினைத்து விடாதீங்க.. இவங்களுக்கு உடம்பெல்லாம் மூளை. நீங்களும் நானும் நாள் பூராவும் செய்யும் வேலையை இவங்க ஒரு நொடியில் செய்து முடித்து விடுவாங்க."

"மிஸ்டர் ஜவஹர்.. நான் ஒரு நொடியில் செய்யும் வேலையை இந்த ஆபிஸிலேயே நீங்கள் ஒருவர்தான் ஓர் நாள் முழுவதும் செய்வீர்கள்.. இதில் புதிதாய் வந்திருக்கும் அவங்களை ஏன் நீங்களும் நானும் என்று கூட்டுச் சேர்க்கிறீர்கள். அப்படியிருக்கையில் இங்கே நின்று கொண்டு வெட்டிப் பேச்சுப் பேசி பொழுதை ஓட்டாவிட்டால்தான் என்ன? போங்க சார் போய் உங்கள் வேலையைப் பாருங்கள்."

'ஜெயம்' திரைபடத்தில் 'சதா' கையை நீட்டி 'போ..' என்று சொல்வதுபோல் ப்ரீதி கையை நீட்டி அவனைப் போகச் சொன்னாள்.

"ஹி... ஹி.. ப்ரீதி என்னிடம் எப்போதுமே இப்படித் தான் ஜாலியாய் பேசுவாங்க" ஜவஹர் ப்ரீதியின் மேல் பதித்த

பார்வையை விலக்கிக் கொள்ளாமல் ரூபிணியிடம் கூறினான்.

'இதுவா ஜாலியாய் பேசுவது?' ரூபிணி தலையில் கை வைத்துக் கொண்டு ப்ரீதியைப் பார்த்தாள்.

"ஏன் சார்... வேலையில் சேர்ந்த முதல் நாளே அவங்களைப் பயமுறுத்தப் பார்க்கறீங்க... பாவம் சார்.. விட்டு விடுங்க" ப்ரீதி எரிச்சலுடன் கூறினாள்.

"ஆக்சுவலாய் ப்ரீதி... இவங்களை சீட்டுக்குப் போகச் சொல்லி அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபிஸர் சொல்லி விட்டார். இவங்களுக்கு சீட் தெரியாமல் விழித்தார்கள். நான்தான் நம்ம ப்ரீதியின் சீட்டிற்கு பக்கத்து சீட் என்று சொல்லி அழைத்து வந்தேன்..."

"நம்ம ப்ரீதி...?"

"ஆமாம்...."

"இப்ப உங்கள் சீட்டிற்குப் போகப் போறீர்களா... இல்லை.. நான் ஆபிஸர்கிட்ட போய் கம்ப்ளெயின்ட் பண்ணவா..?"

"அப்பச்சரி ப்ரீதி... நாம் ஈவினிங் மீட் பண்ணலாம்.."

"நீங்க அடங்கவே மாட்டீங்களா..."

"பை... ப்ரீதி... பைபை.."

"இம்சையைக் கிளப்பாமல் போங்க சார்.. அதோ இருக்கிற உங்கள் சீட்டிற்கு போவதற்கு டாட்டா சொல்லி உயிரை எடுப்பீர்கள்... சபாபதி... எனக்கு நம்ம ஆபிஸ் கேண்டினிலிருந்து ஒரு கப் காபி வாங்கிட்டு வாப்பா..." ப்ரீதி தலையைப் பிடித்து நீவ ஆரம்பித்தாள்.

"இந்தாங்க மேடம்..." பியூன் சபாபதி அவள் டேபிளில் காபிக் கோப்பையை வைத்தான்.

"எப்படிப்பா கரெக்டா வாங்கி வந்தாய்?" ப்ரீதி ஆச்சர்யமாய் வினவினாள்.

"ஜவஹர் சார் உங்கள் டேபிள்கிட்ட வந்து நின்னா உங்களுக்கு தலைவலியை வரவைக்காமல் போக மாட்டார். அவர் உங்க சீட்டுக்கிட்ட வந்து நின்னவுடன் நான் காபி

வாங்கப் போய் விட்டேன்..." சபாபதி காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

"நீ நல்லாயிருப்பா... காபியைக் கொடு..."

சற்று உயரம் கம்மியாய்.. பூசின உடல் வாகுடன் சிவந்த நிறத்தில் இருந்த ப்ரீதி பார்க்க அழகாக இருந்தாள். முதுகுவரை வெட்டிவிடப்பட்டக் கூந்தலை ஒரு கிளிப்பில் அடக்கி முதுகில் விரிய விட்டிருந்தாள். பச்சைக் கலரில் சுடிதார் அணிந்திருந்தாள்.

"பச்சைக்கிளி முத்துச்சரம். முல்லைக் கொடி யாரோ.." பாடியவாறு ஏதோ வேலையிருப்பது போல் ப்ரீதியைத் தாண்டிச் சென்றான் ஜவஹர்.

"இவருக்கு இந்தச் சிச்சுவேஷன் சாங்கெல்லாம் எப்படிப்பா... உடனே நினைவுக்கு வருது?" சபாபதியிடம் கேட்டாள் ப்ரீதி.

"அதைத் தான் மேடம் நானும் யோசிச்சுக்கிட்டு இருக்கேன். நேத்து நீங்க மஞ்சள் கலரில் சுடிதார் போட்டுக் கிட்டு வந்தீங்க. ஜவஹர் சார் நேத்து பூராவும் 'மஞ்சக்காட்டு மைனா... என்னை கொஞ்சிக் கொஞ்சிப் போனா'ன்னு பாடிக்கிட்டு அலைஞ்சார். முந்தா நாள் பூராவும் 'கருப்புத்தான் எனக்குப் பிடிக்க கலரு'ன்னு பாடிக்கிட்டு இருந்தார். என்னடான்னு நான் திரும்பிப் பார்த்தால் நீங்கள் கருப்புக் கலர் சுடிதார் போட்டிருந்தீங்க..."

"இந்த ஆளை நாடு கடத்தணும் சபாபதி."

"அது எதுக்கு கருமாயமா...? பேசாமல் ஆபிஸ் கடத்துங்கள்..."

"அதுக்குத்தான் நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"அவரைக் கடத்த முடியாவிட்டால் நீங்கள் ஆபிஸ் மாறி விடுங்களேன்."

சபாபதி யோசனை கூறினான்.

"எப்படிப் போவது சபாபதி... நான் செலக்ட் ஆகி வேலை பார்த்தது திருநெல்வேலியில்.. இந்த விழுப்புரம்தான் எனக்கு சொந்த ஊர்... என் அப்பா அலையாய் அலைந்து யார் யாரையோ சிபாரிசுக்கு பிடித்து விழுப்புரத்திற்கு

டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு வந்தார். சொந்த ஊரை விட்டு நான் வேறு எந்த ஊருக்குப் போக?"

"ச்ச்ச்..."

"இப்ப எதுக்குப்பா சூள் கொட்டுகிறாய்?"

"உங்க கதையைக் கேட்டால் பரிதாபமா இருக்கு மேடம்.."

"நீயெல்லாம் பரிதாபப்படும் நிலைமைக்கு என்னை ஆளாக்கி வைத்திருக்கும் அந்த ஜவஹரை இதுக்காகவே கழுவில் ஏத்தனும்..."

ப்ரீதி பல்லைக் கடித்துக் கொண்டு கூறிக் கொண்டிருந்தபோது ஜவஹர் மீண்டும் "பச்சை நிறமே. பச்சை நிறமே" என்று பாடியவாறு அவளைக் கடந்து சென்hறன்.

"போகிறதைப் பார்... ஆந்தை மாதிரி முழிச்சுக்கிட்டு."

"நீங்க வேற மேடம்.. அவருடைய கண்ணழகைப் பார்த்து விட்டு கண்ணன்னு பெயர் வைக்கணும்னு அவருடைய பாட்டி சொன்னாங்களாம்."

"அப்புறம் இவர் ஜவ்வு மாதிரி சவசவன்னு ஆளாய் இருக்கிறதைப் பார்த்து விட்டு ஜவஹர்ன்னு பெயர் வைத்து விட்டார்களா?"

ப்ரீதி கிண்டலாய் வினவ ரூபிணி 'களுக்'கென்று சிரித்தாள். ப்ரீதி அவளைப் பார்த்தாள். ஒல்லியாய்... உயரமாய். கோதுமை நிறத்தில் ஆளைக் கவரும் அழகோடு இருந்தாள் ரூபிணி... ப்ரீதியின் பொறாமையைத் தூண்டி விட்டது அவளுடைய நீண்ட பின்னல்.. ப்ரீதி தன்னைக் கவனிப்பதை உணர்ந்ததும் நிமிர்ந்து அவளைப் பார்த்தவளின் கண்கள் பெரியதாய் அழகாய் இருந்தன.

"நீங்க எந்த ஊர்?" ப்ரீதி கேட்டாள்.

"கோவில்பட்டி..."

"இங்கே எங்கே தங்கி இருக்கிறீர்கள்?"

"கலைவாணி லேடிஸ் ஹாஸ்டலில்..."

"ஓ...! அதுவா? நல்ல ஹாஸ்டல்தான்.. பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருக்கும். இங்கு போன வருடம் வரை

வேலை பார்த்த எலிஸபெத்.. அங்குதான் தங்கியிருந்தாள். இப்போது சென்னையில் வேலை பார்க்கிறாள்."

"அப்படியா?"

"நீங்கள் என்ன மேஜர்"

"பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ்."

"எந்த காலேஸ்?"

"விருதுநகர் காலேஸ்."

"அங்கேயிருந்து இங்கே வேலைக்கு வந்திருக்காங்க... பாவம்."

"நீயென்ன சபாபதி எல்லாவற்றிற்கும் பாவம் போடுகிறாய்.. எனக்குக் கூட பர்ஸ்ட் அப்பாயின்மென்ட் கிடைச்சது திருநெல்வேலியில் தான்... வேலைக்குத்தானே வந்திருக்கிறோம். இதில் பாவப்பட என்ன இருக்கிறது?"

ரூபிணி சபாபதியைப் பார்த்துப் புன்னகைத்தாள். சபாபதிக்கு அவளைப் பிடித்து விட்டது. ப்ரீதி கேள்விக் கணைகளை தொடர்ந்து தொடுக்க ஆரம்பித்தாள்.

"அப்பா அம்மா என்ன செய்கிறாங்க...?"

"இரண்டு பேருமே பேங்க் எம்ப்ளாயி..."

"ஓ.. என் அப்பா ரயில்வேயில் வொர்க் பண்ணுகிறார். அம்மா ஹவுஸ் வொய்ப்.. கூடப் பிறந்தவங்க எத்தனை பேரு?"

"அக்காவும், தம்பியும் இருக்கிறாங்க... அக்கா கம்ப்யூட்டரில் சாப்ட்வேர் என்ஜினியர்... மேரேஜ் முடிஞ்சிடுச்சு.. அக்காவின் ஹஸ்பெண்டும் சாப்ட்வேர் என்ஜினியர்தான்... இரண்டு பேரும் பெங்களூரில் இருக்கிறார்கள். தம்பி என்ஜினியரிங் தேர்ட் இயர் படிக்கிறான்."

"எனக்கு இரண்டு அண்ணன்கள். இரண்டு பேருமே ரயில்வேயில் அப்பாவைப் போல நுழைந்து விட்டார்கள். என் மேரேஜ் முடிவதற்காக அவர்களது மேரேஜை தள்ளிப் போட்டிருக்கிறார்கள்."

ரூபிணியிடம் பேசியவாறு எழுந்து வந்து அவளின் சேரிற்கு அருகே ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு

அமர்ந்த ப்ரீதி.

"கம்ப்யூட்டரை ஓப்பன் பண்ணுங்க... உங்க சீட் வொர்க்கை சொல்லிக் கொடுக்கிறேன்..." என்றாள்.

"தேங்க்ஸ்ங்க... நான் எப்படி உங்களைக் கேட்பதுன்னு பயந்து கொண்டு இருந்தேன்.."

"எதுக்கு பயம்? உங்க சீட் வொர்க்கை நான் கொஞ்ச நாள் பார்த்தேன். என்ன சந்தேகம்ன்னாலும் என்னைக் கேளுங்க."

அந்த சீட்டின் வேலைகளை அக்கு வேறு ஆணி வேராக விளக்கினாள் ப்ரீதி. அவள் சொல்லிக் கொடுத்ததை உடனுக்குடன் புரிந்து கொண்டாள் ரூபிணி.

"குட்... சீக்கிரமாய் கத்துக்கிட்டிங்க. என்ன சந்தேகம் என்றாலும் என்னிடம் கேளுங்க" ப்ரீதி அவளுடைய இடத்திற்குப் போனாள்.

ரூபிணி ஆர்வமாய் வேலையைத் தொடங்கினாள். மதிய உணவு நேரத்தின்போது ப்ரீதி எழுந்து அவளருகில் வந்தாள்.

"சாப்பிடப் போகலாமா..."

"இதோ வந்து விட்டேன்..."

"என்ன சாப்பாடு கொண்டு வந்தீங்க?"

"தெரியவில்லைங்க.. ஹாஸ்டலில் பொட்டலம் போட்டு வைத்திருந்தாங்க. காலை டிபன் சாப்பிட்டதும் கையோடு எல்லோரும் எடுத்துக் கொண்டோம்."

"சரி வாங்க..."

டைனிங் ஹாலில் இருவரும் நுழைந்தனர். ப்ரீதி மற்ற பெண்களுக்கு ரூபிணியை அறிமுகப்படுத்தி வைத்தாள். ரூபிணி எல்லோரிடமும் பேசி. அவர்கள் கேட்ட விவரங்களை கூறிவிட்டு தன் உணவுப் பொட்டலத்தைப் பிரித்தாள்.

"வாசனையே அமர்க்களமாய் இருக்கு.. என்ன சாதம்?"

"தக்காளி சாதம்."

"அந்த ஹாஸ்டலில் தினமும் வெரைட்டியாய் சமையல் செய்து போடுவார்கள். சாப்பாடும் டேஸ்டாய் இருக்கும்."

பேசியவாறு தனது கேரியரைத் திறந்து சாப்பாடை எடுத்து ஒரு தட்டில் வைத்து ரூபிணியின் பக்கம் நீட்டினாள் ப்ரீதி. அவள் தயங்கவும்.

"ஈஸி ரூபிணி... குடும்ப விசயங்கள் முதற்கொண்டு ஷேர் பண்ணிக் கொள்கிறோம்... சாப்பாட்டை ஷேர் பண்ணிக்க வேண்டாமா?" என்று கூறினாள்.

பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். கை கழுவ எழுந்திருக்கும்போது ஒருவரை ஒருவர் 'வா... போ' என்று இயல்பாய் கூப்பிட்டுக் கொள்ளும் அளவுக்கு மனதால் நெருங்கி விட்டார்கள்.

"ஆமாம் ப்ரீதி. அந்த ஜவஹர் ஏன் உன்னையே சுற்றி வருகிறார்...?"

"லவ்வாம்.."

"உனக்கு அவரைப் பிடிக்காதா?"

"பிடிக்காது."

"அதைச் சொல்லிவிட வேண்டியதுதானே..."

"நிறைய முறை சொல்லிவிட்டேன்.. சொல்லித் திருந்துற ஜென்மமில்லை அது..."

"அதுவா... எது?"

"இந்நேரம் வரை எந்த ஜந்துவைப் பற்றி நீ பேசிக் கொண்டிருந்தாயோ அதுதான்... புரியாதது போல என்ன கேள்வி?"

அவர்கள் இருவரும் அவரவர் சீட்டிற்கு வந்து அமர்ந்த போது,

"ஹாய் ரூபிணி... வேலையெல்லாம் பழகியாகி விட்டதா?" என்று ப்ரீதியை பார்த்தபடி ரூபிணியிடம் கேட்டான் ஜவஹர்.

"பழகி விட்டேன் சார்.."

"ஒரே நாளில் எப்படிப் பழக முடியும்? மெல்ல மெல்லத்தான் எல்லாம் புரியும்.." ஜவஹர் ப்ரீதியை ஜாடை யாய்

நோக்கியவாறு கூறினான்.

"சில மண்டூகங்களுக்கு எத்தனை வருஷம் ஆனாலும் புரியாது." ப்ரீதி பல்லைக் கடித்தாள்.

"புரியா விட்டால் புரிய வைக்க முயற்சி பண்ணுவது தானே..." ஜவஹர் நேரடியாய் ப்ரீதியிடம் கேட்டான்.

"எப்படி...?" ப்ரீதி கேட்டதுதான் தாமதம்.. அவன் பாட ஆரம்பித்து விட்டான்.

"அருகில் இருந்து சொல்லிக் கொடுத்தால்,

உலகம் புரியாதா...?"

சபாபதி ஆச்சரியப்பட்டான்.

"அது எப்படி சார் நீங்க மட்டும் உடனே ஒரு சிச்சுவேசன் சாங்கை போட்டுத் தாக்கறீங்க?"

"காதல் வந்து விட்டால் பாடல் வந்து விடும் சபாபதி" ஜவஹர் பெருமையுடன் ப்ரீதியைப் பார்த்துக் கொண்டான்.

"சபாபதி..." ப்ரீதி அழைத்தாள்.

"என்ன மேடம்...?"

"இப்ப சார் பேசினாரே... ஒரு வசனம்... அது முழுதாக உனக்குத் தெரியுமா?"

"அது பாட்டு மேடம்..."

"அதை நீதான் சொல்ல வேண்டும். எனக்கு அது வசனம்தான்.."

"இல்லை மேடம்... அது நான் உன்னை அழைக்க வில்லைன்னு ஆரம்பிக்கும் பாட்டு..."

"எப்படி ஆரம்பிக்கும்..."

"நான் உன்னை அழைக்கவில்லை..."

"அதை அப்படியே அந்த பிரகிருதிகிட்ட நான் பாடினேன்னு பாடிக்காட்டி வேலையைப் பார்க்க அனுப்பு."

ஜவஹர் அவள் என்னவோ அவனைப் பார்த்து 'ஐ லவ் யூ...' என்று சொல்லிவிட்டதுபோல் முக மலர்ச்சியுடன் அவனது இருக்கைக்குப் போனான்.

ப்ரீதி தலையில் அடித்துக் கொண்டாள்.

# 3

வானம் நீலநிறமாய் காட்சி அளித்தது. அதில் வெண்ணிற மேகங்கள் பஞ்சுப் பொதியாய் நகர்ந்து கொண்டிருந்தன. ஒரு மேகத்தின் மீது பட்டுக் கம்பளத்தில் அமர்ந்திருப்பது போல் ரூபிணி அமர்ந்திருந்தாள். வட்ட வடிவமான நிலவு வானில் மிதந்து கொண்டிருந்தது. அதன் அருகே சென்ற மேகத்திலிருந்த ரூபிணி நிலவை எட்டித் தொட்டாள்.

"ஸ்ஸ்.. ஆ.." கன்னத்தில் ஈர ஸ்பரிசம் பட கண் விழித்தாள். ஜமுனா ஈரக்கையுடன் அவளைத் தொட்டு எழுப்பிக் கொண்டிருந்தாள். கண் விழித்த ரூபிணி தூக்கம் கலையாதவளாய் சுற்று முற்றும் பார்த்தாள்.

"நான் எங்கேயிருக்கிறேன்?"

"சரியாப் போச்சு போ.. மயக்கம் தெளிந்து ஹாஸ்பிடலில் கண் விழிக்கும் சினிமா ஹீரோயின் கேள்வி கேட்பது போல் கேட்கிறாயே... இது ஹாஸ்பிடல் ரூம் இல்லேம்மா... ஹாஸ்டல் ரூம்.. தாச்சிக்கிட்டது போதும்... எழுந்துக்கோ பாப்பா..."

"ஆவ்..." என்று அழகாய் கொட்டாவி விட்டபடி எழுந்த ரூபிணி கைகளை தூக்கி சோம்பல் முறித்தாள்.

"இதை பாருடா... இவள் சோம்பல் முறிக்கறதை.. ஹலோ.. நேற்று நான் உன்னிடம் என்ன சொன்னேன்? நீ இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்...?"

"என்ன சொன்னாய்..." தலையணையில் முகம் புதைத்துக் கொண்டு குப்புறப் படுத்துக் கொண்ட ரூபிணி மீண்டும் தூங்க ஆரம்பித்தாள்.

"நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். இவள் பாட்டுக்கு தூங்குகிறாளே..." ஜமுனா தலையணையை எடுத்து ரூபிணியின் முதுகில் ஒரு போடு போட்டாள்.

"ஏண்டி... என்னைத் தூங்க விடாமல் இந்தப் பாடு படுத்துகிறாய்..." ரூபிணி எழுந்து கட்டிலில் அமர்ந்து தலையணையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள்.

"இன்றைக்கு என்ன கிழமை?"

"ஞாயிறு.. அதனால்தானே ஆபிஸ் போக வேண்டிய டென்சன் இல்லாமல் தூங்குகிறேன்.. வாரத்தில் ஒரு நாள்.. நிம்மதியாய் என்னைத் தூங்க விடுகிறாயா?"

"ஏண்டி... அதைத்தான் ஒவ்வொரு ஞாயிறும் உனக்கையாய் தூங்கி எழுகிறாயே.. இந்த ஞாயிறு மட்டும் உன் பகல் தூக்கத்தை தியாகம் செய்யக் கூடாதா?"

"ஏன்...?" என்று கேட்டவாறு மீண்டும் சுருண்டு படுக்கப் போனவளை ஒரு கிள்ளு கிள்ளினாள் ஜமுனா.

"ஆ... ஏண்டி பேயே கிள்ளுகிறாய்....?"

"உன் தூக்கத்தை வேறு எப்படி விரட்டுவது? உனக்குப் போய் யாருடி ரூபிணின்னு பெயர் வைத்தது? ஆக்சுவலா உனக்கு கும்பகர்ணி என்கிற பெயர்தான் பொருத்தமாக இருக்கும்..."

"பெயரை வேண்டுமானால் உன் இஷ்டத்திற்கு மாற்றி வைத்துக் கொள். இப்போது என்னைத் தூங்க விடு.."

"தூங்குவதிலேயே குறியாக இரு.. என்னை விஷ் பண்ண வேண்டுமென்ற எண்ணமே உனக்கு இல்லையா?"

"எதற்காக...? ... ஓ. இன்று உன் பர்த்டே.. ஜமுனா... மெனி மோர் ரிடர்ன்ஸ் ஆப் தி டே... அன்ட் ஹேப்பி ப்ர்த்டே டு யு."

"வாழ்த்து மட்டும்தானா?"

"பரிசும் உண்டே..."

தூக்கம் பறந்தோட ரூபிணி எழுந்து சென்று ஓர் அட்டைப் பெட்டியை அவளது பெட்டியிலிருந்து எடுத்து ஜமுனாவின் கையில் கொடுத்தாள்.

"வாவ்.. புது சுடிதார்... என்னுடைய பேவரைட் ப்ளூ கலர்.. தேங்க் யூ ரூபிணி.. தேங்க் யு வெரிமச்.. பட் எனக்கு இது போதாதே..."

"வேறு என்ன வேண்டும்?"

"இன்று எங்களுடன் பாண்டிச்சேரி வருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறாய்... மறந்து விடாதே..."

"ஜமுனா... ப்ளீஸ்.. எனக்கு அவுட்டிங் போவதென்றாலே அலர்ஜி..."

"எனக்காக ப்ளீஸ்..."

"அதற்கு பாண்டிச்சேரிக்கு ஏன் போக வேண்டும்? இங்கேயே கோவிலுக்குப் போய் விட்டு வரலாமே..."

"கூப்பிடு தூரத்தில் பாண்டிச்சேரியை வைத்துக் கொண்டு கோவிலுக்கு மட்டும் போய் வருவதென்றால் எப்படி ரூபிணி."

"நீ மற்ற பிரண்ட்ஸுகளுடன் போய் விட்டு வாயேன்.."

"நீயும் ஹாஸ்டலுக்கு வந்து ஆறு மாதங்களாகி விட்டது. ஒரு நாள் கூட எங்களுடன் வெளியே வந்ததில்லை... இன்று மட்டுமாவது வாடி போகலாம்..."

ஜமுனா ரூபிணியின் அருகே அமர்ந்து அவள் கன்னம் திருப்பிக் கெஞ்சினாள்.

"ஓகே.. வா போகலாம்... பட் இருட்டுவதற்குள் திரும்பி வந்து விட வேண்டும். அப்படியென்றால்தானே வருவேன்."

"வந்து விடலாம்."

ரூபிணி எழுந்து குளிக்கக் கிளம்பிய போது அறைக் கதவு தட்டப்பட்டது. ஜமுனா போய் கதவைத் திறந்தாள். கையில் பூங்கொத்துடன் நின்றிருந்த வார்டன் மணிமேகலை நேராய் ரூபிணியிடம் போய் பூங்கொத்தை நீட்டி,

"பிறந்த நாள் வாழ்த்துக்கள்..." என்றாள். ரூபிணி சிரிப்பை அடக்கிக் கொண்டு, "மேடம் பர்த்டே எனக்கில்லை. ஜமுனாவுக்கு..." என்றாள்.

"அப்படியா... சரிம்மா பூங்கொத்தை கொடு" என்று வாங்கி,

"பிறந்த நாள் வாழ்த்துக்கள்..." என்றபடி ஜமுனாவிடம் கொடுத்தாள் மணிமேகலை.

"தேங்க் யூ மேடம்."

"புது டிரெஸ் போட்டுக்கலையா யமுனா..."

"பர்த்டேன்னா புது டிரெஸ்தான் போட்டுக்கணும், புதுப் பெயரை வைத்துக் கொள்ளக் கூடாது. என் பெயர் ஜமுனா மேடம்."

"நான் அப்படித்தானே சொன்னேன். உனக்கும் நான் பேசியது சரியாய் கேட்கவில்லை போல."

ஜமுனா கோபத்துடன் ரூபிணியின் காதுகளில் முணுமுணுத்தாள்.

"இந்தம்மா மறதி மணிமேகலையாய் இருந்துக்கிட்டு எனக்கு செவிடுன்னு பட்டம் கட்டுவதைப் பார்த்தாயா... இந்தக் கொடுமையைத்தான் சலிக்காம பண்ணுது..."

"ஜமுனா என்ன சொல்கிறாள் ரூபிணி..."

"வார்டன் மேடம் எனக்கு பெற்ற தாய் மாதிரி என்கிறாள் மேடம்."

ஜமுனா அதிசயப்பட்டுப் போய்,

"தேறிட்டடி... நீ..." என்று முணுமுணுத்தாள்.

மணிமேகலையிடம் புன்னகைத்தவாறு ரூபிணியிடம் உதடு அசையாமல்,

"உன் ரூம் மேட்டாய் இருக்கேனில்ல? இதுகூடப் பண்ணாவிட்டால் எப்படி?" என்றாள்.

"எங்கேயோ கிளம்ப ரெடியாகிக்கிட்டு இருக்கீங்க போல..."

ரூபிணியின் கைகிள்ளி ஜமுனா ஜடையாய் எதையோ உணர்த்த வைக்க முயல... அது புரியாதவளாய்,

"பாண்டிச்சேரிக்கு போகிறோம் மேடம்..." என்றாள் ரூபிணி.

ஜமுனா ரகசியமாய் முறைக்க புரியாமல் 'என்ன?' என்று சைகையால் கேட்டால் ரூபிணி.

"ஈஸிட்...? நானும் ஜாயின் பண்ணிக்கலாமா?"

"இதற்குத்தான் சொன்னேன்..." என்ற குறிப்புடன் ஜமுனா ரூபிணியைப் பார்க்க அவள் தவறு செய்து விட்ட உணர்வுடன் நாக்கைக் கடித்துக் கொண்டு மணிமேகலை அறியாமல் ஜமுனாவிடம் தனது காதைப் பிடித்து மன்னிப்புக் கேட்டாள்.

'சரி.. விடு... நான் பார்த்துக் கொள்கிறேன்...' ஜாடை காட்டிய ஜமுனா.. மணிமேகலையிடம்.

"தாராளமாய் வாங்க மேடம். குப்பத்துக்கு போகும் போது உங்களைப் போல பெரியவங்க.. எங்க கூட வந்தால்..

எங்களுக்கும் பாதுகாப்பாய் இருக்கும்" என்றாள்.

"குப்பத்துக்கா.. எந்தக் குப்பத்துக்கு...?"

"நெல்லிக்குப்பம்.. அரியாங்குப்பம்.. பாண்டிச்சேரியில் குப்பத்துக்கா பஞ்சம்? நாங்கள் அங்குதான் போகப் போகிறோம்..."

"அங்கே எதற்குப் போகிறீர்கள்?" மணிமேகலை சந்தேகமே படாமல் விவரம் கேட்டாள்.

"குப்பத்து ஜனங்களின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்து ஒரு தீஸிஸ் செய்யப் போகிறேன் மேடம். என் காலேஜில் நான் பாடம் எடுக்க இது எனக்கு ஹெல்ப்பாக இருக்கும்..." தனியார் பொறியியல் கல்லூரி ஒன்றில் லெக்சரராக பணியாற்றும் ஜமுனா கூறினாள்.

"நீ எம்.ஈ. படித்து விட்டு இன்ஜினியரிங் காலேஜில் தானே வேலை பார்க்கிறாய்? குப்பத்தைப் பற்றிய ஆராய்ச்சி உனக்கு எதற்கு?"

"இப்ப மட்டும் மறதி ஓடி விடும். பார் எப்படி கரெக்டாக கேள்வி கேட்குது?" ஜமுனா வாய்க்குள் பேசினாள்.

ரூபிணி வாயைத் திறக்கவேயில்லை.

'ஓர் முறை வாயைத் திறந்து வம்பில் மாட்டிக் கொண்டது போதாதா...?'

"இது வேறு மாதிரியான தீஸிஸ் மேடம்.. குப்பையிலிருந்து எப்படி எரிபொருள் தயார் பண்ணுவதுன்னு அவங்களுக்கு சொல்லிக் கொடுக்கப் போகிறோம்... நீங்களும் வருகிறீர்கள்தானே...?"

"எனக்குத் தலையை வலிக்கிறதும்மா... வெயிலில் அலைய என்னால் முடியாது..." மணிமேகலை கிளம்பி விட்டாள்.

"உஷ்.. அப்பாடா..." என்று தளர்ந்து உட்கார்ந்த ஜமுனாவிடம்,

"குப்பையிலிருந்து எப்படிடீ எரிபொருள் தயார் பண்ணுவது?" என்று விளக்கம் கேட்டாள் ரூபிணி.

"அடித்தே கொன்று விடுவேன்.. மறதி மணிமேகலை கிட்டப் பேசும்போது ஜாக்கிரதையாய் பேச வேண்டும்... பூனையை

மடியில் கட்டிக்கிட்டு சகுனம் பார்க்கப் போனது மாதிரி, இதைக்கூட வைத்துக் கொண்டு எப்படிடீ நாம் என்ஜாய் பண்ணுவது...?"

"சரி... போனதை விடு. நான் கேட்டதற்கு பதில் சொல்லு..."

"குப்பையைக் காய வைத்து... தீயைப் பற்ற வைத்தால்.. அது எரிபொருள்..."

"அடடா... என்னே உன் அறிவு... என்னே உன் அறிவு..."

"கன்னத்தில் போட்டு எனக்கு சாம்பிராணி காட்டியது போதும்... போய் குளித்து கிளம்பி வரும் வழியைப் பார்..."

"நீ...?"

"நான் அப்போதே குளித்து விட்டேண்டி. டிரஸ் சேன்ஜ்தான் பண்ணிக் கொள்ள வேண்டும்."

ரூபிணி குளித்து உடைமாற்றி வந்தபோது அவர்களது அறைக்குள் வாசவியும், கோமளாவும் வந்தார்கள்.

"ரெடியா... போகலாமா?"

"பொறுடி... டிராவல் ஏஜன்ஸிக்கு போன் பண்ணினேன் கார் வரட்டும்..."

"காரிலேயே போய்விட்டு வந்து விடலாமா?"

"அதுதான் பெட்டர் அன்ட் சேஃப்."

"டிராவல் ஏஜன்ஸி நடத்துகிறவர்கள் தெரிந்தவர்கள் தானே.."

"ஏன் ரூபிணி.. இவ்வளவு பயம் பயப்படுகிறாய்?"

"தெரியாத ஊர் ஜமுனா..."

"ஆபிஸ்... ஆபிஸ் விட்டால் ஹாஸ்டல் ரூமுன்னு இருந்தால் எப்படி ஊரைத் தெரியும்? வெளியில் வந்து பழகுடி..."

"மாதம் ஒரு முறை கோவில்பட்டிக்கு போவதெல்லாம் உனக்குத் தெரியாதாக்கும்?"

"சொந்த ஊருக்குப் போவதுதான் வெளியில் வருவதா?"

"நீ விட்டால் என்னை வாருவதிலேயே குறியாய் இருப்பாய்... டிராவல் ஏஜன்ஸியை நடத்துகிறவர்கள் தெரிந்தவர்களா... தெரியாதவர்களா?"

"எங்க காலேஜ் ஸ்டூடண்டோட அண்ணன்தான் நடத்துகிறார்... போதுமா?"

"போதும்... வா.. போகலாம்..."

அவர்கள் கீழே இறங்கி டைனிங் ஹாலுக்குப் போகப் போனபோது ஹாஸ்டல் வாசலில் கார் வந்து நின்றது. டைனிங் ஹாலுக்குள் மணிமேகலை நின்று கொண்டி ருந்தாள்.

"ரூபிணி... வாசவி... ஸ்டாப்.."

"என்னடி..."

"நமக்கு டிபனே வேணாம்.. வாங்கடி கம்பி நீட்டி விடலாம்?"

"எதுக்குடி கோமளா இவள் இப்படி அலறுகிறாள்..."

"டைனிங் ஹாலுக்குள் பார். மறதி மணிமேகலை நிற்குது..."

"ஏண்டி.. அதுக்கு பயந்து டிபன் சாப்பிடாமல் போவதா? இன்னைக்கோ சன்டே ஸ்பெஷல். வெரைட்டியா செய்து வைத்திருப்பாங்க.. ஹோட்டலில் போய் காசைக் கொட்டினாலும் இந்த டேஸ்ட் கிடைக்காது..."

"வேண்டாம் வாசவி... நாக்கைக் கட்டுப்படுத்து... அது நம்கூடவே வந்து காரில் தொத்திக்கும்... காரில் இடமும் பத்தாது.. அப்புறம் நான் அதை உன் மடியில் உட்கார வைத்து விடுவேன்..."

"நான் அதைத் தூக்கி டிரைவர் மடியில் உட்கார வைத்து விடுவேன் ஏண்டி... அதுக்குப் பெயரே மறதி மணிமேகலை. உன் பர்த்டேயை அது இந்நேரம் மறந்தே போயிருக்கும் வா.. வா.."

வாசவி வழக்கடித்துக் கொண்டிருக்கும்போது டைனிங் ஹாலை விட்டு வெளியே வந்த மணிமேகலை அவர்களை பார்த்து விட்டாள்.

"என்ன ஜமுனா... உனக்கு காய்ச்சல்ன்னு சொன்னாயே... இப்ப உடம்புக்கு எப்படி இருக்கு...?"

புத்தம் புது மலர்போல் நீலக்கலர் சுடிதாரில் நின்று கொண்டிருந்த ஜமுனாவைப் பார்த்து வாசவி கண் சிமிட்டினாள்.

"நான் சொல்லலை...? இது குணம் உனக்குத் தெரியாதா?"

"வாசவி என்ன சொல்கிறாள் ஜமுனா...?"

"இதை மட்டும் மறக்காமல் கேட்டு விடுகிறது பார்..." பல்லைக் கடித்தபடி பதில் சொன்னாள் ஜமுனா...

"ஹாஸ்பிடலுக்குப் போகலாம் வாங்கிறா மேடம். நான்தான் வெறும் வயிறோடு போகக் கூடாது.. எதையாவது வயிற்றுக்குள் போட்டுக் கொண்டு போகலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்."

"அப்படியா..." என்று கேட்டபடி மணிமேகலை போய் விட்டாள்.

# 4

மணக்குளம் விநாயகர் கோவிலில் தோழிகள் நால் வரும் கண்மூடி நின்று வேண்டிக் கொண்டிருந்தனர். அர்ச்சகர் பிரசாதம் கொடுக்கவும் பெற்றுக் கொண்டு கோவிலை வலம் வந்து முன் பிரகாரத்தில் அமர்ந்தனர்.

"அந்தத் தேங்காயை உடைடி கோமளா."

"நீ திங்கிறதிலேயே குறியாய் இரு..."

"ஹா... ஹா.. வாசவி வயிற்றுக்கு வஞ்சகம் பண்ண மாட்டாள்.."

"மனிதருக்கும் வஞ்சகம் பண்ண மாட்டேன் ஜமுனா.."

தேங்காயை பல்லில் கடித்தபடி கோவிலைச் சுற்றிப் பார்வையை ஒட்டிய ரூபிணி.

"இந்தக் கோவில் எவ்வளவு அழகாய் இருக்கிறது என்று வியப்புடன் கூறினாள்."

"இந்தக் கோவிலைப் பற்றி ஓர் கதை இருக்கிறது தெரியுமா?" ஜமுனா வாழைப் பழத்தின் தோலை உரித்தபடி வினவினாள்.

"தெரியாதே."

"பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்த காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் இந்த பிள்ளையார் சிலையை அகற்றப்

பார்த்தார்களாம். முடியவில்லையாம். கடற் கரையில் இருந்த பிள்ளையார் சிலையை கையெடுத்து வணங்கிவிட்டு அவர்கள் முயற்சியை விட்டு விட்டார்களாம்."

பேசியபடியே தோழிகள் கோவிலை விட்டு வெளியே வந்து கடற்கரையோரமாய் நடந்தனர்.

"எவ்வளவு நீட்டான ரோடு பாரேன்..."

"ஆமாம்.. கட்டிடங்கள் கூட பிரெஞ்சுக்காரர்கள் கட்டிய டைப்பில் அமைந்திருக்கிறது..."

"என்னவோ போ... வாசவி... எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. இந்த சாக்கடை கட்டியிருக்கும் விதம் தான் சரியில்லை. நம் ஊர் பக்கங்களில் உள்ளது போல தெரு வோரங்களில் பள்ளமாகக் கட்டிவிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ரோட்டின் இருபக்கமும் சாய்வாய் கட்டி விட்டிருப்பதுதான் சகிக்கவில்லை.. தண்ணீர் தேங்கி நின்று கொண்டு... அதில் குப்பைகள் ஊறிக் கொண்டு... கொசு மொய்த்துக் கொண்டு.. சுகாதாரக்கேடு.. எல்லா வற்றையும் யோசித்து மாற்றியமைக்கும் கவர்ன்மென்ட் இதையும் மாற்றி அமைக்கக் கூடாதா..."

"நீ ஏன் இவ்வளவு கவலைப்படுகிறாய் ரூபிணி. நாம் என்றாவது ஒரு நாள் சுற்றிப் பார்க்க வருகிறோம். வந்தோமா.. போனோமான்னு இருப்பதை விட்டு விட்டு பாண்டிச்சேரியின் சுகாதாரத்தைப் பற்றி வீணாய் ஏன் யோசிக்க வேண்டும்?"

"அப்படிச் சொல்லாதே ஜமுனா.. இது அழகான டூரிஸ்ட் ஸ்பாட்... 'வாரணம் ஆயிரம்..' என்று கௌதம் மேனனின் சினிமா பார்த்திருப்பாயே..."

"ஆமாம்.. சூர்யா கூட அப்பா... மகன்... என்ற இரண்டு கெட்டப்பில் வருவார்... பாட்டெல்லாம் சூப்பராய் இருக்கும்."

"அதில் அப்பா கேரக்டரில் வரும் சூர்யா சிம்ரனைப் பார்த்து பாடும் பாடல் முழுவதும் பாண்டிச்சேரியில் தான் படமாக்கி இருந்தார்கள்..."

"இங்கே நிறையப் படங்களின் ஷூட்டிங் நடக்கும் ரூபிணி."

"அதனால்தான் சொல்கிறேன். இவ்வளவு அழகான ஊரில்.. சிறு வழக்கத்தை மாற்றாமல் வைத்திருக்கிறார்களே.."

மகாத்மா காந்தியின் சிலையடியில் நின்றபடி கடலைப் பார்த்தார்கள்.. தள்ளு வண்டியில் பாப்கார்ன் விற்றுக் கொண்டு வந்தவனிடமிருந்த பாப்கார்ன் வாங்கிக் கொறித்தபடி-மகாத்மா காந்தி சிலைக்கு எதிரேயிருந்த பூங்காவை நோக்கி நடந்தார்கள்.. பூங்காவிற்குள் இருந்த வெங்கடாஜலபதியின் கோவில் சென்று வணங்கி விட்டு பூங்காவைச் சுற்றி அலுத்து அமர்ந்தார்கள்.

"அடுத்து என்னடி ஜமுனா?" ரூபிணி கால்களை நீட்டி சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தபடி கேட்டாள்.

"இங்கே பீச்சோர ஸ்டார் ஹோட்டல்களில் ஒன்றில் மதியச் சாப்பாட்டை வெட்டலாம்" வாசவி கூறினாள்.

"வாசவி இதைத்தான் சொல்வாள் என்று நினைத்தேன்.." கோமளா அடிக்க வந்த வாசவியிடம் இருந்து தப்பித்துக் கொள்ள எழுந்து தள்ளி நின்று கொண்டாள்.

"வாசவி சொல்வதும் சரிதானேடி... பீச் ரோட்டையும்.. பூங்காவையும் சுற்றி வந்ததில் பசிக்கிறது. மணியும் மதியம் ஒன்றரையாகி விட்டது. சாப்பிட்டு விட்டு... இங்கே கடற்கரையோரமாய் ஷீ கோர்ஷன்னு போட்டிங் போற இடம் ஒன்னு இருக்கு.. அங்கே போய் ஜாலியாய் போட்டிங் போய்விட்டு ஹாஸ்டலுக்கு திரும்பி விடலாம்... எப்படியும் காருக்கு நாள் வாடகைதான் கொடுக்க வேண்டும்..

இன்னும் கொஞ்சம் சுற்றிப் பார்க்கலாமே..." ஜமுனா எழுந்து கொண்டாள்.

மெல்லிய மஞ்சள் வெளிச்சத்திலிருந்த ஏஸி ஹாலுக்குள் அவர்கள் பிரவேசித்தார்கள். தோதான இடம் தேடி அமர்ந்தார்கள். எல்லோருக்கும் என்ன வேண்டு மென்று கேட்டு ஜமுனா ஆர்டர் கொடுத்தாள்.

"இன்னைக்கு செம ட்ரீட் கொடுத்திட்ட ஜமுனா... தினமும் உன் பர்த்டே வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்...?" வாசவி கூறினாள்.

"அவ்வளவுதான்... மாதம் முழுவதும் சம்பாதிக்கும் சம்பளத்தை நான்கே நாளில் காலி பண்ணிவிட்டு காலிபர்ஸை வைத்துக்கிட்டு ஜமுனா... ஜிஞ்சா... ஜிஞ்சா.. ன்னு ஜால்ரா அடித்துக் கொண்டிருப்பாள்.." கோமளா பொங்கிச் சிரித்தாள்.

"வருடத்திற்கு ஒரு நாள் இப்படி வரலாம்.. தப்பில்லை.. தினம் தினம்ன்னா... அது சரி வராது..." ரூபிணி தண்ணீரைக் குடித்துக் கொண்டே கூறினாள்.

"இவள் ஒருத்தி... எல்லோரும் பணக்கணக்கைப் பார்த்தால் இவள் வெளியே சுற்றக் கணக்குப் பார்ப்பாள்..." ஜமுனா அலுத்துக் கொண்டாள்.

அதற்குள் அவர்கள் ஆர்டர் கொடுத்த உணவு வகைகள் வந்துவிட நால்வரும் அரட்டையும் சிரிப்புமாய் சாப்பிட்டு முடித்தனர். மற்ற மூவருக்கும் முன்னாலேயே சாப்பிட்டு முடித்து விட்ட ரூபிணி கை கழுவ எழுந்து சென்றாள்.

அவள் கை கழுவி விட்டுத் திரும்பும்போது உயரமாய்... ஆஜானுபாகுவாய் இருந்த ஒருவன் வேண்டுமென்றே அவள் மேல் மோதினான்.

"மிஸ்டர்... பார்த்து வரக் கூடாது.." ரூபிணி சீறினாள்.

"பார்த்ததால்தான் வந்தேன்..."

"வாட் டு யு மீன்?"

"தஸ்ஸு புஸ்ஸுன்னு இங்கிலீஷில் பேசி பயமுறுத்தாதே.. கண்ணுக்கு அழகா இருக்கே.. தொட்டுப் பார்க்கலாம்ன்னு தோணிச்சு.. மேலே மோதிப் பார்த்தேன்... தப்பா?"

"பின்னே... தப்பில்லையா?"

"எனக்குத் தப்பாத் தோணலை. என்னாங்கிற இப்ப.."

அவன் வேண்டுமென்றே அவள் அருகில் நெருங்கி நின்றான். அவனது தோற்றம் அவனை ரௌடியென்று தெள்ளத் தெளிவாக உணர்த்தியது. செம்பட்டை முடியுடன்.. அரக்கு ஜீன்ஸும் டி.சர்ட்டும் அணிந்து.. ஒரு காதில் வளையம் மாட்டியிருந்தான். வாயில் மது வாசனை வீசியது.

நாற்றம் பொறுக்காமல் ஒரு கையால் மூக்கைப் பொத்திக் கொண்ட ரூபிணி, "மரியாதையாய் வழியை விடு."

என்றாள்.

"விட முடியாது.. என்ன செய்வே...?"

அவன் இன்னும் நெருங்க ரூபிணி அருவெறுப்புடன் பயந்து போனவளாய் பின் வாங்கினாள். மிரண்ட அவள் விழிகள். சாப்பிட்டு முடித்து விட்டுக் கை கழுவ வந்து கொண்டிருந்த தோழிகளைப் பார்த்து உதவி நாடி இறைஞ்சின.

நிலைமையைக் கணப் பொழுதில் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.. ஆத்திரத்துடன் வேகமாய் ரூபிணியின் அருகே வந்து நின்று கொண்டார்கள்.

"யார் மிஸ்டர்.. நீ...?" கோமளா முறைத்தாள்.

"தெரிஞ்சுக்கணும்னு ஆசையா..?" அவன் இளித்தான்.

"சகிக்கலை... உனக்கென்ன பெரிய மன்மதன்னு நினைப்பா.. ஆளும்.. மூஞ்சியும்.. லேடிஸ்கிட்ட வம்பு பண்ண அலைகிறாயா?" வாசவி ரூபிணியின் கையைப் பிடித்து தன்புறமாய் இழுத்துக் கொண்டே கேட்டாள்.

"நான் மன்மதன்தான். நீ ரதியாய் வரயா?" அவன் வாசவியை மேலும் கீழும் பார்த்தான்.

"திமிரா... ஹோட்டல் மேனேஜரிடம் கம்ப்ளெயின்ட் பண்ணலாம் வாடி. இந்த மாதிரி ரோக்கையெல்லாம் உள்ளே எப்படி அலோவ் பண்ணினார்கள்ன்னு கேட்கலாம்.." ஜமுனா வேகமாய் கை கழுவினாள்.

"போ.. போய் தாராளமாய் சொல்லு... இது எங்க முதலாளியோட ஹோட்டல். நான் என் இஷ்டத்துக்கு வருவேன்.. போவேன்.." அவன் பார்வையால் அவர்களைச் சூறையாடினான்.

சகிக்க மாட்டாத ஜமுனா விடுவிடென்று சென்று மேனேஜர் என்ற போர்டு போடப்பட்டிருந்த அறையின் வெளியே நின்று கொண்டு கதவைத் தட்டினாள்.

"யெஸ்..." என்றபடி கதவைத் திறந்து கொண்டு டை கட்டிய வாலிபன் ஒருவன் வெளியே வந்தான்.

"உங்களுடைய ஹோட்டல் டீசன்டானது என்று நம்பித்தான் நாங்கள் லன்ச்சுக்கு இங்கே வந்தோம்..." கோபமாய் கூறினாள் ஜமுனா...

"உங்கள் நம்பிக்கை குலையும்படி என்ன நடந்தது மேடம்? இது ஸ்டார் அந்தஸ்துள்ள ஹோட்டல். எங்களின் வாடிக்கையாளர்களுக்கு நல்ல முறையில்தான் சர்வீஸ் பண்ணிக் கொண்டிருக்கிறோம்... உங்களுக்கு என்ன குறையென்று என்னிடம் சொல்லுங்கள். நான் நிவர்த்தி செய்கிறேன்.." அந்த வாலிபன் பவ்யமாய் வினவினான்.

"நாங்கள் நால்வரும் விழுப்புரத்தில் வொர்க் பண்ணுகிறவர்கள். இந்த ஞாயிறை இங்கு மகிழ்ச்சியாக கழிக்கலாமென்று வந்தோம். உங்கள் ஹோட்டலின் ஸ்டார் அந்தஸ்தை மதித்து வந்தால் எங்களுக்கு இப்படி ஒரு அனுபவம் கிடைக்கிறது.."

"என்னவென்று சொன்னால்தானே நான் ஏதாவது செய்ய முடியும்?"

"அந்த ஆள் எங்களிடம் மிஸ் பிஹேவ் பண்ணுகிறான்."

"ஹூ இஸ் தட் ப்ளடி ராஸ்கல்..?"

மேனேஜர் கோபமாய் உள்ளே வந்தான். அந்த ரௌடி அதே இடத்தில் அசையாமல் நின்று கொண்டிருந்தான்.. அவனைப் பார்த்ததும் வேகமாய் வந்த மேனேஜர் தயங்கி நின்றான்.

"லாரன்ஸ்... வாட் இஸ் திஸ்..?"

"தமிழ் தெரியாதா... தமிழில் பேசு.."

"ச்சு.." மேனேஜர் அலுப்புடன் தலையை இடம் வலமாக ஆட்டினான்.

"லாரன்ஸ்.. நீ இருக்க வேண்டிய இடம் பிஷ் எக்ஸ் போர்ட் கம்பெனியில். இங்கே உனக்கு என்ன வேலை..?"

"அதை நீ கேட்காதே..."

"நான் கேட்காமல் வேறு யார் கேட்பார்கள்? இது என்னுடைய கன்ட்ரோலில் இருக்கும் ஹோட்டல். இங்கே வரும் லேடிஸிடம் நீ தகராறு பண்ணுவதை நான் அனுமதிக்க மாட்டேன்..."

"என்ன செய்வாய்...?"

"எம்.டி.யிடம் கம்ப்ளெயின்ட் பண்ணினேன்னு வை.. நீ இந்த ஹோட்டலுக்குள் எப்போதுமே கால் வைக்க முடியாது.."

லாரன்ஸ் அடங்கிப் போனாள். சிவந்த விழிகளால் அவர்கள் நால்வரையும் உறுத்து விழித்து விட்டு வெளியேறப் போனான்.

"லாரன்ஸ்... அவங்ககிட்ட ஸாரி சொல்லிட்டுப் போ.."

"என்னையா ஸாரி கேட்கச் சொல்லுகிறாய்..?"

"உன்னைத் தான் சொல்கிறேன்.. நம் ஹோட்டலுக்கு வந்தவர்கள் மனம் வருந்திப் போகக்கூடாது.. ஸாரி சொல்லு.. இல்லையென்றால் நான் நடந்ததை எம்.டி. யிடம் சொல்வேன்..."

லாரன்ஸ் தன் கருத்த முகம் இன்னும் கருக்க பெண்கள் நால்வரையும் முறைத்துக் கொண்டே பல்லைக் கடித்துக் கெண்டு,

"ஸாரி..." என்றான்.

பின் விர்ரென்று அங்கிருந்து வெளியேறி விட்டான். மேனேஜர் சிரித்த முகமாய் ஜமுனாவின் பக்கம் திரும்பி.

"இப்ப திருப்திதானே மேடம்..? எங்கள் ஹோட்டலில் இப்படி ஒரு சம்பவம் நடந்ததற்கு வருந்துகிறேன்.. இனி ஒரு போதும் இப்படி நடக்காது.. நீங்கள் எல்லோரும் எப்போது பாண்டிச்சேரிக்கு வந்தாலும் எங்கள் ஹோட்டலுக்கே வரவேண்டும்.." என்று வேண்டிக் கொண்டான்.

"ஷ்யூர்..." ஜமுனா சிரித்தவாறு விடைபெற்றுக் கொள்ள அவர்கள் நால்வரும் ஹோட்டலை விட்டு வெளியே வந்து காரில் ஏறினார்கள். ரூபிணி மௌனமாக வந்தாள்.

"ஏண்டி... இவ மூட் அவுட் ஆகி இருக்காள்..?" ஜமுனா விடம் வினவினாள் வாசவி.. ஜமுனா ரூபிணியைக் கேள்வியாகக் பார்த்தாள். அவள் முகம் சுளித்தபடி,

"எனக்கு போட்டிங் வர இஷ்டமில்லை. ஹாஸ்டலுக்குப் போய் விடலாம்..." என்றாள்.

"எதுக்கு...?"

"ஜமுனா... எனக்கென்னவோ அந்த ரெளடியைப் பார்க்க பயமாய் இருக்கிறது.. அவன் பார்வையே சரியில்லை.."

"போடி... அவனுக்காக நம் புரோகிராமை மாற்றுவதா.."

ஜமுனா பிடிவாதமாய் போட்டிங் போக அவர்களை அழைத்துச் சென்றாள். அங்கே ரூபிணி பயந்தது போல் அந்த ரெளடி நின்று கொண்டிருந்தான்.

"இவன் ஏண்டி இங்கே வந்தான்...?"

"நமக்கு முன்னாடியே எப்படி வந்து நிற்கிறான் பார்.."

தங்களுக்குள் பேசிக் கொண்டபடி அவர்கள் போட்டிங் போக போட்டில் ஏறினார்கள்.. திரும்பி வந்து காரையில் ஏறும்போது லாரன்ஸ் வேகமாக வந்து ரூபிணியின் கையைப் பிடித்தான். அதிர்ந்து போன ரூபிணி அவனை 'பளார்' என்று கன்னத்தில் அறைந்து விட்டாள். எல்லோரின் மத்தியிலும் ஒரு பெண்ணின் கையால் அடி வாங்கியவன் மீண்டும் அவள் மேல் பாய்ந்தான். அதற்குள் நான்கு பெண்களும் சேர்ந்து அவனை மொத்து மொத்தென்று மொத்தி விட்டனர். அத்தோடும் விடாமல் போலீஸில் கம்ப்ளெயின்ட் பண்ணி உள்ளே தள்ளி விட்டனர்.

# 5

ரூபிணி கொடுத்த கம்ப்ளெயின்ட்டை வாங்கிக் கொண்ட இன்ஸ்பெக்டர்

"ஓகே மேடம்... நீங்க போகலாம். பட் ஒன்திங்... நீங்கள் கம்ப்ளெயின்ட் பண்ணியிருக்கும் இந்த ஆள் பெரிய இடத்தில் வேலை பார்க்கிறவன். அவனுடைய முதலாளியின் பெயர் சொன்னால் அழுத குழந்தை கூட வாய் மூடும்.. அவரிடம் மோதுவது உங்களுக்கு நல்லதல்ல" என்றார்...

"அதற்காக... இந்த மாதிரி அயோக்கியனை சும்மா விடுவதா..?"

"மேடம்... அவன் இருக்கும் இடம் அப்படி.. போலீஸ்.. கோர்டெல்லாம் மற்றவர்களுக்குத்தான்.. ஹரிஹரன் சாரே

ஓர் நடமாடும் போலீஸ் ஸ்டேஷன்... கோர்ட்.. ஊரில் இருக்கிற எல்லோரும் அவர்கிட்ட பஞ்சாயத்துக்குப் போவாங்க... அவருடைய ஆளையே தூக்கி உள்ளே போட வைத்திருக்கீங்க.. இது எங்கே போய் முடியப் போகுதோ.."

"சார் எது வந்தாலும் நான் பேஸ் பண்ணிக்கிறேன்.. நான் இந்தக் கம்ப்ளெயின்ட் கொடுத்தது கொடுத்தது தான்.."

"அப்புறம் உங்கள் இஷ்டம். விழுப்புரம்... கடலூர்.. பாண்டிச்சேரி.. மூன்று ஊர்களிலும் அவரை எதிர்த்து நிற்க எப்பேர்பட்ட தைரியசாலியாய் இருந்தாலும் பயப்படுவார்கள்.. ம்ம்.. நீங்கள் வெளியூரிலிருந்து வேலை செய்ய வந்திருக்கிறீர்கள்.. உங்களுக்கு எதுக்கு வம்பு...?"

"நானாய் வம்பைத் தேடிப் போகவில்லை சார்... அவன்தான்.. நான் போகுமிடமெல்லாம் பின்னால் வந்து வம்பு பண்ணினான்.."

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான் மேடம்.. தூசு போல் இருக்கிறவன் பண்ணிய வம்பிற்காக மலையோடு மோதப் போகிறீர்களா..?"

"சார்... நான் எதையும் பேச விரும்பவில்லை.. நான் போகலாமா..?"

"மேடம்.. நான் வெளிப்படையாகவே சொல்லுகிறேன். ஹரிஹரன் சாருக்கு விழுப்புரத்தில் ஒரு இன்ஜினியரிங் காலேஜ்.. ஒரு ஆர்ட்ஸ் காலேஜ்.. கடலூரிலும்... பாண்டிச்சேரியிலும் மீன் பதப்படுத்தி அனுப்பி வைக்கிற பெரிய எக்ஸ்போர்ட் கம்பெனிகள்.. பாண்டிச்சேரியில் பைவ் ஸ்டார் ஹோட்டல்.. இன்னும் நிறைய தொழில்கள் எல்லாம் இருக்கின்றன.. ஆனால் இது எல்லாவற்றையும் விட அவருக்கு முக்கியமான அடையாளம் ஒன்று இருக்கின்றது..."

"என்ன..?"

"அவர் மிகப் பெரிய தாதா மேடம்.. விழுப்புரம், கடலூர், பாண்டிச்சேரி ஆகிய மூன்று ஊர்களில் உள்ள ரௌடிகள் எல்லோரும் இவர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்கள்..."

ஜமுனா பயந்து போனாள்.. ரூபிணியின் கை பிடித்து நிறுத்தினாள்.

"ரூபி.. கொஞ்சம் யோசி.. நான் ஹரிஹரன் சாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன்.. எங்க காலேஜ் ஓனர் கூட அவர் முன்னால் கை கட்டித்தான் நிற்பாராம். அவரை எதிர்த்து யாரும் தொழில் பண்ண முடியாதாம்.. தொழிலதிபர்கள் கதியே அப்படியிருக்கும்போது... நாமெல்லாம் அவர் முன் எம்மாத்திரம்..? வேண்டாம் ரூபி... இதை இப்படியே விட்டுவிடு..."

"முடியாது ஜமுனா..."

"ரூபி.. உன் பிடிவாதம் எனக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கிறது. வெளியே வர யோசிப்பவள் நீ... இப்போது கூட எதற்கு வம்பு... நாம் திரும்பிப் போய்விடலாம் என்றுதான் நீ சொன்னாய்.. இப்போது மட்டும் ஒதுங்கிப் போக ஏன் யோசிக்கிறாய்..?"

"ஜமுனா.. எனக்கு அதிகம் வெளியே சுற்றப் பிடிக்காது.. அதனால் வர மாட்டேன்.. அவன் வம்பு பண்ணுகிறான் ஒதுங்கிப் போகலாம் என்று நான் சொன்னேன்.. நீங்கள் யாரும் கேட்கவில்லை.. அவன் வம்பு பண்ணியதோடு இல்லாமல் என்னைக் கையைப் பிடித்தும் இழுத்து விட்டான். இதை நான் சும்மா விடப் போவதில்லை.. வருமுன் காக்க வேண்டும் என்பது என் கொள்கை.. வந்து விட்டால் எதிர்த்து நிற்பது என் குணம்.."

ரூபிணி விடுவிடென்று வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டாள். பின்னாலேயே ஓட்டமும் நடையுமாய் அவளைத் தொடர்ந்து வந்த கோமளா, வாசவி, ஜமுனா மூவரும் அலுத்துக் கொண்டே காரில் ஏறினர். கார் போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து சாலையில் சென்றது.

வரும்போது அவர்களிடையே குடிகொண்டிருந்த குதூகலம் இப்போது காணாமல் போயிருந்தது.

"பேசாமல் நாம் அப்போதே ஹாஸ்டல் திரும்பியிருக்கலாம்" வாசவி முணுமுணுத்தாள்.

"கிளம்பும்போது, அந்த மறதி மணிமேகலை எதிரே வந்துச்சு.. எதுவும் விளங்கலை..." ஜமுனா எரிச்சலுடன்

கூறினாள்.

"அவனும் அவன் முகரையும்... சே.. ரூபிணி சொல்லும்போதே கேட்டிருக்கணும்..." கோமளா தலையில் அடித்துக் கொண்டாள்.

"ஆமாம்.. இவள் சொன்னதை நாம் கேட்கணும்.. நாம் சொல்றதை மட்டும் இவள் கேட்க மாட்டாள்... வேண்டாம்.. வேண்டாம்ன்னு சொல்லச் சொல்ல உரலில் தலையைக் கொடுக்கிறாள்.. நான்தான் இவளை வற்புறுத்தி அவுட்டிங் போகலாம்ன்னு கூட்டி வந்தேன்.. இப்ப இவளுக்கு இவ்வளவு பெரிய பிரச்னையை உண்டு பண்ணி விட்டோமே என்று எனக்கு குற்ற உணர்வா இருக்கு கோமளா..." ஜமுனா கண் கலங்கினாள்.

"ஜமுனா.. இன்றைக்கு உன் பர்த்டே.. நீ சந்தோசமாய் இருக்க வேண்டும். இது என் பிரச்னை.. இதற்கும் உனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.. புரிந்ததா...? இனிமேல் யாரும் இதைப்பற்றிப் பேசக் கூடாது..." ரூபிணி கண்டிப்புடன் கூறினாள்.

தோழிகள் மௌனமாகி விட காரோட்டிக் கொண்டிருந்த டிரைவர் ரூபிணியைத் திரும்பிப் பார்த்துப் பேசினான்.

"உங்க பிரண்ட்ஸையே தலையிட வேண்டாம்ன்னு சொல்லிட்டிங்க.. நான் மூன்றாம் மனிதன்... நான் தலையிடக் கூடாதுதான்.. ஆனால் மனசுக்குக் கேட்கலை. நான் இங்கேயே பிறந்து வளர்ந்தவன்.. ஹரிஹரனை ஒருவர் எதிர்த்துவிட்டால் அந்த ஆளை இருக்கும் இடம் தெரியாமல் அழித்து விடுவாராம் ஹரிஹரன்... இதை நான் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன்.. தவறு செய்பவர்களை எல்லாம் தண்டிப்பது என்பது நடைமுறைக்கு ஒத்து வராதுங்கம்மா.. நேரே மோதுகிறவர் களிடம் மோதலாம். நிழலோடு மோத முடியுமா..? ஹரிஹரன் நிழல் உலகின் தாதா... அவர் கண்ணசைத்தால் இந்த மூன்று ஊரும் கொந்தளிக்கும்.. அவர் கைகாட்டும் ஆட்கள்தான் பெரிய போஸ்டிங்கில் உட்காருவார்கள்... அவர் தண்ணியில்லாத காட்டிற்கு மாற்ற வேண்டும் என்று நினைத்து விட்டால் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் தூக்கி

அடிக்கப்பட்டு விடுவார்கள்.. அவர் கிங் மேக்கர்... இவ்வளவு ஏன்.. இந்த மூன்று ஊர்களுக்குமே.. அவர்தான் முடிசூடாத ராஜா... அதனால் ரிஸ்க் எடுக்காதீர்கள் மேடம்."

"தேங்க்ஸ் பார் யுவர் அட்வைஸ்.. நான் இந்த கம்ப்ளெயின்ட் கொடுத்தது அவனுக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதற்காக மட்டுமில்லை. இனிமேல் இது போன்ற செயல்களில் அவன் ஈடுபடக் கூடாது என்பதற்காகவும் தான். ஸோ... இதைப்பற்றி டிஸ்கஸ் பண்ணுவதை நாம் விட்டு விடலாமே.. இதை மறந்து விட்டு வேறு பேச்சை பேசலாமே..."

ரூபிணி பட்டுக் கத்தரித்து விடவும் அவர்கள் அனைவரும் அமைதியாகி விட்டனர்.. ஹாஸ்டல் வாசலில் இறங்கியவுடன் ஜமுனா பணம் கொடுக்க தாமதிக்க.. ரூபிணி வாசவியையும் கோமளாவையும் பின் தொடர்ந்தாள். ஜமுனா கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்ட டிரைவர்,

"எதற்கும் உங்க பிரண்டை பத்திரமாய் பார்த்துக்கங்க மேடம்..." என்றான்.

பதில் கூறாமல் தலையை மட்டும் ஆட்டிவிட்டுச் சென்றாள் ஜமுனா.. அவள் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தது.. எதிரே வந்த வார்டன் மணிமேகலை.

"ஜமுனா... நாளைக்கு உன் பர்த்டேயில்லை...? பார்த்தாயா எப்படி நினைவு வைத்திருக்கிறேன் பார்..." என்றாள்.

மற்ற நேரமாக இருந்தால் நின்று வம்படித்திருப்பாள். இன்றைய மனநிலையில் எதுவும் பேசத் தெம்பில்லா தவளாய் தலையை மட்டும் ஆட்டிவிட்டு மாடியறைக்குச் சென்றாள்.

ரூபிணி அமைதியாய் துவைத்த துணிகளை மடித்துக் கொண்டு இருந்தாள்.. ஜமுனா அவள் எதிரே அமர்ந்து கலக்கமாய் அவள் முகம் பார்த்தாள்.

"காலையில் இருந்து நிறைய சுற்றியிருக்கே... அலுப்பாக இருக்கும்.. படுத்துத் தூங்கு..." என்றாள் ரூபிணி.

"ரூபிணி.. நான் சொல்வதைக் கேளு..."

"தூங்குன்னு சொல்கிறேனில்ல..."

மறுநாள் ஆபிஸிற்குள் நுழையும் போதே வாசலில் எதிர்பட்ட ஜவஹர் "ஹாய்.. ரூபிணி.. எங்கே உங்க பிரண்ட்?" என்றான்.

"இப்போதுதானே ஆபிஸிற்குள் நுழைகிறேன்? எனக்கு எப்படித் தெரியும்? உங்களுக்குத்தானே அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரியும்?"

"எல்லாம் சீட்டில் வந்து உட்கார்ந்தாகிவிட்டது... உங்களிடம் பேச்சை ஆரம்பிக்கத்தான் அப்படிக் கேட்டேன்.."

"ஐ... ஸீ... என்னிடம் என்ன பேச வேண்டி யிருக்கிறது..?"

"நீங்கள் உங்கள் பிரண்டுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?"

"எதைப் பற்றி..?"

"என்னைப் பற்றிங்க.. ஜவஹர் நல்லவன்... வல்லவன்.. நாலும் தெரிந்தவன்னு சும்மா... என் பெருமை களை எடுத்து விடக் கூடாதா...?"

ரூபிணிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

"ஏங்க சிரிக்கறீங்க..? என் நிலைமையைப் பார்த்தால் உங்களுக்குச் சிரிக்கத் தோன்றுகிறதா..? ஹெல்ப் பண்ணத் தோன்றவில்லையா..?"

"ஜவஹர் சார்... காதல் தானாய் வரவேண்டும்.. அதற்கு சிபாரிசு இருக்கக் கூடாது. உங்களுக்கு உங்கள் காதல் மேல் நம்பிக்கை இல்லையா...?"

"எனக்கு என் காதல் மேல் நம்பிக்கை இருக்கிறது.. அவள் மேல் தான் நம்பிக்கை இல்லை..."

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்..?"

"ஆபிஸில் எல்லோரோடும் சிரித்துப் பேசுகிறாள்.. என்னைக் கண்டால் மட்டும் உர்ரென்று ஆகி விடுகிறாள்.."

"நீங்கள் மட்டும்தானே அவளிடம் காதல் சொல்லி யிருக்கிறீர்கள். அதனால் உங்களிடம் பேசச் சங்கடப் பட்டிருப்பாள்..."

"வேறு யாரும் அவளிடம் காதல் சொல்லி விடுவார் களோன்னு எனக்குப் பயமாக இருக்கிறது..."

"சேச்சே... ஆண் பிள்ளை பயப்படலாமா... தைரியமாய் இருங்கள்" மீண்டும் ரூபிணிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

வாசல் பக்கம் வந்த சபாபதி ரூபிணி ஜவஹரிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே ஒரு பைலை எடுத்துக் கொண்டு சென்றான்.

ப்ரீதி கம்ப்யூட்டர் திரையை உயிர்ப்பித்து கீ போர்டை தட்டிக் கொண்டிருக்க... அவளருகே சென்ற சபாபதி,

"இந்தாங்க மேடம் நீங்க கேட்ட ஃபைல்" என்று பைலை அவளிடம் கொடுத்தான்.

"பரவாயில்லையே... இவ்வளவு சீக்கிரத்தில் எடுத்து வந்து விட்டாயே..." பாராட்டியவாறு வாங்கிக் கொண்டாள் ப்ரீதி.

"ஏன் மேடம்... ஜவஹர் சார்கிட்டப் பேசினால் உங்களுக்கு தலைவலி வருது. ரூபிணி மேடத்திற்கு மட்டும் சிரிப்பு வருதே.. எப்படி?" சபாபதி சந்தேகம் கேட்டான்.

"நீ எப்போது அவள் ஜவஹரிடம் சிரிப்பதைப் பார்த்தாய்...?"

"இதோ... இப்போதுதான்.. வாசலில் நின்று பேசிச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்..."

ப்ரீதி நகம் கடிக்க ஆரம்பித்தாள். ரூபிணி அவளருகே வந்து,

"என்ன யோசனை...?" என்று கேட்டது கூட அவள் காதில் விழுகவில்லை.

"என்னவாம் சபாபதி.. இவள் இவ்வளவு சீரியஸாக எதை யோசிக்கிறாள்...?"

"மேடம் இன்னைக்கு கிரீம் கலரில் சுடிதார் போட்டிருக்கிறாங்க.. அதற்கு ஜவஹர் சார் என்ன சிச்சுவேஷன் சாங் பாடப் போகிறார்ன்னு யோசிக்கிறாங்களோ... என்னவோ...?"

சபாபதி கூறியதைக் கேட்டதும் ரூபிணிக்கு வழக்கம் போல் சிரிப்பு வந்து விட்டது. வாயை மூடிக் கொண்டு சிரித்தாள். அவளது சிரிப்பு சத்தத்தில் தந்நிலைக்குத் திரும்பின ப்ரீதி அவளை முறைத்தாள்.

"என்னடி சிரிப்பு வேண்டிக் கிடக்கு?"

"ஜவஹர் சாரைப் பற்றி சபாபதி பேசியதும் சிரிப்பு வந்து விட்டது."

"அந்த ஆள் பெயரைக் கேட்டாலே உனக்கு சிரிப்பு வருகிறதா..?"

"இல்லையா பின்னே.. அவரைப் பற்றி நினைத்தாலே சிரிப்பு வந்து விடும். கவலை மறந்து விடும்."

இயல்பாய் பேசியபடி ரூபிணி தன் டேபிளில் இருந்த கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தாள். ப்ரீதி உம்மென்று வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அவர்களின் அருகே,

"நான் பார்த்ததிலே... அவள் ஒருத்தியைத்தான்..
நல்ல அழகியென்பேன்..." என்ற பாடல் கேட்டது.

நிமிர்ந்து பார்க்காமலே அது ஜவஹர்தான் என்று அவர்கள் இருவருக்கும் தெரிந்து விட்டது. ப்ரீதி என்றும் போல் இன்றும் முகம் திருப்பிக் கொள்ள ரூபிணி மட்டும் புன்னகைத்தாள்.

"ஏன் சார் பாட்டுப் பாடி என் பிரண்டை பயமுறுத்தறீங்க?"

"பயமுறுத்த நான் என்ன ஹரிஹரனா? நான் சாதாரண ஆள் மேடம்."

ரூபிணியின் சிரிப்பு மறைந்து முகம் மாறியது.

ஏன் அந்த ஹரிஹரனைப் பார்த்து எல்லோரும் பயப்படுகிறார்கள்?

அவள் மனதில் எழுந்த கேள்வியை வாய் விட்டுக் கேட்டாள்.

"நல்லாக் கேட்டிங்களே ஒரு கேள்வி.. அவரைப் பார்த்து பயப்படாமல் யாரைப் பார்த்துப் பயப்படுவது?"

எல்லோரும் பயப்படும் அந்த ஹரிஹரன் ரூபிணியைத் தேடி வந்தான். ஊரே பார்த்துப் பயப்படும் அந்த மனிதனை பயமில்லாமல் எதிர்கொண்டாள் ரூபிணி.

புள்ளிமான் தன்னைத் தேடி வந்த புலியை பயமின்றி எதிர் கொண்டது.. புலி... தன் இரையை விடுமா..? இல்லை தொடுமா...?

# 6

மதிய உணவு உண்ண டைனிங் டேபிளில் அமர்ந்து ஒரு கவளம் எடுத்து வாயில் வைத்திருப்பாள் ரூபிணி. சபாபதி பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். மூச்சிரைக்க தன் முன் வந்து நின்றவனைப் பார்த்து வியப்புடன்,

"எதுக்கு சபாபதி இப்படி ஓடி வருகிறாய்?" என்று கேட்டாள் ரூபிணி...

"மேடம்... மேடம்..." அவன் வார்த்தைகளால் தந்தி அடித்தான்.

"இந்தாப்பா.. தண்ணி. குடித்துவிட்டு பதட்டப்படாமல் சொல்லு.." ரூபிணி அவனிடம் தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொடுத்தாள்.

அவசரமாய் அதை வாங்கிக் குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன்,

"உங்களைப் பார்க்க அவர் வந்திருக்கார் மேடம்..." என்றான்.

"எவர்...?" ரூபிணி புருவம் உயர்த்தினாள்.

"ஹரிஹரன் சார்..."

அவன் வார்த்தையைக் கேட்ட டைனிங் ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த பெண்கள் அனைவரும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அவர்களையே பார்த்தனர். தன்னைச் சுற்றிலும் பார்வையை ஓடவிட்ட ரூபிணி உணவுப் பொட்டலத்தை அப்படியே வைத்து விட்டு எழுந்தாள்.

"இருடி... நானும் வருகிறேன்..." ப்ரீதி எழப் போனாள்.

"வேண்டாம் ப்ரீதி... நான் போய் விட்டு வந்து விடுகிறேன்.. நீ சாப்பிடு" ரூபிணி அவளைத் தடுத்து விட்டாள்.

"என்னடி பிரச்னை?"

"நத்திங்..."

"அந்த ஆள் பயங்கரமானவர்..."

"இருக்கட்டுமே.. எனக்கென்ன வந்தது?"

ரூபிணி கைகழுவிவிட்டு கைக்குட்டையால் கையைத் துடைத்துக் கொண்டு சபாபதியைக் பார்த்து,

"எங்கேயிருக்கிறார்...?" என்று வினவினாள்.

"ஆபிஸரோட ரூமில்..."

"சரி நான் போய் பார்த்துக் கொள்கிறேன்.. நீ போ.."

ரூபிணி ஆபிஸரின் அறைக் கதவை ஒரு விரலால் தட்டினாள்.

"யெஸ் கமின்..." ஆபிஸரின் குரல் கேட்டது.

உள்ளே நுழைந்தாள். ஆபிஸர் அவரது இருக்கையை விட்டு எழுந்தார்.

"மிஸ் ரூபிணி... சார் உங்களிடம் ஏதோ பேச வேண்டுமாம். பேசிக் கொண்டிருங்கள். நான் லன்ச்சுக்கு போய் விட்டு வந்து விடுகிறேன்.." என்றவர் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினார்.

தனது அதிகாரத்தை உணர்த்தும் தோரணையில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தவனைப் பார்த்தாள் ரூபிணி.

மாநிறம்.. உயரமான தோற்றம்.. பெரிய மீசை.. கூரிய விழிகள்.. எதிரேயிருந்தவன் ஒரு இரும்பு மனிதன் என்று முதல் பார்வையிலேயே பிடிபட்டு விட அவன் அருகேயிருந்த மற்றொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு,

"வணக்கம்..." என்றாள் ரூபிணி.

அவனும் அவளை எடை போட்டுக் கொண்டுதான் இருந்தான். 'போலீஸ் கம்பளெயின்ட்' என்றதும் அடாவடியான ஆத்திரக்காரப் பெண்ணை எதிர்பார்த்து வந்தவனுக்கு.. மென்மையான தோற்றத்துடன் ஓர் பூங்கொடி போன்ற மெலிவுடன் உயரமாய் அழகாய் வந்து அமர்ந்து கரம் குவித்த பெண்ணைப் பார்த்ததும் வியப்பாய் இருந்தது.

அவளது வணக்கத்தை சிறு தலையசைவால் அங்கீகரித்தவன், "நீங்கள் வெளியூர் என்று கேள்விப்பட்டேன்.. இந்தப் பக்க நிலவரம் உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை... என்னுடைய மதிப்பும்...

மரியாதையும் எந்த அளவில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்.. என்னுடைய பலம் தெரியாமல் விளையாடிப் பார்க்கிறீர்கள். என் பலத்தை ஒரு பெண்ணிடம்.. அதுவும் ஊர் விட்டு ஊர் வந்திருக்கும் இளம் பெண்ணிடம் பிரயோகம் பண்ண எனக்கு விருப்பமில்லை. அந்த ஒரே ஓர் காரணத்திற்காகத்தான் நான் உங்களைத் தேடி வந்தேன்... இதுவே வேறு ஒரு ஆளாக இருந்திருந்தால் என் ஆளை போலீஸில் மாட்டி விட்டதற்காக உண்டு இல்லை என்று பண்ணியிருப்பேன்..." என்று கோபமாய் தாடையைத் தடவியபடி கூறினான்.

ரூபிணி நிதானத்தை இழக்கவில்லை.

"சார்.. நான் வெளியூர். எனக்கு உங்களைப் பற்றியும் உங்கள் பெருமைகளைப் பற்றியும் தெரியாது.. ஆனால் உங்கள் ஆள் என்று நீங்கள் சொல்லிக் கொள்ளும் அந்த லாரன்ஸிற்கு உங்களைப் பற்றியும் உங்கள் பெருமை களைப் பற்றியும் தெரியும் தானே..?" அமைதியாய் வினவினாள்.

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?" அவன் புருவம் உயர்த்தி வினவினான்.

"உங்கள் பெருமைகளை சீர்குலைக்கும் வண்ணம் அவன் நடந்து கொண்டான் என்பதைச் சொல்ல வருகிறேன்.. நான் அவன் மேல் புகார் கொடுத்தவுடன் போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் முதற் கொண்டு... என் கூட வேலை பார்ப்பவர்கள் வரை உங்களைப் பற்றிச் சொன்னார்கள்.. ஒருவர் கூட நீங்கள் பெண்களை அவமரியாதை செய்யும் வழக்கமுள்ளவர் என்றோ பெண்களிடம் தகாத வார்த்தைகள் பேசி தகாத முறையில் நடந்து கொள்பவர் என்றோ சொல்லவில்லை... அப்படியிருக்கையில் உங்களைப் போன்ற ஓர் மனிதரிடம் வேலை பார்ப்பவன் பெண்களிடம் வம்பு பண்ணலாமா? அவன் உங்களைச் சேர்ந்தவன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அவனுடைய பழிபாவம் எல்லாமும் உங்களைச் சேர்ந்து விடும் என்று அவன் நினைக்க வில்லையே... நான் உங்கள் கௌரவத்தை மதிக்கிறேன் சார்.. அவன்தான் உங்கள்

கௌரவத்தை மதிக்கவில்லை... மதித்திருந்தால் இப்படி ஒரு கீழ்த்தரமான மனிதனுக்காக உங்களைப் போன்ற ஓர் பெரிய மனிதர் பரிந்து கொண்டு என்னைப் பார்க்க வரும் நிலையை உருவாக்கி இருக்க மாட்டான்..." ரூபிணி தெளிவாகப் பேசினாள்.

ஹரிஹரன் அயர்ந்து விட்டான். இந்த விசயத்தை இப்படி ஒரு கோணத்தில் அவன் சிந்திக்கவில்லையே...

"லாரன்ஸ் என்ன செய்தான்...?" யோசனையாய் அவளைப் பார்த்தபடி வினவினான் ஹரிஹரன்.

"நாங்கள் நான்கு பேர்... பாண்டிச்சேரியைச் சுற்றிப் பார்க்கப் போனோம்.. மதியம் லன்ச் சாப்பிட உங்களது ஹோட்டலுக்குச் சென்றோம். சாப்பிடும் இடத்தில் நான் கைகழுவப் போனபோது இந்த லாரன்ஸ் வந்து என் மேல் வேண்டுமென்று மோதி அசிங்கமாய் பேசினான். 'பார்த்து வரக்கூடாதா என்று கேட்டேன். உன்னைப் பார்த்ததால் தான் வந்தேன்.. தொட்டுப் பார்க்க வேண்டும்ன்னு தோணிச்சு.. உன் மேல் மோதினேன்.. என்ன இப்ப' என்று கேட்டான். என் பிரண்ட்ஸ் வந்து என்னைக் காப்பாற்றினார்கள். ஹோட்டல் மேனேஜரிடம் புகார் பண்ணினோம்..." ரூபிணி கூறிக் கொண்டிருக்க,

"யார்.. பிரசாத்திடமா?" என்று கேட்டான் ஹரிஹரன்.

"எங்களுக்கு அவருடைய பெயர் தெரியாது சார்.. அவர் வந்து லாரன்ஸை திட்டி எங்களிடம் ஸாரி சொல்லச் சொன்னார். அவனும் ஸாரி கேட்டான். ஹோட்டல் மேனேஜர் நடந்தவைக்கு வருத்தம் தெரிவித்தார்... நாங்களும் அதை அப்படியே விட்டு விட்டு போட்டிங் போனோம். அங்கே இந்த லாரன்ஸ் வந்து என் கையைப் பிடித்து இழுத்து விட்டான் சார்..." ரூபிணியின் கண்கள் சிவந்து கலங்கின.. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் தொடர்ந்தாள்.

"நான் அவன் கன்னத்தில் அறைந்து விட்டேன்.. அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல்தான் போலீஸில் புகார் கொடுத்தேன்... அவனைப் பழி வாங்க வேண்டும்

என்பதற்காக அல்ல... அவன் இனிமேலும் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யக் கூடாது என்பதற்காக..."

ஹரிஹரன் அவளையே இமைக்காமல் பார்த்தான். அவள் வார்த்தைகளில் பொய்யில்லை. முகத்தில் நேர்மை இருந்தது. தனக்கு ஏற்பட்ட அவமரியாதையை விவரிக்கும் போது அவளது கண்களில் மனதின் வலி தெரிந்தது.

ஹரிஹரன் போனை எடுத்தான். நம்பரை அழுத்திப் பேசினான்.

"பிரசாத்... லாஸ்ட் சன்டே.. லன்ச் டயத்தில் நம் ஹோட்டலில் சாப்பிட வந்த நான்கு லேடிஸ் உன்னிடம் வந்து கம்ப்ளெயின்ட் பண்ணினார்களா?"

மறுமுனையில் பேசப்படுவதை குறுக்கிடாமல் கேட்டவன். போனை அணைத்து விட்டு ரூபிணியைப் பார்த்தான்.

"பிரசாத் நீங்கள் சொன்னதைத்தான் சொல்கிறான்.. இப்போது நீங்கள் ஒரு வார்த்தை சொன்னீர்களே.. அவனை பழி வாங்க நினைக்கவில்லை.. இனி இது போன்ற தவறுகளை அவன் செய்யக்கூடாது என்று... அதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்.. அவனுக்கான தண்டனையை நான் கொடுக்கிறேன். ஹரிஹரனிடம் வேலை பார்த்த ஆள் கோர்ட்டில் போய் நிற்கக் கூடாது... என் மேல் நம்பிக்கை இருந்தால் உங்கள் கம்ப்ளையின்ட்டை வாபஸ் பண்ணி விடுங்கள்..."

ரூபிணி பதில் பேசாமல் ஆபிஸரின் டேபிளில் இருந்த பேனாவையும் பேப்பரையும் எடுத்தாள். மடமடவென்று தன் புகாரை திரும்பப் பெற்றுக் கொள்வதாக எழுதி ஹரிஹரனிடம் கொடுத்தாள்.

"நான் உங்களை நம்புகிறேன் சார்.."

அந்த முதல் சந்திப்பு அவர்கள் இருவரின் மனதிலும் ஒருவர் மேல் மற்றொருவருக்கு மிகப் பெரிய மதிப்பையும் மரியாதையையும் உண்டு பண்ணி விட்டது. இருவருமே ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக் கொள்ளும் வரை ஒருவர் மேல் மற்றொருவர் கோபமாகவே இருந்தார்கள்.

ரூபிணிக்கு ஹரிஹரன் ஓர் 'தாதா' என்று தெரியப் படுத்தப் பட்டிருந்தான். அவனிடம் வேலை பார்க்கும் ஆளோ பெண்களிடம் மிகக் கேவலமாய், கண்ணியக் குறைவாய் பேசவும். நடந்து கொள்ளவும் செய்தான். அப்படிப் பட்ட ஆளை வேலைக்கு வைத்திருக்கும் முதலாளி எப்படிப்பட்டவனாக இருப்பான் என்ற எண்ணம் ரூபிணிக்கு இருந்தது.

ஹரிஹரனுக்கோ தன்னிடம் வேலை பார்ப்பவனை போலீஸில் ரிமான்ட பண்ணியது தன் பலக்குறைவு என்பதில் கோபம் வந்தது. புகார் கொடுத்த பெண்ணிடம் தான் எவ்வளவோ ஹரிஹரனைப் பற்றி எடுத்துக் கூறியும் அவள் அதை கேட்டுக் கொள்ள மறுத்து விட்டாள் என்று போலீஸ் இன்ஸ்பெக்டரே கூறி விட்டார். சிறு கேலிப் பேச்சைக் கூட பொறுத்துக் கொள்ளாமல் 'ஈவ் டீஸிங்' என்ற பெயரில் தனது ஆளை உள்ளே தூக்கிப் போட்டு விட்டாள் என்ற கொதிப்பு ஹரிஹரனுக்கு இருந்தது. கூடுதலாக விழுப்புரத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு ஊர் சுற்ற வந்த பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாள் என்ற எண்ணமும் இருந்தது.

ரூபிணிக்கு ஒரு விசயம் நன்றாக நினைவில் இருந்தது. பாண்டிச்சேரி ஹோட்டல் மேனேஜர் லாரன்ஸிடம் 'இங்க நடந்ததை எம்.டி. கிட்ட சொன்னேன்னு வை. நீ ஹோட்டலில் கால் வைக்க முடியாது...' என்று கூறினான். அத்தோடு விட்டு விடாமல் எம்.டி.யின் பெயரைச் சொல்லி மன்னிப்பு வேறு கேட்க வைத்தான். ஒரு வேளை ஹரிஹரன் பெண்களிடம் தரக்குறைவாய் நடந்து கொள்வதை அனுமதிக்காதவனாய் இருக்கலாம் அல்லவா?

அந்த நினைவில்தான் ரூபிணி.. தன் தரப்பு நியாயங்களை அவனிடம் எடுத்துக் கூறினாள். மென்மையான குணம் கொண்ட பெண். ஊர் சுற்றிப் பார்க்க வந்த இடத்தில் அவனிடம் வேலை செய்த ஆளால் மன உளைச்சலுக்கு ஆளாகி விட்டதை உணர்ந்து கொண்டான் ஹரிஹரன்.

ரூபிணி நடந்த தவறுக்கு நியாயம் கேட்காமல்... அவனைத் தண்டிக்க விரும்பாமல்.. இனி இது மாதிரியான தவறுகளை

அவன் செய்யக்கூடாது என்பதற்காக புகார் கொடுத்ததாகக் கூறியது ஹரிஹரனின் மனதைக் கவர்ந்து விட்டது.

ஹரிஹரன் சில குணங்களைக் கொண்டவன். அவனை நம்புகிறவர்களுக்கு அவன் கடவுள்.. தன்னிடம் உதவி கேட்டு ஒருவர் வந்து விட்டால் தன் உயிரைக் கொடுக்கவும் தயங்க மாட்டான். அதுவே ஒருவன் அவனை எதிர்த்து நின்று விட்டால்... அவனை கூண்டோடு அழிக்கவும் செய்வான்.

இங்கே அவன் ஒன்றைத்தான் ரூபிணியிடம் சொன்னான்.

"என் மேல் நம்பிக்கை இருந்தால் புகாரை வாபஸ் பண்ணுங்கள்..."

உடனே ரூபிணி தன் புகாரை வாபஸ் பண்ணி எழுதி அவன் கையில் கொடுத்து விடவும் அவன் மனம் இதமாகி விட்டது.. அவனைப் பற்றி எதுவும் தெரியாத ஒரு பெண்.. அவளை அவமரியாதை செய்தவனை யார் சொல்லியும் கேட்காமல் உள்ளே தூக்கிப் போட்டவள்.. அவன் சொன்ன ஓர் வார்த்தைக்கு கட்டுப்பட்டு கொடுத்த புகாரைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறாள்.

எத்தனையோ வெற்றிகளை தினம் தினம் சந்திக்கும் அந்த பலவான் அந்த வெற்றிகளில் அடைந்த மனநிறைவை விட இன்று அதிக அளவில் மனம் நிறைந்து விட்டதாக உணர்ந்தான்.

ரூபிணிக்கு அவன் காட்டிய கண்ணியமும்... நிதானமும் ஆச்சரியத்தை அளித்தது.. மற்றவர்கள் பயமுறுத்திய அளவிற்கு அவன் கொடியவன் அல்ல என்றே அவளுக்குத் தோன்றியது. அவன் நினைத்திருந்தால் அவளை போனில் மிரட்டியிருக்கலாம். அல்லது அவனுடைய உதவியாளர்களில் ஒருவரை அனுப்பி அவளிடம் பேச வைத்திருக்கலாம். அவ்வாறு சொய்யாமல் நேரடியாய் அவளைச் சந்திக்க அவனே வந்ததும் அல்லாமல்.. அவளிடம் மரியாதையாய் அவன் பேசிய விதமும்.. அவளின் மனக்குறையை கேட்டவுடன் தன் ஹோட்டல் மேனேஜரிடம் பேசி அது உண்மை என்பதை அறிந்து கொண்டு.. தவறுக்கு தண்டனையை தான் கொடுப்பதாக உத்தரவாதம்

அளித்ததும்.. அவளது மனதைத் தொட்டு விட்டது. உடனடியாய் தன் புகாரை திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டாள்.

ரூபிணியிடம் இருந்து பேப்பரை வாங்கிக் கொண்ட ஹரிஹரன் எழுந்து கொண்டான். ரூபிணியும் எழுந்து நின்றாள்.

முதன் முதலாக ஒரு பெண்ணிடம் இயல்பாய் விடை பெற முடியாமல் தன் தொண்டையில் வார்த்தைகள் சிக்கிக் கொள்வதை உணர்ந்த ஹரிஹரன் ஒரு சிறு தலை அசைவுடன் அவளிடமிருந்து விடைபெற்றான்.

புலியின் மனதில் புள்ளிமானின் மேல் ஈர்ப்பு தோன்றி விட்டது.

# 7

ஹரிஹரனின் தலை அசைவிற்கு தன் தலை அசைவைப் பதிலாகத் தந்த ரூபிணி அவனைப் பின் தொடர்ந்து ஆபிஸரின் அறையை விட்டு வெளியே வந்தாள். நிமிர்ந்த நடையுடன் அவன் வேகமாய் நடந்து அவள் கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டான். சற்று நேரத்தில் ரூபிணி அவனை மறந்தும் விட்டாள்.

"என்னடி விஷயம்...?" ப்ரீதி மீண்டும் வினவ நடந்ததைக் கூறினாள்.

"புத்திசாலித்தனமான காரியம் செஞ்சே... அவரை மாதிரி ஆளுக கிட்ட எல்லாம் நாம் மோதக்கூடாது..."

"அவரைப் பார்த்துப் பயந்து நான் புகாரை வாபஸ் பண்ணவில்லை ப்ரீதி. நடந்த தவறுக்கு நான் தண்டனை வழங்குகிறேன்னு சொன்னார்.. அதனால் தான் நான் புகாரை வாபஸ் பண்ணினேன்.."

"எதுவோ ஒன்னு.. மோதல் இல்லையே... அந்த மட்டிலும் சரி..."

ப்ரீதி சொன்னதையே தான் ஜமுனாவும் கூறினாள். கோமளாவும் வாசவியும் அதை ஆமோதித்தனர்.

"ஜமுனா.. அவரிடம் மோதுவதும் மோதாமலிருப்பதும் பிரச்னை இல்லை.. அவரது ஆள் தவறு செய்தான் என்பதை அவர் புரிந்து கொண்டார். கண்டித்து வைப்பதாகக் கூறினார். நான் புகாரை வாபஸ் வாங்கிட்டேன்.."

"என்னவோ போ.. நீ இவ்வளவு சகஜமாய் பேசுகிறாயேன்னு எனக்கு இருக்கு.. ஊரே அவர் பெயரைக் கேட்டால் குலை நடுங்கிப் பயப்படுது.. நீ அவர் எதிரே சேர் போட்டு உட்கார்ந்து கலந்து உரையாடிவிட்டு வந்திருக் கிறாய்.. கேட்கவே ஆச்சர்யமாய் இருக்கு.. இளங்கன்று பயமறியாதுன்னு சும்மாவா சொல்லி வைத்தாங்க.."

"ஆமாம்.. நீ பெரிய கிழவி.. நான்தான் இளங்கன்று."

"என்னை விட இளையவள்தானே நீ..."

"அதற்காக என்னை இளங்கன்று ஆக்கி விட்டாய்.. சரி.. இளங்கன்று பயமறியாமல் வந்தது கிழவரைப் பார்த்து இல்லையே.."

"அடிரா.. சக்கை.. பாருடி இவளை.. ஹரிஹரனைப் போய் சைட் அடிச்சிருக்காள்..." ஜமுனா கூறவும் மற்ற இருவரும் கலகலவென்று சிரித்தனர்.

ரூபிணியின் முகம் சிவந்து விட்டது.

"ஏய்.. சைட் அது இதுன்னு சொல்லாதே. அவரைப் பார்த்தால் அப்படி ஒன்றும் வயதானவர் போல் தெரியவில்லை.. அதைத்தான் சொன்னேன்.."

"நீ எதைச் சொன்னாயோ... எங்கள் காலேஜிற்கு ஓர் முறை அவர் வந்து இருந்தார். விறைப்பாய் அவர் பார்த்துக் கொண்டு வந்தபோது எனக்கு குளிர் ஜுரமே வந்து விட்டது.. நீயானால் ஏதேதோ சொல்லுகிறாய்... சரி விடு.. பிரச்னை ஒரு முடிவுக்கு வந்ததே.. இப்போது தான் எனக்கு நிம்மதியாய் இருக்கிறது..." ஜமுனா உண்மையான மன நிம்மதியுடன் கூறினாள்.

ரூபிணியும் அதை அறிவாள். இரண்டு நாட்களாகவே அவள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்ததை அவள் பார்த்துக் கொண்டுதானே இருந்தாள்.. ஜமுனா பழைய படி கலகலப்பாய் பேசியது ரூபிணிக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

ஹரிஹரன் தன் முன்னால் வந்து நின்ற லாரன்ஸை சினத்துடன் பார்த்தான். லாரன்ஸ் பயத்துடன் தலையைக் குனிந்து கொண்டான். பக்கத்தில் பிரசாத் கையிரண்டையும்  பின்னால் கட்டி... கால்களை அகல விரித்து நின்றிருந்தான். தூரத்தில் கப்பலில் சரக்குகள் ஏற்றிக் கொண்டிருந்தனர். மீன் பதனிடும் தொழிற்சாலைக்கே உரிய மணம் மூக்கைத் துளைத்தது. அவர்கள் நின்றிருந்த பாண்டிச்சேரி ஹார்பரின் ஓரமாய் கடலலைகள் வந்து கரையை அடித்துத் தொட்டுச் சென்று கொண்டிருந்தன.

கடல் காற்றின் ஈரம் கூட ஹரிஹரனின் உஷ்ணத்தை தணிக்கவில்லை. அவன் கொதித்துக் கொண்டிருந்தான்.

"உன்னிடம் வேலை பார்க்கிறவன் உன் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டாமா என்று அந்தப் பெண் கேட்டாள்.. உன் மரியாதையை காற்றில் பறக்க விட்டது நானில்லை.. உன்னிடம் வேலை பார்க்கும் உன் ஆள் தான் என்று சொன்னாள். அவள் சொன்னது அத்தனை யும் சத்தியமான வார்த்தைகள். இந்த ஹரிஹரன் துணிச்சல் காரன்.. என் துணிச்சலை ஆண்களிடம் தான் காட்டி யிருக்கிறேன். பெண்ணைச் சீண்டிப் பார்த்ததில்லை.. நீ அதைச் செய்யத் துணிந்திருக்கிறாய்.. இதற்கு உனக்கு என்ன தண்டனை தரப்போகிறேன் தெரியுமா...?"

லாரன்ஸ் ஹரிஹரனின் காலில் விழுந்தான்.

"அந்தப் பெண் யாரோ.. எவரோ.. முன்பின் தெரியாத பெண் சொன்னதை நம்புகிறீர்கள்.. நான் சொல்வதை நம்ப மாட்டேன் என்கிறீர்களே..."

ஹரிஹரன் லாரன்ஸின் முடியை கொத்தாகப் பிடித்துத் தூக்கி அவன் கன்னங்களில்.. பளார்.. பளார்.. என்று மாறி மாறி அறைந்தான்.

"எனக்குப் பொய் பிடிக்காது. பொய் சொல்பவனைக் கட்டோடு பிடிக்காது.. உன்னிடம் பொய்யிருக்கிறது. இனி நீ என்னிடம் வேலை பார்க்க முடியாது... ஓடிப்போ.."

"ஐயா.. நீங்கள் வேலையை விட்டு நிறுத்தி விட்டால் என் குடும்பம் பட்டினி கிடந்து செத்துப் போகும்.. என் பெண்டாட்டி பிள்ளைக்கு எப்படி நான் சோறு போடுவேன்..."

"உடம்பில் திமிர் இருக்கப் போய்த்தானே.. ஹோட்டலுக்கு சாப்பிட வந்த குடும்பப் பெண்ணிடம் வாலாட்டியிருக்கிறாய்.. உன் திமிர் அடங்க வேண்டாமா..? போட்டிங் போன இடத்திற்குப் பின்னாலேயே துரத்திப் போயிருக்கிறாயே.. அப்போது உன் பெண்டாட்டி பிள்ளைகள் நினைவுக்கு வரவில்லையா?"

"தெரியாமல் செய்து விட்டேன் ஐயா.. மன்னித்து விடுங்கள்.."

"எனக்கு மன்னிக்கத் தெரியாது என்று உனக்குத் தெரியாதா? கார்மேகம்... இங்கேவா.."

கார்மேகத்தை ஹரிஹரன் அழைக்கவும் லாரன்ஸ் நடுங்கிப் போய் விட்டான். அடுத்து என்ன நடக்கும் என்பதை அனுமானித்தவனாய்,

"ஐயா.. வேண்டாங்க ஐயா.." என்று கதறினான்.

அவனது கதறலை ஹரிஹரன் செவிமடுக்கவில்லை. அருகில் வந்த கார்மேகத்தை நிமிர்ந்து பார்த்தவனின் கண்களில் சிறிதளவும் கருணையில்லை.

"கார்மேகம்.. இவன் என்னை போலீஸ் ஸ்டேஷன் வாசல் படியை மிதிக்க வைத்து விட்டான். இவன் மேல் என் எதிரிகள் புகார் கொடுத்திருந்தால் அவர்களை கூண்டோடு கைலாசம் அனுப்பி இருப்பேன்... கொடுத்தது பாதிக்கப்பட்ட ஒரு பெண். இவனை வெளியே கொண்டு வந்தது என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக.. இவனைக் காப்பாற்றுவதற்காக இல்லை.. இவனுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டுமென்று நீயே தீர்மானித்துக் கொள். இனி இப்படி ஒரு தவறை இந்த ஜென்மம் முழுவதும் இவன் செய்யக்கூடாது."

கார்மேகம் லாரன்ஸின் பயந்த விழிகளைப் பார்த்தான்.

"ஐயா... இவன் நம்மோடு இருக்கிறவன்."

"இருந்தவன்.. இருக்கிறவனில்லை..."

"ஐயா முடிவு அப்படியிருந்தால் உங்கள் நிழலை விட்டு அனுப்புவதே இவனுக்குப் பெரிய தண்டனை தானே..? அதற்கு மேலும் வேறு ஒரு தண்டனை கொடுக்க வேண்டுமா ஐயா.. ஏற்கனவே இரண்டு நாட்களாய் பட்டினி போட்டு இவனை அடித்துத் துவைத்திருக்கிறேன்.. இனி அடித்தால் இவன் தாங்க மாட்டான்... விட்டு விடுங்கள்.."

ஹரிஹரன் வெறுப்பை உமிழும் பார்வை பார்த்தான்.

"ஓ.கே.. நீ சொல்வதால் விட்டு விடுகிறேன்.. இனி இவன் என் கண் பார்வையில் படக்கூடாது. நம் தொழில் நடக்கும் இடங்களில் இவன் காலடி வைக்கக்கூடாது. கணக்கை முடித்து விடு..."

"ஐயா..." லாரன்ஸ் அலறினான்.

"பணக்கணக்கை சொன்னேன் கார்மேகம்.."

ஹரிஹரன் அங்கிருந்து விரைவான நடையுடன் அகன்று காரில் ஏறிச் சென்று விட்டான். நடக்க முடியாமல் உடல் முழுவதும் ரத்த காயங்களுடன் தள்ளாடிக் கொண்டிருந்த லாரன்ஸை கோபத்துடன் பார்த்த பிரசாத்,

"அன்னைக்கே படித்துப் படித்துச் சொன்னேன். எம்.டி.க்கு பெண்களிடம் பொறுக்கித்தனம் பண்ணினால் பிடிக்காது.. கடுமையா பனிஷ் பண்ணுவார்ன்னு.. நீ கேட்கவில்லை.. இப்பப்படு.. நம்ம எம்.டி. உன்னை துரத்திட்டார்ன்னு தெரிந்த பின் இந்த சுத்து வட்டாரத்தில் யார் உனக்கு வேலை கொடுக்கப் போகிறாங்க..? பிழைப்புக்கு வழியில்லாமல் உன் வாழ்க்கையை நீயே கெடுத்துக்கிட்ட.. எம்.டி. சார் எல்லா விசயத்திலேயும் வேகமானவர்ன்னு பெயர் வாங்கினவர்தான். லேடிஸ் விஷயத்தில் அவரைப் பார்த்து ஒரு பயல் ஒரு வார்த்தை விரல் நீட்டிச் சொல்ல முடியாது. நீ ராஸ்கல். அவருடைய பெயரைக் கெடுக்கிறது போல காரியம் பண்ணிட்டு உன் பொழைப்பில் நீயாய் மண்ணை அள்ளிப் போட்டுக் கிட்டு உட்கார்ந்திருக்க.. போ.. போய்..

யாரு சொன்னால் எம்.டி. காது கொடுத்துக் கேட்பாரோ.. அவங்க காலில் போய் விழு.." என்று கூறிவிட்டு ஹார்பரை விட்டு அகன்று விட்டான்.

விழுப்புரத்தில் ஹாஸ்டல் அறையில் கட்டிலில் படுத்து நாவல் படித்துக் கொண்டிருந்த ரூபிணியிடம் ரோஜாரமணி வந்து,

"அம்மா.. உன்னைத் தேடி ஒரு பொம்பளையும்... ஆம்பளையும் ஜதையாய் வந்திருக்குதுக.. உட்காரச் சொல்லிட்டு வந்தேன்.. வா.. வா" என்று அழைத்தாள்.

தலையை வாரிக் கொண்டிருந்த ஜமுனாவைப் பார்த்த ரூபிணி,

"ஜதையா.. அப்படின்னா..?" என்று வினவினாள்.

"ஜோடியா வந்திருக்கிறாங்களாம். அதைத்தான் அப்படிச் சொல்கிறாள். ஏன் ரோஸ்.. அவங்க யாரு.. எவருன்னு விசாரிச்சயா?"

"விசாரிச்சேன்ம்மா... வாயைத் தொறந்தாத்தானே... பதினாறு வயதினிலே சினிமாவில் வர்ற சப்பாணி 'சந்தைக்குப் போகணும்... காசு கொடு'ன்னு புலம்பின மாதிரி.. ரூபிணியம்மாவைப் பார்க்கணும்கிறதை விட்டுட்டு வேற பேச்சு பேச மாட்டேங்குதுங்க.. சரி அங்கன உட்காருங்க ரூபிணியம்மாவை இட்டாரேன்னு சொல்லிட்டு வந்தேன். நீ வாம்மா..."

"இங்கே போய் யாரு என்னைப் பார்க்கணும்னு தேடி வந்திருப்பது..?"

"அட.. நீ வேற தேவையில்லாத ரோசனை பண்ணிக் கிட்டு இருக்கே.. நேர வந்து பார்த்தால் தெரிஞ்சு போகுது.. அதுகளைப் பாத்தா பாவமா கீது.. வாம்மா..."

"ரோஸ்.. உனக்கு இவ்வளவு கருணை மனமா? ச்சு.. ச்சு.. உன் பெயர் இனிமேல் ரோஸ் இல்லை.. அன்னை தெரஸா."

"போம்மா.. உனக்கு வேற வேலையே இல்லை.. எப்பப் பாரு என் பெயரை மாத்தி வைச்சுக்கிட்டு இருப்ப.. உன்னை ஜமுனான்னு கூப்பிடாமல் யமுனான்னு கூப்பிட்டால் உன் மனசுக்கு எம்மாங் கஷ்டமா இருக்கும்?"

"தம்மாத்துண்டு கூட கஷ்டமா இருக்காது. ஏன்னா.. மறதி மணிமேகலை என்னை தினத்துக்கு ஒரு பெயர் சொல்லித்தான் கூப்பிடுது..."

ரூபிணி புன்னகையுடன் ரோஜாரமணியுடன் படியிறங்கிப் போனாள்.

"எங்கே இருக்கிறாங்க..?"

"அந்தா இருக்காங்க பாரு..."

ஹாஸ்டலின் முன் பக்கமிருந்த தோட்டத்து மரத்தடி யில் போட்டிருந்த சிமெண்டு பெஞ்சியின் மேல் அமர்ந்திருந்தவர்களை சுட்டிக் காட்டினாள் ரோஜாரமணி.

"இவனா...?" தூக்கி வாரிப் போட்டது ரூபிணிக்கு.

"வணக்கம்மா..." எழுந்து நின்று கை கூப்பினான் லாரன்ஸ்.. அருகினில் பெருவிரலை வாய்க்குள் வைத்து சுவைத்துக் கொண்டிருந்த பரட்டைத் தலை குழந்தையை இடுப்பினில் வைத்துக் கொண்டு ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்.

"நீயா.. நீ ஏன் என்னைப் பார்க்க வந்தாய்...?"

"இதுக்குத்தான்ம்மா..." அவன் பெண்டாட்டியோடு ரூபிணியில் காலில் விழுந்தான்.

ரூபிணி பதறிப் போய் பின்னால் நகர்ந்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். மாலை மயங்கி இருள் பரவிக் கொண்டிருந்தது. எல்லோரும் ஹாஸ்டலில் அடைபட்டி ருந்தார்கள். நிம்மதிப் பெருமூச்சுடன் திரும்பி லாரன்ஸைப் பார்த்து அதட்டினாள்.

"எழுந்திரு.. ஏன் இப்படி முட்டாள்தனமாய் காரியம் பண்ணுகிறாய்..?"

லாரன்ஸின் மனைவி தேம்பி அழுதாள்.. முந்தானையில் முகத்தைத் துடைத்துக் கொண்டே அழுகுரலில் பேசினாள்.

"இது முட்டாத்தனமான காரியமில்லை.. அந்த மகராசன் பண்ணையில வேலை பார்த்த மப்பில் உங்க கிட்ட இந்த மனுசன் வம்பு பண்ணியதுதான் முட்டாள் தனம்.. அந்த ஐயாகிட்ட அண்டிப் பிழைச்சவங்க கெட்டுப் போனதில்லம்மா.. இந்த கெட்டுப் போன மனுசனாலே.. என் பொழைப்பு நட்டாத்தில நிற்குதும்மா.. நானும் இந்த மனுசனும் மூணு நாள் பட்டினியில கிடக்கிறோம்.

கைப்பிள்ளைக்கு பால் வாங்கிக் கொடுக்க கையில காசில்லம்மா. நீங்க மனசு வைச்சா எங்களை பட்டினி யிலிருந்து காப்பாத்த முடியும். எங்களுக்கு வேற போக்கிடம் இல்லம்மா.. அந்த மகராசன் துரத்தி விட்டுட்டா.. ஆதரிக்க எந்த நாதி வரும்? உங்கள கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்க்கிறேன்ம்மா.. இந்த ஆள் செஞ்சதுக்கெல்லாம் தண்டனை அனுபவிச்சிருச்சும்மா.. இரண்டு நாள் பட்டினி போட்டு அடிச்சு நொறுக்கிட்டாரு ஐயா.. பத்தாக்குறைக்கு வேலையையும் பிடுங்கிக்கிட்டு விரட்டி விட்டுட்டாரு..." அந்தப் பெண் பொங்கி அழுதாள்.

ரூபிணிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.. அவள் எதிரே நின்ற பெண்ணுக்கு என்ன ஆறுதல் சொல்லுவது என்று தெரியாமல் விழித்தாள்.

# 8

"இனிமேல் எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் இந்த மனுசன் காலைத் தொட்டு கும்பிடும்மா.. ஜெயிலில் தூக்கிப் போட்டிருந்தாலும் இந்த மனுசன் திருந்தி இருக்காதும்மா.. ஐயா போட்ட போடில் திருந்திருச்சும்மா.. உங்களுக்கு கோடிப் புண்ணியம் உண்டு. நீங்க ஒரே ஒரு வார்த்தை ஐயாகிட்டச் சொன்னீங்கன்னா நாங்க உயிர் பிழைச்சுக்கு வோம். எங்க உயிரைக் காப்பாத்துங்கம்மா" அந்த பெண் கெஞ்சினாள்.

"நானா..? உனக்கு ஏதாவது மண்டையில் மசாலா இருக்கா? என்னிடம் வந்து உங்க முதலாளியிடம் பேசச் சொல்கிறாயே.. எனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? நான் யார்? அவர் யார்? நான் சொன்னால் அவர் எப்படிக் கேட்பார்? இங்கே வந்து என்னிடம் அழுது புலம்புவதை அவரிடம் போய் செய்ய வேண்டியதுதானே..." ரூபிணி திரும்பி ஹாஸ்டலுக்குள் போகப் போனாள்.

அந்தப் பெண் சட்டென்று தன் கையிலிருந்த குழந்தையை ரூபிணியின் முன்னால் போட்டு விட்டாள்.

"இந்தப் பச்சை மண்ணு முகத்தைப் பாருங்கம்மா. இதைத் தாண்டி நீங்க போங்க.. நாங்க எங்க முடிவைத் தேடிக்கிறோம்.. ஐயாகிட்ட எப்படிம்மா நாங்க போக முடியும்..? ஐயா ஒன்றை முடிவு செஞ்சா செஞ்சதுதான். யார் போய் அவர் காலில் விழுந்தாலும் தீர்மானிச்சதை மாத்திக்கவே மாட்டார்."

ரூபிணி கலங்கிப் போய் குழந்தையைத் தூக்கி அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள். செய்வதறியாமல் தவித்தபடி கேட்டாள்.

"ஏம்மா.. நீ அவரிடம் வேலை பார்த்த ஆளின் மனைவி. நீ சொல்வதையே கேட்டுக் கொள்ளாதவர். நான் சொல்வதை எப்படிக் கேட்பார்?"

"நீங்க பாதிக்கப்பட்டவங்கம்மா.. நீங்க சொன்னால் நிச்சயம் எடுபடும். எங்க உசிரைக் காப்பாத்த முடியும். கொஞ்சம் தயவு பண்ணுங்கம்மா..."

ரூபிணி தன் கையிலிருந்த செல்போனை யோசனை யுடன் பார்த்தாள். "என்னிடம் ஒருவன் வம்பு பண்ணினான். அவனைத் தண்டிக்க நினைத்து புகார் கொடுக்கவில்லை.. இனி இது போன்ற தவறுகளைச் செய்ய அவன் பயப்பட வேண்டும். அதனால் தான் புகார் கொடுத்தேன்" என்று அன்று அவனிடம் சொன்னாள்.

"தண்டனையை நான் கொடுக்கிறேன்.. நீங்கள் கேட்டதை நான் செய்கிறேன். என்னை நம்புங்கள்.." என்றான் அவன். இன்று சொன்னதை அவன் செய்து விட்டதற்கு சாட்சியாக தண்டிக்கப்பட்டவனின் மனைவி வந்து கதறி அழுகிறாள்.

லாரன்ஸ் அயோக்கியன்தான்.. அவன் ஆட்டம் அடங்கி விட்டது. ஹரிஹரன் அடக்கி விட்டான். இனியும் அவன் தண்டனையை அனுபவிப்பது அதிகப்படி. அவன் அனுபவிக்கும் வேதனையை நிறுத்துவதுதான் சரியான செய்கை. அவன் செய்த தவறுக்கு அவனது குடும்பம் பாதிக்கப்படுவது முறை ஆகாது.

ரூபிணி அந்தப் பெண்ணின் இடுப்பிலிருந்த குழந்தையைப் பார்த்தாள். தன்னைச் சுற்றிலும் என்ன

நடக்கிறது என்பதை அறியாமல்.. தன் கட்டை விரலை விடாமல் சுவைத்துக் கொண்டிருந்தது.

ரூபிணி தீர்மானித்து விட்டாள்.

"லாரன்ஸ்.. உங்களிடம் உங்கள் முதலாளியின் போன் நம்பர் இருக்கிறதா..?"

அவள் தன்னிடம் பேசியதும் லாரன்ஸ் நம்ப முடியாமல் திகைத்தான். கையெடுத்துக் கும்பிட்டான்.

"அம்மா.. என்னிடம் நீங்கள் பேசுகிறீங்களா?" நாத்தழுதழுத்தான்.

"செய்தது தவறுன்னு உணர்ந்து கொண்டால் போதும். வேறு என்ன எனக்கு வேண்டும்? இந்த பூமியில் பிறந்தவர்கள் எல்லோருமே மகாத்மாக்கள் கிடையாது லாரன்ஸ்.. அந்த மகாத்மா காந்திக்கே ஏன் மகாத்மான்னு பெயர் கிடைத்தது தெரியுமா? அவர் செய்த சின்னச் சின்ன தவறுகளைக் கூட ஒளிவு மறைவில்லாமல் தன் 'சத்திய சோதனை' என்ற சுய சரிதைப் புத்தகத்தில் எழுதினார். அந்தத் தவறுகளைத் திருத்திக் கொண்டார். மீண்டும் அந்தத் தவறுகளை அவர் செய்யவே இல்லை. அதனால்தான் அவருக்கு 'மகாத்மா' என்ற பெயர் கிடைத்தது. நீங்கள் திருந்தி விட்டீர்கள். இனி அந்த மாதிரியான செயல்களை செய்ய மாட்டீர்கள். எனக்கு அதுபோதும். உங்கள் முதலாளியின் செல் போன் நம்பரைச் சொல்லுங்கள்.."

லாரன்ஸ் சொன்னான். முன் பின் தெரியாத யாரோ பார்க்க வந்து இருக்கிறார்கள் என்றதும் எதற்கும் இருக்கட்டுமென்று முன்னெச்சரிக்கையாய் கையில் செல்போனோடு கீழே வந்திருந்த ரூபிணி அந்த நம்பருக்கு போன் பண்ணினாள்... மறுமுனையில் கம்பீரமான.. கனத்த.. ஆண் குரல் கேட்டது.

"ஹலோ..."

ரூபிணி உதடு கடித்தாள்... பேச ஆரம்பித்து விட்டு இனிப் பின் வாங்க முடியாது... பின் வாங்கவும் கூடாது..

"சார்.. நான் ரூபிணி பேசுகிறேன்.."

"ரூபிணி...? ஓ... நீங்களா.. சொல்லுங்கள்.. நான் அந்த லாரன்ஸை பனிஷ் பண்ணி விட்டேன்.. அதைக் கேட்பதற்காகத்தானே போன் பண்ணினீர்கள்?"

"இல்லை சார்... லாரன்ஸிற்கு வேலை கொடுங்கள்.. அவரை மன்னித்து விடுங்கள் என்று கேட்டுக் கொள்ளத் தான் போன் பண்ணினேன்.."

"வாட்...?"

"யெஸ் சார்... இங்கே என் ஹாஸ்டலுக்கு லாரன்ஸ் அவருடைய வொய்ப் குழந்தையோடு என்னைப் பார்க்க வந்திருக்கிறார். அவருடைய வொய்ப் அழுகிறார்கள்.. கைக்குழந்தை வேறு... பாவம் சார்.. அவரை மன்னித்து விடுங்கள்..."

மறுமுனையில் ஓர் நொடி நிசப்தம் நிலவியது.

"ரூபிணி.. நீங்கள் போலீஸில் அவன் மேல் புகார் கொடுத்தீர்கள்..."

"நீங்கள் வந்து சொன்னதும் புகாரை வாபஸ் பண்ணி விடவில்லையா?"

"எதன் பேரில் வாபஸ் பண்ணினீர்கள்? அவனை தண்டிக்கிறேன் என்று நான் சொன்ன பின்னால்தான் வாபஸ் வாங்கினீர்கள். ஹரிஹரன் வாக்குத் தவற மாட்டான்."

"அதனால்தான் உங்களிடம் பேசுகிறேன் சார்.. நீங்கள் கேட்டுக் கொண்டதை நான் செய்து விட்டேன்.. நான் கேட்டதை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள்.. இத்துடன் போதுமே... லாரன்ஸை வாழ்நாள் முழுவதும் தண்டிக்க வேண்டுமா? அவர் தனி மனிதர் இல்லையே.. வொய்ப் குழந்தையென்று அவரை நம்பி இன்னும் சில ஜீவன்கள் வாழ்கின்றார்களே.. நீங்களே கை விட்டு விட்டால் அவர்கள் எங்கு போவார்கள்?"

"எனக்கு மன்னிக்கத் தெரியாது ரூபிணி..."

"எனக்காக மன்னிக்கக் கூடாதா?"

"என்ன சொன்னீர்கள்...? இன்னொரு முறை சொல்லுங்கள்.."

"எனக்காக அவரை மன்னித்து விடுங்கள் சார்..."

மறுமுனையில் மீண்டும் ஓர் வினாடி மௌனம் குடி கொண்டது.

"சரி... உங்களுக்காக.. நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள் ரூபிணி... உங்களுக்காக... மட்டுமே அவனை நான் மன்னிக்கிறேன்.. உங்கள் வார்த்தைக்காக மன்னிக்கத் தெரியாத இந்த ஹரிஹரன் அவனது வழக்கத்தை மாற்றிக் கொண்டு அவன் வாழ்க்கையிலேயே முதல் முறையாக மன்னிக்கப் போகிறான்.. லாரன்ஸை நாளையிலிருந்து வேலைக்கு வரச் சொல்லுங்கள்..."

"தேங்க் யு சார்... தேங்க்யூ வெரிமச்.."

"நன்றியெல்லாம் எதற்காக? என்னை அந்நியப் படுத்தவா? வேண்டாம்.. பட் ஒன் வொர்டு ரூபிணி."

"என்ன சார்?"

"நீங்கள் இவ்வளவு இளகின இதயத்தோடு இருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. யு ஆர் ஸோ சாப்ட்.."

மறுமுனை துண்டிக்கப்பட்டு விட்டது. சுற்றிலும் கவிந்திருந்த இருள் ரூபிணியின் முகச் சிவப்பை மூடி மறைத்தது. மெல்லிய உதடுகளை தன் அரிசிப் பற்களால் கடித்துக் கொண்டவள். லாரன்ஸைப் பார்த்துக் கூறினாள்.

"நீங்கள் நாளையிலிருந்து வேலைக்குப் போகலாம் லாரன்ஸ். உங்கள் முதலாளி உங்களை மன்னித்து விட்டார். வேலைக்கும் வரச் சொல்லி விட்டார்."

"நிஜமாகவா...?"

நம்ப முடியாத திகைப்பு லாரன்ஸின் வார்த்தைகளில் வெளிப்பட்டது. யார் சொன்னாலும் கேட்காத ஹரிஹரன்.. இந்தப் பெண் சொன்ன வார்த்தையை கேட்டு விட்டானா? கட்டுக்கடங்காத கடலை தன் உள்ளங்கைக்குள் கட்டுப்படுத்தும் இந்தப் பெண்ணிடமா அவன் வம்பு பண்ணினான்? உடல் நடுங்க ரூபிணியின் கால்களில் விழுந்தான் அவன்.

"அம்மா.. தாயே.. என்னை மன்னிச்சிடுங்கம்மா.. உங்க சக்தி தெரியாமல் மோதி விட்டேன்.."

"அடடா.. நான் சாதாரணமானவள் லாரன்ஸ்.. சக்தி அது இதுன்னு பினாத்தாமல் ஒழுங்காய் போய் வேலையில் சேருங்கள். ஆனால் ஒன்று.. இனிமேல் இது போன்ற தவறுகளை..."

"நினைத்துக் கூடப் பார்க்க மாட்டேன்.."

"அது போதும் போய் வாங்க..."

ரூபிணி லாரன்ஸின் குழந்தையை வாங்கி அதன் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள். பேசிக் கொண்டே ஹாஸ்டல் வாசலுக்கு வந்தார்கள்.

உள்ளேயிருந்து ஜமுனா ரூபிணியைத் தேடிக் கொண்டு வந்தாள்.

"இங்கே என்னடி பண்ணுகிறாய்? யார் இவங்க..? இவன்... இவன்... இவன்தானே உன்னிடம் வம்பு பண்ணியவன்? இதுகளா உன்னைப் பார்க்க வந்திருப்பது?"

"ஜமுனா.. எல்லாவற்றையும் விவரமாய் நம் ரூமுக்கு வந்து சொல்லுகிறேன்.. இப்ப ஒரு 1000 ரூபாய் வேண்டுமே. உன்னிடம் இருக்கிறதா? பர்ஸ் மாடியில் ரூமில் இருக்கு..."

"இந்தா.."

ஜமுனா கொடுத்த பணத்தை வாங்கி லாரன்ஸின் மனைவியிடம் கொடுத்தாள் ரூபிணி.

"அம்மா.. இது எதுக்கும்மா..? வாழ்க்கை பூராவும் நாங்க பசியில்லாமல் வாழ வழி செஞ்சிட்டிங்க.. அது போதும்மா.."

"உடனே பசி தீர வேண்டாமா? நீங்கள் இரண்டு பேரும் பசி தாங்குவீர்கள்.. குழந்தை தாங்குமா? வைத்துக் கொள்.."

அவள் கண்களில் கண்ணீர் வழிய லாரன்ஸைப் பார்த்தாள். "பார்த்தாயா... இந்தப் புண்ணியவதி குணத்தைப் பாரு.. இந்தம்மா மனசு நோகப் பேசி.. இது கையைப் பிடிச்சு இழுத்து கதி கலங்க வைச்சே... உன்னை மன்னிச்சு வேலை வாங்கிக் கொடுத்ததுமில்லாமல் நம்ம பசி தீர்க்க பணமும் கொடுக்குதே.. இது தெய்வம்ய்யா.. நீ பண்ணின பாவத்துக்கு உன்னை என்னா செய்தாதேவலாம்."

"எதுவும் செய்ய வேணாம்.. பணத்தைப் பிடி.. தவறை உணர்ந்து திருந்தி விட்டவர்களை திரும்பத் திரும்பச் சொல்லால் காயப்படுத்துவது தான் பெரிய தவறு. போய் விட்டு வாங்க."

அவர்கள் போய் விட்டார்கள்.

"என்னடி நடக்கிறது இங்கே? அவர்கள் பேசிக் கொள்வது பாதி புரிகிறது. பாதி புரியவில்லை.."

"ரூமுக்குப் போய் பேசிக் கொள்ளலாமே..."

"அதுவும் சரிதான்.. பசிக்குது.. சாப்பிடப் போகலாம் வா.."

ஜமுனா டைனிங் ஹாலில் கலகலப்பாக பேசிக் கொண்டே சாப்பிட ரூபிணி மௌனமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவள் மனம் திரும்பத் திரும்ப ஹரிஹரன் பேசிய வார்த்தைகளை அசை போட்டுக் கொண்டிருந்தது.

'உங்கள் வார்த்தைக்காக மன்னிக்கத் தெரியாத ஹரிஹரன் அவனது வழக்கத்தை மாற்றிக் கொண்டு அவன் வாழ்க்கையிலேயே முதல் முறையாக மன்னிக்கப் போகிறான்.'

"எதுக்குடி இப்படி முகம் சிவக்கிறாய்? சப்பாத்தி நல்லாயிருக்குன்னுதானே சொன்னேன்.. அதற்குப் போய் இப்படி ஓர் நாணமா? என்ன ஆச்சு..?"

"உம்.. குழந்தை அழுகுது..."

"அதுக்குத்தான் ஆயிரம் ரூபாய் கொடுத்து விட்டிருக்கிறாயே.. அவங்க உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர் வாங்கிக் கொடுத்துக்குவாங்க.. நீ உன் கதைக்கு வா. எதுக்கு இந்த ஜொலிஜொலிப்பு?"

"ஏதோ.. நகையைப் பத்திப் பேசுவது போல் பேசுகிறாய்?"

"நகைதான்.. இதுவும் நகைதான்.. உன் புன்னகை."

ரூபிணி முகம் சிவக்க மீண்டும் புன்னகைத்தாள்.

"தோடா.. ஏண்டி... இந்தச் சிரிப்பு சிரித்தால் ஏதோ விஷயமிருக்குன்னு அர்த்தம்... ஆனால் நீதான்

சாமியாரிணி ஆச்சே.. எப்படி இதுன்னு தான் எனக்குப் புரியலை.."

"போடி..."

ரூபிணி எழுந்து கை கழுவச் சென்று விட்டாள்.

'உங்களுக்காக மட்டுமே அவனை நான் மன்னிக்கிறேன்..'

கார் டிரைவரிலிருந்து.. மிகப் பெரிய பொறியியல் கல்லூரியின் சொந்தக்காரர் வரை அஞ்சி நடுங்கும் வல்லமை படைத்தவனின் வாய் உதிர்த்த வார்த்தைகள் இவை.

அவளுக்காகவா...? அவளின் வார்த்தைக்கு அவன் கட்டுப்பட்டானா? எதற்காக...? அவள் மிகச் சாதாரணப் பெண். அவனிருக்கும் உயரத்தை அண்ணாந்து பார்க்க வேண்டிய நிலையில் இருப்பவள். அவளின் வார்த்தைக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்க வேண்டிய அவசியமே அவனுக்கு இல்லையே.. அவசியம் இருந்தாலும் வளைந்து கொடுக்காதவன் ஆயிற்றே.. பின் ஏன் அவள் சொல்லுக்கு தன் வழக்கத்தை கைவிட்டு வளைந்து கொடுத்தான்?

அது உணர்த்திய செய்தி புரிய அவள் மனம் சிறகடித்தது. அதுவரை இல்லாத இனம் விளங்கா உணர்வு எழுந்து 'குப்'பென்று அவள் உடல் முழுவதும் பரவியது.

# 9

'இனம் விளங்கவில்லை - எவனோ

என் அகம் தொட்டு விட்டான்....'

தூண்டிற் புழுவினைப் போல் துடித்த பெண் கூறுவதாய் பாரதியாரின் கவிதை சொல்கிறதே... அந்தத் தவிப்பை அன்று அனுபவித்தாள் ரூபிணி..

ஓர் நாள்... சில நிமிடங்கள் மட்டுமே பார்த்த அவன் முகம் நினைவில் வர மறுத்தது.. அவனது ஆண்மை நிரம்பிய கனத்த குரல் மட்டுமே.. அதில் தொனித்த கம்பீரம் மட்டுமே.. அவள் நினைவில் நின்றது.

ஹரிஹரன்..! பெயரைக் கேட்டால் அழுத குழந்தை வாய் மூடுமாமே... இன்று அவன் பெயரை நினைத்தாலே அவளது நெஞ்சம் இனிக்கிறதே ஏன்?

"சரியாப் போச்சு போ.. குழாயைத் திறந்து விட்டுக் கையைக் கழுவாமல் அப்படி என்னடி யோசித்துக் கொண்டிருக்கிறாய்.. சாப்பிட்ட கையே காய்ந்து விட்டது? வாட் இஸ் ராங் வித் யு?"

"நத்திங்... நத்திங்..."

அவசரமாய் கையைக் கழுவினாள் ரூபிணி.. அவளை ஆராய்ச்சி பார்வை பார்த்தபடி கையைக் கழுவிய ஜமுனா,

"ஊஹீம்.. நீ இன்றைக்கு ஒரு மார்க்கமாய் இருக்கிறாய். திருதிருவென விழிக்கிறாய்.. எதுவோ உன்னிடம் சரியில்லை.. ரூமுக்கு வா.. பேசிக் கொள்கிறேன்..." என்றபடி விடுவிடென்று முன்னால் போனாள்.

மாட்டிக் கொண்ட உணர்வுடன் நாக்கைக் கடித்துக் கொண்ட ரூபிணி அவளைப் பின் தொடர்ந்தாள்.

"ஜமுனா.. உன் ரூம் மேட் காமினி என்ன செய்கிறாள்.." வார்டன் மணிமேகலை வினவினாள்.

"இதுகூட இது ஒரு லொள்ளு.. மேடம் இதோ என் கூட ஆடு திருடின கள்ளி போல ஓர் விழி விழித்துக் கொண்டு வருகிறாளே இவள்தான். என் ரூம் மேட் ரூபிணி.. காமினி இல்லை.."

"ரூபிணியை எனக்குத் தெரியாதா? நீ போம்மா..."

"ஏய்... வந்து விடுடி.. அது பாட்டுக்கு வேறு ஏதாவது தாமினின்னு ஆரம்பித்து வைக்கும்."

ஜமுனா சன்னக் குரலில் எச்சரித்தவாறு விரைந்தாள்.

"ஹி.. ஹி.. போய்விட்டு வருகிறேன் மேடம்.." ரூபிணி மணிமேகலையிடம் விடைபெற முனைய அவள் மூக்குக் கண்ணாடியை சரி செய்தவாறு ரூபிணியை ஏற இறங்கப் பார்த்தாள்.

"ஏம்மா.. எந்த ஊருக்குப் போகிறாய்? உனக்கு டிரான்ஸ்பர் கிடைத்து விட்டதா?"

ஜமுனா தள்ளி நின்று கொண்டு தலையில் அடித்துக் கொண்டாள்.

"ஏய்ய்... வாடி இங்கே..."

மீண்டும் விடைபெற்றால் மணிமேகலை வேறு எதையாவது கேட்டு வைப்பாளென்ற பயத்தில் ரூபிணி வாயே திறக்காமல் ஜமுனாவிடம் ஓடினாள்.

"ஏண்டி.. இன்னைக்கு பேக்கு போல நடந்து கொள்கிறாய்..? சாப்பிட வந்தோம். மாடியிலிருக்கிற ரூமிற்குப் போகிறோம். என்னவோ ஏழு கடல் தாண்டி போகப் போகிறவள் மாதிரி மறதி மணிமேகலையிடம் போய் பிரியா விடை வாங்கிக் கொள்கிறாயே.. அது கேட்டு வைத்தது பார் சரியான ஓர் கேள்வி.. சில சமயம் மறதி மணிமேகலை கூட புத்திசாலி ஆகி விடுகிறது. உன்னைப் போல புத்திசாலிகள் மண்டூகம் ஆகி விடுகிறார்கள்.."

"சரி.. சரி.. ஏனிப்படி மண்டகப்படி நடத்துகிறாய்.."

"நீ செய்யும் கேணத்தனமான வேலைகளுக்கு மண்டகப்படி நடத்தாமல் மெச்சிக் கொள்ளனுமா.. உள்ளே வா.. ரூம் கதவை லாக் பண்ணப் போகிறேன்..."

இனி ஜமுனா கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவாள். எப்படி பதில் சொல்வது? யோசனையுடன் அறை ஜன்னலுக்குப் போய் வானத்தை வெறித்தாள் ரூபிணி... நட்சத்திரங்கள் கண் சிமிட்ட வானில் நிலவு தன் பவனியைத் தொடங்கியிருந்தது. அவள் உடல் மேல் இரவு நேரக் குளிர் காற்று தொட்டு விளையாடியது.

மனதில் ஓர் சிலிர்ப்புடன் ஜமுனாவின் கேள்விக் கணைகளை எதிர்பார்த்து நின்றிருந்தவள்.. அவளிட மிருந்து எந்தவித வார்த்தைகளும் வெளிவராமல் போகவே திரும்பிப் பார்த்தாள்...

கட்டிலில் அமர்ந்து தலையணையை மடியில் வைத்து அதில் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு கைகளில் முகம் புதைத்தவளாய் ஜமுனா மௌனமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னடி...?"

"எதுவும் பேச மாட்டேன்கிற...?"

"நீ பேசுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன்..." ஜமுனாவின் பார்வை அவளைத் துளைத்தது.. ரூபிணி தடுமாறினாள்.

"எதைச் சொல்ல...?"

"நீ மௌனமாய்... மௌனத்தை ரசிப்பதற்கான காரணத்தைச் சொல்லு..."

"ஜமுனா..."

ரூபிணி உதடு கடித்து தலை குனிந்தாள்.. ஜமுனாவின் முகம் பார்க்காமல் சொல்லி முடித்தாள். ஜமுனாவின் முகம் மாறியது... இருண்டது.

"ரூபிணி..." ஜமுனாவின் குரலில் கவலை இருந்தது.

"சொல் ஜமுனா..." ரூபிணி கனவில் மிதந்தவளாய் பதில் கூறினாள்.

"இது சாதாரண விசயமல்ல..."

"எனக்கும் தெரிகிறது.."

"எனக்கென்னவோ... நீ நெருப்போடு விளையாடுகிறாய் என்று தோன்றுகிறது.. இது மிகவும் அபாயகரமான விளையாட்டு..."

ரூபிணியின் முகம் சிந்தனையைக் காட்டியது.. மௌனமாய் கட்டிலின் மெத்தையில் கைவிரலால் கோலமிட்டாள்.. பின் தலை நிமிர்ந்து ஜமுனாவைப் பார்த்துக் கூறினாள்.

"நான் இந்த விளையாட்டை ஆரம்பிக்கவில்லை ஜமுனா.. என்னால் ஒரு குடும்பமே பட்டினி கிடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது எப்படி?"

"அன்றைக்கே நான் சொன்னதைக் கேட்டிருந்தால் இது நடந்திருக்குமா? போலீஸில் கம்ப்ளெயின்ட் கொடுக்காதே என்று எவ்வளவு முறை எடுத்துச் சொன்னேன்? நீ கேட்கவில்லையே..."

"தவறு செய்தவனுக்கு தண்டனை வேண்டாமா? அவன் மேலும் மேலும் இது போல தவறுகளைச் செய்யாமல் தடுக்க வேண்டாமா...?"

"இப்போதுதான் அவனுக்கு தண்டனை கிடைத்து விட்டதே.. இதில் மேலேயும் ஏன் தலையைக் கொடுத்தாய்?"

"இது அதிகப்படியான தண்டனை ஜமுனா... அவனை நம்பி ஒரு குடும்பம் இருக்கிறது. அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்த்தாயா? அதைப் பார்த்த பின்னும் அதைப் பட்டினி போட மனம் வருமா? நீயே சொல்..."

"அதற்காக.. அதற்காக.. ரூபிணி எப்படி நீ ஹரிஹரனுடன் போனில் பேசத் துணிந்தாய்? உனக்குப் பயம் என்பதே இல்லையா..?"

"எதற்குப் பயம்? அவரும் மனிதர்தானே..." சொல்லும் போதே அவனை முதன் முதலில் பார்த்தபோது 'இரும்பு மனிதன்' என்று தான் எண்ணியது ரூபிணிக்கு நினைவில் வந்தது.

"என்னடி... இவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாய்? அவரைப் பற்றிய பேச்சு என்ன சொல்கிறது தெரியுமா? அவர் ஒரு 'தாதா' என்று சொல்கிறது.. அவர் மிகப் பெரிய பணக்காரர். உன்னாலும் என்னாலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு பணக்காரர்.. அரசியலில் அதிக அளவு செல்வாக்கு உள்ளவர். கட்சி பேதமில்லாமல்.. இந்தப் பகுதியில் யார் ஜெயிக்கிறார்களோ... அவர்கள் அனைவரும் அவர் கேட்பதை செய்து கொடுப்பார்கள்.. அவர் விரல் நுனியில் ஒரு ராஜாங்கமே நடக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதரிடம் போய் விளையாட்டாய் பேசியிருக்கிறாய்.."

"அது விளையாட்டுப் பேச்சில்லை ஜமுனா..."

"அவருக்கு அது விளையாட்டாய் தோன்றி விட்டால் என்ன செய்வாய்? வேண்டாம் ரூபிணி.. இது போன்ற செயல்களை இனி செய்யாதே.. விட்டுவிடு. உன் மேல் அக்கறையிருப்பதால்தான் சொல்கிறேன்.. இது விபரீத விளையாட்டு."

ஜமுனா படுத்து விட்டாள்.. இயந்திர கதியில் விளக்கை அணைத்து விட்டுப் படுத்த ரூபிணிக்கு தூக்கம் வரவில்லை...

'தூங்காத கண்ணென்று ஒன்று..

துடிக்கின்ற சுகமென்று ஒன்று
தாங்காத மனமென்று ஒன்று
தந்தாயே நீயென்னைக் கண்டு..'

கண்ணதாசனின் திரைப்படப் பாடல் அவளது நெஞ்சினில் ஒலித்தது. 'துடிக்கின்ற சுகம்..!' எவ்வளவு சரியான வார்த்தை.. துடிப்பது சுகமாய் அமைவது எப்படி? உணர்ந்தவள் தவித்தாள்.. துடித்தாள்...

"நெருப்போடு விளையாடுகிறாய்...!"

"இல்லை ஜமுனா.. நான் நெருப்போடு விளையாட வில்லை.. அவர் நெருப்பென்று நினைத்து நான் பேசவில்லை.. பேசி முடித்த பின்னால் தான் என் தேகம் சுடுகின்றது.. இந்தத் தவிப்பை உனக்கு எப்படிப் புரிய வைப்பேன்.. சொல்ல முடியாத இந்த சுகமான வேதனையை வார்த்தைகளால் விவரிக்க வழி தெரியாமல் துடிக்கிறேன் ஜமுனா..."

ரூபிணி தலையணையில் முகம் புதைத்து தலையை உலுக்கிக் கொண்டாள். புரண்டு படுத்தாள்.

'தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா.. நின்னை
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா...'

தீயும்.. நீராய் மாறி குளிர்விக்கும் விந்தையான விளையாட்டு இது. ரூபிணியின் இதழ்களில் புன்னகை அரும்பியது. இது உனக்குத் தெரியாது ஜமுனா.. அவன் பெயரைச் சொல்லும் போதே நீ பயப்படுகிறாய்.. நினைக்கும்போதே என் நெஞ்சம் இனிக்கிறது..

வெறும் நினைவு தானே.. அவனை நினைக்கக் கூடவா என் மனதிற்குத் தடை...? தன் உணர்வுகளுக்கு விடை கிடைத்து விட்ட தெளிவுடன் கண் மூடி உறங்கி விட்டாள் ரூபிணி...

அடுத்து வந்த நாட்களில் அவனைப் பற்றிய பேச்சையே ரூபிணி எடுக்காததால் ஜமுனா அதை மறந்தே போனாள்..

ரூபிணியின் அலுவலகத்தில் மூர்த்தி என்ற ஒருவன் கோயம்புத்தூரிலிருந்து மாறுதலாகி வந்து சேர்ந்தான்... வந்த முதல் நாளே ரூபிணியிடம் வந்து தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஐ.. ஆம் மூர்த்தி.. கோவையிலிருந்து வருகிறேன்.."

"ஆபிஸில் சொன்னார்கள்.. என்ன வேண்டும் சார்?"

"நீங்கள் தான் வேண்டும்.."

"வாட்...?"

"உங்கள் அறிமுகம்தான் வேண்டும்.."

"எதற்காக...?"

"ம்ம்.. பார்த்த முதல் பார்வையிலேயே வசீகரித்து விட்டீர்கள்.."

அவனது குரலில் ஓர் மாற்றம் இருந்தது.. முன்பின் தெரியாத பெண்ணிடம் இப்படியா பேசுவார்கள்? ரூபிணிக்கு கோபம் வந்தது.

"கேட்ட முதல் பேச்சிலேயே வெறுக்க வைத்து விட்டீர்கள்.." ரூபிணி பட்டென்று பதில் சொன்னாள்.

மூர்த்தியின் முகம் சுருங்கி விட்டது. தன்னுடைய அழகான தோற்றத்தில் அவனுக்கு கர்வம் உண்டு. தன் தோற்றத்திலும் பேச்சிலும் மயங்காத பெண்கள் இல்லை என்பது அவனது எண்ணம். இதுவரை அவன் வேலை பார்த்த ஊர்களில் அலுவலகத்திலும், வெளியிலும்.. அவனது அழகிலும்.. நளினமான பேச்சிலும் மயங்கிய பெண்கள் ஏராளம். இவள் மட்டும் என்ன பெரிய மேனகையா? இவளை மயக்க அவனால் முடியாதா?

முதல் நாளே சவாலை எடுத்துக் கொண்டான் அவன். அதன் பின் ரூபிணியைக் கவர்வதையே தன் வாழ்க்கையின் லட்சியமாய் நினைத்துக் கொண்டு.. தினமும் அவளிடம் வந்து பேச்சுக் கொடுப்பதை வாடிக்கையாக வைத்துக் கொண்டான்.

"என்னப்பா மூர்த்திக்கு தினமும் உன்னிடம் சந்தேகம் கேட்க வேண்டும் போல் இருக்கிறதே.. என்ன விசயம்?" ப்ரீதி வினவினாள்.

"தேவையில்லாமல் என்னைச் சீண்டிப் பார்க்கிறார்.. அதுதான் விசயம்.. ப்ரீதி.. நான் ஜூனியர்.. வேலையில் சேர்ந்து இன்னும் ஒரு வருடம் கூட முடியவில்லை.. இவர் என்னை விட எட்டு வருடம் சீனியர்.. இவருக்குத் தெரியாத

வேலையா.. எனக்குத் தெரியும்? என்னிடம் பேச்சுக் கொடுக்க இதெல்லாம் ஒரு சாக்கு.."

"ம்ம்.. வேலைக்கு வந்து விட்டால் இது ஒரு கஷ்டம்.."

"ஜவஹரையும் இந்த ஆளையும் இணை சேர்த்து நினைக்கிறாயா?"

"சேச்சே.. ஜவஹர் ஓர் டீசன்ட் மேன்.. என்னிடம் மட்டும்தான் வழிவார்.. இந்த மூர்த்தி எல்லாப் பெண்களிடமும் வழிவான்.. தான் ஒரு மன்மதன் என்கிற நினைப்பு அவனுக்கு.."

"அவன் மன்மதனாகவே இருக்கட்டும்.. அதற்காக அவனிடம் எல்லாப் பெண்களும் மயங்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லையே.. எனக்கு அவனைக் கண்டாலே பிடிக்கவில்லை..."

"அதனால்தான் உன்னைத் தொல்லை செய்கிறான்." நீ அவனுக்கு பெரிய சவால் ஆகிவிட்டாய் போல...

"ஏன்.. நீ கூடத்தான் அவனுடன் பேச மாட்டாய்.. உன் அலட்சியம் அவனுக்கு ஓர் சவால் இல்லையா?"

ப்ரீதி அதற்குச் சொன்ன பதில் ரூபிணியின் சிந்தனையைத் தூண்டியது. அது தன் மனதில் பதியும் என்றோ.. அதனாலேயே ஜமுனா சொன்ன நெருப்பு விளையாட்டை மீண்டும் ஓர் முறை அவள் விளையாடிப் பார்க்க நேருமென்றோ அவள் அப்போது நினைக்க வேயில்லை.

## 10

ரூபிணியின் அலுவலகத்தில் வருடாந்திர ஆடிட் நடந்து முடிந்தது. ஆடிட் பார்ட்டிக்கு விருந்து கொடுப்பது அவர்களது அலுவலக வழக்கமாம். பெரிய ஸ்டார் ஹோட்டலில் மதிய உணவு சாப்பிடுவது என்று முடிவாகியது.. எல்லோரும் அவரவருடைய இரண்டு சக்கர.. நான்கு சக்கர

வாகனங்களில் கிளம்பினார்கள்.. அன்று ப்ரீதி அவளுடைய ஸ்கூட்டியில் வரவில்லை.. "ரிப்பேர்" என்றாள்..

"ஓ.கே. என்னுடன் வா போகலாம்.." ரூபிணி எளிதாய் கூறினாள்.

மதியம் பனிரெண்டு மணிக்கே ப்ரீதி எழுந்து ரூபிணியின் டேபிள் அருகே வந்தாள். ரூபிணி கேள்வியாய் பார்த்தாள்.

"அம்மா... திடீரென்று வரச் சொல்கிறார்கள் ரூபிணி. வீட்டுக்குப் போய் விட்டு நேரே ஹோட்டலுக்குப் போய் விடலாம்.. ஆபிஸரிடம் பெர்மிசன் வாங்கி விட்டேன்.. போகலாமா.."

"ம்ம்.. வேலையிருக்கிறதே..." ரூபிணி தயங்கினாள்.

"வந்து பார்த்துக் கொள்ளலாம்.." ப்ரீதி அவசரப் படுத்தினாள்..

ரூபிணி அரை மனதாய் எழுந்து கம்ப்யூட்டரை அணைத்து விட்டு டேபிளைப் பூட்டி சாவியை ஹேன்ட் பேகிற்குள் போட்டுக் கொண்டாள்.

இருவரும் பேசிக் கொண்டே அலுவலகப் படிகளில் இறங்கினார்கள்.. ரூபிணி தன் கைனடிக் ஹோண்டாவை கிளப்பினாள்.. ப்ரீதி பின்னால் அமர்ந்து கொள்ள ப்ரீதியின் வீட்டை நோக்கி ஸ்கூட்டர் பறந்தது.

"என்னம்மா.. ஏன் வரச் சொன்னீங்க..." ப்ரீதி வீட்டுக்குள் நுழைந்து கொண்டே கேட்டாள்..

"மும்பையிலிருந்து உன் அத்தையும் மாமாவும் வந்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் போகிறார்களாம்.. ஆன் தி வேயில் உன்னைப் பார்த்து விட்டுப் போகணும்னு வந்தாங்களாம்.. ஈவினிங்கே கிளம்பி விடுவார்களாம். நீ ஆபிஸில் ஆடிட்ன்னு சொன்னாயே.. அதனால்தான் மதியமே வந்து விட்டுப் போன்னு போன் பண்ணினேன்.." ப்ரீதியின் அம்மா ரூபிணியை பார்த்துக் கொண்டே பேசினாள்..

ப்ரீதியின் முகம் ஏனோ கருத்தது. தாயின் பார்வையை உணர்ந்தவளாய் ரூபிணியை அறிமுகம் செய்து வைத்தாள்.

"அம்மா.. இவள் ரூபிணி.. என் கோவொர்க்கர்."

"அப்படியாம்மா.. உட்கார்.. என்ன சாப்பிடுகிறாய்?"

"ஒன்றும் வேண்டாம்மா... ஆக்சுவலாய் இன்றைக்கு எங்கள் ஆபிஸில் விருந்து கொடுக்கிறார்கள்.. நானும் ப்ரீதியும் ஹோட்டலுக்கு போகும் வழியில் வந்து விட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறோம்.."

ப்ரீதியின் தாய் ப்ரீதியைப் பார்த்த பார்வையில் ஏதோ செய்தி இருந்தது. அதற்குள் ப்ரீதியின் அத்தையும்.. மாமாவும் ஆர்ப்பரித்தவாறு வந்து விட்டார்கள்..

"ஹாய் ப்ரீதி.. ஹவ் ஆர் யு..? ஐயோ.. எவ்வளவு வளர்ந்து விட்டாய்?"

"குட்டிப் பெண்ணாய் இருக்கும்போது நாம் பார்த்தது.. இத்தனை வருடங்களில் வளர்ந்திருக்க மாட்டாளா?"

ரூபிணி தர்ம சங்கடமாய் உணர்ந்தாள்.. ப்ரீதியின் முகம் பார்த்தாள்..

"ப்ரீதி.. உன் பிரண்டுக்கு மாடி ரூமைக் காட்டும்மா.. அத்தையும், மாமாவும் உன்னிடம் பேசி முடிக்கும் வரை அவள் அங்கே வெயிட் பண்ணட்டுமே.." ப்ரீதியின் தாய் ரூபிணியின் சங்கடம் உணர்ந்தவளாய் கூற அது இன்னும் ரூபிணியின் சங்கடத்தை அதிகரித்தது.

"ப்ரீதி.. நான் வேண்டுமானால் ஹோட்டலுக்கு போய் விடவா. நீ பேசிவிட்டு மெதுவாக வா..."

வாசலில் நின்று கொண்டிருந்த காரைப் பார்த்தபடி ரூபிணி வினவினாள் ப்ரீதி யோசனையுடன் தாயைப் பார்த்தாள்.

"ரூபிணி அன் ஈஸியாய் பீல் பண்ணுகிறாள் போல.. நாங்கள் வேண்டுமானால் உன்னைக் காரில் கொண்டு போய் விடுகிறோம்.." ப்ரீதியின் தாய் கூறினாள்.

ஓர் விடுதலை உணர்வுடன் எழுந்த ரூபிணி வாசலுக்கு வந்து கைனடிக் ஹோண்டாவை கிளப்பிக் கொண்டு மெதுவாய் ஹோட்டலை நோக்கி வண்டியை விட்டாள்.. ஹோட்டல் வாசலில் வண்டியை நிறுத்தி பூட்டி விட்டு கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள். பனிரெண்டே முக்கால் என்றது கைக்கடிகாரத்தின் முட்கள்.. ஒரு மணிக்கு

எல்லோரும் வர ஆரம்பித்து விடுவார்கள்.. மெதுவாய் படியேறி ஹோட்டலின் மாடியிலிருந்த ஏஸி ஹாலை அடைந்தாள்.

"ஹாய்..." என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். உல்லாசப் பார்வையுடன் மூர்த்தி நின்றிருந்தான். ரூபிணியின் முகம் கடுகடுத்தது.

'இவன் எப்படி முன்னாலேயே வந்தான்...?'

முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் முகம் திரும்புவதை லட்சியமே பண்ணிக் கொள்ளாமல் மூர்த்தி அவளை நெருங்கி நின்று பேசினான்.

"உங்கள் சீட்டில் நீங்கள் இல்லை.. அதனால்தான் எல்லோருக்கும் முன்னால் இங்கு வந்தேன்.. நான் எதிர்பார்த்தது போலவே நீங்களும் வந்து விட்டீர்கள்.."

என்னவோ அவன் எதிர்பார்ப்பான் என்று அவள் வந்தது போல் அவன் பேசியதில் ரூபிணி எரிச்சலுற்றாள்.

'இவனுக்கு நான் என்றால் அவ்வளவு ஈஸியா?'

ப்ரீதி அன்று சொன்னது அவள் நினைவில் இருந்தது.

"ரூபிணி... நான் உள்ளூர்காரி.. நீ வெளியூர்.. என்னிடம் வாலாட்டினால் உடனே வந்து என் அப்பாவும்.. அண்ணன்களும் இவன் எலும்பை எண்ணி விடுவார்கள்.. உனக்கு வெளியூரில் இருந்து உன் அப்பா வந்து சேரவே ஒரு நாளாகும்.. நான் வீட்டு மனிதர் துணையோடு இருக்கிறேன்.. நீ ஹாஸ்டலில் இருக்கிறாய்.. எல்லா வற்றையும் விட முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது.. அது என்ன தெரியுமா..?"

"என்ன...?"

"ஜவஹர் என்னிடம் யார் வாலாட்டினாலும் அவர்களது வாலை ஒட்ட நறுக்கி விடுவான்... என் விசயத்தில் ஜவஹர் ஒரு டெர்ரரிஸ்ட்..."

"மூர்த்தி போன்ற அடாவடிக்காரன் ஜவஹரிடம் பயப்படுகிறானா?"

"ஜவஹரை என்னவென்று நினைத்தாய்...? என்னிடம் மட்டும்தான் ஈகோ பார்க்க மாட்டான்.. பொறுமையாய்

போவான்.. நான் என்ன திட்டினாலும் தட்டி விட்டுப் போய் விடுவான்.. அதுவே மற்றவர்களாக இருந்தால் பந்தாடி விடுவான்.. இந்த மூர்த்தியெல்லாம் ஜவஹர் முன்னால் வெறும் பச்சா..."

இதைக் கூறும்போது பெருமையில் ப்ரீதியின் முகம் ஒளிர்ந்தது இன்னும் ரூபிணியின் நினைவில் இருக்கிறது. இவள் உண்மையிலேயே ஜவஹரை வெறுக்கிறாளா என்று தான் சந்தேகப்பட்டதும் அவளது நினைவில் வந்தது.

"வாங்களேன்.. நாம் நம் இடத்தில் உட்கார்ந்து பேசலாம்..."

மூர்த்தி அவர்களுக்காக ரிஸர்வ் செய்யப்பட்டிருந்த டேபிளைக் காட்டினான்.

'இவனுடன் ஹோட்டலில் உட்கார்ந்து பேசுவதா..?'

ரூபிணியின் மனம் கோபத்தில் கொதித்தது.. இவன் பேசுவதைத் தவறாகவும் எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் சாப்பிடுவதற்காக அந்த ஹோட்டலுக்கு வந்திருப்பது உண்மைதானே..

'அதற்காக.. மற்றவர்கள் அருகில் இல்லாமல் இந்தப் பொறுக்கியுடன் தனியே உட்காருவதா..?'

தற்செயலாக அந்த ஏ.ஸி. ஹாலின் மற்றொரு மூலையைப் பார்த்த ரூபிணியின் முகம் மலர்ந்து விட்டது.

அங்கே அருகில் இருவரோடு அமர்ந்து கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ஹரிஹரன்..

ஒரு பிஸினெஸ் லன்ச்சிற்காக டில்லியிருந்து வந்திருந்தவர்களுடன் வந்திருந்தான் அவன். வியாபார விஷயமாய் பேசிக் கொண்டே ஹாலின் வாசலைப் பார்த்தவன் யோசனையாய் புருவம் தூக்கினான்.

'யார் அது...? ரூபிணியல்லவா...? இந்தப் பெண் தனியாக சாப்பிட வந்திருக்கிறாளா...?'

அவன் யோசித்துக் கொண்டிருந்தபோதே மூர்த்தி அவளிடம் பேசினான் அவள் அதை விரும்பவில்லை என்பதை அவள் முகம் காட்டியது. பேசிக் கொண்டே அவள் பின் வாங்க.. அவனும் அவளை நெருங்கி நிற்க முயல்வதைக் கண்டு ஹரிஹரனின் முகம் இறுகியது.

'யார் இவன்...?'

அவன் ஏதோ கேட்க... ரூபிணி திரும்பி ஹாலை சுற்று முற்றும் பார்த்தவள் ஹரிஹரனை கண்டு விட்டாள்.

அவனைக் கண்டதும் ஒளிர்ந்த கரு விழிகளில் பரவிய வெளிச்சம் கண்டு ஹரிஹரனின் உடலில் மின்சாரம் பரவியது.

'என்னைக் கண்டு இவ்வளவு பரவசமா..?'

ரூபிணி நேராய் ஹரிஹரனிடம் வந்தாள்.. ஹரிஹரனின் வியப்பு இன்னும் கூடியது...

"ஹலோ சார்.. ஹவ் ஆர் யு..?"

"பைன்.. எங்கே இந்தப் பக்கம்...?"

"ஆபிஸில் ஆடிட்டிங் பார்ட்டிக்காக இங்கே லன்ச் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். நான் முன்னாலேயே வந்து விட்டேன்.."

"ஈஸிட்.. உங்களுடன் ஒருவர் பேசிக் கொண்டிருந்தாரே..."

ஹரிஹரன் தயங்காமல் வினவினான்.. அவனது அந்தக் குணம் ரூபிணிக்கு வியப்பை அளித்தது.

'எப்படி நேரடியாய் கேட்கிறான்...?'

"அவர் என் ஆபிஸில் வேலை பார்ப்பவர்.."

"ஓ.. உங்கள் பிரண்டோ என்று நினைத்தேன்..."

இது கொஞ்சம் மறைமுகமான கேள்வி.. ஆனாலும் விடாமல் துருவித் துருவிக் கேட்கிறான்.

நீ ஒருவனுடன் ஏன் ஹோட்டலில் நின்று பேசிக் கொண்டிருக்கிறாய்..? உன்னுடன் பேசிக் கொண்டிருப்பவன் யார்..? ஆபிஸில் கூட வேலை பார்ப்பவன் என்றால் உனக்கு எந்த அளவுக்கு பழக்கம்?

'சும்மாவா இவனைப் பார்த்து எல்லோரும் பயப்படு கிறார்கள்' ரூபிணியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

ஹரிஹரனின் கூரிய விழிகள் அவளது புன்னகையை கண்டு கொண்டன.. அவன் முகத்திலும் புன்னகை பரவியது.

"போயும்... போயும் அவனைப்போய் என் பிரண்ட் என்கிறீர்களே.. அந்த அளவுக்கா என் ரசனை மட்டமாகப் போய் விட்டது..? அவன் ஒரு ரோக்..!"

அருகிலிருந்தவர்களின் முகத்தைப் பார்த்துக் கொண்டே மிக மெதுவான குரலில் ஹரிஹரனின் காதுகளில் மட்டும் கேட்குமாறு முணுமுணுத்தாள் ரூபிணி..

'அப்படியா சேதி...' ஹரிஹரனின் விழிகள் தூரமாய் நின்ற மூர்த்தியை பார்வையாலேயே எரித்தன.

"அப்படியானால் அவனுடன் ஏன் நின்று பேசவேண்டும்..?"

ரூபிணி அவனுக்கு அருகே அமர்ந்திருந்தவர்களைப் பார்க்க,

"அவர்களுக்கு தமிழ் தெரியாது..." என்றான் அவன்.

"அவனிடம் நான் எங்கே பேசினேன்..? லன்ச்சுக்கு முன்னாலேயே வந்து விட்டேன். மற்றவங்க வருவதற்காக வெயிட் பண்ண வேண்டும். இவன் வேண்டுமென்றே வந்து பேச்சுக் கொடுக்கிறான்.."

"இங்கே உட்காருங்கள்..."

ஹரிஹரன் அவனுக்கு அருகே இருந்த காலி இருக்கையை காட்டினான். அவள் தயங்காமல் உட்கார்ந்து கொண்டாள்.. அவன் மனதில் இதம் பரவியது.

'எவ்வளவு இலகுவாக அமர்கிறாள்... அவளது அலுவலகத்தில் கூட வேலை பார்ப்பவனுடன் பேசப் பிடிக்காதவள்... ஒரே ஓர் முறை நேரில் பேசியவனுடன் பேசத் தயங்காமல் உட்காருகிறாள்.. ஹரிஹரன் மேல் அவ்வளவு நம்பிக்கையா..?'

"நீங்கள் இங்கே.." அவள் கேள்வியை முடிக்காமல் பார்த்தாள்.

"பிஸினெஸ் லன்ச்..." அவன் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான்.

"அடடா... நான் டிஸ்டர்ப் பண்ணி விட்டேனே..."

"உங்கள் ஆபிஸ் ஆட்கள் வராமல் நீங்கள் எழுந்து போனால் அதுதான் என்னை டிஸ்டர்ப் பண்ணும்.. நான் நிம்மதியாய்

இவர்களுடன் பிஸினெஸ் பேச முடியாது..."

ரூபிணி நம்ப முடியாமல் அவன் முகம் பார்த்தாள்.

'என் மேல் அவ்வளவு அக்கறையா? நான் அந்த அளவுக்கு முக்கியமானவளா...?'

ஹரிஹரனின் முகபாவனை 'ஆமாம்' என்றது.. அவள் விழிகள் படபடக்க பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.. சர்வர் ஆர்டர் எடுக்க அருகில் வந்து மரியாதையுடன் நின்றான். அவனது விழிகள் ரூபிணியை பயபக்தியுடன் பார்த்தன.

'ஹரிஹரன் சாரின் அருகே இவ்வளவு உரிமையாய் சகஜமாய் அமர்ந்து கொண்டிருக்கும் இந்தப் பெண் யார்..?'

ஹரிஹரன் எதிரே இருந்தவர்களிடம் இந்தியில் ஏதோ வினவினான்.. அவர்கள் சிரித்துக் கொண்டே..

"அச்சா..." என்றார்கள்...

"நான்கு ஜூஸ்..." என்றான் ஹரிஹரன்..

"எனக்கு ஒன்றும் வேண்டாமே..."

"எனக்காக நீங்கள் சாப்பிட வேண்டுமே..."

ஹரிஹரன் குறும்பாகக் கூறினான். 'எனக்காக...' ரூபிணி சொன்ன வார்த்தை.. ரூபிணி இதழ் கடித்தாள்.. அவன் பார்வை அவள் இதழ்களில் படிந்தது.. அவள் முகம் சிவந்தாள்.

"இன்னும் நான் சொன்ன வார்த்தையை நினைவில் வைத்திருக்கிறீர்களா...?"

"என்றும் நினைவில் வைத்திருப்பேன்... என்றுமென்றால்.. என் இறுதிவரை..."

ரூபிணி தவித்துப் போனாள்.. ஜமுனா சொன்னது போல் இது விபரீத விளையாட்டுத்தான்.. நெருப்போடு விளையாடும் விளையாட்டு.. 'மூர்த்திக்கு பயந்து இங்கு வந்து அமர்ந்தது தவறோ...?' நினைக்கும்போதே அவளது நெஞ்சம் அவளைப் பார்த்துச் சிரித்தது.

'மூர்த்திக்கு பயந்தா இங்கு வந்து அமர்ந்தாய்...?'

ஹரிஹரனின் முகம் பார்த்தாள்.. அவன் ஜூஸ் தம்ளரை அவள் பக்கம் நகர்த்தினான்.. இயந்திரம் போல் எடுத்துக் குடித்தாள்.. ஹரிஹரன் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

அவளை... அவளது தவிப்பை... அவளது பயத்தை... அவளது நடுக்கத்தை... அவளது படபடப்பை... பார்த்துக் கொண்டே இருந்தான்..

அவன் முகத்தில் என்றுமேயில்லாத கனிவு இருந்தது.

# 11

ஹரிஹரனின் பார்வை தன் மேலேயே பதிந்திருப்பதை உணர்ந்த ரூபிணியால் விழிகளை உயர்த்த முடிய வில்லை.. அவளது வெட்கத்தை உணர்ந்த ஹரிஹரனின் முகத்தில் பெருமிதம் வந்தது.

தனது அனைத்து அடையாளங்களும் அகன்று தான் ஒரு ஆண் என்ற உணர்வு மட்டுமே அப்போது அவனுக்கு இருந்தது.. அவனைக் கண்டு ஒரு பெண் நாணித் தலை குனிவது அவனது ஆண்மைக்கு பெருமிதத்தையும் கௌரவத்தையும் அளித்தது. எதிரே அமர்ந்திருந்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் பக்கவாட்டில் அவளைப் பார்க்க வசதியாய் திரும்பி அமர்ந்து கெண்டான்.

ரூபிணி சங்கடமுற்றாள்.. ஹரிஹரன் அவனது ஆர்வத்தை வெளிப்படையாய் காண்பித்தது இயல்பாய் அவனைப் பார்த்து பேசவிடாமல் அவளைத் தடுத்தது. ஆனால் அவனா அவளைப் பேசாமல் இருக்க விடுபவன்..?

ஹரிஹரன் அவளது மௌனத்தைக் கலைத்தான்..

"கோவில்பட்டிக்கு இந்த மாதம் போவீங்களா...?"

"என் ஊர் கோவில்பட்டி என்று உங்களுக்கு எப்படித் தெரியும்..?" ரூபிணி ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

"அதுவும் தெரியும்... உன் வீடு அண்ணா நகரில் நான்காவது ஸ்ட்ரீட்டில் இருக்கிற ஆறாம் நம்பர் வீடு என்பதும் தெரியும்.. உன் அப்பா பெயர் ரெங்கநாதன்... அம்மா பெயர் வீரலட்சுமி.. இருவருமே பேங்கில் வேலை பார்க்கிறார்கள் என்பதும் தெரியும்.. உன் அக்கா பெயர் தாரிணி.. பெங்களூரில் மேரேஜ் பண்ணிக் கொடுத்திருக் கிறீர்கள்.. உன் தம்பி பெயர் நவீன் இன்ஜினியரிங் படிக்கிறான் என்பதும் தெரியும்.. இன்னும் உன் அக்கா வேலை பார்க்கும் கம்பெனி.. குடியிருக்கும் அட்ரஸ்.. உன் தம்பி படிக்கும் காலேஜின் பெயர்.. ஊர்.. எல்லாமே தெரியும்.. சொல்லவா...?"

"வேண்டாம்.. வேண்டாம்.. ஆனால் இவ்வளவும் உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"அதுதான் ஹரிஹரன்..."

"இதையெல்லாம் ஏன் தெரிந்து கொண்டீர்கள்..?"

"இது என்ன கேள்வி? உன்னைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அடிமுதல் நுனி வரை தெரிந்து கொள்ளத்தான்.."

"அதுதான் ஏன்..?"

"சும்ம்மா..."

ஹரிஹரன் மிக லேசாக மற்றவர்கள் அறியாத வண்ணம் கண் சிமிட்டினான். இப்போது ரூபிணியின் முகம் குங்குமமாய் சிவந்து விட்டது.

'எப்படி தைரியமாய் கண் சிமிட்டுகிறான்...?'

ஹரிஹரனின் எதிரேயிருந்தவர்கள் ஹிந்தியில் ஏதோ வினவ.. அவன் ரூபிணியைப் பார்த்தவாறே இந்தியிலேயே பதில் சொன்னான்.. அவர்கள் பலமாய் சிரித்தார்கள்.. ரூபிணி புரியாமல் விழித்தாள்..

"ஏன் சிரிக்கிறார்கள்...?" ரூபிணி வினவினாள்...

"சும்ம்..மா..." அவன் முகத்தில் விசமம் இருந்தது.

"இல்லை.. நீங்கள் என்னைப் பற்றி ஏதோ சொன்னீர்கள்.."

"இருக்கலாம்..."

"என்ன சொன்னீர்கள்...?"

"இன்னொரு நாள் சொல்கிறேன்.."

'இன்னொரு நாளா?' ரூபிணி தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

'இதுபோல் இன்னொரு நாள் வருமா...?'

"இல்லை... இப்போதே சொல்லுங்கள்.."

"இப்போது சொல்லக்கூடாது ரூபி..."

"ரூபியா...?"

"யெஸ்..."

"என் பெயர் ரூபிணி..."

"இருக்கட்டுமே..."

"அது அழகான பெயர் தெரியுமா..?"

"அழகான பெண்ணுக்கு அழகான பெயர்தான் வைப்பார்கள்.. அதிலும் உன் பேரண்ட்ஸ் உன் அழகைப் பார்த்து பொருத்தமாய் பெயர் வைத்திருக்கிறார்கள்.. ரூபிணி.. ரூபவதியென்றால் அழகான பெண் என்று அர்த்தம். ரூபிணியென்றால் அழகே உருவானவள் என்று அர்த்தம்..."

ஹரிஹரனின் பார்வை ரசனையாய் அவள் மேல் படிந்திருந்தது.. அவளைத் தலையோடு கால் வரை ஓர் முறை பார்த்தான். ரூபிணி முகம் திருப்பிக் கொண்டாள். மயில் கழுத்து நிறத்தில் ஜரிகைக் கரையிட்ட காட்டன் புடவையில் தேவதைபோல் இருந்தாள்.. நீண்ட பின்னல்.. காதுகளில் அழகிய பூக்களின் கொத்துக்கள் ஒன்று சேர்ந்த வடிவில் தோடு... கழுத்தில் மெல்லிய செயின்... கைகளில் பொன் வளையல்கள்.. இடது கையில் சிறிய கைக்கடிகாரம்.. முகத்தில் சாயப் பூச்சில்லாத இயற்கை வனப்பு.. அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது ஹரிஹரனுக்கு...

"ரூபிணி.. அழகே வடிவானவள்... ரூபி.. வைரம்.. இரண்டுமே உனக்குப் பொருத்தும் ரூபிணி..."

இயல்பான ஒருமைக்கு அவன் எப்போது தாவினான் என்று ரூபிணி யோசித்தாள். அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.. அதைத் தவறாக நினைக்கவும் முடியவில்லை.. ஒருமை தந்த மன நெருக்கம் நிறைவைத் தந்ததால் அதைப் பற்றிய சிந்தனையைத் தவிர்த்தாள்.

"ரூபிணி.. சாப்பிட வரவில்லையா...?" பிரீதியின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.. அவளது அலுவலகத்தார் வந்து விட்டிருந்தனர்... ப்ரீதி சற்று தள்ளி நின்று கொண்டு அழைத்தாள்..

"ஓகே.. சார்.. எங்க ஆபிஸில் வந்திட்டாங்க.. ஸீ யு லேட்டர்.."

"ஊஹூம்...? லேட்டர்ன்னா எப்போ..?"

"சார் ப்ளீஸ்.. தே ஆர் வெயிட்டிங் பார் மீ..."

"நானும்தான் உன் பதிலுக்காகக் காத்திருக்கிறேன்.."

"சார்... நான் போகவேண்டும் சார்..."

"எனக்குப் பதிலைச் சொல்லிவிட்டுப் போ..."

"நான் சொல்கிறேனே..."

"எப்போது...?"

"போனில் சொல்கிறேன்..."

ரூபிணி அப்போதைக்கு தப்பிக்க அந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டு எழுந்து சென்றாள். ப்ரீதி ரூபிணியைப் பார்த்த பார்வையில் சிறு கலக்கம் இருந்தது.

"அது ஹரிஹரன் போல இருக்கிறதே..."

"அவரேதான்.."

"அவருடனா இவ்வளவு நேரமும் பேசிக் கொண்டிருந்தாய்...?"

"ஆமாம்..."

எளிதாய் சொல்லிவிட்டு அமர்ந்து கொண்டவளிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தாள் ப்ரீதி.. அதற்குள் அவர்களது ஆபிஸர் 'யார் யாருக்கு என்ன வேண்டும்..?' என்று வினவ அவர்களது கவனம் சாப்பாட்டில் திரும்பியது.

அனைவரும் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்த போது இடையில் சர்வர் வந்து மூர்த்தியின் காதுகளில் ஏதோ சொல்ல... அவன்.

"ஒரு நிமிஷம்.. வந்து விடுகிறேன்.." என்று சொல்லி விட்டு எழுந்து சென்றான்..

ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தவனின் முகம் வீங்கினாற் போல இருந்தது. கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன.. தலை முடி கலைந்திருந்தது. உடை கசங்கியிருந்தது. குனிந்த தலை நிமிராமல் சாப்பிட ஆரம்பித்தான்..

"மூர்த்தி.. உங்களுக்கு அடுத்து என்ன சொல்ல..?" ஆபிஸர் வினவினார்.. அவனிடமிருந்து பதிலே இல்லை.. அருகில் அமர்ந்து ப்ரீதியை சைட் அடித்துக் கொண்டிருந்த ஜவஹர் மூர்த்தியின் முதுகில் ஓர் அடி வைத்தான்.

"ஆ.. ஆ.. என்ன.." மூர்த்தி பயந்து போனவன் போலவும்.. வலி தாங்க முடியாதவன் போலவும் அலறினான்.

"என்னப்பா ஆச்சு.. ஏன் இப்படி அலறுகிறாய்..?"

"உனக்கெப்படிடா என் வேதனை தெரியும்.."

"அது சரி.. உன் வேதனை உனக்குத்தானே தெரியும். ஆபிஸர் சார் கூப்பிடுகிறார்.. என்னன்னு கேளு..."

"சார்..."

"இன்னம் சொஞ்சம் வேண்டுமா மூர்த்தி.. தரச் சொல்லவா...?"

"ஐயையோ..."

"ஏன்ப்பா.. என்ன ஆச்சு உனக்கு பிரைட் ரைஸ் பிடிக்குமே... இன்னும் கொஞ்சம் தரச் சொல்லவான்னு கேட்கிறார்.. அதுக்கு ஏன் அலறுகிற...?"

"எனக்கு எதுவும் வேண்டாம் சார்.. நான் போகிறேன்.."

மூர்த்தி எழுந்து அவசரமாய் கையைக் கழுவி விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றான்.

"ஏம்பா ஜவஹர்! ஏன் இவன் இப்படி ஓடுகிறான்..."

"எனக்குத் தெரியவில்லை சார்.."

ஜவஹர் யோசனையுடன் எழுந்து கைகழுவச் சென்றான். சற்று நேரம் கழித்து திரும்பி வந்தான்.

"ரூபிணி சாப்பிட்டு விட்டாயா..." ப்ரீதி கேட்டாள்.

"ம்ம்..." ரூபிணி எழுந்து கொண்டாள்.

கைகழுவி விட்டுத் திரும்பி வரும்போது ஹரிஹரன் அமர்ந்திருந்த இடத்தை நோக்கி ரூபிணியின் பார்வை தாவியது.

ப்ரீதி அருகே அமர்ந்திருந்ததால் ஹரிஹரனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை கட்டுப்படுத்திக் கொண்டு அவ்வளவு நேரமும் இருந்தவள் கிளம்பப் போகிறோம் என்று தெரிந்ததும்.. அவனை இனி எப்போது பார்க்க முடியுமோ.. இல்லை பார்க்க முடியாமலே போய் விடுமோ என்ற தவிப்புடன் அவனிருக்கும் திசையைப் பார்த்தாள்.

அதே நேரம் அவனும் அவளையே பார்த்துக் கொண்டு எதிரே இருந்தவர்களிடம் பேசிக் கொண்டு இருந்தான். அவனது பார்வையைச் சந்தித்ததும் ரூபிணியின் உடல் குப்பென்று வியர்ந்து விட்டது... இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"போகலாமா..." ப்ரீதி அவளது கரம் பிடித்து இழுத்தாள்..

"போகவேண்டுமா...?" மீண்டும் ஏக்கத்துடன் ஹரிஹரனிடம் அவளது பார்வை ஓடியது.

"போகத்தான் வேண்டும்..." ப்ரீதி வெடுக்கென்று பதில் சொன்னாள்..

"ம்ம்ம்..." ரூபிணி நகர நினைத்தாலும் அவள் கால்கள் நகரவில்லை..

ப்ரீதி கோபத்துடன் அவளது கை பற்றி இழுத்தவாறு ஹோட்டலை விட்டு வெளியே சென்றாள்.. ஏ.ஸி. ஹாலை கடக்கும் கடைசி நொடியில் ரூபிணி ஹரிஹரனைத் திரும்பிப் பார்க்க.. அவன் தலை அசைத்தான்.

அந்தச் செய்கையில் மனம் நிறைந்தவள் செலுத்தப் பட்டவள் போல வண்டியை எடுத்தாள்..

"இறங்கு..." ப்ரீதி அதட்டினாள்..

"ஏண்டி.." புரியாமல் விழித்தாள் ரூபிணி..

"நீ வண்டியை ஓட்டினால் ஆக்ஸிடென்ட்தான் வரும். நான் ஓட்டுகிறேன்.. நீ பின்னால் உட்காரு..."

"நான் என்ன இன்றைக்குன்னா புதிதாய் வண்டி ஓட்டுகிறேன்..?"

"ஆனால் இன்றைக்குத்தானே புதிதாய் நீ நிலை தடுமாறி நின்று நான் பார்க்கிறேன்..? இந்த நிலையில் நீ வண்டியை ஓட்ட வேண்டாம்..."

"ப்ரீதி..."

"பேசாமல் பின்னாலே உட்கார்.."

அலுவலகம் வந்து சேர்ந்த பின்னால் இருவருக்கும் பேச நேரம் கிடைக்கவில்லை. நான்கு மணிக்கு சபாபதி அவர்கள் இருவரின் டேபிள் மேலேயும் காபிக் கோப்பைகளை வைத்து விட்டுச் சென்றான். காபியை உறிஞ்சிய படி ரூபிணியைப் பார்த்தாள் ப்ரீதி.. ரூபிணி அவள் பார்வையைத் தவிர்த்தாள்.. ப்ரீதியின் முகத்தில் கோபச் சிரிப்பு வந்தது.

"ஏய்ய்.. என்னைப் பாரு..."

"என்ன...?"

"நீ முதன் முதலாய் வேலையில் சேர்ந்தபோது எப்படி இருந்தாய் தெரியுமா..? நேர் கொண்ட பார்வையுடன் இருந்தாய்.. இன்று அந்தப் பார்வை எங்கே போனது..?"

"இல்லையே.. நான் எப்போதும் போல்தானே இருக்கிறேன்.."

"வேண்டாம் ரூபிணி.. இது சரிவராது.."

"எது..?" ரூபிணி திகிலுடன் கேட்டாள்.. ப்ரீதி அவளுடைய அந்தரங்கத்தை அறிந்து கொண்டு விட்டாள் என்ற பயம் அவளுள் எழுந்தது. ப்ரீதியின் வார்த்தைகள் அவளது பயத்தை உறுதிப்படுத்தின..

"எண்ணையும்.. தண்ணீரும் ஒன்றாய் சேர முடியாது ரூபிணி.. இந்த எண்ணத்தை மறந்து விடு.. உன் மனதில் ஆசைகளை அழித்துவிடு.."

"ப்ரீதி.. நீ சொல்வது எனக்குப் புரியவில்லை.."

"புரியும்.. புரியாதது போல் நடிக்காதே.. நான் ஹோட்டலின் ஏ.ஸி. ஹாலுக்குள் வரும்போது நீ ஹரிஹரனின் பக்கத்தில் உட்கார்ந்து ஆண்டாண்டு காலமாய் பழகியவள் போல் பேசிக் கொண்டிருந்தாய்.."

"அது... மூர்த்தி வந்து தொல்லை கொடுத்தான்.. அதனால்தான்..."

"இனி மூர்த்தி தொல்லை கொடுக்க மாட்டான்.."

"எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறாய்..."

"இப்போதுதான் ஜவஹர் வந்து என்னிடம் சொல்லிவிட்டுப் போனான்.."

"நீ அவரிடம் பேசமாட்டாயே..."

"உன் விஷயம் என்பதால் கேட்டுக் கொண்டுதானே ஆக வேண்டும்..?"

"என் விஷயமா...?"

"ஆமாம்.. மூர்த்தி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பாதியில் சர்வர் கூப்பிடவும் எழுந்து போனானே... ஏன் என்று தெரியுமா...?"

"ஏன்...?"

"கூப்பிட்டு விட்டது ஹரிஹரனின் பி.ஏ... மூர்த்தியை பாத்ரூமிற்குள் விட்டு நான்கு பேர், நொறுக்கி எடுத்து அனுப்பி வைத்திருக்கிறார்கள்..."

"எதற்கு...?"

"உனக்கு இன்னும் புரியவில்லையா..?"

"புரியவில்லை ப்ரீதி..."

"புரியவில்லையா..? ரூபிணி.. உனக்கு எப்படி புரிய வைப்பது? இனிமேல் அப்படித்தான்.. உன் நிழலைப் பார்க்கக் கூட யாரும் பயப்படுவார்கள்.. உன்னைச் சுற்றி நெருப்பு வளையம் விழுந்து விட்டது ரூபிணி.. தெரிந்தோ.. தெரியாமலோ.. நீ அதற்குள் சிக்கி விட்டாய்.. உன்னால் மீண்டு வர முடிந்தால் வந்து விடு. அதுதான் ஒரு பிரண்டாக நான் உனக்குச் சொல்லும் அட்வைஸ்.."

ப்ரீத்தியின் கண்கள் கலங்கி விட்டன.

## 12

நெருப்புடன் நீ விளையாடுகிறாய் என்று அன்று ஜமுனா எச்சரித்தாள், நெருப்பு வளையத்திற்குள் சிக்கி விட்டாய் என்று இன்று ப்ரீதி கூறுகிறாள்.. இருவரும் அவளின் அன்புத் தோழிகள். நலம் விரும்பிகள்.. இருவர் நாடுவதும் ரூபிணியின் நன்மையைத்தான்.. ஆனால் ரூபிணியின் மனம் அந்த நெருப்பு மனிதன் ஹரிஹரனிடம் சிக்கியிருக்கிறதே.. அவள் என்ன செய்வாள்? ப்ரீதியோ தன் கடமையைச் செய்து கொண்டிருந்தாள்...

"மூர்த்தி திரும்பி வந்தபோது அவனது நடையுடை பாவனை எதுவும் சரியில்லையாம்.. சாப்பிடக் கஷ்டப் பட்டிருக்கிறான். உட்காரக் கூட முடியாமல் சிரமப் பட்டானாம்.. அதனால்தான் பாதியிலேயே எழுந்து ஓடியிருந்திருக்கிறான். ஜவஹர் சந்தேகப்பட்டு அவனைக் கூப்பிட்டுக் கொண்டு சென்ற சர்வரிடம் போய் விசாரித்து இருக்கிறான்.. சர்வர்தான் எல்லாவற்றையும் சொன்னானாம்.. மூர்த்தி அடிவாங்கினதில் எனக்கு சந்தோசம்தான்.. அவனுக்கு இதுவும் வேண்டும்.. இன்னமும் வேண்டும்.."

"ஓ.. அதனால்தான் நம் ஆபிஸர் அவனிடம் இன்னும் கொஞ்சம் வேண்டுமா? தரச் சொல்லவா.. என்று கேட்டதும் அப்படி அலறினானா?" ரூபிணி 'களுக்'கென்று சிரித்தாள்.

ப்ரீதியும் உடன் சேர்ந்து சிரித்தாள். ஆனால் அவளது சிரிப்பு பாதியிலேயே மறைந்தது. ரூபிணியை கவலையுடன் பார்த்தாள்..

"இது சிரிக்க வேண்டிய விஷயமில்லை ரூபிணி.. ரொம்ப ரொம்ப சீரியஸான விஷயம்.. இனி உன் சுதந்திரம் பறி போய்விடும்.. ஜவஹர் கூட உன்னிடம் பேச யோசிப்பான்.. நாம் காட்டுக் கத்தலாய் கத்தினால்தான் சபாபதி நமக்கு காபி வாங்கிக் கொண்டு வந்து தருவான்.. இன்றைக்கு

டான்னு நாலு மணிக்கெல்லாம் காபி நம் டேபிளில் வந்து கிடைத்து விட்டது.. எப்படின்னு யோசிச்சயா..?"

"அட.. ஆமாம்.. ஆனால் ப்ரீதி.. நீ பயப்படுவ தெல்லாம் கொஞ்சம் ஓவர்தான்... இது நம் ஆபிஸ் ப்ரீதி.."

"நம் ஆபிஸில் உன்னைப் பார்க்க வந்த ஹரிஹரன் எங்கே வெயிட் பண்ணிக் கொண்டிருந்தார்..? விசிட்டர்ஸ் ஹாலிலா...?" ப்ரீதியின் குரலில் எள்ளல் இருந்தது.

"நம் ஆபிஸரின் ரூமில்..." ரூபிணியின் குரல் உள்ளே இறங்கி விட்டது.

"சரி.. நீங்களிருவரும் பேசிக் கொண்டிருந்தபோது ஆபிஸர்கூட இருந்தாரா? இல்லை வெளியே போய்விட்டாரா...?"

"வெளியே போய்விட்டார்..."

"இது உன் ஆபிஸ்... இங்கே ஹரிஹரன் தேர்ட் பெர்ஸன்.. ஆனால் யாருக்கு அதிக முக்கியத்துவம் இருந்தது..?"

ரூபிணி மௌனமானாள்.. ப்ரீதி தொடர்ந்து பேசினாள்.

"மூர்த்தியைக் கூப்பிட்டு விட்டது ஹரிஹரனுடைய பி.ஏ... இவன் ஏன் உடனே பாதிச் சாப்பாட்டில் எழுந்து போய் அடியை வாங்கிக் கொண்டு வந்தான்..? வரமாட்டேன்னு சொல்லியிருக்கலாமே... ஏன் சொல்லவில்லை...? கூப்பிட்ட உடனே போய் விட்டால் எலும்பை மட்டும் எண்ணி அனுப்பி வைத்து விடுவார்கள்.. வரமாட்டேன்னு சொன்னால் தூக்கிக் கொண்டு போய் கையைக் காலை முறித்து ரோட்டில் தூக்கிப் போட்டு விடுவார்கள் அதற்காகத்தான்.. நினைத்துப் பார் ரூபிணி.. அவனை அடித்தது நான்கு பேர்.. நாம இருபத்தி நான்கு ஆள்கள் உள்ளே கூப்பிடு தூரத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்... அவன் ஒரு சத்தம் போட்டு நம்மை உதவிக்குக் கூப்பிட்டிருக்கலாம். அவன் கூப்பிடவில்லை.. வாயைத் திறக்காமல் ஸின்ஸியராய் அடி வாங்கியிருக்கிறான்.. வாயைத் திறந்தால் என்ன நடக்குமென்று அவனுக்குத் தெரியும்..."

"ப்ரீதி.. நீ நினைப்பது போல் எதுவும் இல்லை..."

"இல்லையென்று நம்ப நான் தயாராக இல்லை.. நான் வந்தபோது நீ ஹரிஹரனுடன் பேசிக் கொண்டிருந்தாய்.. எனக்கு பக்கென்று ஆகி விட்டது. ஐந்து நிமிடங்களாக அங்குதான் நின்று கொண்டிருந்தேன்.. உன் முகமும்.. ஹரிஹரனின் பார்வையும் எனக்கு உணர்த்திய செய்தியே வேறு... உனக்குத் தெரியுமா ரூபிணி.. ஹரிஹரன் பெண்களிடம் பேசவே மாட்டார்.. அவரைப் பற்றி ஆயிரம் வதந்திகள் உண்டு.. அதில் பெண்ணைச் சம்பந்தப்படுத்தி ஒரு வதந்தி கூட இல்லை.. அப்படிப்பட்ட மனிதன் உன்னிடம் பேசுகிறார்.. அதுவும் மிகப்பெரிய பிஸினெஸ் பேச்சை நிறுத்தி வைத்து விட்டு..."

"பிஸினெஸ் லன்ச்சுக்கு வந்திருந்தார் என்பது மட்டும்தான் எனக்குத் தெரியும் ப்ரீதி.. என்ன பிஸினெஸ் என்று தெரியாது.."

"டில்லியில் ஒரு ஸ்டார் ஹோட்டல் கட்டப் போகிறாராம்.. அது சம்பந்தமாய் பேச வந்திருந்தவர்கள் தானாம் அவர்கள்.."

"இது உனக்கு எப்படித் தெரியும்...?"

"ஜவஹரிடம் அந்த சர்வர் சொன்னானாம்.."

"ஸோ.. ஹோட்டலுக்குப் போனால் நாம் பார்த்துப் பேச வேண்டும்..."

"எங்கு பேசினாலும் பார்த்துத்தான் பேசவேண்டும். இங்கே ஆபிஸில் சபாபதியின் முன்னால் பேசிப்பார்.. அவன் பிபிஸி.. இந்த விழுப்புரம் தாண்டியும் அவன் பேச்சு ஒளிபரப்பாகி விடும்.. இந்நேரம் உன் மேல் ஹரிஹரன் காட்டிய அக்கறை பற்றி இந்த ஊர் முழுவதும் தெரிந்திருக்கும்..."

தெரிந்திருந்தது என்பது அன்று மாலை ஜமுனா முறைத்துக் கொண்டு அறைக்குள் வந்தபோதே தெரிந்தது.

'ப்ரீதியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டது போதாதா... இனி இவளிடமும் வாங்க வேண்டுமா...' சோர்வாய் நினைத்துக் கொண்டாள் ரூபிணி...

"தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டவர்களைப் பார்த்திருக்கிறேன்.. நெருப்பை அள்ளிப் போட்டுக் கொள்கிற மர மண்டைகளை இப்போதுதான் பார்க்கிறேன்.."

உடை மாற்றிக் கொண்டே சுவரைப் பார்த்துப் பேசினாள் ஜமுனா.. ரூபிணி உதட்டை மடித்துக் கடித்தாள்.

'இவளுக்கு என்ன சமாதானம் சொல்வது..?'

மெதுவாய் சென்று ஜமுனாவின் தோளைத் தொட்டாள்.. அவளோ கோபத்துடன் இவளது கையைத் தட்டி விட்டாள்...

"என்னிடம் யாரும் பேச வேண்டாம்..."

"ஏன் ஜமுனா.. நான் என்ன செய்தேன்...?"

"பேச வேண்டாமென்று சொல்கிறேனில்லை..."

"உன்னிடம் பேசாமல் வேறு யாரிடம் பேசுவேன்..?"

"பேசுவதற்கு உனக்கு ஆளா இல்லை...?"

ஜமுனாவின் குத்தல் புரிந்தாலும் புரியாதது போல் ரூபிணி வினவினாள்..

"ப்ரீதியை சொல்கிறாயா?"

"நான் யாரைச் சொல்கிறேன் என்று உனக்குத் தெரியாதா..?"

"தெரியவில்லை..."

"நீ எப்போதிருந்து இப்படி ஒரு மறைத்துப் பேசுகிறவளாய் ஆனாய்..? உனக்கு இப்படியெல்லாம் பேச வராதே..."

ரூபிணிக்கு அயர்வாய் இருந்தது..

'உன் நேர் கொண்ட பார்வை எங்கே போனது? உன் பார்வை ஏன் அலை பாய்கிறது..?' ப்ரீதி கேட்டாள்.. இப்போது ஜமுனா ரூபிணியின் பேச்சை குறை சொல்கிறாள்..

அவளது நேர் கொண்ட பார்வையும்.. ஒளிவு மறைவில்லாத பேச்சும் எங்கே போயின..?

ஹரிஹரனின் பின்னாலேயே போய் விட்டன என்று அவளது மனம் கூறியது.. ரூபிணி ஜமுனாவின் கேள்விக்கு பதில் சொல்லாமல் நின்றாள்..

"ஒன்று தானாய் தெரிய வேண்டும்.. இல்லை யென்றால் சொல்வதைக் கேட்க வேண்டும்.. பிடிவாதமாய் தண்டவாளத்தில்தான் தலையை வைத்துக் தூங்குவேன் என்றால் எப்படி...?"

"ஜமுனா.. நானாய் போய் பேசவில்லையடி.. சூழ்நிலை அப்படி அமைந்து விட்டது.."

"சும்மா... கதை விடாதே.. வேண்டுமென்றே வம்பை விலைக்கு வாங்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறாய்..."

"என் ஆபிஸில் மூர்த்தி என்று ஒரு ராஸ்கல்..."

"எல்லாம் எனக்குத் தெரியும்.. எனக்கு மட்டுமல்ல.. இந்த ஊரில் இருக்கும் அத்தனை பேருக்கும் தெரியும்.. உனக்கு ஒன்று தெரியுமா...?"

"என்னது...?"

"நீ ஆபிஸில் இருந்து வரும் போது ஒரு புல்லட் உன்னைப் பாலோ பண்ணிக் கொண்டு வந்ததாமே..."

"எனக்குத் தெரியாதே..."

"இப்போது தெரிந்துகொள்.. ஆளைப் பார்க்கிறாயா..?"

ஜமுனா ஜன்னல் திரையை விலக்கிக் காட்டினாள்.. ரூபிணி மறைவாய் நின்று பார்த்தாள்.

ஹாஸ்டலின் எதிர்புறம் சாலையில் ஒரு புல்லட் நின்று கொண்டிருந்தது.. அருகே வாட்டசாட்டமாய் ஒரு ஆள் நின்று பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்..

"யார் அந்த பேப்பர் படித்துக் கொண்டிருக்கும் ஆளையா சொல்கிறாய்...?"

"பேப்பர் படிப்பதெல்லாம் பாவ்லா.. அந்த ஆள் நம் ஹாஸ்டலுக்கு வாட்ச்மேன் வேலை பார்க்கிறான்.. சம்பளம் நம் ஹாஸ்டல் நிர்வாகத்தார் குடுக்க மாட்டார்கள்.. அந்த ஹரிஹரன் கொடுப்பார்..."

"இது எதுக்குடி வெட்டி வேலை...?"

ஜமுனா தீர்க்கமாய் பார்த்தாள்.. ரூபிணியின் முகத்தில் தெரிந்த அறியாமையைக் கண்டு ஒரு கணம் அவள் மேல்

பரிதாபப்பட்டாள்.. மனம் இளகியவளாய் ரூபிணியை அருகே அமர்த்திக் கொண்டு புத்தி சொன்னாள்..

"ரூபிணி... நிலாவைக் காட்டி நம் அம்மாக்கள் நமக்கு சோறு ஊட்டியிருக்கிறார்கள்.. நீ அந்த நிலவைத் தொடக்கூட ஆசைப்படலாம்.. ஏனென்றால்.. அதில் நாம் கால் பதித்திருக்கிறோம்.. சூரியனைத் தொட ஆசைப்படலாமா..? ஹரிஹரன் சுட்டெரிக்கும் சூரியன்.. விலகி நில்.. இல்லையென்றால் எரிந்து சாம்பலாகி விடுவாய்..."

தோழியின் வார்த்தைகளால் ரூபிணி மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தது எல்லாம் சற்று நேரம் தான்.. அந்த சுட்டெரிக்கும் சூரியன் இரவு பத்து மணியளவில் செல்போனில் அழைத்தபோது அவளுக்கு இரு தோழிகளின் பயமும், அறிவுரையும் மறந்தே போனது.

நினைவில் நின்றதெல்லாம் ஹரிஹரன் அவளுடன் பேச விரும்பி போனில் அழைக்கிறான் என்பது மட்டும் தான்.

செல்போனில் அழைப்பு மணியோசை கேட்டு ஜமுனாவின் தூக்கம் கலைந்து விடுமோ என்ற பயத்துடன் உடனே பேசினாள்.

"ஹரிஹரன் பேசுகிறேன்..." என்றது மறுமுனை..

"ம்ம்..." ரூபிணி ஜமுனாவைப் பார்த்தாள்..

"ம்ம்.. மட்டும்தானா... பேச மாட்டாயா?"

"ம்ம்..." ரூபிணி எழுந்து பாத்ரூமுக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டாள்.. "ரூபிணி...? ரூபிணி தானே..?"

"நான்தான்..."

"ஏன் பேச இவ்வளவு நேரம்..?"

"ரூமில் நானும் இன்னொரு பிரண்டும் இருக்கிறோம்.."

"இப்போது பாத்ரூமிற்குள் வந்து பேசுகிறாயா...?"

"எப்படிக் கண்டுபிடித்தீர்கள்..?"

"ஒரு யூகம்தான்.. சரி போனில் சொல்கிறேன் என்று சொல்லி விட்டுப் போனவள் ஏன் போனில் என்னை அழைக்கவில்லை..?"

"ம்ம்... சும்மாதான்..."

"என்னிடமே வா...? நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறக்கவில்லை பார்த்தாயா...?"

ரூபிணியின் மனம் இனித்தது.. பதில் கூறாமல் நின்றாள்,

"பேச மாட்டாயா...?"

"என்ன பேச...?"

"எதையாவது பேசு.. பேச விஷயமா இல்லை.."

"நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா...?"

"ஆஹா.. எவ்வளவு முக்கியமான விஷயம்..? இப்படித் தான் பேச வேண்டும்.." ஹரிஹரன் வாய்விட்டுச் சிரித்தான்.

ரூபிணி நாக்கைக் கடித்துக் கொண்டாள்...

"நீங்கள்தானே எதை வேண்டுமானாலும் பேசச் சொன்னீர்கள்..?"

"ஓகே.. ஓகே நான்தான் சொன்னேன்.. அதைவிடு.. நான் போனில் கூப்பிடுவேன் என்று நீ எதிர்பார்க்கவே இல்லையா...? உண்மையைச் சொல்ல வேண்டும்.."

"நான் பொய் சொன்னதில்லை.."

"அது முன்பு... இப்போதும் அப்படியே இருக்கிறாயா?" ஹரிஹரன் நகைத்தான்.

"இப்போது மட்டும் என்ன ஆகி விட்டதாம்..?" ரூபிணி ரோசத்துடன் வினவினாள்.

'இது என்ன ஆள் ஆளுக்கு மாற்றி மாற்றி நீ இப்போ மாறி விட்டாய் என்று சொல்கிறார்கள்.. அவள் அப்படி என்ன மாறி விட்டாள்..?'

"எதற்குடா கோபப்படுகிறாய்..." ஹரிஹரன் சரஸமாக வினவினான்.

"இப்படியெல்லாம் பேசாதீர்கள்.."

"வேறு எப்படிப் பேச...?"

"நான் தூங்கப் போகிறேன்..."

"தூக்கம் வருகிறதா..?"

"ஏன் வராது...?"

"உன் பிரண்ட் என்ன செய்கிறாள்..?"

"தூங்கிக் கொண்டிருக்கிறாள்..."

"எப்போது தூங்கப் போனாள்.."

"அவள் தூங்கிப் போய் ஒரு மணி நேரமாகிறது.."

"நீ ஏன் தூங்கவில்லை.."

"தூக்கம் வரவில்லை..."

ரூபிணி மீண்டும் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.. இவனிடம் போய் வாய்விட்டு மாட்டிக் கொண்டாளே.. மறுமுனையில் ஹரிஹரன் சிரிப்பது காதில் ஒலித்தது.

"ஏன் தூக்கம் வரவில்லை...?" மென்மையாய் கேட்டான்..

"தெரியவில்லை..." அவள் உண்மையைச் சொன்னாள்..

"நான் சொல்லவா..?" அவள் கிசுகிசுத்தான்..

"வேண்டாம்..." அவள் வெட்கத்துடன் கூறினாள்..

"ஏன் வேண்டாம்.. நான் சொல்லுவேன்..."

"நான் செல்போனை ஆப் பண்ணி விடுவேன்.."

"எங்கே கட் பண்ணு... பார்ப்போம்..."

அவன் சவால் விட்டான்.. அவள் சிலையாகி நின்றாள்.

## 13

எப்படி முடியும்..? அவள் கையிலிருந்த செல் போனை அணைக்க ஓர் நொடி போதும்.. ஆனால் அந்த ஓர் நொடிக்குப் பின்பு...? ரூபிணியால் அதைத் தாங்க முடியுமா..? கலவரமாய் பதில் சொல்ல முடியாமல் திகைத்து நின்றாள்..

"என்ன பேச்சையே காணோம்...?"

"எனக்குப் பயமாக இருக்கிறது..."

"எதற்குப் பயம்..? பைத்தியம்.. நானிருக்கிறேன்..."

"இல்லை சார்.. இது சரி வராது..."

"சரி வராததை விட்டுவிடு.. நான் 'சார்' என்று நீ அழைத்ததைச் சொல்கிறேன்.. அது சரி வராது ரூபிணி...

விட்டுவிடு.. இனி அப்படி என்னை அழைக்காதே..."

"வேண்டாம். நான் நம் இருவருக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க விரும்பவில்லை..."

"இடைவெளியே இல்லாமல் மனத்தால் நெருங்கி விட்ட பின்பு இல்லாத ஒன்றைக் குறைப்பதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய்..?"

"இது பேச நன்றாக இருக்கும்.."

"கேட்கவும் நன்றாகத்தான் இருக்கும்.."

"நடைமுறை என்பது வேறு..."

"நடைமுறையில் என்னைத் தடுப்பது யார்..? என்னைத் தடுக்க எவனும் இன்னும் பிறக்கவில்லை.. இனி பிறந்து வந்தாலும் அவன் என் மகனாகத்தான் இருப்பான்..."

ரூபிணிக்கு மெய் சிலிர்த்தது.. 'ஹரிஹரனின் மகன்..'

"என்ன ரூபிணி.. மீண்டும் பேசா மடந்தையாகி விட்டாய்..? கற்பனையில் என் மகனைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாயா..?"

ரூபிணி அழுது விட்டாள்.. "அது நடக்குமா..?"

"ஏய்.. ஏன் அழுகிறாய்.. இதோ பார் ரூபிணி.. சுற்றியுள்ளவர்கள் ஆயிரம் சொல்வார்கள்.. நாம் நம் மனம் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்.. எந்த நம்பிக்கையில் நீ லாரன்ஸிற்கு பரிந்து என்னிடம் சிபாரிசு செய்தாய்...? எந்த நம்பிக்கையில் சில்மிஷப் பேச்சு பேசுகிறவனிடமிருந்து தப்பிக்க என் அருகினில் வந்து உட்கார்ந்தாய்...? அந்த நம்பிக்கையை மட்டும் கடைசி வரை என் மேல் வை.. எல்லாம் சரியாகிப் போய் விடும். நான் இருக்கிறேன் ரூபிணி.. பயப்படாதே.. தைரியமாய் இரு... நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வேன்..."

ரூபிணி சுதாரித்துக் கொண்டாள்.. இனிப்பாக இருக்கிறது என்பதற்காக ஜமுனாவும் ப்ரீதியும் சொல்வது போல் அபாயகரமான விளையாட்டை விளையாடுவதா? இன்று இந்த ஊருக்கு தெரிவது கோவில்பட்டிக்குத் தெரிந்தால் அம்மாவும் அப்பாவும் தாங்கிக் கொள்வார்களா..?

"சார்... நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்.."

"சார் என்று கூப்பிடாதே..."

"இல்லை சார்... நான் என்ன சொல்ல வருகிறேனென்றால்.."

"சார் என்று கூப்பிடாதேயென்று சொல்கிறே னில்லை..?" ஹரிஹரனின் குரலில் குழைவு மறைந்து கடுமை இருந்தது..

"என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்..? சொல்லச் சொல்ல சார் என்று கூப்பிடுகிறாயே.. ஹரிஹரனை உன் இஷ்டத்துக்கு விளையாடும் பொம்மை என்று நினைத்து விட்டாயா? ஜாக்கிரதை.. இன்று ஹோட்டலில் நான் உன்னை 'நீ' என்று அழைத்தபோது ஏன் நீ அதை ஆட்சேபிக்கவில்லை? சொல்லு... ஏன் பேசாமல் ஏற்றுக் கொண்டாய்...?"

"நான் அதைக் கவனிக்கவில்லை..."

"ஏன் கவனிக்கவில்லை.. இதையே உன் ஆபிஸில் யாராவது உன்னை 'வா.. போ..' என்று கூப்பிட்டால் கேட்டுக் கொள்வாயா..?"

"மற்றவர்களும் நீங்களும் ஒன்றா..." ரூபிணி தன்னையும் அறியாமல் வெடுக்கென்று கூறினாள்..

மறுமுனையில் ஓர் நொடி மௌனம் நிலவியது..

"ரூபிணி... இதிலிருந்தே உன் மனம் உனக்குப் புரியவில்லையா..?" ஹரிஹரனின் குரலில் பழைய மென்மை மீண்டிருந்தது..

"என் மனம்.. என் மனம்... நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்களேன்.."

"சொல்.. கேட்கிறேன்..."

"என்னைத் தொடர்ந்து வர ஏன் ஆளை அனுப்பியிருக்கிறீர்கள்...?"

"ஓ.. அது உனக்குத் தெரிந்து விட்டதா..?"

"ஊருக்கே தெரிந்து விட்டது..."

"அதுதான் கோபமா..? நான் அவனைக் கண்டிக்கிறேன்.. இனி அவன் தொடர்ந்து வரமாட்டான்.."

"ஏற்கனவே வந்தது வந்ததுதானே..."

"ஸாரி.. ஸாரி.. போதுமா..? யாருக்கும் தலை வணங்காத இந்த ஹரிஹரன் உன் கோபத்துக்குப் பயந்து 'ஸாரி' சொல்லி விட்டான்.. கோபம் தீர்ந்ததா..?"

ரூபிணிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"சிரிக்கிறாயா.. அப்பாடா ஒரு வழியாய் சிரித்து விட்டாய்.."

"ரொம்பப் பயந்தவர் போல என்னமாய் நடிக்கிறீர்கள்.."

"பயமில்லாதவன்தான்... அது மற்றவர்களிடம்... உன்னிடம் பயம்தான்..."

"தோடா.. ஊரே உங்களைப் பார்த்து பயப்படுகிறது. நீங்கள் என்னைப் பார்த்து பயப்படுகிறீர்களா..? யாரிடம் கதைவிடுகிறீர்கள்.."

"உன்னிடம் தானே நான் கதை பேச முடியும்..."

"நான் ஒன்று சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே.."

"என் கோபத்தைக் கண்டு பயந்தவள்தான்.. சும்மா சொல்லு.."

"ஒருவருக்கு ஒருவரைப் பிடித்திருந்தால் ஒருவர் மேல் ஒருவருக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தால்.. அது மனதுக்குள் இருந்தால் மட்டும் போதாதா...?"

"நீ என்ன சொல்ல வருகிறாய்..?"

"மனதுக்கு தெரிவது ஊருக்குத் தெரிய வேண்டுமா..? நான் ஊர் விட்டு ஊர் வந்து வேலை பார்க்கிறேன்.. என் பேரண்ட்ஸ் என்னைத் தவறாக நினைத்து விடக் கூடாது இல்லையா..?"

"அதற்காக...?"

"பார்த்தீர்களா.. கோபப்படுகிறீர்கள்.. உங்கள் உலகம் வேறு.. என் உலகம் வேறு.. நான் இப்போதுதான் என் பேரண்ட்ஸை விட்டு வெளியே வந்திருக்கிறேன்.. உங்களைப் போல நினைத்ததைப் பேசவும்.. செயல் படுத்தவும் என்னால் முடியாது..."

"உனக்காக நான் பேசி விட்டுப் போகிறேன்.. பழைய பாடல் ஒன்று இருக்கிறது தெரியுமா..?"

அவன் பாடினான்..

"நீ பேச நினைப்பதெல்லாம் நான் பேச வேண்டும்..
நாளோடும் பொழுதோடும் உறவாட வேண்டும்..."

"சரியாப் போச்சு போங்க.. பாட்டையே உல்டா பண்ணிப் பாடிட்டிங்க.. அது நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்ன்னுல்ல வரும்..."

"என்ன செய்வது.. நீதான் என்னைப் போல் நினைத்ததைப் பேச முடியாது என்கிறாயே.. உனக்காக நான் பேச வேண்டியது தான்.."

"ஓ.கே. குட்நைட்.. போனை வைத்து விடவா..?"

"எங்கே வைக்கப் போகிறாய்..?"

"நீங்கள் பேச்சை வளர்ப்பதிலேயே குறியாய் இருப்பீர்கள்.."

"தெரியுதில்ல.. அப்ப பேசு..."

"போனை கட் பண்ணிவிடவா என்றால் அதற்கும் சண்டைக்கு வருவீர்கள்.. அதனால்தான் வைத்து விடவா என்றேன்.."

"ஏன்.. இன்னொன்றும் சொல்லலாமே.."

"என்ன..?"

"போனை அணைத்து விடவா என்று கேட்கலாமே..."

அவன் குரலில் சீண்டல் இருந்தது.. அவள் உதடு கடித்தாள்..

"அது என்ன எதற்கெடுத்தாலும் உதட்டைக் கடித்துக் கொள்கிறாய்..."

'எப்படி யூகிக்கிறான்...?'

"உங்கள் போன் நான் என்ன செய்கிறேனென்று காட்டுகிறதா..?"

"இல்லாவிட்டால் அம்மணி என்ன செய்வீர்கள் என்று தெரியாதா..? அதைத்தானே செய்வாய்..."

"போதும்.. நாளைக்கு நான் ஆபிஸ் போக வேண்டாமா..?"

"அது கூட நல்ல ஐடியாதான்.. வேலைக்குப் போகாதே.."

"வேலைக்குப் போகாமல்..."

"நான் உனக்கு வேலை தருகிறேன்.."

"போகாத ஊருக்கு வழி சொல்லாதீர்கள்.. குட்நைட்."

"குட்நைட்டா.. குட்மார்னிங்ன்னு சொல்லு.."

"குட்மார்னிங்கா..."

"மணி என்ன தெரியுமா.. ஆறு..."

"கடவுளே.. விடிந்து விட்டதா..?"

பாத்ரூம் கதவு படபடவென்று தட்டப்பட அவசரமாய் போனை அணைத்து விட்டு கதவைத் திறந்தாள்..

"ஆவ்" என்று கொட்டாவி விட்டபடி உள்ளே வந்த ஜமுனா..

"ஏண்டி.. எப்ப எழுந்தாய்...?" என்று வினவினாள்..

'தூங்கினால்தானே விழிப்பதற்கு....' மனதிற்குள் நினைத்தவள்..

"அப்போதே எழுந்து விட்டேன்..." என்றாள்.

"சரி.. கீழே போய் நம் இரண்டு பேருக்கும் காபி வாங்கிக் கொண்டு வா..."

ஜமுனா பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டாள்.. ரூபிணியும் அலுவலகம் கிளம்புவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டாள்..

மதியம் வரை தாக்குப்பிடித்து வேலை பார்த்த ரூபிணி.. தன்னையறியாமல் கம்ப்யூட்டரை கட்டிப் பிடித்துக் கொண்டு கண் அயர்ந்து விட்டாள்.. மதியம் சாப்பிடக் கூப்பிட வந்த ப்ரீதி உலுக்கி எழுப்பினாள்..

"ரூபிணி.. ரூபிணி... உடம்பிற்கு என்னடி பண்ணுது..? சபாபதி தண்ணியை எடு.."

ப்ரீதி தண்ணீர் தெளித்தவுடன் முகத்தை சுளித்தவாறு விழித்த ரூபிணி.. "என்னப்பா..." என்றாள் சோர்வாக,

"சாப்பிடப் போகலாம்ன்னு கூப்பிட வந்தால் மயங்கிக் கிடக்கிறாய்..."

"மயங்கிக் கிடக்கிறேனா.. தூங்கிக் கிடக்கிறேன்.." ரூபிணி தலையைப் பிடித்துக் கொண்டாள்..

"என்னடி பண்ணுது..." ப்ரீதி அவளுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்..

"தலைவலிக்குது ப்ரீதி.. நான் ஆப்டே லீவு போட்டு விட்டு ஹாஸ்டலுக்குப் போகிறேன்.."

"பொறுடி.. சூடாய் காபி கொண்டு வரச் சொல்கிறேன்.."

"வேண்டாம்..."

ரூபிணி சோர்வாக எழுந்து லீவ் லெட்டர் எழுதிக் கொடுத்துவிட்டு வண்டியை மெதுவாக ஓட்டிக் கொண்டு போனாள்.. சென்னை செல்லும் நெடுஞ்சாலையில் சற்று தூரம் போயிருப்பாள்.. அவளது வண்டி நின்று விட்டது.. இறங்கி வண்டியை யோசனையாய் பார்த்துக் கொண்டு நிற்கையில் அவளருகே கார் ஒன்று வந்து நின்றது.

"ஏறு.." என்றான் காரின் முன் பக்க கதவைத் திறந்து விட்ட ஹரிஹரன்..

"நோ.. தேங்க்ஸ்.." ரூபிணி பதட்டமாய் சுற்று முற்றும் பார்த்தாள்..

"இப்போது ஏறப் போகிறாயா.. இல்லையா..?" ஹரிஹரன் காரிலிருந்து இறங்கப் போனான்..

இவன் இறங்கி நின்று இவளோடு பேச்சு வளர்ப்பதை யாரேனும் பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்துடன் காரில் ஏறி அவன் பக்கத்தில் அமர்ந்து விட்டாள் ரூபிணி..

இளஞ்சிவப்பில் சுடிதார் அணிந்திருந்தவளை ரசனை யாய் பார்த்தபடி காரை ஓட்ட ஆரம்பித்தான் ஹரிஹரன்.. அவள் பதற்றமாய் திரும்பிப் பார்த்தாள்..

"என்ன பார்க்கிறாய்.."

"என் வண்டி..."

"எங்கேயும் போய் விடாது.. ரிப்பேருக்கு போகும்.."

"எப்படி கை கால் முளைத்து பறந்து போகுமா..?"

"கை கால் இருக்கிற ஆள் தள்ளிக் கொண்டு போவான்.."

"என்னது..." ரூபிணி அவசரமாய் திரும்பி பின் கண்ணாடி வழியாகப் பார்த்தாள்..

அவளது கைனடிக் ஹோண்டாவை யாரோ ஒரு ஆள் உருட்டிக் கொண்டு போனாள்..

"ஐயோ..." தலையில் கை வைத்துக் கொண்டாள் ரூபிணி..

"ஏன்.." ஹரிஹரன் புருவம் உயர்த்தினான்..

"ஏற்கனவே.. நீங்களும் நானும் ஹோட்டலில் பேசிக் கொண்டிருந்ததை ஊரே பேசுகிறது.. இப்போது எல்லோரும் பார்க்க என் வண்டியை உங்களுடைய ஆள் தள்ளிக் கொண்டு போவதைப் பார்த்தால் இன்னும் என்னவெல்லாம் பேசுமோ..." ரூபிணியின் முகம் பயத்தில் வெளுத்தது.

"இப்படி தொட்டதற்கெல்லாம் பயந்தால் எப்படி...?"

"உங்களை யார் இவ்வளவு பெரிய வி.ஐ.பி.யாக இருக்கச் சொன்னார்கள்.. அதுதான் எனக்குத் தொல்லையாக இருக்கிறது.."

"உனக்குப் பிடிக்கவில்லையென்றால் வி.ஐ.பி. பட்டத்தையே விட்டு விடுகிறேன்.." ஹரிஹரன் இலகுவாகக் கூற ரூபிணி திகைத்துப் போனாள்..

'ஏன் இப்படி இவன் வேகம் காட்டுகிறான்..? புயல் போல் இருக்கிறானே.. இவனை அவள் நெஞ்சம் நினைப்பது எப்படி நிறைவேறும்..?'

"மதியமே ஹாஸ்டலுக்குப் போகிறாயே.. ஏன்..?"

"உடம்பு சரியில்லை..."

"உடம்புக்கு என்ன...? பீவரா...? டாக்டரிடம் போகலாமா..?" அவன் வண்டியைத் திருப்ப முயல...

"ஐயோ சாமி... உங்களுக்குப் புண்ணியமாகப் போகும். கொஞ்சம் அடங்கி உட்காருங்கள்.. நீங்கள் என்னை டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போனால் வேறு வினையே வேண்டாம்.." என்று அலறினாள் ரூபிணி..

அவளது பதட்டத்தைக் கண்ட ஹரிஹரனின் புருவம் சுருங்கியது.. காரை சாலையோரமாக நிறுத்தினான். அவள் பக்கம் திரும்பி அமர்ந்தான்.. ரூபிணி பதட்டத்துடன் சாலையில் கடந்து போகும் வாகனங்களில்

போகிறவர்களில் யாராவது தங்களைப் பார்க்கிறார்களா என்று கவனிப்பதைக் கண்ட அவனது முகம் இறுகியது.

## 14

ஹரிஹரனின் முகம் கடுமையாக மாறியிருந்தது.. முகச்சுளிப்புடன் ரூபிணியைப் பார்த்தான்.. கண்ணுக்குக் குளுமையாக அழகான தோற்றத்துடன் அவள் இருந்தது அவனது கோபத்தைக் குறைக்கவில்லை.

ரூபிணி அவனது முக மாற்றத்தைக் கவனிக்காமல் சாலையிலேயே கவனமாய் இருக்க,

"கார் கதவு மூடியிருக்கிறது.. உள்ளே யார் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று வெளியே தெரியாது..." என்றான் எரிச்சலுடன்..

நிம்மதியுடன் ரூபிணி.. "அப்பாடி..." என்று மூச்சுவிட்டாள்..

அப்போதுதான் அவனது முகத்தைக் கவனித்தவள் துணுக்குற்றாள்..

'இவன் ஏன் இவ்வளவு கோபமாய் இருக்கிறான்..?'

ஹரிஹரனின் விரல்கள் ஸ்டியரிங்கில் தாளமிட்டுக் கொண்டிருந்ததையும் அவன் தன் டென்சனை கட்டுப்படுத்திக் கொள்ள முயல்வதையும் கண்டவள்,

"கோபமாய் இருக்கிறீர்களா..?" என்று பயத்துடன் கேட்டாள்..

"இல்லை.. மகா சந்தோசமாய் இருக்கிறேன்.." அவன் வெடித்தான்..

"நான் என்ன செய்தேன்..?"

"கடுப்பைக் கிளப்பாதே.. இப்போது என்ன நடந்து விட்டதுன்னு இப்படி ஓவராய் ரியாக்ட் பண்ணுகிறாய்..? ரோட்டில் வண்டி ரிப்பேர்ன்னு நின்று கொண்டிருந்தாய்.. வண்டியை வொர்க் சாப்புக்கு அனுப்பி விட்டு உன்னைக் காரில் அழைத்துக் கொண்டு வருகிறேன்.. உடம்பு சரியில்லையென்று சொன்னாய்.. டாக்டரிடம் போகலாம் என்றேன்.. இதற்குப் போய் இப்படி அலறக் காரணம் என்ன?

நான் முதன் முதலாய் பார்த்த அஞ்சாத பார்வை கொண்ட அந்த ரூபிணி எங்கே.. இயல்பான செய்கைகளுக்குக் கூட பயந்து அலறும் இந்த ரூபிணி எங்கே.. ஏன் இப்படி மாறிப்போனாய்...?" அவன் கோபத்துடன் படபடத்தான்..

"நீங்கள் ஒருவர்தான் பாக்கி.. நீங்களும் சொல்லி விட்டீர்களா..." ரூபிணி கண் கலங்கிவிட்டாள்..

"ஸ்ஸ்.. இப்போது எதற்காக இந்தக் கண்ணீர்..? நேற்று இரவும் இப்படித்தான் அழுதாய்.. வாட் இஸ் ராங் வித் யு ரூபிணி.. உன்னை உன் ஹாஸ்டலில் டிராப் பண்ணத்தானே காரில் ஏறச் சொன்னேன்..? வேறு எந்த நோக்கமும் எனக்கு இல்லையே..."

"ஹரி.. ப்ளீஸ்.. இப்படியெல்லாம் பேசாதீர்கள்.. நான் கனவில் கூட உங்களைப் பற்றித் தவறாக நினைத்த தில்லை.. இனி நினைக்கவும் மாட்டேன்.." ரூபிணி இன்னும் கண்ணீர் சிந்த ஆரம்பித்தாள்..

'ஹரி...' என்ற அழைப்பில் அவனது இறுக்கம் தளர்ந்து இளகியவன்..

"ஈஸி.. ஈஸி.. இயல்பாய் இருக்காமல் இப்படிப் பேசுகிறாயே என்ற கோபம்தான் எனக்கு.. லீவ் திஸ் மேட்டர்..." என்றான்.

"இல்லை ஹரி.. இதை இப்படியே விட்டு விட முடியாது.. நேற்றுப் பார்த்து பேசியதற்கே என் பிரண்ட்ஸ் என்னை திட்டினார்கள்.."

"அவர்கள் ஏன் உன்னைத் திட்ட வேண்டும்..?"

"நீங்கள் மூர்த்தியை பனிஷ் பண்ணியது.. என் பின்னால் ஒரு ஆளை பாதுகாப்பாய் ஹாஸ்டல் வரை புல்லட்டில் பாலோ பண்ண வைத்தது.. எல்லாமே எல்லோருக்கும் தெரிந்து விட்டது..."

"அதனால் என்ன..? என் கண் முன்னால் அந்த ராஸ்கல் உன்னை டார்ச்சர் பண்ணினான்.. வார்ன் பண்ணினேன்.. வெளியே போனதும் உன்னை பாலோ பண்ணி வம்பு இழுப்பானோ என்ற சந்தேகத்தால் பாதுகாப்புக்கு ஒரு ஆளை உன் பின்னால் அனுப்பி வைத்தேன்.."

"இந்த அதீதமான அக்கறை எனக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்கிறார்கள்..."

"ஆபத்தா....? என்னாலா..? உனக்கா..?"

"ஆமாம்..."

"உன் மேல் சிறு துரும்பு பட்டாலும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.. என்னால் உனக்கு எப்படி ஆபத்து வரும் ரூபிணி..?"

"வேண்டாம்.. நேற்று இரவு முழுவதும் தூங்காமல் போனில் பேசும் அளவிற்கு நமக்குள் என்ன இருக்கிறது..?"

"எதுவும் இல்லையா..? உன் மனச்சாட்சியைக் கேள்.."

"இந்த வேகத்தை நான் தாங்கமாட்டேன்.. நேற்று தூக்கம் கெட்டது உங்களை எந்த விதத்திலும் பாதிக்க வில்லை.. ஆனால் நான் ஆபிஸில் வேலை செய்ய முடியாமல் லீவ் போட்டுவிட்டு திரும்பி வந்து கொண்டிருக்கிறேன்..."

"எனக்குத் தூங்காமல் கண் விழித்துப் பழக்கம் உண்டு. பல பிஸினெஸ் பார்க்கிறவன் நான்.. நாள் ஒன்றுக்கு ஆறு மணி நேரம் தூங்கினாலே அதிகம்..."

"அதைத்தான் சொல்கிறேன்.. உங்கள் பழக்க வழக்கமும் வாழ்க்கை முறையும் வேறு.. என் பழக்கவழக்கமும் வாழ்க்கை முறையும் வேறு..."

"எதிர்மறைத் துருவங்கள் தானே ஒன்றையொன்று ஈர்க்கும்..."

"நீங்கள் பெரிய பிஸினெஸ் மேன்.. என்னுடைய எல்லாக் கேள்விகளுக்கும் உங்களிடம் விடை இருக்கும். ஆனால் நான்..? போன வருடம் வரை என் பேரண்ட்ஸின் நிழலில் காலேஜ் படித்துக் கொண்டிருந்த மாணவியாக இருந்தேன்.. இந்த வருடம் தான் வேலைக்கு என்று அவர்களைப் பிரிந்து தனியாக வந்திருக்கிறேன்.. என் பிரண்ட்ஸ் என்னைப் பார்த்து இன்று கேட்ட கேள்விகளை நாளை என் பேரண்ட்ஸ் என்னைப் பார்த்து கேட்டு விடக்கூடாது.."

"அதற்காக என்ன செய்ய வேண்டும் என்கிறாய்..? நான் உன்னை டிஸ்டர்ப் செய்வதாக நீ நினைக்கிறாயா..?"

"நிச்சயமாக இல்லை.. எனக்கு உங்களைப் பிடிக்கும்.."

"என்ன சொன்னாய்..? திரும்பவும் சொல்லு..." ஹரியின் விழிகள் மின்னின..

"எனக்கு உங்களை மிக.. மிக.. அதிகமாகப் பிடிக்கும் ஹரி.. ஆனால் அது எதனால் என்று நான் இன்னும் சரிவர ஒரு முடிவிற்கு வரவில்லை.." ரூபிணி மெதுவான குரலில் கூறினாள்.

"இதில் முடிவுக்கு வர என்ன இருக்கிறது..?"

"இல்லை ஹரி.. நான் என்னுடைய இந்த வயதுவரை பார்த்த ஆண்கள் வேறு.. நீங்கள் வேறு.. உங்களைப் பார்ப்பதற்கு முன் உங்களைப் பற்றி ஏதேதோ சொல்லிப் பயமுறுத் தினார்கள்.. நேரில் பார்த்தால் நீங்கள் மிகவும் நல்லவராக.. நியாயவாதியாக இருந்தீர்கள்.. உங்களிடம் வேலை பார்த்தவனை பனிஷ் பண்ணுவது உங்கள் சொந்த விசயம்... மனம் பொறுக்காமல் நான் அதில் தலையிட்டேன்.. எனக்காக நீங்கள் லாரன்ஸை மன்னித்து வேலைக்குச் சேர்த்துக் கொண்டீர்கள்.. இதனால் சொல்லத் தெரியாத சொந்தம் ஒன்று உங்கள் மேல் எனக்குள் உருவாகிவிட்டது... ஆனால் இதையெல்லாம் வைத்து பெரிய முடிவிற்கு என்னால் வர முடியவில்லை.." ரூபிணி சஞ்சலத்துடன் பேசினாள்.

"ஓ.கே.. நீ குழப்பத்தில் இருக்கிறாய்.. டேக் யுவர் ஓன் டைம். எவ்வளவு நாள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்.. நீயாக ஒரு முடிவுக்கு வந்து என்னை போனில் அழைக்கும் வரை நான் உன்னை எந்த வகையிலும் டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்.. உன் மனதிலிருப்பதை நீ சொல்லிவிட்டாய்.. என் மனதில் இருப்பதையும் தெரிந்துகொள்.. என்னை வசீகரித்த முதல் பெண் நீ.. இந்த ஹரிஹரன் பெண்கள் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டான். ஆனால்.. உன் முகம் பார்க்காமல் இனி இருக்கவும் மாட்டான்.. உன்னைப் பார்க்கும் வரை உன் மேல் நல்ல ஓபினியன் எனக்கு இல்லை.. ஊர் சுற்றிப் பார்க்க வந்தவள் விளையாட்டாய் என் ஆள் ஏதோ சொன்னதற்கு வேண்டுமென்றே ஈவ் டீஸிங் என்று புகார் பண்ணிவிட்டாள் என்ற கோபம் தான் எனக்கு இருந்தது.. ஆனாலும்.. நீ வெளியூரிலிருந்து வந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தாய்.. உன்னிடம் நானே

நேரே பேசுவதுதான் உனக்குப் பாதுகாப்பு என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே நான் உன்னை நேரில் பார்க்க வந்தேன்..."

"ஏன்..? இல்லாவிட்டால் என்ன ஆகியிருக்கும்?" ரூபிணி புரியாதவளாய் கேட்டாள்.

"நீயே சொன்னது போல் என் உலகம் வேறு ரூபிணி.. என் ஆள்கள் ஒருவர் மேல் ஒருவர் பாசமாய் இருப்பவர்கள்.. அவர்களில் ஒருவனை நீ தூக்கி உள்ளே போட்டு விட்டதால்.. உன் மேல் கோபமாய் இருந்தார்கள்.. உன்னைப் பார்த்துப் பேச யாரை நான் அனுப்பியிருந்தாலும் அவன் உன்னிடம் நல்ல விதமாய் பேசியிருக்க மாட்டான். மிரட்டியிருப்பான்.. அதைத் தவிர்க்கத்தான் நானே உன்னிடம் நேரில் பேச வந்தேன்.." ஹரிஹரன் அவள் முகம் பார்த்தான்..

"இதில் இவ்வளவு விசயம் இருக்கிறதா..?" கண் விரியக் கேட்டாள் ரூபிணி.. ஹரிஹரனின் அந்தக் குணம்.. அந்தத் தன்மை.. அவளைக் கவர்ந்தது.

"ஆமாம்.. வந்த இடத்தில்.. உன்னைப் பர்த்ததும் அயர்ந்து விட்டேன்.. உன் பேச்சும்.. உன் பக்க நியாயத்தை நீ விளக்கிய விதமும்.. என்னைக் கவர்ந்து விட்டன.. முதன் முதலாய் ஒரு பெண்ணின் மேல் எனக்குள் ஓர்வித ஈர்ப்பு தோன்றியதென்றால்.. அது உன் மீது தான்.." ஹரிஹரன் முகம் திருப்பி சாலையைப் பார்த்தான்..

ரூபிணி கீழ் உதட்டை மடித்துப் பற்களால் கடித்தாள்.. சரேலெனத் திரும்பிய அவனது பார்வை அவள் உதட்டில் படிந்தது. ரூபிணி முகம் சிவக்க பார்வையைத் தாழ்த்தினாள். ஹரிஹரனின் முகம் மென்மையானது..

ஓர் சிறு பார்வையைக் கூடத் தாங்க முடியாமல் நாணித் தலைகுனியும் பூங்கொடி போன்றவள் இவள்...

இவளை எப்படி அவனால் விட முடியும்..?

"உனக்குத் தெரியாது ரூபிணி.. நான் ஒரே இடத்தில் நிற்க முடியாது.. பறந்து பறந்து வேலை பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவன். நீ இந்த ஊரில் இருக்கிறாய் என்ற ஒரே காரணத்திற்காக இந்த ஊரை விட்டு நான் இப்போதெல்லாம் நகர்வதேயில்லை.. எவ்வளவு வேலைகள் இருந்தாலும் இரவில் தூங்க விழுப்புரம் வந்து விடுகிறேன்.. எதற்காக..? உனக்காக.. ரூபிணி.. நீ லாரன்ஸிற்காக போனில் பரிந்து பேசியது எனக்குள் எந்த அளவு பாதிப்பை உருவாக்கியது தெரியுமா..? அவன் உனக்கு அவமரியாதையை உண்டு பண்ணினான்.. நீ அவன் மேல் கருணை காட்டினாய்.. பகைவருக்கும் இரங்கும் உன் உள்ளம் கண்டு நான் அதிசயப்பட்டுப் போனேன்.. எனக்குப் பழிவாங்கித்தான் பழக்கம்.. மன்னித்துப் பழக்கமே இல்லை.. என் வாழ்வில் முதன் முறையாக நான் அவனை மன்னித்தேன்.. நீ எனக்கு மன்னிக்கக் கற்றுக் கொடுத்தாய் ரூபிணி... என்னிடம் வேலை செய்பவர்கள் வீட்டிற்கு நான் போனது கிடையாது.. ஆனால் லாரன்ஸின் வீட்டிற்குப் போனேன்.. எதற்காக தெரியுமா..? உன் பரிதாபத்தை சம்பாதித்த அந்தக் குழந்தையின் முகம் பார்க்க.. அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்த்த போது உன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. ரூபிணி.. அன்று அந்தக் குழந்தையின் கையில் நான் ஒரு லட்ச ரூபாய் கொடுத்தேன்.. உன்னை எனக்குத் தெரியப்படுத்தியதற்காக.. உன் நெஞ்சம் எவ்வளவு உன்னதமானது என்பதை நான் அறிய வைத்தற்காக.." ஹரிஹரன் காரைக் கிளப்பினான்..

ரூபிணியின் கண்களில் கண்ணீர் ததும்பி வழிந்து கொண்டிருந்தது.. இவன் எவ்வளவு நல்லவன்..!

இவனிடம் பேசிப் பழக ஊர் உலகம் தடை செய்கிறதே...

"என் நெஞ்சத்தைப் பற்றி நீ இன்னும் சரியாக அறிந்து கொள்ளவில்லை.. இப்போது உன்னை விட்டு விலகிப் போகிறேன்.. என்னால் நீ படும் வேதனைகளைத் தாங்க முடியவில்லை.. இங்கேயே இருந்தால் உன்னைப் பார்க்காமல் .. பேசாமல் இருக்க என்னால் முடியாது..

டெல்லிக்குப் போகிறேன்.." ஹரிஹரன் உணர்ச்சியற்ற குரலில் கூறினான்.

"எப்போது திரும்பி வருவீர்கள்..?" ரூபிணி அவசரமாய் கேட்டாள்.. அவளது விழிகளில் பிரிவைத் தாங்க முடியாத வேதனை இருந்தது.

அவளைத் திரும்பிப் பார்த்தவனின் விழிகள் மின்னின.. முகம் விகசித்தது.

"தெரியாது.. அங்கே ஹோட்டல் கட்டும் வேலை நடந்து கொண்டிருக்கிறது.. உன்னை நான் இனித் தொந்தரவு செய்ய மாட்டேன்.. நிம்மதியாய் போய் வா.."

ரூபிணியின் ஹாஸ்டல் முன்னால் கார் நின்றது.. இறங்க முடியாமல் ரூபிணி தவித்தாள்.. தாய் முகம் தேடும் மழலையாய் ஹரிஹரனின் முகம் பார்த்தாள்.. 'நிம்மதியா.. நீ அருகில் இல்லாமலா..?'

"இறங்க மனமில்லையா..."

ரூபிணி இதழ் கடித்து கண்ணீரைக் கட்டுப்படுத்த விழிகளைச் சிமிட்டினாள்.. 'முடியவில்லையே.. என்னால் பிரிய முடியவில்லையே...'

"சொல் ரூபிணி.. இப்படியே என்னோடு வந்து விடுகிறாயா..? உன் மனம் மறைத்து ஏன் இந்தத் தவி தவிக்கிறாய்.. உன் மனதில் நான் இல்லையா..? உன் நெஞ்சில் என்மேல் நேசம் இல்லையா..? ஏன் இந்தப் போராட்டம்..? போய் விடலாமா..? என் வீட்டிற்குப் போய் விடலாமா..?" ஹரிஹரன் கரம் நீட்டி அழைத்தான்..

இன்னும் சற்று நேரம் தாமதித்தால் அவன் கேட்பதற்கு 'சரி'யென்று சொல்லி அவன் பின்னாலேயே போய் விடுவோம் என்று தோன்றவும் ரூபிணி படக்கென்று கார்க் கதவைத் திறந்து கொண்டு இறங்கி விட்டாள்.. ஹரிஹரனின் முகம் கல்லைப் போல் கடினமானது..

"வருகிறேன்.." ஹரிஹரனின் குரல் காற்றோடு கலக்க அவனது கார் அந்தக் காற்றை விட வேகமாகப் பறந்தது... கண் பார்வையிலிருந்து மறைந்தது.

ஏன் இவ்வளவு வேகமாக ஓட்டுகிறான்..? அவளது பார்வையிலிருந்து மறைய அவ்வளவு ஆர்வமா..? அவளைப் பிரிந்து செல்ல இவ்வளவு துடிப்பா..?

'இருக்காதா..?' அவளது மனம் அவளைக் குத்திக் காட்டியது.

'அன்பைச் சொல்கிறவனை வம்பு செய்கிறவன் போல் விலக்கி வைத்தாய்.. உன் முகம் பார்க்க அத்தனை வேலைகளையும் புறக்கணித்து விட்டு வந்தவனின் முகம் பார்க்க அஞ்சி நடுங்கினாய்.. இயல்பாக அவன் உதவி செய்வதை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினாய்.. ஊரில் கொடிகட்டிப் பறப்பவன்.. உன் அருகே அமர்ந்து.. உன் முகம் பார்த்துப் பேசத் துடித்தான்.. அவன் துடிப்பை உணர்ந்தும் உணராதவள் போல் நடித்து அவனைப் புண்படுத்தினாய்.. இனி உன்னை விட்டு விலகி ஓடாமல் என்ன செய்வான்..?'

உயிரற்ற உடலுடன் அறைக்குள் நுழைந்தவள் கட்டிலில் விழுந்து கதறினாள்.. அழுது அழுது ஓய்ந்து.. தன்னையறியாமல் தூங்கிவிட்டாள்.. மாலையில் ஜமுனா வந்து எழுப்பி விடும் வரை எழுந்திருக்கவே இல்லை..

"ரூபிணி எழுந்திரு.. இந்தா காபி.." ஜமுனா அவள் கையில் காபித் தம்ளரைக் கொடுத்தாள்.. வாங்கிக் குடித்துக் கொண்டே,

"நீ இப்போதுதான் வந்தாயா..?" என்று கேட்டாள் ரூபிணி.

"ஆமாம்.. அது சரி... உன் உடம்புக்கு என்ன? மதியமே வந்து விட்டாயாமே.. உன் ஹேண்ட்பேகில் சாப்பாட்டுப் பொட்டலம் அப்படியே இருக்கிறதே.. மதியம் சாப்பிட வில்லையா..?"

"ஒரே.. தலைவலி ஜமுனா.."

"இப்போது எப்படியிருக்கிறது..?"

"பரவாயில்லை.."

மதியம் ஹரிஹரனின் காரில் வந்து இறங்கியதை யாரும் பார்த்து விட்டார்களோ.. ஜமுனாவிடம் சொல்லி யிருப்பார்களோ என்று மனதில் பயந்து கொண்டே இருந்தாள் ரூபிணி.. ஆனால் ஜமுனா அதைப் பற்றிக் கேள்வியே கேட்கவில்லை.

நிம்மதியாய் உணர்ந்தவள் எழுந்து குளியலறைக்குள் சென்று முகம் கழுவிக் கொண்டிருந்த போது,

"ஏம்மா.. நம்ம ரூபிணியம்மா எங்கேம்மா..." என்று ரோஜாரமணி வினவுவது கேட்டது.

"ஏன் ரோஸ்.. என்னிடம் பேசமாட்டாயா..?"

"ஐய்யே.. உன்கிட்ட பேச என்னாம்மா கீது..."

"இந்த சென்னைச் செந்தமிழும் விழுப்புரம் மணித் தமிழும் சேர்ந்த கலவைத் தமிழ் இருக்கில்ல... அதைக் கொஞ்சம் பேசேன்.. என் காது குளிரக் கேட்கிறேன்.."

"நீயா.. ஏம்மா எனக்கு காது குத்தறே.. வெறுமே பேச்சைக் கேட்கிறதோட நீ நிறுத்திக்குவியாக்கும்.. உன்னை எனக்கு தெரியாதாக்கும்.."

"அப்படி என்ன என்னைப் பற்றி நீ தெரிந்து கொண்டாயாக்கும்..?"

"என் வாயைக் கிளறி வேடிக்கை பார்ப்பே..."

"கிளறிப் பார்க்க நீயென்ன உப்புமாவா.. எங்கள் ரோஸ் ஆச்சே.."

"அட போம்மா.. எனக்குப் பல ஜோலி இருக்கு.."

"எனக்கு மட்டும் ஜோலி இல்லையா..?"

"நீ ஜோலி முடிஞ்சு ஜாலியா வந்து உட்கார்ந்துக்கினுகீறே.. எனக்கு அப்படியா.. ராத்திரி கண் மூடுற வரைக்கும் வேலையிருக்கும்..."

"அதுக்காக ஒரு பேச்சுக் கூட பேசமாட்டியா..?"

"நீ ஒரு பேச்சோடு நிறுத்த விடுவியா..?"

என்னவோ தான் பேச்சை நிறுத்திவிட்டது போல் தன் வாயை உண்மையிலேயே கிளறி ஜமுனா பேச வைத்துக் கொண்டிருப்பதை அறியாதவளாய் ரோஜாரமணி பிகு பண்ணிக் கொண்டிருப்பதைக் கண்டு ரூபிணிக்கு சிரிப்பு வந்தது. முகத்தை டவலால் துடைத்துக் கொண்டே குளியலறையில் இருந்து ரூபிணி வெளியே வந்தாள்..

"என்ன ரோஜாரமணி..."

"இந்தா.. ரூபிணியம்மாவே வந்தாச்சு.. அம்மா உன் வண்டியை ரிப்பேருக்கு விட்டிருந்தியாமில்ல.. அதை ரிப்பேர் பண்ணி வொர்க் ஷாப் ஆள் கொண்டு வந்திருக்கான்.. கீழே நிக்க வைச்சிருக்கேன்.. ஜரூரா வா.."

"ஏன் ரோஸ்.. நான் பேசினால் பேச மாட்டாய்.. ரூபிணியிடம் மட்டும் இவ்வளவு நீளமா பேசுகிறாயே.. ஆனாலும் உனக்கு இவ்வளவு ஓர வஞ்சனை ஆகாது.. ரோஸ்.."

"நீ ரோஸ்.. ரோஸ்ன்னு என் பெயரைக் கொலை செய்யறே.. இந்தம்மா வாய் நிறைய ரோஜாரமணின்னு என் பெயரைச் சொல்லுது..."

"அதுக்காக இப்படியா..?"

ஜமுனா விடாமல் ரோஜாரமணியை வம்புக்கு இழுத்துக் கொண்டிருக்க ரூபிணி லேசாகச் சிரித்துக் கொண்டே படிகளில் இறங்கினாள்..

வாசலில் காக்கி உடையுடன் ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான்.. அவளைப் பார்த்ததும் வணக்கம் சொன்னான்.. அவள் கையில் ஒரு கவரையும் வண்டிச் சாவியையும் கொடுத்துவிட்டு விரைந்து சென்றுவிட்டான். அங்கு நிறுத்தப்பட்டிருந்த கைனடிக் ஹோண்டாவைப் பார்த்ததும் ரூபிணிக்கு தூக்கிவாரிப் போட்டது..

# 16

அது புத்தம் புதிய கைனடிக் ஹோண்டா..!

ரூபிணி அவசரமாய் அதைச் சுற்றி வந்தாள்.. அவளுடைய பழைய வண்டியின் நிறத்திலேயே இருந்தாலும்.. அது புதிய வண்டி.. அவளது பழைய வண்டியின் நம்பரே எழுதப்பட்டிருந்தாலும்.. அது புதிய நம்பர் பிளேட்.. கையிலிருந்த கவரை உடைத்தாள்... உள்ளேயிருந்து ஒரு கடிதம் வெளிவந்தது.

ஹரிஹரன் எழுதியிருந்தான்..

'நான் உன்னுடன் போனில் பேசுவதை நீ விரும்ப மாட்டாய்.. வேறு வழியின்றி கடிதம் எழுதுகிறேன்.. புது வண்டியைப் பார்த்ததும் திகைத்திருப்பாய்.. உன் வண்டி என் வீட்டு கார் ஷெட்டில் பத்திரமாய் இருக்கிறது.. உன் நினைவாக அதை நான் எடுத்துக் கொண்டு விட்டேன்.. என் நினைவை உனக்கு ஏற்படுத்த புது வண்டி வாங்கி கொடுத்து விட்டிருக்கிறேன்.. நம்பர் முதல் கலர் வரை எதுவும் மாறாமல் உன்னிடம் அது வந்து சேர்ந்திருக்கும்..'

ரூபிணி..! உன்னிடம் நான் அனுப்பியிருப்பது எனது நெஞ்சம்.. என்னிடம் நான் எடுத்துக் கொண்டிருப்பது உனது நெஞ்சம்.. இதை நீ மறந்து விடாதே.. நெஞ்சத்தை நீ கொடுக்க மறுத்தாலும் நான் எடுத்துக் கொள்வேன் என்பதை இதன் மூலம் உனக்கு உணர்த்துகிறேன்.. என் நெஞ்சத்தை நீ ஏற்க மறுத்தாலும் அது உன்னுடன் தான் இருக்கும் என்பதையும் உனக்கு அறிவுறுத்துகிறேன்..

என்றேனும் ஓர் நாள் எனை நீ அழைப்பாய் என்ற நம்பிக்கையுடன் டெல்லிக்குப் பறக்கப் போகிறேன்.. மீண்டும் ஓர் நாள் சந்திக்கலாம்..

-

ஹரிஹரன்.'

ரூபிணி புது வண்டியைக் கண்ணீருடன் தொட்டுப் பார்த்தாள்.. அது ஹரிஹரனின் நெஞ்சமாமே.. அவளது விழி நீர் வண்டியில் தெறித்து விழுந்தது.. அவசரமாய் சுடிதாரின் துப்பட்டாவை எடுத்து அதைத் துடைத்தாள்..

பரிவுடன் அவ்வண்டியைத் தடவி பூப்போல் அதை வருடிக் கொடுத்தாள்..

"என்னடி வண்டியுடன் கொஞ்சிக் குழாவுகிறாய்.." ஜமுனா கேட்டுக் கொண்டே வந்து நின்றாள்..

"ரிப்பேருக்கு போய் வந்திருக்கிறது. அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.."

"புது வண்டி போல் ஆகிவிட்டதே.. பரவாயில்லை.. எவ்வளவு கேட்டாலும் கொடுத்து விடு..."

"கொடுக்காவிட்டால் விட்டு விடுகிறவர் போல் தெரியவில்லையே.." ரூபிணி ஹரிஹரனின் நினைவோடு சொன்னாள்.

"நீ கொடுக்க மறுப்பதில் நியாயம் இல்லையே.." ஜமுனா வொர்க் சாப் மெக்கானிக்கைப் பற்றிக் கூறினாள்..

ரூபிணி தனக்குள் சிரித்துக் கொண்டே வண்டியை மற்ற வண்டிகளுடன் நிறுத்தி பூட்டிவிட்டு வந்தாள்..

ஜமுனா அங்கிருந்த மரத்தடியிலிருந்த பெஞ்சில் அமர்ந்திருந்தாள்.. அவள் எதையோ சொல்ல விரும்புவது புரிய ரூபிணி அவளருகில் சென்று அமர்ந்தாள்..

"என்னடி.. தனியாய் உட்கார்ந்து விட்டாய்.. காதல் வந்தால் தான் தனிமையைத் தேடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.."

"கேள்விதான் பட்டிருக்கிறாயா..? உனக்குத் தெரியாதா..?"

ரூபிணி மௌனம் சாதித்தாள்.. பொய் சொல்ல அவளுக்கு மனம் இல்லை.. அதே சமயம் ஜமுனாவின் அறிவுரையையும் அவள் மதித்தாள்..

"என்ன பேச்சையே காணோம்.. மதியம் காரில் வந்து இறங்கினாயாமே.. ஹரிஹரனின் கார்தானே..."

"ஆமாம்.. வரும் வழியில் என் வண்டி ரிப்பேராகி விட்டது... அவர்தான் என்னை ஹாஸ்டலில் டிராப் பண்ணினார்.."

"என்ன சொன்னாலும் கேட்கக் கூடாதுங்கிற முடிவோடு இருக்கிறாயா...?"

"இனி நீ சொல்ல வேண்டிய அவசியமே இருக்காது ஜமுனா.. அவர் இனிமேல் என்னிடம் பேசமாட்டார்..."

"நீ பேச வேண்டாமென்று சொல்லி விட்டாயா..?"

"ஆமாம்..."

ஜமுனா ரூபிணியை அணைத்துக் கொண்டாள்..

"நல்ல வேலை செய்தாய் ரூபிணி.. உன் நன்மைக் குத்தான் நான் சொன்னேன். நீ பணத்தைப் பார்த்து மயங்குகிறவளாக இருந்திருந்தால் நான் இதைச் சொல்லிருக்க மாட்டேன்.. நீ பாவம்... வெளியே ஒரு

சினிமாவுக்குக் கூட பிரண்ட்ஸோடு சேர்ந்து போகப் பயப்படுகிற ரகம்.. உனக்கும் ஹரிஹரனுக்கும் ஒத்து வராது ரூபிணி.. உன்னைப் போன்ற அழகான.. மென்மையான.. நல்ல குணமுள்ள பெண்ணைப் பார்த்தால் ஹரிஹரனுக்கு ஆசை வருவது இயற்கை.. ஆனால் நீ மென்மையான பெண்.. ஹரிஹரனின் முரட்டு சுபாவத்துக்கும்.. அடாவடித்தனமான செய்கைகளுக்கும்.. உன்னால் பொருந்தி வாழ முடியாது.. அதனால் தான் சொன்னேன்.. உனக்கு இதனால் மனம் வலிக்கலாம்.. சிறிது நாளில் இது சரியாகிவிடும்..." ஜமுனா பேசிக் கொண்டே போனாள்..

ரூபிணியின் நெஞ்சம் கண்ணீர் விட்டது.. மனதின் வலி சரியாகிவிடுமா..? எப்போது சரியாகும்..? அவள் இறந்த பின்னாலா..? ஓர் நொடி.. பெண்ணென்று இந்த பூமியில் ஏன் தான் பிறப்பெடுத்தோம் என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள் ரூபிணி..

'பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் - மிகப்

பீழை இருக்குதடி தங்கமே தங்கம்...'

பாரதி ஆணாய் இருந்ததால்தான் பெண்ணின் துன்பத்தைப் புரிந்து.. உணர்ந்து எழுதினாரோ.. அவரே பெண்ணாக இருந்திருந்தால் இதைப் புரிந்திருப்பாரா..?

பெண்ணே.. பெண்ணை.. உணர மறுப்பதேன்..?

ரூபிணியின் கை விரல்கள் அவளது துப்பட்டா நுனியைத் திருகிக் கொண்டு இருக்க ஜமுனா தொடர்ந்து பேசினாள்.

"எனக்கு கல்யாண ஏற்பாடு நடக்கிறது ரூபிணி.."

"ஈஸிட்.. என்னிடம் சொல்லவே இல்லையே.." உண்மையாய் முகம் மலர்ந்தாள் ரூபிணி..

"இன்றைக்குத்தான் முடிவானது... இரண்டு மூன்று மாதங்களாகவே அவர் குடும்பத்திற்கும்.. என் குடும்பத்திற்கும் கல்யாணப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது.. அவர்கள் வீட்டில் அதிகம் எதிர்பார்த் தார்கள்.. எனக்கு அவர்கள் அப்படிக் கேட்டதில் விருப்பமில்லை.. அதனால் இந்தக் கல்யாணத்தில் எனக்கு

இன்ட்ரெஸ்ட்டும் இல்லை.. உன்னிடம் நடக்காத கல்யாணத்தைப் பற்றி ஏன் பேசுவானேன் என்று சும்மா இருந்துவிட்டேன்.. பட்.. இன்றைக்கு என்னைப் பார்க்க என் காலேஜிற்கு அவர் வந்திருந்தார்..." ஜமுனா முகம் சிவந்தாள்.

"இதைப் பாருடா.. இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று சாதுப் பூனை வேசம் போட்டுவிட்டு இன்றைக்கு நீயே சைட் அடித்து விட்டு வந்திருக்கிறாயா..? ஊருக்குத்தான் உபதேசமா..?" ரூபிணி கேலியாய் வினவினாள்..

"ரூபிணி.. இப்போது சொல்கிறேன்.. ஹரிஹரனுக்கு மட்டும் 'தாதா' என்கிற இமேஜூம்.. மிகப் பெரிய பின்புலமும் இல்லாமலிருந்து.. அவர் உன்னைப் போல் ஒரு கவர்ன்மென்ட் எம்ப்ளாயி ஆக இருந்திருந்தால் உங்கள் காதலை நான் ஆதரித்து இருப்பேன்.. முன்னால்நின்று உங்கள் கல்யாணத்தை நடத்தியும் வைத்திருப்பேன்.. ஆனால் அவர் எட்டாத உயரத்தில் இருக்கிறாரே..."

"விடு ஜமுனா.. எனக்கு உன்னைத் தெரியாதா? நான் விளையாட்டாய் சொன்னேன்.. உன் 'அவர்' எங்கே வேலை பார்க்கிறார்.."

"பார்த்தாயா.. அதைச் சொல்ல மறந்து விட்டேன்.. அவர் உன் ஹீரோவின் காலேஜில் தான் லெக்சரர் ஆக வேலை பார்க்கிறார்..."

"யாரைச் சொல்கிறாய்...?"

"ஹரிஹரனின் இன்ஜினியரிங் காலேஜ் ஒன்றும் இங்கு இருக்கிறது. இதை உன்னிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.. அவர் என்னைப் போலவே எம்.ஈ. படித்து விட்டு அங்கே என்னைப் போலவே லெக்சரராக இருக்கிறார்..."

"உன்னவர்... உன்னைப் போலவே தானே இருப்பார்..?"

"கிண்டலா..? அவர் என்னைப் போல சிந்திக்க வில்லை ரூபிணி.. என்னைப் பார்க்க இன்று அவர் வந்திருந்தபோது அவருடைய பேரண்ட்ஸ் கேட்பதைச் செய்தால் என்ன என்றுதான் என்னிடம் வாதாடினார்..."

ஜமுனா எரிச்சலுடன் கூறினாலும்.. அதையும் தாண்டி அவள் முகத்திலிருநத் உல்லாசத்தையும்.. மகிழ்வையும் கண்ட ரூபிணி தோழியைப் பற்றி என்ன முடிவுக்கு வருவது என்று தெரியாமல் குழம்பினாள்..

## 17

ஜமுனாவின் வருங்காலக் கணவன் உயர்திரு. நந்தகோபாலன் ஜமுனாவைத் தேடி வந்து நின்றபோது முதலில் ஜமுனா அவன் தன் பெற்றவர்களின் செயலுக்கு மன்னிப்புக் கேட்டு வரதட்சணைக் கொடுமையை எதிர்த்து வீர வசனம் பேசப் போகிறான் என்று எண்ணி புளகாங்கிதமடைந்தாள். ஆனால் அவனோ எடுத்த எடுப்பில்,

"உன் வீட்டாருக்கு தப்புத்தப்பாய் ஆலோசனை சொல்லிக் கல்யாணத்தை நிறுத்தி வைத்துக் கொண்டிருப்பது நீதானாமே..? இது என்ன பைத்தியக்காரத் தனம் ஜமுனா..." என்றுதான் கேட்டு வைத்தான்..

"பைத்தியக்காரத்தனமா..? ஏன் சொல்ல மாட்டீர்கள்? நீங்கள் பேசவில்லை.. உங்கள் உடம்பில் ஓடும் ஆண் பிள்ளை ரத்தம் அப்படியெல்லாம் பேசச் சொல்கிறது.. ஆணாகப் பிறந்து விட்டத் திமிர்.. பெண்களைக் கண்டால் இளப்பமாகத் தெரிகிறது..."

"ஸ்ஸ்.. ஆ.. இப்பவே கண்ணைக் கட்டுதே.. இன்னும் உனக்குத் தாலிக் கட்டி குடும்பம் நடத்த ஆரம்பித்தால் வாழ்நாள் முழுவதும் இப்படி ஆணாதிக்கம்.. பெண்ணடிமைன்னு லெக்சர் அடித்தே என்னை ஒரு வழி பண்ணிவிடுவாய் போல இருக்கே.."

கண்ணை மூடி அவன் சொன்ன விதத்தில் ஜமுனா விற்கு சிரிப்பு வந்துவிட்டது. சிரிப்பை அடக்கிக் கொண்டு பொய்யாய் அவனை முறைத்தாள்.. அவனோ அவளை ரசனையாய் நோக்கி கண்சிமிட்டினான். ஜமுனா தான் வீழ்த்தப்படுவதை உணர்ந்தாள்.. தன் உணர்வுகளை

எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"இதோ பாருங்கள் மிஸ்டர் நந்தகோபால்..?"

"இதோ பாருங்கள் என்று வெறும் கையைத் தானே ஆட்டுகிறாய்.. எதைப் பார்க்கச் சொல்கிறாய்..?" அவன் தேடும் பாவனையில் அங்கும் இங்கும் பார்வையை அலைய விட ஜமுனாவிற்கு அவன் முதுகில் நாலு போட்டால் என்ன என்று தோன்றியது.

'இவன் கெட்டிக்காரன்.. நான் அவனால் ஈர்க்கப் படுகிறேன் என்பதை உணர்ந்தே விளையாட்டுக் காண்பிக்கிறான்..'

ஜமுனாவின் முகம் சிவந்தது. 'பெண்கள் ஆண்களை தம் விருப்பத்திற்கு வளைத்தது அந்தக் காலம். இன்றைய ஆண்கள் மகா கெட்டிக்காரர்கள்.. சாகஸக் கலை பயின்றவர்கள்.. பெண்களை தங்களது விருப்பத்திற்கேற்ப வளைத்து விடும் வல்லமை கொண்டவர்கள்..'

"காலம் காலமாய் பெண்களை அவமானப்படுத்தும்.. துன்பப்படுத்தும் வழக்கம் வரதட்சணைக் கொடுமை.. மாட்டை வாங்கினால் கூட பணம் வாங்குகிறவர்தான் கொடுக்க வேண்டும்.. பெண்ணை மட்டும் பணம் வாங்கிக் கொண்டுதான் அழைத்துப் போவீர்களோ..."

அவன் முகம் தீவிரமானது.. அவளை ஏற இறங்க ஓர் முறை பார்த்தான். "உன் வசனத்தில் இன்னும் ஓர் வாக்கியத்தை சேர்த்துக் கொள்.. மனதுக்குப் பிடித்த பெண்ணை பணம் வாங்கிக் கொண்டுத்தான் அழைத்துப் போவீர்களா என்று கேட்க வேண்டும்.. வெறுமனே பெண் என்கிறாயே.."

ஜமுனா தடுமாறினாள்.. அவன் கண்களில் சிரிப்பு இருந்தது..

"நான் எவ்வளவு சீரியஸாக பேசிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா..?"

"அதை நீ ஏன் பேச வேண்டும்..?"

"நான் பேசாமல் வேறு யார் பேச வேண்டும்..?"

"மற்றவர்களைப் பற்றி எனக்கென்ன கவலை..? உன்னைப் பற்றித்தான் நான் கவலைப்பட முடியும்.."

"என்னைப் பற்றிக் கவலைப்படுகிறவர்.. என் கருத்துக்களையும் கொள்கைகளையும் மதித்திருக்க வேண்டும்.."

"உன் கருத்துக்களும்.. கொள்கைகளும் சரியானவை தான்.. நான் இல்லையென்று சொல்லவில்லையே.. ஆனால் அது நமக்கு எதற்கு..?"

"ஊருக்குத்தான் உபதேசமா.." ஜமுனா கேட்டாள்.

ஜமுனா சிமிண்ட் பெஞ்சில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.. அவள் கூறியதைக் கேட்ட ரூபிணி சிரித்தாள்..

"ஸோ.. நான் உன்னைக் கேட்ட கேள்வியை நீ மிஸ்டர் நந்தகோபாலிடம் ஏற்கனவே கேட்டுவிட்டாய்..?"

"ஆமாம்.."

"அப்புறம் என்ன ஆச்சு..?"

ஜமுனாவின் கேள்வியைக் கேட்ட நந்தகோபால் உரக்கச் சிரித்தான்.. அவளோ.. தான் என்ன நகைச் சுவையைச் சொன்னோம் என்று இவன் இப்படிச் சிரிக்கிறான் என்று ரோசப்பட்டவளாய்..

"நான் இப்போது என்ன ஜோக் அடித்தேனென்று இப்படிச் சிரிக்கிறீர்கள்.." என்று கோபமாய் கேட்டாள்.

"மண்டூ.. மண்டூ.. உன் பேரண்ட்ஸிற்கு எத்தனை பிள்ளைகள்..?"

"ஏன்..? நான் ஒருத்தி மட்டும்தான்.."

"உன் அப்பா என்ன ஏழையா..?"

"ஊருக்கே பெரிய பண்ணையார்..."

"அவர் சொத்து முழுவதும் யாருக்கு..?"

"இது என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி..?"

"உன்னிடம் உன்னை மாதிரியே தானே கேட்க வேண்டும்.."

ஜமுனா முறைத்தாள்.. சந்தடி சாக்கில் இவன் அவளை மட்டம் தட்டப் பார்க்கிறானே..

"அப்போ.. நான் பைத்தியக்காரியா..?"

"பின்னே இல்லையா..? ஊருக்கு பெரிய பண்ணையார் வீட்டுப் பெண்.. அவர் சொத்துக்கு ஒரே வாரிசு.. சீர்வரிசை செய்ய விட மாட்டேன்னு கொள்கை பேசினால் எனக்கு சிரிப்பு வருமா வராதா..?"

"என் அப்பா பணக்காரர் என்பதால்தான் எனக்கு மதிப்பு என்றால் எனக்கு அந்த மதிப்பு வேண்டாம்.. நான் நானாக இருக்க ஆசைப்படுகிறேன்.."

"நீ நீயாக இருப்பதால்தான் நான் உன்னைத் தேடி வந்து பேசிக் கொண்டிருக்கிறேன் புரிந்து கொள்.. உன் அப்பா சும்மா ஒன்றும் சும்மா எனக்குப் பெண் கொடுக்க முன் வரவில்லை.. உன் அப்பா கிராமத்திலேயே பெரிய பணக்கார விவசாயி என்றால் என் அப்பா அந்த கிராமத்திற்கு பக்கத்து டவுனில் மிகப் பெரிய வியாபாரி. உன் சொத்துக்கள் கிராமத்தில் வயலாக இருந்தால்.. என் சொத்துக்கள் டவுனில் வீடுகளாகவும்.. கடைகளாகவும் இருக்கின்றன.. என் அப்பாவிற்கு நானும்.. என் அண்ணனும் மட்டும்தான்.. உன் அப்பா சல்லடை போட்டுச் சலித்துத் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை நான்.. இதை முதலில் தெரிந்து கொள்.. விட்டால் இன்றைக்கு முழுவதும் லெக்சர் அடித்துக் கொண்டிருப்பாய்.. அதைக் கேட்க எனக்கு பொறுமையில்லை. இரண்டு பரம்பரைப் பணக்காரர்கள் அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் அது பிரம்மாண்டமான கல்யாணமாகத்தான் இருக்கும்.. என் அப்பா அம்மா நுறு பவுன் நகை வேண்டுமென்று கேட்டார்கள் என்கிறாயே.. உன் அப்பா உனக்காக இருநூறு பவுன் நகை செய்து வைத்திருப்பதாக மாப்பிள்ளை வீடு பார்க்க வந்த அன்றே சொல்லிவிட்டார் இது உனக்குத் தெரியுமா..? அதோடு வீட்டுக்கு வரும் மருமகள்களுக்கு என்று குடும்ப வைர நகைகளில் என் வருங்கால மனைவிக்காக பிரித்து வைத்திருக்கும் நகைகளின் மதிப்பு நீ போட்டுக் கொண்டு வரும் நகைகளின் மதிப்பை விட பலமடங்கு அதிகம்.. இதுவும் உனக்குத் தெரியுமா..?"

ஜமுனாவின் வாய் அடைத்துக் கொண்டது.

"ஊர் பார்க்க நடத்தும் திருமணத்தின் பாரம்பாயமாய் செய்து வரும் சீர்வரிசைச் சடங்குகளை செய்யச் சொல்லி என் வீட்டார் சொல்லியிருப்பார்கள்.. உன் வீட்டில் உனக்காக வாங்கி வைத்திருப்பதை சபையில் வைத்துக் கொடுப்பதை தடுப்பதுதான் உன் கொள்கையா...?"

இப்போது ஜமுனா அருகிலிருந்த செடியின் இலைகளைக் கிள்ள ஆரம்பித்து விட்டாள்.. அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.

"தெரியாமல்தான் கேட்கிறேன்.. நீ கொண்டு வரும் சீர் வரிசைகளையும்.. நகைகளையும் அனுபவிக்கப் போவது யார்..? நீயா.. இல்லை என் வீட்டாரா..? உன்னிடம் வாங்கிப் பிழைக்க வேண்டிய அவசியம் என் வீட்டில் இல்லை.." அவன் குரலில் இப்போது கோபம் வந்திருந்தது.

"ஐ ஆம் ஸாரி..." ஜமுனாவின் விழியில் கண்ணீர் தழும்பியது..

நந்தகோபாலன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு தன் கைக்குட்டையை எடுத்து அவள் விழி நீரைத் துடைத்தான்.. அந்த செய்கையில் மனம் நெகிழ்ந்து விட்ட ஜமுனா... அவன் கரம் பற்றி மெதுவாய் இதழ்களைப் பதித்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த ரூபிணியின் உடலில் உணர்வுகள் அலையடித்து எழுந்தன. மற்றவர்களால் மட்டும் எப்படி நினைத்ததைச் செய்ய முடிகிறது? அவளுக்கு மட்டும் ஏன் நினைவுக்குக் கூடத் தடை விதிக்கப்படுகிறது...? அவள் மனம் ஹரிஹரனை நாடியது.

## 18

"ரூபிணி.. ரெடியா.. போகலாமா.." வாசவி அறை வாசலில் இருந்து குரல் கொடுத்தாள்..

"ம்ம்.. ரெடி.. போகலாம்..." கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள் ரூபிணி.

'ஆலிவ் கிரீன்' என்று அழைக்கப்படும் பாட்டில் பச்சை வண்ணக் கலரில் பட்டுப்புடவை கட்டியிருந்தாள். அதே

வண்ணத்தில் கைகளுக்கு ஜரிகை பார்டர் கொண்ட பிளவுஸ்... காதுகளில் முத்து ஜிமிக்கி அணிந்து.. கழுத்தில் முத்துக்களில் பதக்கம் கோர்க்கப்பட்ட மாலை அணிந்திருந்தாள்.. நீண்ட பின்னலை தளர்வாய் பின்னி.. அதில் நெருக்கிக் கட்டப்பட்ட மல்லிகைப் பூவை சூடியிருந்தாள்.. மல்லிகையின் மணம் அவள் நாசியை வருடியது.

"கோமளா.. ரூபிணி ரெடியாகிவிட்டாள்... நீதான் லேட்..." என்று குரல் கொடுத்தவாறு உள்ளே வந்த வாசவி.. ஆரஞ்சு வண்ண பிரிண்டட் சில்க்கில் இருந்தாள்.

"வாவ்..." என்று குரல் கொடுத்தபடி ரூபிணியை ஏற இறங்கப் பார்த்தாள்.

"எவ்வளவு அழகாய் இருக்கிறாய் ரூபிணி.. என் கண்ணே பட்டு விடும் போல இருக்கு.. அப்புறம் ஏன் ஹரிஹரன் உன்னிடம் மயங்க மாட்டார்...?" அவள் இயல்பாய் கூற ரூபிணிக்கு தூக்கிவாரிப் போட்டது.

"என்ன வாசவி.. இப்படிச் சொல்லிவிட்டாய்..."

"எல்லாம் எனக்கும் தெரியும் ரூபிணி.. ஹரிஹரன் உன்னைக் காரில் அழைத்து வந்து ஹாஸ்டல் வாசலில் இறக்கி விட்டுவிட்டுப் போயிருக்கிறார்.. உன் வண்டியை ரிப்பேர் பண்ணிக் கொடுத்திருக்கிறார்..."

"இதெல்லாம் ஜஸ்ட் எ ஹெல்ப் தானே வாசவி..."

"ரூபிணி.. உன் குழந்தைத் தனத்தைப் பார்த்தால் ரசிக்கத்தான் தோன்றுகிறது.. நீ இவ்வளவு இன்னொ ஸன்டா..? ஹரிஹரனைப் பார்ப்பதென்றால் அப்பாயின்ட் மென்ட் வாங்கித்தான் பார்க்க முடியும்.. தமிழ்நாட்டின் முக்கிய வி.ஐ.பிக்களில் அவரும் ஒருவர்... அவரிடம் சரிக்குச் சரியாய் நின்று பேச பெரிய அந்தஸ்துள்ள மனிதர்களே பயப்படுவார்கள்.. அவர் யாரையும் மதித்து ஓர் வார்த்தை அதிகம் பேசமாட்டார்.. அப்படிப்பட்ட சூப்பர் மேன்.. உனக்கு டிரைவர் வேலை பார்க்கிறார்.. உன் வண்டியை ரிப்பேர் பண்ணி அனுப்புகிறார்.. என்றால்... எதுவும் விசயம் இல்லாமல் இருக்குமா..?"

"வாசவி.. ப்ளீஸ்.. நான் ஏற்கெனவே கலங்கிப் போயிருக்கிறேன்.. நீ வேறு பயமுறுத்தாதே.."

"எதற்குக் கலக்கம்.. சிங்கத்தை உன் கண்ணசைவில் கட்டிப் போட்டிருக்கிறாய்.. இதில் கலக்கம் எங்கேயிருந்து வந்தது..?"

"என்னைச் சொல்லிவிட்டு நீங்கள் இரண்டு பேரும் அரட்டை அடித்துக் கொண்டு நிற்கிறீர்களே.. இப்படியே.. நாம் லேட்டாகப் போனால்.. ஜமுனாவின் மேரேஜ் ரிஸப்சனுக்குப் போக மாட்டோம்.. அவளுடைய வளைகாப்பிற்குத்தான் போவோம்..." குரல் கொடுத்துக் கொண்டே கோமளா வந்தாள்..

பேச்சை நிறுத்திவிட்டு வாசவியும் ரூபிணியும் அறையை விட்டு வெளியே வந்தனர்.. ரூபிணி அறைக் கதவை மூடி சாவியை ஹேண்ட் பேகிற்குள் போட்டுக் கொண்டு ஜமுனாவிற்கு கொடுக்க வாங்கிய வண்ணக் காகிதத்தால் சுற்றி அலங்கரிக்கப்பட்ட பரிசுப் பொருளை எடுத்துக் கொண்டாள்..

"என்ன வாங்கியிருக்க ரூபிணி..?" கோமளா வினவினாள்.

"வெள்ளிக் குத்துவிளக்கு..." ரூபிணி படியிறங்கிக் கொண்டே கூறினாள்..

"ரூம்மேட் இல்லையா.. உன் பெஸ்ட் பிரண்ட் வேறு.. ஆனால் நீ எப்படி அவளது கல்யாணத்திற்குப் போகாமல் விட்டாய்..."

"அவர்களுடைய ஊர் தர்மபுரிக்குப் பக்கம்.. அங்கே தனியாய் போக என் பேரண்ட்ஸ் பெர்மிஷன் தரவில்லை.."

"எல்லோருக்கும் அதுதானே பிரச்சனை..? சரி.. சரி... ரிசப்ஸனிலாவது காலாகாலத்தில் போய் கலந்து கொள்வோம்.." கோமளா பரபரப்பாய் மணி பார்த்தாள்..

"காலாகாலத்தில் எங்கே போய் சேரப் போகிறோம்.. இந்த மறதி மணிமேகலைதான் ஹாஸ்டலில் எல்லோரும் சேர்ந்து போக வேண்டும்ன்னு நம் காலைக் கட்டிப் போட்டு விட்டதே.. மூன்று வேன்களை வாடகைக்குப் பேசி வர வைத்திருக்கிறதாம்.. அங்கே பார் வரிசையாய் எல்லோரையும் வேனில் ஏறி உட்கார வைப்பதை.. வர வர

இதற்கு தான் வொர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டலின் வார்டன் என்பதே மறந்து விடுகிறது.. என்னவோ ஸ்கூல் ஹாஸ்டல் வார்டன் என்கிற நினைப்பில் இருக்கிறது.." கோமளா பல்லைக் கடித்தாள்..

"விடுடி.. நம்மை விட்டால் யார் அதற்கு கம்பெனி கொடுப்பார்கள்..? அதனால் நம்மோடு ஒட்டுப்புல் போல் ஒட்டிக் கொள்ள வார்டன் என்கிற பந்தாவைக் காட்டிக் கொண்டு தொற்றிக் கொள்கிறது.." வாசவி சமாதானப் படுத்தினாள்..

அதற்குள் அவர்களைத் திரும்பிப் பார்த்த மணிமேகலை ரூபிணியைப் பார்த்து புருவம் உயர்த்தினாள்.

"ஏம்மா.. ஜமுனா.. நீயே லேட்டாக வந்தால் உன் ரூம் மேட் ரூபிணி கோபித்துக் கொள்ள மாட்டாளா..?" என்றுவேறு வினவி வைத்தாள்..

"பார்த்தாயா.. நம் மறதி மணிமேகலை எவ்வளவு சரியாய் பெயர்களை தப்பாய் இடம் மாற்றிச் சொல்கிறது.. இது கூடப் பேசிப்பேசி.. எதை எங்கோ வைத்தோமென்று எனக்கு மறந்து போகுதுடி.." கோமளா மனம் குமுறினாள்..

"எல்லோருக்கும் இந்தக் கதைதான்.. மறதி நோய் ஒரு தொற்று வியாதியான்னு டாக்டரை கன்சல்ட் பண்ணினால் தேவலைடி.." வாசவி கவலைப்பட்டபடி வாசல் படியில் உட்காரப் போனாள்.

"என்ன வாசவி இங்கே உட்காருகிறாய்..? ஜமுனாவின் மேரேஜ் ரிசப்ஷனுக்கு போக வேண்டாமா..?" ரூபிணி அவளது கையைப் பிடித்து எழுப்பினாள்..

"அடக்கடவுளே.. நான் இங்கேயா உட்கார்ந்து விட்டேன்.. வேனில் ஏறி உட்கார்ந்தது போலவே இருந்ததே.." வாசவி பயந்தே போனாள்..

"ஆபிஸ் டென்சன்.. சீக்கிரம் ஜமுனாவின் மேரேஜ் ரிசப்ஷனுக்கு போகணுமேங்கிற டென்சன்.. நம்மை தனியாக போகவிடாமல் வார்டன் மேடம் நம் காலைக் கட்டிப் போட்டு விட்டுட்டாங்களேங்கிற டென்சன்.. இதனால்தான் இப்படி ஆகிவிட்டது.. நீயாய் எதையாவது நினைத்து

மனதைப் போட்டு உழப்பிக் கொள்ளாதே.. வா போகலாம்..."
ரூபிணி சமாதானப்படுத்தி அழைத்துப் போனாள்..

ஒரு வழியாய் மூன்று வேனும் வரிசையாய் ஹாஸ்டலை விட்டு வெளியேறின.. ஜமுனாவின் திருமண வரவேற்பு விழுப்புரத்தின் மிகப் பெரிய கல்யாண மண்டபத்தில் நடந்து கொண்டிருந்தது.

"ரிசப்சன் செலவை மாப்பிள்ளையின் காலேஜ் ஓனர் ஏற்றுக் கொண்டிருக்கிறாராம்... பாரேன் பணத்தை தண்ணீராய் வாரி இறைத்திருப்பதை.." ஷர்மிளா என்ற பெண் அவள் அருகில் அமர்ந்திருந்த இன்னொரு பெண்ணிடம் கூறினாள்..

ரூபிணி மனம் படபடக்க ஜன்னல் புறம் நோக்கினாள்.. அவளது மனதிலிருந்த பெயரை வாசவி கூறினாள்..

"பின்னே ஹரிஹரன் சாருக்கு பணம் தண்ணீர் பட்டபாடுதானே.." வாசவி ஜாடையாய் ரூபிணியைப் பார்த்தாள்.. ரூபிணிக்கு வியர்த்தது...

நல்லவேளையாக திருமண மண்டபம் வந்துவிடவே அவர்களது பேச்சு நின்றது.. தற்காலிகமாய் தப்பித்து விட்ட நிம்மதியுடன் ரூபிணி வேனிலிருந்த கீழே இறங்கினாள்..

வரிசையாய் கார்கள் நின்று கொண்டிருக்க திருமண மண்டபத்தின் வாசல் சீரியல் விளக்குகளால் களை கட்டியிருந்தது.. பெண்கள் எல்லோரும் பூங்கொத்தி லிருந்து பிரிந்து விழுந்த மலர் கூட்டம் போல் உள்ளே நுழைய அங்கிருந்த அனைவரின் கவனமும் இவர்கள் பக்கம் திரும்பியது. ஒவ்வாருவராய் மேடையில் ஏறி மணமக்களுக்கு வாழ்த்துக் கூறி பரிசுப் பொருளைக் கொடுத்தார்கள். ரூபிணியின் முறை வர அவள் ஜமுனாவின் அருகே சென்று பரிசை நீட்டினாள். ஜமுனா அவளது கை பிடித்து அணைத்து நந்தகோபாலுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.. அப்போது தான் ரூபிணி எதிர்பாராத ஒன்று நடந்தது..

ரூபிணியை அணைத்துக் கொண்ட ஜமுனா நந்தகோபால் பக்கம் திரும்பி,

"இவள் ரூபிணி.. என் ஹாஸ்டல் ரூம் மேட் அன்ட் மை டியரெஸ்ட் பிரண்டு..." என்று அறிமுகப்படுத்தி வைத்தாள்..

"ஹலோ..." என்றான் நந்தகோபால்.

என்ன பேசுவது என்று தெரியாமல் ரூபிணி லேசாக புன்னகைத்தாள்.

"வீடியோவுக்கு நில்லுடி.." ஜமுனா தன்னருகில் ரூபிணியை நிற்க வைத்துக் கொண்டாள்..

மிகச் சரியாக அந்த நேரத்தில் ஹரிஹரன் மேடையேறி நந்தகோபாலின் அருகே நின்று கொண்டு இயல்பாக வீடியோவுக்கு போஸ் கொடுத்தான்.

ஜமுனாவும்.. நந்தகோபாலும் நடுவில் நிற்க.. அவர்கள் இருவர் பக்கமும் ரூபிணியும் ஹரிஹரனும் நிற்பது போல் வீடியோவில் எடுக்கப்பட்டு விட்டது.

ஜமுனாவின் விழிகள் ரூபிணியிடம்,

'பார்த்தாயா..?' என்று வினவின.. ரூபிணி என்ன செய்வாள்..? தன் வழக்கப்படி இதழ்களை மடித்துக் கடித்தாள்.. அதைப் பார்த்தவாறு ஹரிஹரன் மேடையை விட்டு இறங்கிச் சென்றுவிட்டான்.

'அவன் எங்கே..?' என்று ரூபிணியின் விழிகள் துழாவின.. ஆனால் அவளின் பார்வை வட்டத்திற்குள் அவன் சிக்கவேயில்லை.. ரூபிணிக்கு மனம் வலித்தது.

மின்னல் போல் வந்தான்.. அவள் மணமக்களின் ஒரு புறம் நிற்க.. இவன் மறுபுறம் நின்று வீடியோ எடுத்துக் கொண்டு மறைந்துவிட்டானே..

மூன்று மாதங்களாய் அவனைப் பார்க்காத நெஞ்சம் பதறியது.. அவனைப் பார்க்கத் துடித்தது.. கட்டுக் காவலை உடைத்துக் கொண்டு அவனிடம் ஓடி விட மனம் தவித்தது.

"வா ரூபிணி.. சாப்பிட்டு விட்டு வந்துவிடலாம்..." வாசவி அழைத்தாள்.

ரூபிணி மௌனமாய் அவர்களுடன் டைனிங் ஹாலை நோக்கி நடந்தாள்.. மெல்லிசைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது.

"பாடும் திறமையுள்ளவர்கள் இந்தக் கூட்டத்தில் இருந்தால் மேடையில் ஏறிப் பாட வரலாம்..." பாடகர் மைக்கில் அறிவித்தார்..

ரூபிணியின் ஹாஸ்டல் தோழிகள் 'ஹோ...' வென்று ஆர்ப்பரித்தனர்.. சிலர் மேடையில் ஏறிப் பாடினார்கள்.. அவர்களில் ஒருத்தி,

"அடுத்து எங்கள் தோழி ரூபிணி பாடுவாள்.." என்று மைக்கில் அறிவித்தாள்.

ரூபிணி அதிர்ச்சியுடன் விழித்தாள்.. கோமளாவிடம் படபடத்தாள்..

"நானாவது மேடையில் ஏறிப் பாடுவதாவது.. இவள் ஏன் என் பெயரைச் சொல்கிறாள்..."

"இங்கே பார்.. என்றாவது ஒருநாள் இதுபோல் என்ஜாய் பண்ணும் பங்ஷன் வருகிறது.. இதில் போய் அன் ஈஸியாய் பீல் பண்ணிக் கொண்டு ஒதுங்கி நின்றால் எப்படி ரூபிணி..? நீ நன்றாகப் பாடுவாய் என்பதுதான் அவளுக்குத் தெரியுமே.. அதனால் சொல்லிவிட்டாள்.. போய் பாடு..." கோமளா அவளை மேடை நோக்கித் தள்ளிவிட்டாள்.

திருமண மண்டபத்தின் மாடியில் கைப்பிடியில் சாய்ந்து கொண்டு ரூபிணி சங்கடத்துடன் மேடையேறு வதைப் பார்த்துக் கொண்டு இருந்தான் ஹரிஹரன்.. நீண்ட பின்னல் ஆட பச்சைப் பட்டுப் புடவையில் அவள் அழகுற மைக்கின் முன்னே வந்து நின்ற விதம் அவனைக் கிறங்கச் செய்தது. பெண்மையின் வடிவாய் எழிலுற நின்றவளை ஏக்கத்துடன் பார்த்தான்.

இதுவரை ஹரிஹரன் விரும்பிய எதுவும் அவனுக்குக் கிட்டாமல் போனதில்லை.. முதல் முறையாய் மாதக் கணக்கில் அவன் ஏங்கி உருகுவது அவளை நினைத்துத் தான்..

கிட்டே நெருங்கினாலே பயப்படுகிறாள்.. போனில் பேசப் பதட்டப்படுகிறாள்.. அவளிடம் எப்படித் தன்னை புரிய வைப்பது..? எப்படி அவள் நெஞ்சத்தில் இடம் பிடிப்பது என்று அறியாமல் அவன் திகைத்து நின்றான்.

அவளது நெஞ்சில் அவன் இருக்கிறான் என்பதை அவன் யூகிக்கும் வண்ணம் அவள் வாய் திறந்து பாட ஆரம்பித்தாள்..

"நீயில்லாத உலகத்திலே நிம்மதி இல்லை - உன்

நினைவில்லாத இதயத்திலே சிந்தனை இல்லை..

காயும் நிலா வானில் வந்தால் கண் உறங்கவில்லை - உன்னைக்

கண்டு கொண்ட நாள் முதலாய் பெண் உறங்கவில்லை.."

ரூபிணியின் நெஞ்சத்தின் தாபம் பொங்கி எழுந்தது. சொல்ல வார்த்தைகள் இல்லாமல் சொல்லி அழுக ஓர் ஜீவனும் இல்லாமல் அவள் துடிக்கும் துடிப்பு பாடலாய் வெளிவந்து கொண்டிருந்தது.

"உன் முகத்தைக் காண்பதற்கே கண்கள் வந்தது..

உன் மார்பில் சாய்வதற்கே உடலும் வந்தது..

கன்னி மனம் உனக்கெனவே காத்திருக்குது..

காவல் தாண்டி ஆவல் உன்னைத் தேடி ஓடுது.."

அவள் விழிகள் அவனைத் தேடின.. எல்லா வற்றையும் தாண்டி அவனிடம் ஓடி விட அவளது நெஞ்சம் தவித்தது.. 'இனி நீ அழைக்காமல் உன்னைத் தேடி வர மாட்டேன்...' என்று சொன்னவன்... அவள் கண் பார்வையிலிருந்தும் கருத்திலிருந்தும் மறைந்து போனான்.. பிரிந்து போனான்.. எதிர்பாராமல் அவன் இங்கு வந்து நின்றும்.. அவன் காலடியில் விழுந்து இதயத்தைத் திறந்து அவனைக் காதலிக்கும் உண்மையை ஒப்புக் கொள்ளாமல் ஊமையாய் அவள் நிற்கிறாளே.. அவளே வேலியடைத்து உருவாக்கிக் கொண்ட சிறையில் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறாளே.. இதிலிருந்து அவளுக்கு விடுதலையே கிடைக்காதா..? அவன் முகத்தை இனிப்

பார்க்கவே முடியாமல் போகிவிடுமோ.. அவள் மனம் பரிதவித்தது.

"பொன்விலங்கை வேண்டுமென்றே பூட்டிக் கொண்டேனே..

உன்னைப் புரிந்தும் கூடச் சிறையில் வந்து மாட்டிக் கொண்டேனே..

இன்று.. நாளை.. என்று நாளை எண்ணுகின்றேனே..."

அவள் பாடப்பாட ஹரிஹரனின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவளது விழி சொல்லும் கதை அவனுக்குப் புரிந்தது.. அவளது நெஞ்சம் படும்பாடு அவன் மனத்தைத் தொட்டது.

'ஏன் இப்படித் தவிக்க வேண்டும்.. ஓர் வார்த்தை.. அது கூட வேண்டாம்.. ஓர் பார்வை பார்த்தாலே போதுமே.. அவளை சிறை மீட்டு விடுவேனே.. அவள்தான் தானாய் பூட்டிக் கொண்ட விலங்கு என்பதை ஒத்துக் கொள்கிறாளே.. அவளாக அதை உடைக்காமல் அவனால் எப்படி அவளை சிறை மீட்க முடியும்..?'

ஒரு பெருமூச்சுடன் அவன் திருமண மண்டபத்தின் மாடியிலிருந்து பின் பக்கமாய் இறங்கிய மாடிப்படிகளில் மெதுவே இறங்க ஆரம்பித்தான்.. முன்பக்கமாய் போய் ரூபிணியை பார்க்க அவன் விரும்பவில்லை.. எங்கே தன் சுய கட்டுப்பாட்டை உடைத்துக் கொண்டு அவளைத் தூக்கி காரில் போட்டு கொண்டு பறந்து விடுவோமோ என்ற பயத்தில் அவன் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தான்.. பின்பக்கம் இறங்கிய மாடிப் படிகள் தோட்டத்தில் போய் முடிவடைந்தது. கடைசிப் படியில் கால் வைத்தவன் அப்படியே நின்றுவிட்டான்..

எவளைப் பார்க்க அஞ்சி.. எவருக்கும் அஞ்சாத அஞ்சா நெஞ்சன் ஹரிஹரன் திருடன் போல் பின்பக்கமாய் நழுவ எண்ணிப் படி இறங்கினானோ.. அவள்.. ரூபிணி.. அவளது தோழிகளுடன் அங்கே நின்று பேசிக் கொண்டிருந்தாள்..

இருளில் ஹரிஹரனின் உருவம் அவர்களுக்குத் தெரியாமல் போக அவர்கள் தங்கள் போக்கில் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி,

"ரூபிணி.. யாரை நினைத்துடி இப்படி உருகி உருகிப் பாடினாய்..?" என்று கேட்டுச் சிரித்தாள்..

"இவள் யாரையும் நினைத்து உருகினாளோ.. இல்லையோ.. எனக்குத் தெரியாது.. ஆனால் மண்டபத்தில் நிறைய ஆண்கள் இவளை நினைத்து உருகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் நிச்சயமாய் எனக்குத் தெரியும்.. அதுவும் என் பக்கத்தில் அட்டகாசமாய் ஜீன்ஸும் காட்டன் சர்ட்டும்.. கூலிங்கிளாஸுமாய்.. ஹீரோ போல் நின்று கொண்டிருந்த ஒருவன் ரூபிணியை வைத்த கண் வாங்காமல் விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தான்.. ஊடே.. 'ஸ்வீட் வாய்ஸ்'ன்னு கமென்ட் வேற அடித்தான்.. ஜமுனாவின் ஹஸ்பெண்ட் கூட வேலை பார்க்கிறவனாம்.. இன்ஜினீயர்.. இப்போது கூட உள்ளே கூட்டத்தில் ரூபிணியைத்தான் அவன் தேடிக் கொண்டிருப்பான்.." இன்னொருத்தி சொல்லச் சொல்ல ஹரிஹரனின் நெஞ்சம் கோபாவேசம் கொண்டது..

# 20

ஹரிஹரன் புலனடக்கம் இழந்தான்.. வாய் திறந்து.. தன் அந்தஸ்தை.. தன் பொருளாதார உயர்நிலை தரத்தை மறந்து வார்த்தைகளைச் சிதறவிடப் போனான்.. அந்த நொடியில் ரூபிணியின் கோபக் குரல் எழுந்தது..

"ஷட் அப் காயத்ரி... திஸ் இஸ் டூ மச்.. யாருக்கும் யாருக்கும் முடிச்சுப் போகிறாய்..? உன் கண்ணுக்கு வேண்டுமானால் அவன் ஹீரோவாகத் தெரியலாம்.. எனக்குத் தெரியவில்லை.."

கொதித்து எழுந்த பால் குளிர் நீர் பட்டதும் அடங்கி விட்டது.. ஹரிஹரனின் நெஞ்சம் ரூபிணியின் வார்த்தைகளால் குளிர்ந்து விட்டது. அப்போது இன்னொரு பெண் சிரித்தாள்.

"அது தானே.. உன் கண்ணுக்கு ஹரிஹரனைத் தவிர வேறு யாருமே ஹீரோவாகத் தெரிய மாட்டார்களே..."

"வாசவி.. வேண்டாம்.. இந்தப் பேச்சை இத்தோடு விடு..."

"அவளை ஏன் அடக்குகிறாய்..? அந்த ஹரிஹரனிடம் அப்படி என்ன அழகு இருக்கிறது..? பணம்தான் இருக்கிறது..."

"ஸ்டாப் இட் காயத்ரி.. பணம்.. படை பலம்.. இரண்டுமே இல்லாத ஹரிஹரனாக மட்டும் அவர் இருந்திருந்தால்.. இந்நேரம் ஓடி அவர் காலடியில் விழுந்திருப்பேன்.. அவருக்கா அழகு இல்லை..? அவரின் ஆண்மை நிறைந்த நடை.. நேர் கொண்ட பார்வை.. வீரம் கொண்ட குணம்.. என்று எல்லாமே அழகுதானே.. அவர் ஹீரோ இல்லையென்றால் வேறு யாருமே ஹீரோ இல்லை.."

"ஏய் ரூபிணி.. விளையாட்டுப் பேச்சுக்கு ஏன் இப்படி அழுகிறாய்..? இவ்வளவு உணர்ச்சி வசப்படும் அளவிற்கு இப்போது என்ன நடந்துவிட்டது..? ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்..."

மற்ற பெண்கள் சமாதானப்படுத்த கண்களைத் துடைத்துக் கொண்ட ரூபிணி தற்செயலாய் திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டாள்..

இருளில் நிழல் உருவமாய் நிற்பது ஹரிஹரன் அல்லவா..? அவளது உள்ளுணர்வு அவனை அடையாளம் கண்டு கொண்டது.

'அவன் இவ்வளவு நேரமும் இங்கா நின்று கொண்டிருந்தான்..? இந்தப் பெண்கள் பேசுவதை கேட்டுக் கொண்டா இருந்தான்.. சும்மாவே கோபக்காரன்.. இவர்கள் பேச்சைக் கேட்ட பின்பு எப்படிக் கொதித்திருப்பானோ.. கடவுளே... அவனை என் கண்ணிலும் காட்டி.. அவனது கோபத்தையும் தூண்டிவிட்டிருக்கிறாயே.. பெருமாளே.. இது சரியா..?'

ரூபிணி அசைவற்று அங்கேயே நின்றுவிட மற்றவர்கள் அவள் உடன் வராததைக் கவனிக்காதவர்களாய் தங்களுக்குள் பேசிச் சிரித்தவாறு மண்டபத்தின் உள்ளே போய் விட்டார்கள்.

ரூபிணி அசைவற்று நின்றிருக்க அழுத்தமான காலடி களுடன் ஹரிஹரன் அவளை நெருங்கினான்.. இருள் அவர்களைச் சுற்றிப் போர்வையாய் கவிந்திருக்க.. யாரும் பார்த்து விடுவார்களே என்ற பதட்டமின்றி படபடத்த இதயத்துடன் ஹரிஹரனைப் பார்த்தாள் ரூபிணி..

இருளிலும் தன்னைத் துளைக்கும் அவனது பார்வையை உணர்ந்தவளாய் 'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

'நீ மட்டும் அவனைப் பார்ப்பதில்லையா..?' அவள் மனம் பதிலுக்கு கேள்வி கேட்க உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

'நல்லவேளை இருட்டில் நிற்கிறோம்.. இல்லை யென்றால் இவன் இந்நேரம் என் வாயை ரசனையாய் பார்த்திருப்பான்...' என்று தோன்ற... அவள் மனம்..

'இப்போது மட்டும் பார்க்கவில்லையென்றா நினைக்கிறாய்..?' என்று நகைத்தது.

அவள் பேசாமல் அவன் பேசமாட்டான் என்பது புரிய ரூபிணி 'பிடிவாதக்காரன்..' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள்.. அதே நேரம் 'அந்தப் பிடிவாதமும் ஓர் அழகுதான்..' என்று அதை ரசிக்க வேறு செய்தாள்.. வேறு வழியின்றி நிலவின் ஒளியில் தெரிந்த அந்த பிடிவாதக் காரனின் முகத்தை நிமிர்ந்து பார்த்து, "வந்து விட்டீர்களா... எப்போது வந்தீர்கள்...?" என்று வினவினாள்...

அவனது உடலில் ஓர் அதிர்வு ஓடியது.. எவ்வளவு உரிமையாக வினவுகிறாள்..? அவனது வரவிற்காக காத்திருந்தது போல.. அவனது வரவால் மனம் குளிர்ந்தது போல.. அவள் கேட்ட விதம் அவனது மனப்புண்ணை ஆற்றியது..

"இன்றைக்குத்தான் வந்தேன்..."

"போன வேலை முடிந்து விட்டதா...?"

"நானாக உருவாக்கிக் கொண்டு போன வேலை அது.. நானாக நினைக்காமல் அது முடியாது..."

"அப்படியென்றால் திரும்பிப் போய் விடுவீர்களா..?"

"வேண்டாமென்று ஓர் வார்த்தை சொல்லு... போக வில்லை.." அவன் குரலில் இறைஞ்சல் இருந்தது..

'ஹரிஹரனின் குரலில் இறைஞ்சல் இருப்பதா..?' ரூபிணியின் நெஞ்சம் தாளாமல் தவித்தது.

"ஏன்.. நான் வாய் திறந்து சொன்னால்தான் இருப்பீர்களா..?"

"உன் மனதில் என்ன இருக்கிறதென்று எனக்குத் தெரிய வேண்டாமா..?"

"அது நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டுமா..?" ரூபிணியின் நாத்தழுதழுத்தது..

ஹரிஹரனின் நெஞ்சம் குலுங்கியது. அவளை நெருங்கி நின்றான்.. அவள் விலகி நகரவில்லை.. அதை உணர்ந்தவனின் மனம் பாரம் விலகி இறகைப் போல் லேசானது.. மனத்தில் உல்லாசம் பிறந்தது.

"ஏன்.. நீதான் அதைச் சொல்ல மாட்டாயா..?" அவன் கை நீட்டி அவள் கரம் பற்றி அவளை அருகே இழுத்தான்..

எதிர்பாராத இந்தக் தொடுகையால் ரூபிணி நடுங்கிப் போனாள்.. ஆனால் நீண்ட நாட்களாய் அவனைப் பிரிந்திருந்த தாபம்.. அவன் மேல் அவள் நெஞ்சத்தில் தோன்றியிருந்த காதல்.. விட்டால் அவன் மீண்டும் பிரிந்து போய் விடுவானோ என்ற பயம்.. எல்லாம் சேர அவள் மறுப்பே சொல்லாமல் அவனது மார்பில் முகம் புதைத்தாள்.

நம்ப மாட்டாதவனாய் கொடிபோல் தன்மேல் படர்ந்து நின்றவளைச் சுற்றி வளைத்தன ஹரிஹரனின் கரங்கள்.. அவளை இறுகத் தழுவி அவளது தோள் வளைவில் முகம் புதைத்தான் அவன்.. அவளது கூந்தலில் சூடியிருந்த மல்லிகை வாசம் அவனைக் கிறங்கச் செய்தது.. அவளது பின்னங்கழுத்தில் இதழ் பதித்தான்... அவள் சிலிர்த்தாள்.. ஆனால் அவன் பிடியிலிருந்து விலகாமல் இணைந்து நின்றாள்... ஹரிஹரனின் இதழ்கள் உயர்ந்து அவளது நெற்றியில் பதிந்தன.. அவள் கண் மூடிக் கிறங்கி நின்றாள்.. அவளது கன்னத்தில் முத்த மிட்டவன் விலகி அவளது இதழோடு இதழ் பதித்து அவளை இறுக்கித் தழுவிக் கொண்டான்.

விலக மனமில்லாமல் நின்றிருந்தவர்கள்.. ரூபிணியைத் தேடி அவளது தோழிகள் வரவும் விலகினர். ஹரிஹரன் நகர்ந்து மாடிப்படியின் அடியில் இருளில் மறைந்து நின்று கொண்டான்.. ரூபிணி தோட்டத்து இருளில் இருந்து வெளியேறி அவளது தோழிகளை நோக்கிப் போனாள்..

"இங்கே என்னடி பண்ணிக்கிட்டு இருக்கிறாய்..?" வாசவி அதட்டினாள்.

என்ன பண்ணிக் கொண்டிருந்தாள் என்ற நினைவில் முகம் சிவந்தாள் ரூபிணி..

"என்னடி.. இது இந்த விழி விழிக்கிறாய்.. உன் பார்வையே சரியில்லையே.. என்ன விசயம்.." வாசவி சந்தேகமாய் நோக்க..,

"ச்சு.. ஜமுனா கல்யாணம் பண்ணிக் கொண்டு போய்விட்டாள்.. அடுத்து என் ரூம் மேட் நல்லவளாய் அமைய வேண்டுமே என்று யோசித்துக் கொண்டே இங்கு நின்று விட்டேன்..." இருளில் ஹரிஹரன் இருந்த திசையைப் பார்த்துக் கொண்டே மெய்சிலிர்க்க பொய் யுரைத்தாள் ரூபிணி...

"இதுக்குப் போய் ஏன் வீணாய் யோசிக்கிறாய்..? என்னைக் கேட்டால் நான் சொல்ல மாட்டேனா? உன் ரூமில் முதலில் கலா இருந்தாள்.. ஜமுனா ரூம் மேட்டாய் வந்தாள்.. கலாவிற்கு கல்யாணம் ஆகி டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு போய் விட்டாள்... ஜமுனா இருந்தாள்.. நீ ரூம் மேட்டாய் வந்தாய்.. இப்போது ஜமுனாவிற்கு கல்யாணம் ஆகிப் போய்விட்டாள்... அடுத்து உனக்கு யாராவது ஒருத்தி ரூம் மேட்டாய் வருவாள்.. உனக்கு கல்யாணமாகி நீ ஹாஸ்டலை விட்டுப் போய் விடுவாய்... அவள் கவலைப் பட்டுக் கொண்டு நிற்பாள்..."

வாசவி கூறக் கூற ரூபிணி 'தனக்குக் கல்யாணம்' என்ற நினைவில் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. இருளில் நின்ற ஹரிஹரன் ஆசையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ரூபிணி முகம் சிவக்க இருளில் ஹரிஹரன் நின்று கொண்டிருந்த திசையை திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.. வாசவி சொன்னது ஹரிஹரனின் காதில் விழுந்திருக்குமோ.. என்று வெட்கத்துடன் நினைத்தாள்.

ஹரிஹரனின் காதுகளில் வாசவி பேசியது மிக நன்றாகக் கேட்டது.. அவன் மனதில் மணப்பெண் கோலத்தில் ரூபிணி தெரிந்தாள்... மெல்லடியை எடுத்து வைத்து நடந்து வந்து

ஹரிஹரனின் அருகில் அமர்ந்தாள்.. ஹரிஹரன் அவள் கழுத்தில் தாலியைக் கட்டினான்.. அவன் கரம் பற்றி அவனைப் பின் தொடர்ந்து அவனது வீட்டிற்குள் வந்தாள்.. அதன்பின்.. ஹரிஹரனின் உடல் சூடேறியது.. சற்று முன் அவனது கரங்களுக்குள் அடங்கினவள்.. அன்று அவனுடன் முழுதாய் கலந்து விடுவாள்..

ரூபிணியின் தாய் தந்தையரைப் பார்த்துப் பேச வேண்டும். இனியும் காலம் தாழ்த்தக் கூடாது.. ரூபிணியின் மனதில் என்ன இருக்கிறது என்பதுதான் தெளிவாய் தெரிந்து விட்டதே... இதுவரை அவளது பயத்தைக் கண்டு எங்கே அவள் விலகிச் சென்று விடுவாளோ.. என்ற விரக்தி அவனது நெஞ்சத்தில் இருந்தது..

இப்போதுதான் எல்லாம் சரியாகிவிட்டதே... அவள் தான் தன் தயக்கத்தையும் பயத்தையும் உதறிவிட்டு அவனிடம் தஞ்சம் அடைந்து விட்டாளே... நினைக்கும் போதே... இன்னும் அவளது பயம் முழுவதும் தெளிந்து விடவில்லையென்று அவனுக்கு இடித்தது.

அவன் மனதில் அவள் இருக்கலாம். அவளைத் தவிர வேறு ஒருத்தியின் நிழலை கூட அவன் திரும்பிப் பார்க்க மாட்டான்.. ஆனாலும் அவளது சந்தேகங்களுக்கு விடை அளிக்காமல் அவளது சஞ்சலத்தை போக்காமல் அவள் கரம் பிடிக்கக் கூடாது..

அவளுடன் பேச வேண்டும்.. தன் வாழ்க்கையைப் பற்றி முழுவதுமாய் அவளிடம் கூறிவிட வேண்டும். ஹரிஹரன் முடிவு செய்துவிட்டான்..

## 21

வேனை விட்டு இறங்கி மாடியேறி மற்ற தோழி களிடம் கையாட்டி விட்டு அறைக்குள் போய் ரூபிணி கதவைத் தாழிட்ட மறுகணம் அவளது செல்போன் ஒலித்தது.

'அவன்தான்..' அவள் மனதில் மணியடித்தது.

ஓடிப்போய் செல்போனை எடுத்துப் பார்த்தாள்.. அவனே தான்.. மூச்சிரைக்க.. "ஹலோ..." என்றாள்.

"ஏன் மூச்சு வாங்குகிறாய்.."

"இப்போதுதான் என் ரூமிற்குள் வந்தேன்.."

"தெரியும்..."

"எப்படி..?"

"எப்படியா..? உன்னைப் பின் தொடர்ந்து என் காரில் வந்தேன்.. இப்போதும் உன் ஹாஸ்டலின் ஓரமாய் இருட்டில்தான் என் கார் நின்று கொண்டிருக்கிறது. மாடியில் உன் ரூமில் விளக்கு எரியவும் போன் பண்ணுகிறேன்.."

"இது என் ரூம்தான் என்று எப்படித் தெரியும்..?"

"ஹரிஹரனுக்குத் தெரியாதது என்று எதுவும் இல்லை.."

"என் மனம் மட்டும்தான் தெரியாது..."

"தெரியும்டி... உன் மனம் எனக்கு நன்றாகத் தெரியும்.. ஊரைப் பார்த்துப் பயந்தாய்.. என்னைக் கண்டு பயந்தாயா..? உனக்குத் தெரியுமா ரூபிணி... என்னிடம் அச்சமின்றி முகம் பார்த்துப் பேசியது நீ மட்டும்தான்.. அதேபோல் என்னை நாடி வரும் எல்லோரும் அவர்களுக் காகத்தான் உதவி கேட்டு வருவார்கள்.. அப்படி இல்லாமல் உன்னை நாடி என்னை வர வைத்தவளும் நீதான்.. உனக்காக இல்லாமல் மற்றவருக்காக என் உதவியை நாடியதும் நீதான்.. என்னிடம் இருக்கும் பணத்தையும்.. பலத்தையும்.. பவரையும் பார்த்து ஊரே மயங்க.. என்னிடம் மட்டும் மயங்கியவளும் நீ ஒருத்தி மட்டும்தான்... என்னை மயங்க வைத்தவளும் நீ ஒருத்தி மட்டும்தான்.. நீ எனக்கு என்னை விட முக்கியமானவள் ரூபிணி.. உன் வேதனை கண்டுதான் நான் உன்னைப் பிரிந்து சென்றேன்.. கோபத்தினால் இல்லை.. உன்னிடம் கோபம் கொள்ள என்னால் முடியாது ரூபிணி.. என்னை நீ விரும்பினாய்.. என்னிடம் மயங்கினாய்.. ஆனாலும் என்னிடம் பழகத் தயங்கினாய்.. அதனால் தான் உனக்காக... உன்னை விட்டு சில மாதங்கள் விலகிச் சென்றேன்.. எனக்கு உன்னைத்

தெரியும்.. என்றாவது ஒருநாள் என்னைத் தேடி வருவாய் என்றும் தெரியும்.. அந்த நாள் இன்று வந்துவிட்டது.. நான் உன் மனதைத் தொட்டு.. உன்னையும் தொட்டு விட்டேன்.." ஹரிஹரனின் குரலில் மயக்கம் இருந்தது..

ரூபிணி உடை மாற்றாமல் ஜன்னலருகே ஓடிச் சென்று சாலையைப் பார்த்தாள்.. இருளில் பார்வையைச் செலுத்தி.. இருளுக்குள் அவனைத் தேடினாள்.. சற்றுத் தள்ளி மறைவாக ஒரு கார் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

"கண்டுபிடித்து விட்டாயா...?"

"நான் கண்டுபிடிக்காமல் வேறு யார் கண்டு பிடிப்பார்கள்..?"

"மற்றவர்களின் பிடிக்குள் இந்த ஹரிஹரன் சிக்கவும் மாட்டான்.."

"என்னிடம் மட்டும் வலிய வந்து ஏன் சிக்குகிறீர் களாம்..?"

"காலமெல்லாம் உன் கைப்பிடிக்குள் இருக்கத்தான்.."

"நான் காலமெல்லாம் உங்கள் காலடியில் இருப்பேன்.."

"இதைத்தானே உன் பிரண்டிஸிடமும் சொன்னாய்.. ஓடிப்போய் அவருடைய காலடியில் விழுந்து விடுவேன் என்று.. என் காலடியில் கிடப்பதில் அவ்வளவு ஆர்வமா..?"

"பின்னே இல்லையா.. மகாலட்சுமி தேவி.. மகாவிஷ்ணுவின் காலடியில் இருக்கிறதை விரும்பி அமர்ந்திருக்கும் போது... ரூபிணி ஹரிஹரனின் காலடியில் கிடக்க தவம் கிடக்க மாட்டாளா...?"

"காலடியில் மகாலட்சுமி அமர்ந்திருந்தாலும் அவள் வாசம் செய்வது மகாவிஷ்ணுவின் இதயத்தில்... அதுபோல் நீ குடியிருக்கும் இடம் என் நெஞ்சம்..."

"திரும்பவும் ஊருக்குப் போய் விடுவீர்களா...?"

"உன்னை விட்டுப் போக என்னால் முடியுமா..?"

"இத்தனை நாளும் முடிந்ததே..."

"மற்ற நாளும் இன்றைய நாளும் ஒன்றா..."

ரூபிணி.. அவனது இதழ் தொட்ட தன் இதழ்களை கடித்துக் கொண்டாள்.. ஹரிஹரனின் உல்லாச சிரிப்பு கேட்டது.

"என்ன மௌனமாகி விட்டாய்.. கல்யாண மண்டபத்தின் தோட்டம் நினைவிற்கு வந்து விட்டதா...?"

ரூபிணி இனம் புரியாத உணர்ச்சிகளால் தாக்கப்பட் டிருந்தாள் பேச முடியாமல் தடுமாறினாள்.

"பேசேண்டி... ஊமையாகி விட்டால் எப்படி..?"

அவனது நெருக்கம் கொண்ட பிரியமான அழைப்பு அவளது மனதை வருடிச் சென்றது.

"நீங்கள்தான் என்னை ஊமையாகச் செய்கிறீர்களே.."

"ரூபி... நான் உனக்காகத்தான் பறந்து வந்தேன்.. உன் முகம் பார்த்தால் மட்டும் போதும் என்ற கணக்குடன் வந்தேன்.. நீ எப்படியும் மேடையேறி வீடியோவுக்கு போஸ் கொடுப்பாய் என்பது எனக்குத் தெரியும்.. கவனித்துக் கொண்டேயிருந்து உன்னுடன் ஒன்றாக போஸும் கொடுத்துவிட்டேன்.. ரிசப்சன் செலவுகள் என்னுடையவை.. வீடியோகிராபரும் நான் ஏற்பாடு செய்தவர்தான்.. நம் புகைப்படத்தை பிரிண்ட் போட்டு வைத்துக் கொள்ளத் திட்டமிட்டிருந்தேன்.. இன்றைக்கு நைட்டே டெல்லி திரும்பி விட நினைத்திருந்தேன்..."

"டெல்லி.. டெல்லி.. அங்கே எந்த மும்தாஜ் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள்..?"

"என் மும்தாஜ் விழுப்புரத்தில்தான் இருக்கிறாள்.. பட் ரூபிணி ஷாஜகானைப் போல் நான் எனது காதலிக்காக தாஜ்மஹால் எல்லாம் கட்ட மாட்டேன்.."

"ஊருக்கெல்லாம் அள்ளி வழங்கும் வள்ளல் என்று உங்களைச் சொல்லுகிறார்கள்.. கடைசியில் நீங்கள் இவ்வளவு கஞ்சமா..?"

"கஞ்சமில்லைடி... உன்னிடம் நான் தஞ்சம்..."

"தஞ்சமடைந்தது நீங்களா... இல்லை நானா...? முதலில் என் கேள்விக்குப் பதிலைச் சொல்லுங்கள்..."

"ஷாஜகான் போல மும்தாஜ் போன பின்னாலும் நான் உயிர் வாழ மாட்டேன்.. உன்னைப் பிரிந்தால் அந்த நொடியில் நானும் உன்னுடன் சேர்ந்து வந்து விடுவேன்.. ஒருவேளை நான் முந்திக் கொள்ளும் நிலை வந்தால்

உன்னைக் கொன்று.. என்னுடன் அழைத்துச் சென்று விடுவேன்..."

ரூபிணி பேச்சிழந்தாள்.. வன்முறையாளனின் காதல் என்பது இப்படித்தான் இருக்குமா..? உலகிற்கு கொடுங்கோலனாய் தெரிந்த ஹிட்லர் தன் கடைசி வினாடியில் தன் காதலியை விசம் குடித்து சாகச் சொல்லிவிட்டு.. அவள் இறந்த பின்.. துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக் கொண்டு மாண்டானாமே.. அது தான் அவனின் காதலா...?

"என்னடி.. பயமாய் இருக்கிறதா...?"

"பயமே உங்களைக் கண்டால் பயப்படும்போது.. உங்கள் நெஞ்சத்தில் குடியிருக்கும் எனக்கு எங்கேயிருந்து பயம் வரப்போகிறது...?"

"நான் இப்படித்தான் ரூபிணி.. நீ அன்று சொன்னாயே.. 'நீங்கள் ஏன் இவ்வளவு பெரிய வி.ஐ.பியாக இருக்கிறீர்கள்..' அன்று.. உன் பிரண்ட்ஸிடம் சொன்னாயே.. 'பணமும்.. படைபலமும் அவரிடம் இல்லாமலிருந்தால் அவரது காலடியில் போய் விழுந்திருப்பேன்..' என்று.. ஏன் அப்படிச் சொன்னாய் ரூபிணி...?"

"அது... அது.. வந்து.."

"சும்மா சொல்லு... நமக்குள் என்ன தயக்கம்..?"

அவன் குரல் தந்த தைரியத்தில் அவள் பட்டென்று சொல்லிவிட்டாள்..

"உங்களுக்கு ஊருக்குள் ஒரு இமேஜ் இருக்கிறது.."

" 'தாதா' என்று தானே..." அவனும் பட்டென்று கேட்டுவிட்டான்..

"ஆமாம்.." அவள் நலிந்த குரலில் பதில் சொன்னாள்..

ஹரிஹரன் பதில் சொன்னான்.. அவனது பதிலில் அவனது கடந்த கால வாழ்க்கையின் துயரங்களும் சோகமும் வெளிவந்தன... பட்டுக் கம்பளத்தில் நடந்து கொண்டிருக்கும் ஹரிஹரன்... கடந்த காலத்தில் முள் பாதையில் நடந்து வந்தவன் என்பதை ரூபிணி அன்று அறிந்தாள்..

# 22

"இது புலிமேல் செய்யும் சவாரி ரூபிணி... நான் புலி வாலைப் பிடித்து விட்டவன்.. இனி இதை விட முடியாது.. என்ன ஒன்று இந்தப் புலி சைவப் புலி... ஆளை அடிக்கும்.. கொன்று தின்னாது.. குறுக்கு வழியில் போகாது.. ஒருவன் மற்றவரை தன் நேர்மையால் கூட அஞ்ச வைக்க முடியும்.. நான் நேர்மையானவன் ரூபிணி.. என்னிடம் இருக்கும் பணம்.. நான் நேர் வழியில் சம்பாதித்து குவித்த பணம்.. நிழல் உலக தாதாக்கள் என்னைக் கண்டால் நடுங்குவார்கள்.. ஆனால் நிழல் உலகின் வியாபாரங்கள் என்னிடம் இல்லை.. இந்த ஹரிஹரன் மீன் பிடித்து ஏற்றுமதி செய்வதில் இருந்து ஹோட்டல்.. காலேஜ்.. என்று ஆயிரம் தொழில்கள் செய்கிறவன்.. கஞ்சா கடத்து கிறவனோ.. கடத்தல் தொழில் செய்கிறவனோ இல்லை.. போலீஸ் முதல் பொறுக்கி வரை என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பார்கள்.. அரசியலில் பெரிய பெரிய தலைவர்கள் முதல் அடிமட்டத் தொண்டன் வரை என் வார்த்தைகளை காது கொடுத்துக் கேட்பார்கள்.. நான் கேட்பது எதுவாக இருந்தாலும் உடனே செய்தும் கொடுப்பார்கள்..."

"அது பயத்தினால் வந்தது தானே...."

"இல்லை என் மேலிருக்கும் மதிப்பு மரியாதையினால் வந்தது.. கடலூர்.. விழுப்புரம்.. பாண்டிச்சேரி.. என்ற மூன்று பெரிய நகரங்களிலும் நான் கொடி கட்டிப் பறக்கிறவன்.. இது என் ராஜ்யம்... இங்கேயிருக்கும் அரசியல்வாதிகளுக்கு என் தயவு எப்போதும் தேவைப் படும்.. ரவுடிகளுக்கோ நான் சிம்ம சொப்பனம்.."

"அதுதான் எப்படி வந்தது...?"

"என் விதி... வந்துவிட்டது.. ரூபிணி.. நான் பதினான்கு வயது சிறுவனாக இருந்தபோது என் தாயும் தந்தையும் என் கண் முன் வெட்டப்பட்டு துடிதுடித்து இறந்து போனார்கள்.. அது உனக்குத் தெரியாது..." ஹரிஹரனின் குரலில் கண்ணீர் இருந்தது..

"ஐயையோ.. எதற்காக..?" ரூபிணி துடிதுடித்து விட்டாள்...

"என் தகப்பனாரின் மீன் பதனிடும் தொழிற்சாலையை அபகரிக்க.. என் அப்பா சிறிய அளவில் ஆரம்பித்து வளர்த்த தொழில் அது.. அதை விற்று விடுமாறு ஒரு ரௌடி அவரை வற்புறுத்தினான்.. அவர் மறுத்துவிட்டார்..."

"அவன் ஏன் உங்கள் அப்பாவின் தொழிலை குறி வைத்தான்..?"

"கடலும்... கடல் சார்ந்த தொழில்களும்... ரௌடிகளின் கையில் இருந்த காலம் அது.. மீனை ஏற்றுமதி பண்ணுகிறேன் என்று சொல்லி கஞ்சாவை கடத்தலாம்.. அதனால் கேட்டிருக்கிறான்.. என் அப்பா மறுத்துவிட்டார்.. அவர் கனவு கண்டு உருவாக்கிய தொழில் அது.. அவரது ரத்தத்தை வியர்வையாய் சிந்தி அவர் பாடுபட்டு உருவாக்கிய தொழிற்கூடம் அது. என் அப்பா வசதியானவர்தான்.. ஆனால் பணக்காரர் இல்லை.. மூன்று வேளை சாப்பாடும் வாழ்நாள் முழுவதும் வாழ சொந்த வீடும்.. உடுத்திக் கொள்ள நல்ல துணிமணிகள் வாங்கிக் கொள்ளப் பணமும் கொண்டவர் அவ்வளவுதான்.. வீட்டை விற்றுத்தான் தொழிலை ஆரம்பித்திருக்கிறார்.. அம்மா பயந்திருக்கிறார்கள்.. ஆனால் அப்பாவின் விடாமுயற்சியில் தொழில் வளரவும் அமைதியாகி விட்டார்களாம்.. ஆறே வருடத்தில் தொழிலையும் வளர்த்து சொந்தமாய் புது வீட்டையும் வாங்கி விட்டார் அப்பா.."

"உங்கள் அம்மா சந்தோசப்பட்டிருப்பார்கள்..."

"ஆமாம்.. புது வீட்டில் கிரகப்பிரவேசம் செய்து குடியேறிய அன்று அம்மாவின் முகத்தில் மின்னிய மகிழ்ச்சி இன்றும் என் நினைவில் நிற்கிறது.. அந்த வீடு பாண்டிச்சேரியில் இருக்கிறது..."

"நீங்கள் இப்போது அங்கே குடியில்லையா...?"

"இல்லை... அதைக் கோவிலாக மாற்றியிருக்கிறேன்.. என் பெற்றோர் குடியிருந்த கோவில் அது..."

அவனது துயரம் அவளை உலுக்கியது.. பெற்றவர்கள் கண் முன் வெட்டப்பட்டால் எந்த மகன்தான் பொறுத்துக் கொள்வான்...?

"பொறுத்துக் கொள்ள முடியவில்லை ரூபிணி.. எவ்வளவு கேட்டும் என் அப்பா தொழிற்சாலையை விட்டுக் கொடுக்க மறுத்ததால் கோபம் கொண்ட அந்த ரௌடி என் பெற்றவர்களை என் கண் முன் கொன்று விட்டான்.. என் அப்பாவை என் முன்னாலேயே வெட்டி மண்ணில் சாய்த்தான்.. என் தாய் கத்திக் குத்துடன் என் அப்பாவின் மடியில் விழுந்து இறந்து போனார்கள்.. ரூபிணி.." ஹரிஹரனின் குரல் கரகரத்தது..

"சொல்லுங்கள்..." ரூபிணி அழுது கொண்டிருப்பதை ஹரிஹரனுக்கு அவளது குரல் உணர்த்தியது..

சுகத்தில் பங்கு கொள்ள ஆயிரம் பேர் இருந்தாலும்.. சோகத்தில் பங்கு கொள்ள யார் வருவார்கள்..? நெஞ்சம் கலந்தவளின் நேசத்தில் கட்டுண்ட் ஹரிஹரன் தொடர்ந்து தன் வாழ்க்கையின் நிகழ்வுகளைக் கூறிக் கொண்டு வந்தான்..

"நாங்கள் மூன்று பேரும் கடற்கரையில் நடந்து வந்து கொண்டிருந்தோம்.. அப்போதுதான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது.. என் அப்பாவும் அம்மாவும் துடிதுடித்து இறக்கும்போதும் திரும்பத் திரும்ப கதறிய வார்த்தைகள் என்ன தெரியுமா ரூபிணி...? 'ஹரி... ஓடி விடு...' ...." ஹரிஹரன் பேச முடியாமல் மௌனமானான்..

ரூபிணி தவித்தாள்.. அந்தத் துயரம் மிகுந்த தருணம் அவளது கற்பனைத் திரையில் தோன்றியது. இறந்து கொண்டிருக்கும் கடைசி வினாடிகளில் உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டு பெற்றவர்கள் என்ன சொல்லுவார்கள்..? அவர்கள் உயிரைக் கொடுத்து வளர்க்கும் பெற்ற மகனின் உயிரைக் காக்கத்தான் துடிப்பார்கள்.. 'ஓடிவிடு..' என்றுதான் கதறுவார்கள்...

"நான் ஓடினேன் ரூபிணி.. என்னைத் துரத்தி வந்த ரௌடிகளின் பிடியில் அகப்படாமல் ஓடினேன்.. என்னைப் பெற்றவர்கள் சடலங்களாய் மண்மேல் கிடக்க.. குனிந்து மண்ணை அள்ளி என்னைத் துரத்தி வந்தவர்களின் முகத்தில் வீசிவிட்டு நிற்காமல் ஓடினேன்..." ஹரிஹரன் கூறிக் கொண்டிருந்தான்...

# 23

"நிற்காமல் ஓடினேன் ரூபிணி.. என் தாய்மாமனின் மடியில் போய் விழுந்தேன்.. அவர் திண்டிவனத்தில் இருந்தார்.. சாதாரண மில் தொழிலாளி.. என் அம்மாவின் அண்ணன்.. தொழிற்சங்கவாதி... கம்யூனிசக் கூட்டங்களில் பேசுகிறவர்.. சிவப்புச் சிந்தனைகள் கொண்டவர்.. கொதித்து எழுந்தார்.. அவரது சங்கத் தோழர்கள் அவருடன் நிற்க.. என் தாய் தந்தையின் சடலங்களை போலீஸ் ஸ்டேசன் முன்னால் போட்டு உண்ணாவிரதம் இருந்தார்... அந்த ரெளடி கைது செய்யப்பட்டான்.. என் பெற்றோர்களின் உடலுக்கு நான் இறுதிக் காரியங்களை முறைப்படி செய்து கொள்ளி வைத்தேன்..."

ரூபிணி இப்போது வாய் விட்டு அழ ஆரம்பித்தாள்.. ஹரிஹரன் அழவில்லை.. வெறி கொண்ட குரலில் வெள்ளாடாக இருந்தவன் வேங்கையாய் மாறிய கதையைச் சொல்லிக் கொண்டு வந்தான்..

"அந்த ரெளடி மறுநாளே வெளியில் வந்து விட்டான்.. அவனது அரசியல் செல்வாக்கின் முன்னாலும் பணபலம் படைபலத்தின் முன்னாலும்.. என் மாதச் சம்பளம் வாங்கும் தாய்மாமனால் எதிர்த்து நிற்க முடிய வில்லை... மனைவி.. பெற்ற குழந்தைகளின் எதிர்காலம்... என் மாமா பொறுமையானார்.. ஆனால் நான் பொறுமையாகவில்லை.. பொறுமையாய் இருப்பது போல் நடித்தேன்.. என் மாமாவின் உதவியுடன் சென்னையில் ஹாஸ்டலில் இருந்து படித்தேன்.. அடுத்த ஆறே வருடங்களில் என் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியே வந்தபோது போராடச் சக்தியுடன் வெளி வந்தேன்.. ரூபிணி.. முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும்.. எடுக்க வேண்டும்.. சென்னையில் ஒரு அன்டர்கிரவுண்டு தாதாவை அவருடைய எதிரிகள் சுட்டுவிட்டார்கள்.. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவரை நான் காப்பாற்றினேன்.. என்ன வேண்டுமென்று கேட்டார்.. அந்த ரெளடியின் உயிரும்.. என்

அப்பாவின் தொழிற்சாலையும் வேண்டுமென்று கேட்டேன்.. இரண்டுமே எனக்குக் கிடைத்தன.. எந்த இடத்தில் என் தாய் தந்தையர் என் கண் முன்னாலேயே ரத்தம் சிந்தி இறந்தார்களோ.. அதே இடத்தில் அதே மண்ணில் என் கண் முன்னால் அந்த ரௌடி ரத்தம் சிந்தி செத்தான்.. என் அப்பாவின் தொழில் என் கைக்குள் வந்தது.. அன்று நான் முடிவெடுத்தேன்.. நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது... வல்லவனாகவும் இருக்க வேண்டும்.. பணபலம் இருந்தால் மட்டும் போதாது.. படைபலமும் வேண்டும்.. அந்த ரௌடியின் கும்பல் என்னைத் தாக்க வந்தது.. அவர்களை அவர்கள் தொழில் செய்த கடலிலேயே ஒரே ஒரு வெடிகுண்டை அவர்கள் வந்த படகின் மேல் வீசி நடுக்கடலில் வெடித்துச் சிதறச் செய்து கூண்டோடு அழித்தேன்.. ரூபிணி.. அவர்கள் அனைவரும் கொலை.. கொள்ளை... கடத்தல்களைச் செய்தவர்கள்.. போலீஸின் என் கவுண்டர் லிஸ்டில் இருந்தவர்கள்.. அவர்களைத் தீர்த்தது நான்தான் என்பது போலீஸிற்கு நன்றாகத் தெரியும்.. ஆனால் சாட்சி இல்லையென்று கேஸை மூடினார்கள்.. அதன் பின்னால் நான் விரும்பாமலேயே எனக்கு 'தாதா' பட்டம் வந்துவிட்டது..."

"உங்கள் இடத்தில் யார் இருந்தாலும் நீங்கள் செய்ததைத்தான் செய்திருப்பார்கள்..."

ரூபிணியின் வார்த்தைகள் தென்றலாய் ஹரிஹரனின் நெஞ்சம் வருடின..

"இரவு பகலாய் உழைத்தேன்.. அப்போது வேறு சில ரவுடி கூட்டங்களின் தொந்தரவு ஆரம்பித்தது.. என்னிடமிருந்த ஆள் பலத்தால் அழித்தேன்.. மெல்ல வளர்ந்தேன்.. என்னை அணுக ரவுடிகள் பயந்தனர்.. என் செல்வாக்கும் வளர ஆரம்பித்தது.. என் தயவு தேவைப்படும் அரசியல்வாதிகளுக்கு கட்சி பேதம் பார்க்காமல் உதவி செய்ய ஆரம்பித்தேன்.. பதிலுக்கு அவர்கள் பொறுப்பிற்கு வந்ததும் நான் எது கேட்டாலும் செய்து கொடுக்க ஆரம்பித்தனர்.. வேறு புதுத் தொழில்களை ஆரம்பித்தேன்.. இன்று இந்த உயரத்தை வந்தடைந்திருக்கிறேன்.. ரூபிணி.. நான் கத்தியைத் தூக்கியது தீய சக்திகளை

அழிப்பதற்காக.. அப்பாவிகளை அழிப்பதற்காக இல்லை.. நான் விரும்பாமலே எனக்கு தாதா பட்டம் கிடைத்துவிட்டது.. அதிலிருந்து வெளியே வர நான் முயலவில்லை.. என்னைப் பொறுத்தவரை என் எல்லைக்குள் எந்த ரௌடியும் முளைத்துவிடக்கூடாது... கண் முன்னே பெற்றோர்களை கொல்வதைப் பார்த்த துயரம் என்னோடு போக வேண்டும்.. இன்னொரு ஜீவனுக்கு அந்தக் கொடுமை நிகழ்ந்து விடக்கூடாது.. அதற்காக நான் மாட்டிக் கொண்டதுதான் இந்தப் பூச்சாண்டி முகமூடி.. நான் எதிர் பார்த்தபடியே.. இது ஹரிஹரனின் ஏரியாவாகி விட்டது.. இங்கே மற்ற நிழல் உலக தாதாக்கள் நுழையாமல் விலகினார்கள்..."

"உங்களைக் கண்டு அவ்வளவு பயமா...?"

"பயம் என்று சொல்வதை விட இது நிழல் உலக தாதாக்களின் கொள்கை.. அவர்கள் வகுத்துக் கொண்ட விதிமுறை என்று சொல்லலாம்... ஒருவரின் ஏரியாவிற்குள் இன்னொருவர் நுழைய மாட்டார்கள்.."

"செய்வது அநியாயம்.. இதில் இப்படி ஒரு நியாயமா..?"

"யார்தான் அநியாயம் செய்யவில்லை..? இந்த உலகில் முழு நியாயவாதி என்று ஒருவரை விரல் நீட்டி சொல்லி விடு.. பார்க்கலாம்.. யாரும் கிடையாது.. ஏன்.. நீ கூடத்தான் என்னிடம் இருந்து விலக முயன்றாய்.. அது எனக்குச் செய்த அநியாயம் இல்லையா...?" ஹரிஹரன் சிரித்தான்...

"உங்களை..! எதற்கு எதை இணை சேர்க்கிறீர்கள்.." ரூபிணி பொய் கோபத்துடன் சினந்து கொண்டாள்..

"விளையாட்டுக்குச் சொன்னேன்.. ஏன் உன்னிடம் நான் விளையாடக் கூடாதா...?"

"கொஞ்சினது போதும்.. விசயத்துக்கு வாங்க..."

"ரூபிணி... யாரையுமே மலிவாய் எடை போட்டு விடக்கூடாது.. மடிப்புக் கலையாத சலவை உடுப்புடன் சமூகத்தில் உயர் அந்தஸ்துடன் உலவும் மனிதனின் மறுபக்கம் எவ்வளவு மோசமானது என்று உனக்குத் தெரியாது.. அந்த வகையில் தாதாக்கள் நேர்மையானவர்கள்.. நட்புக்காக உயிரைக் கொடுக்கும் தாதாவும் இருக்கிறான்.. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற

உயிரைக் கொடுக்கும் தாதாவும் இருக்கிறான்.. கோஷ்டி மோதலில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டு வெட்டிக் கொள்வார்கள்.. ஆனால் ஒருவரின் குடும்பத்திற்குள் மற்றவர்கள் நுழைய மாட்டார்கள்.. அவர்கள் ஒரு மாதிரியான தர்மத்திற்கு கட்டுப்பட்டவர்கள் ரூபிணி..."

"உங்கள் பெற்றோரை கொன்றது ஒரு 'தாதா' அதை மறந்து விட வேண்டாம்..."

"அவன் ரௌடி... தாதா இல்லை.. புரிந்து கொள்.. அதனால்தான் அவனை நான் கூண்டோடு அழித்தபோது என் பக்க நியாயத்தைப் புரிந்து கொண்டு ஒருவர் கூட அவனுக்கு ஆதரவாக வரவில்லை.. அவர்கள் செய்வது சட்டத்திற்கு புறம்பான செயல்கள்தான்.. அதை செய்வதிலும் அவர்களுக்கென்று சில நியாயங்களுடன் செய்வார்கள்.. முக்கியமாக அவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்வதில்லை ரூபிணி... நம்ப வைத்துக் கழுத்தை அறுத்தவன் என்று ஒருவனைக் கூட கூற முடியாது.. மாறாக அவர்கள் நம்பியவர்கள் செய்யும் துரோகத்தினால் பாதிக்கப்படுகிறவர்கள்தான் நிறைய இருக்கிறார்கள்.."

"விட்டால் இந்த இரவு முழுக்க தாதாவின் புகழ் பாடுவீர்கள் போல..."

"அவனும் மனிதன்தான்.. அவனுக்கும் சில நியாயங்கள் உண்டு என்று கூறினேன் அவ்வளவுதான்.. இப்போது சொல் ரூபிணி.. என்னைக் கண்டு நீ அஞ்சுகிறாயா..?"

ரூபிணி யோசித்தாள்.. அவன் மேல் அச்சம் வரவில்லை.. மாறாகக் காதல் வந்தது.. கண்மூடிப் பாடினாள்..

"நெஞ்சத்திலே நீ நேற்று வந்தாய்...
நேற்று முதல் ஓர் நினைவு தந்தாய்...
நினைவு தராமல் நீயிருந்தால்
கனவுலகில் நான் வாழ்ந்திருப்பேன்..."

## 24

ஹரிஹரனின் காதுகளில் தேன் பாய்ந்தது. எவ்வளவு இனிமையாகப் பாடுகிறாள் இவள்..?

ஹரிஹரனுக்கு இந்த அனுபவம் புதிது.. பெண்களைப் பார்த்திருக்கிறான்.. பழகியிருக்கிறான்.. ஆனால் எவர் மீதும் வராத ஈர்ப்பு இவள் மீது அவனுக்கு வந்தது.. அவளின் பார்வை.. பேச்சு.. சிரிப்பு.. எல்லாமே அவனை வசீகரித்தது.. அவளது மயங்கிய பார்வையில் தன் அழகை முதன் முதலாய் உணர்ந்தான்.. அவளது அருகாமையில் அவனது ஆண்மை சிலிர்த்தது.. இதுபோல் முன்பு அவன் இருந்ததில்லை..

ஒரு பெண்ணால் காதலிக்கப்படுவதில் இவ்வளவு சுகம் இருக்கிறதா என்று ஆச்சரியப்பட்டுப் போனான் ஹரிஹரன்..

"ஓ.கே... குட்நைட்..." ரூபிணி மனமேயில்லாமல் கூறினாள்..

"அதற்குள்ளாகவா...?" ஹரிஹரன் ஏமாற்றத்துடன் கேட்டான்..

"சரியாப் போச்சு போங்க.. மணி என்ன பார்த்தீர்களா..? ஒன்றாகிவிட்டது.. நாளைக்கு ஆபீஸில் போய் அன்று போல் மயக்கம் போட்டு விழுகவா..? வேண்டாமே..."

"நீ கெஞ்சுவதால் விடுகிறேன்.. பை.. நாளை பேசலாம்..."

ஹரிஹரன் போனை அணைத்துவிட்டான்.. ரூபிணி உடைமாற்றிப்படுத்தாள்.. தூக்கம்தான் வரவில்லை.. ஒருவழியாய் கண் மூடி உறங்கிப் போனாள்..

அலுவலகத்தில் ப்ரீதியின் முகம் சரியில்லாமல் இருந்தது..

"ஏண்டி... என்னவோ போல் இருக்கிறாய்..?" ரூபிணி அக்கறையாய் விசாரித்தாள்..

"டென்சன்தான்.. வேறு என்ன..?"

"வேலை முடியவில்லையா...?"

"வேலையால் டென்சன் இல்லை.. வீட்டால் டென்சன்.."

"வீடு என்ன செய்தது...?"

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்கிறது.."

"யாரை...?"

"என் மும்பை அத்தையின் மகனை..."

"யார்..? ஓ.. அன்று நாம் ஹோட்டலுக்கு சாப்பிடப் போன போது வந்திருந்தார்களே.. அவர்களது மகனையா..?"

"ஆமாம்..."

"பண்ணிக் கொள்ள வேண்டியதுதானே..."

"எனக்குக் குழப்பமாய் இருக்குடி..."

"எதற்கு குழப்பம்..?"

"ரூபிணி.. நான் 'யெஸ்' என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டால் உடனே கல்யாணம் நடந்துவிடும்.. அதற்குப் பிறகு...?"

"இது என்னடி இப்படிக் கேட்கிறாய்..? நானும் உன்னைப் போல் கல்யாணம் ஆகாதவள்தானே.. எனக்கு எப்படித் தெரியும்...?"

"போடி.. நீ வேற... நான் எதைக் கேட்கிறேன்.. நீ எதைச் சொல்கிறாய்.." சலித்துக் கொண்டாள் ப்ரீதி...

"உண்மையிலேயே எனக்கு விளங்கவில்லை ப்ரீதி.."

"ரூபிணி.. என் மனம் கலங்குகிறது.. என்னால் முழு மனதாய் சம்மதம் கொடுக்க முடியவில்லை..."

"ஏன்...?"

"ஏனென்றால்.. ஏனென்றால்.. ஐ திங்.. ஐ லவ் ஜவஹர்..." ப்ரீதியின் முகம் சிவந்தது..

"ஏய்.. இங்கே பாருடா.. கள்ளி... மனதில் மறைத்து வைத்துக் கொண்டு காதலே இல்லையென்று நாடக மாடினாயா?" ரூபிணி கேலி செய்தாள்..

"எனக்கே என்னைத் தெரியவில்லை ரூபிணி.. அத்தை வீட்டில் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தவுடன் சரி சொல்ல முடியாமல் என் மனம் தவித்தது.. அத்தைக்கு என்னை அவங்க மகனுக்க கட்டி வைக்கணும்னு கொள்ளை ஆசை... அன்று அவர்கள் வந்ததே என்னிடம் சம்மதம் வாங்கத்தான்..."

"ஓ.. அதனால்தான் உன் அம்மாவின் முகம் என்னைக் கண்டதும் மாறியதா..?"

"யெஸ்... நாங்கள் டிஸ்டர்ப்பென்ஸ் இல்லாமல் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று நினைத்தார்கள்.. நான் முடிவு சொல்லவில்லை.. தட்டிக் கழித்து விட்டேன்..."

"அன்றே உன்மனம் ஜவஹரிடம் ஓடிவிட்டது... அப்படித்தானே..."

"சரியாய் சொல்லத் தெரியவில்லை.. இந்த ராஸ்கல் தான் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து டார்ச்சர் பண்ணினானே.. எப்படியென்று தெரியவில்லை.. என் மனம்.. அவர் வசம் ரூபிணி..."

அப்போது ஜவஹர்.

"வெள்ளைக் கமலத்திலே...

அவள் வீற்றிருப்பாள்.. புகழ் ஏற்றிருப்பாள்..." என்று பாடியபடியே அவர்களைக் கடந்து சென்றான்.

"அட நீ வெள்ளை நிறத்தில் சுடிதார் போட்டி ருக்கிறாயா..? நானே கவனிக்கவில்லை.. அவர் கவனித்து விட்டார் பாரேன்..."

"வேறு வேலை என்ன இருக்கு அதுக்கு..?"

"ஏன்டி அப்படிச் சொல்லுகிறாய்.. நிறைய வேலை இருக்கே..." ரூபிணி ப்ரீதியிடம் சொல்லிக் கொண்டி ருக்கையில்,

"யாருக்கு நிறைய வேலை இருக்கிறது..?" என்று கேட்டுக் கொண்டே ரூபிணியின் அருகில் வந்து நின்றான் ஜவஹர்.

"வேறு யாருக்கு..? எல்லாம் உங்களுக்குத்தான்..."

"எனக்கா... என்ன வேலை...?"

"பெண் கேட்டுப் போக வேண்டும்.. கல்யாண நாள் குறிக்க வேண்டும்.. இன்விடேசன் அடிக்க வேண்டும்.. மண்டபம் பார்க்க வேண்டும்.. ஊரெல்லாம் அழைக்க வேண்டும்.." ரூபிணி அடுக்கிக் கொண்டே போக..

"போதும்டி.." என்றாள் ப்ரீதி நாணத்துடன்..

ஜவஹருக்கு புரிந்துவிட்டது.. நம்ப முடியாமல் ரூபிணியைப் பார்த்தான்.. அவள் சிரித்தாள்..

"பார்ட்டி சம்மதம் சொல்லியாச்சு.."

"எப்படிங்க...?"

"அது அவளுக்கே தெரியவில்லையாமே.. உங்களுக்காக மும்பை மாப்பிளையை தட்டிக் கழித்து விட்டாள்.."

"உண்மையாகவா...?"

"நிஜம்தான்.. இதோ இவள் இங்குதானே இருக்கிறாள்.. நீங்களே நேரடியாய் கேட்க வேண்டியது தானே..?"

ஜவஹர் ப்ரீதியின் முகம் பார்த்தான்.. அவள் வெட்கத்துடன் கம்யூட்டரின் திரையைப் பார்த்தாள்.. சபாபதி அங்கு வர ரூபிணி எழுந்து கொண்டாள்..

"சபாபதி.. வா.. கேண்டினுக்குப் போகலாம்..."

"என்ன வேணும்ன்னு சொல்லுங்க மேடம்.. நான் வாங்கிக் கொண்டு வருகிறேன்.."

"எனக்கு ஒன்றும் வேண்டாம்.. உனக்கு என்ன வேண்டும்ன்னு சொல்லு.. நான் வாங்கித் தருகிறேன்.."

"ஏதும் விசேசமா மேடம்..."

"ஆமாம்..."

"என்ன விசேசம் மேடம்...?"

"சொல்லுகிறnன் வா..."

சபாபதியைத் தள்ளிக் கொண்டு கேண்டினுக்கு போய் விட்டாள் ரூபிணி.. ஜவஹர் ப்ரீதியைப் பார்த்தான்.

"என்மேல் இப்போதுதான் இரக்கம் வந்ததா..?"

"காதல் வந்தது..."

ரூபிணியும் சபாபதியும் திரும்பி வந்தபோது அவர்கள் இருவரும் மும்முரமாய் பேசிக் கொண்டிருந்தார்கள்.. சபாபதி அதிசயப்பட்டான்..

"என்ன மேடம் இது.. கிழக்கும் மேற்கும் உறவு கொண்டாடுது...?"

"என்ன விசேசம்ன்னு கேட்டாயே.. இது தான் விசேஷம்.."

சபாபதி அங்கிருந்து மாயமானான்.. அடுத்த சில வினாடிகளில் ஆபிஸிலிருந்த அனைவருக்கும் அந்த

விசயம் ஒலிபரப்பப்பட்டு விட்டது.. சபாபதி ஒரு நடமாடும் பிபிஸி..!

# 25

அதே ஹோட்டல்.. அதே மதிய உணவு நேரம்.. அதே ஏஸி ஹால்.. அதே அலுவலகப் பணியாளர்கள்..

ஜவஹர் தன் காதலில் வென்று விட்டதற்காக அலுவலகத்தாருக்கு விருந்து கொடுத்துக் கொண்டிருந்தான்..

"ஏம்ப்பா ஜவஹர் கல்யாணச் சாப்படுதான் போடப் போகிறாயே... அப்புறமும் எதுக்கு ஹோட்டலில் சாப்பாடு.."

"அது கல்யாண விருந்து சார்.. இது காதலில் நான் ஜெயித்ததைக் கொண்டாட நான் கொடுக்கும் விருந்து..."

"உனக்கென்னப்பா குறைச்சல்..? நேர்மையான நடவடிக்கை.. நிறைவான வேலை.. நல்ல படிப்பு.. உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ப்ரீதி கொடுத்து வைத்திருக்க வேண்டும்.."

"என்ன சார் ஜவஹர் சாரை மட்டும் உயர்த்திப் பேசுகிறீர்கள்..? ப்ரீதிக்கு மட்டும் என்ன குறைச்சலாம்.. அவளது அழகு... அறிவு.. படிப்பு... வேலைக்கு.. மும்பையிலிருந்து அவளைக் கல்யாணம் பண்ணிக்க மாப்பிள்ளை பறந்து வருவதாய் இருந்தார்.. ப்ரீதிதான்.. ஜவஹர் சார் மேல் இரக்கப்பட்டு போனால் போகுதுன்னு மும்பை வாழ்க்கையை தியாகம் பண்ணிவிட்டு ஜவஹர் சாரின் கை பிடிக்கப் போகிறாள்.."

"ப்ரீதியைச் சொன்னதும் ரூபிணிக்கு கோபம் பொத்துக் கொண்டு வருவதைப் பாரேன்.. கேட்டாயா ஜவஹர்.. ப்ரீதி போனால் போகுதுன்னு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறதாம்.."

"யாரு.. இவளா என்னைப் போனால் போகுதுன்னு கல்யாணம் பண்ணிக்கப் போகிறாள்..? உங்களுக்குத் தெரியாது சார்.. அம்மணிக்கு ஒரு நாள் என்னைப் பார்க்க வில்லையென்றாலும் வேலையே ஓடாதாம்.. சபாபதியிடம்

ஏன் நான் வரவில்லை.. எனக்குத் தலைவலியா.. இல்லை காய்ச்சலா.. வீட்டில் வேலையென்றால் என்ன வேலைன்னு கேட்டு உயிரை எடுத்துவிடுவாளாம்... இதற்காகவே.. தலை போகிற அவசரம் என்றாலும் நான் லீவ் எடுப்பதில்லை.. எப்போது இவள் லீவ் போடுகிறாளோ.. அப்போதுதான் நானும் போடுவேன்..."

ஜவஹர் ப்ரீதியைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரிக்க ப்ரீதி சபாபதியை முறைத்தாள்.

"சபாபதி.. நீ இவ்வளவு பெரிய நம்பிக்¡த் துரோகியா..?"

"என்ன மேடம் இப்படிச் சொல்கிறீர்கள்.. எனக்கு லேடிஸ் சைக்காலஜி கொஞ்சம் தெரியும் மேடம்.. அதனால்தான் ஜவஹர் சாரின் காதல் ஜெயிக்கும் என்பதில் உறுதியாக இருந்தேன்..."

"என்ன சைக்காலஜியைச் சொல்லப் போகிறாய் சபாபதி.. பெண்கள் வேண்டும் என்றால் வேண்டாம் என்று அர்த்தம்.. வேண்டாமென்றால் வேண்டும் என்று அர்த்தம்.. அதுதானே.."

ரூபிணி கேட்டாள்.. சபாபதி அதிசயப்பட்டான்..

"எப்படி மேடம்.. இவ்வளவு கரெக்டாக சொல்கிறீர்கள்..?"

"இது ஒரு பிரம்ம ரகசியமா..? எல்லோரும் வாயைத் திறந்தால் பெண்களின் மனோபாவத்தைத்தான் பிட்டுப் பிட்டு வைக்கிறீர்களே.. ஆமாம் சபாபதி.. பெண்களைப் பற்றி மட்டும்தான் சைக்காலஜியில் சொல்லப்பட்டி ருக்கிறதா..? ஆண்களைப் பற்றிச் சொல்லவே இல்லையா..?"

"நான் இந்தச் சண்டைக்கே வரவில்லை மேடம்.. எப்படியோ நம் ஆபிஸில் ஒரு காதல் கதை ஆரம்பித்து கல்யாணத்தில் முடிந்து விட்டது.. ஆனால் எனக்குத் தான் இதில் ஒரு வருத்தம்..."

"அடப்பாவி சபாபதி.. உன்னைத் தினமும் தனியாய் கவனித்து.. அப்பப்போ சிறப்பாய் கவனித்து வந்தேனே.. அந்தக் கவனிப்பு நின்று விடும் என்ற பயமா..?"

"அந்தக் கவலையெல்லாம் இல்லை ஜவஹர் சார்.. நான் உங்கள் வீட்டுப் பிள்ளை.. காலம் முழுவதும் என்னைக் கவனிக்காமல் விட்டுவிடமாட்டீர்கள்.. எனக்கு என்ன வருத்தம்ன்னா இனிமேல் ப்ரீதி மேடத்தின் டிரஸ் கலரைப் பார்த்து தினமும் நீங்கள் பாடும் சிச்சுவேசன் சாங்கை கேட்கவே முடியாதே.. அதுதான்.."

சபாபதி சோகமாய் முகத்தை வைத்துக் கொள்ள ப்ரீதி வெட்கத்துடன் முகம் கவிழ்ந்தாள்.. ஜவஹர் அவளை ஆசையுடன் பார்த்தான்..

அவர்களது உற்சாகத்தை வயிற்றெரிச்சலுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.. மூர்த்தி இந்த ஜவஹருக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா..? அவனும்தான் அந்த ஆபிஸிற்கு மாற்றலாகி வந்த முதல் நாளே ப்ரீதிக்கு நூல் விட்டுப் பார்த்தான்.. ஜவஹர் நேரடியாகவே எச்சரித்து விட்டான்..

'பாரு மூர்த்தி.. உன் விளையாட்டையெல்லாம் வேறு யாரிடமாவது வைத்துக் கொள். அவள் என் காதலி.. மீறி வாலை ஆட்டினால் உன் எலும்பை எண்ணி விடுவேன்.. ஜாக்கிரதை...'

எந்த நேரத்தில் அவன் அந்த வார்த்தைகளைச் சொன்னானோ.. உண்மையிலேயே ஹரிஹரனின் ஆள்கள் மூர்த்தியின் எலும்பை எண்ணிவிட்டார்கள்.

அன்று இதே ஹோட்டலில் அடிவாங்கிய மூர்த்திக்கு இன்றும் அந்த அடியின் வலி நினைவில் நிற்கிறது.. அவனது டேபிளின் அருகே வந்து உணவுத் தட்டை வைத்த சர்வர்,

"நீங்களா சார்... இப்போ உடம்பு எப்படியிருக்கிறது.. தேறிவிட்டிங்களா...?" என்று விசாரித்து வைத்தான்.

அன்று ஹரிஹரனின் பி.ஏ. அழைத்தாகக் கூறி அழைத்துச் சென்ற அதே சர்வர்.. அத்தோடு நில்லாமல் அங்கிருந்த இன்னொரு சர்வரிடமும் மூர்த்தியைக் காட்டி விவரம் சொல்லி வைத்தான். மூர்த்தியின் உடல் குப்பென்று வியர்த்தது..

கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு ஜவஹர் பக்கம் பார்த்தான்.. அதே நேரம் ரூபிணியுடன்

ஏதோ பேசி சிரித்துக் கொண்டிருந்த ஜவஹர் மூர்த்தியைப் பார்த்தான்..

'என்னைப் பார்த்துத்தான் சிரிக்கிறார்கள்...' மூர்த்தியின் மனதில் துவேசம் பொங்கியது..

நளினமாய் வாய் பொத்தி சிரித்துக் கொண்டிருந்த ரூபிணியைப் பார்த்தவளின் நெஞ்சம் கொதித்தது.. எப்பேர்ப் பட்ட பேரழகி.. இவளை அடைய அவனுக்கு கொடுத்து வைக்கவில்லையே.. அவளை பார்க்கக் கூடப் பயப்படும்படி ஹரிஹரன் செய்து விட்டானே.. ஹரிஹரன் காதலி இவள் என்று ஆகிவிட்ட பின் அவளது நிழலைப் பார்ப்பது கூட ஆபத்தானது என்று ஆகிப்போனது..

மூர்த்திக்கு அங்கு அமர்ந்திருக்கவே பிடிக்கவில்லை. சாப்பிட்டேன் என்று பெயர் பண்ணி விட்டு மற்றவர்களுக்கு முன்னால் அவன் கிளம்பி விட,

"ஏன் மூர்த்தி.. பாதிச் சாப்பாட்டில் கிளம்புகிறாய்..? போன தடவை இதே ஹோட்டலில் விருந்து நடந்த போதும் பாதி விருந்தில் கிளம்பிவிட்டாய்.. இன்றும் அதே போல் கிளம்புகிறாய்.. இந்த ஹோட்டலுக்கும் உனக்கும் ராசி இல்லையோ..." என்று அக்கறையாய் வினவுவது போல் ஜவஹர் வினவினான்..

ரூபிணி 'களுக்'கென்று வாய் பொத்திச் சிரித்துவிட்டாள்.. மூர்த்தியின் விழிகள் கோபத்தில் சிவந்தன.. அவளை முறைத்தான்.

'உன் கோபம் என்னை என்ன செய்து விடும்..?' என்ற அலட்சியத்துடன் அவனைப் பார்த்தாள் அவள்..

அதுதான் அவளுக்கு வினையாக அமைந்து விட்டது. நல்லவனை நேரடியாய் எதிர்க்கலாம்.. அயோக்கியனை நேரடியாய் எதிர்க்க முனையலாமா...?

'துஷ்டனைக் கண்டால் தூர விலகு...'

பெரியவர்கள் அனுபவஸ்தர்கள்.. சும்மா எதையும் சொல்லி வைக்கவில்லை.. 'ஒல்டு இஸ் கோல்டு' என்பார்கள்.. அது உண்மைதான்.. பழமொழிகள் ஒவ்வொன்றும் நம்

வாழ்க்கைக்கு பாடம் சொல்பவை.. வழிகாட்டுபவை.. நாம் தான் அதைப் புரிந்து கொள்வதில்லை..

ரூபிணி இக்காலத்துப் பெண்.. பழமொழியை விட பாரதியாரை நேசிப்பவள்.. ஹரிஹரனைக் காதலிப்பவள்..

"பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ

பயம் கொள்ளலாகாது பாப்பா...

மோதி மிதித்து விடு பாப்பா - அவர்

முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா..."

பாரதியார் இந்த வார்த்தைகளையெல்லாம் பையனிடம் சொல்லியிருக்கலாம்.. பெண்ணைப் பெற்ற மனிதர்.. பாப்பாவிடம் சொல்லிவிட்டார்.. இது ஆண்களின் உலகம் என்பதை பெண் விடுதலைக்கு பாடுபட்ட அந்த மகாகவி உணராமல் போனார்..

## 26

மூர்த்தி முட்டாள் அல்ல.. விழுப்புரத்தில் ரூபிணியின் நிழலைத் தொட்டாலும் தன் தலை தன் உடலில் நிலைக்காது என்பதை நன்கு உணர்ந்தவன்.. ஹரிஹரன் ஓர் வேட்டையாடும் வேங்கை என்பதை நன்கு அறிந்தவன்.. முகம் காட்டி சண்டையிடுவது வீரர்களின் யுத்தம்.. முகம் மறைத்து இன்னல் விளைவிப்பது கோழைகளின் துரோகம்.. மூர்த்தி வீரனல்ல.. கோழை.

எனவே அவன் ஒரு மொட்டைக் கடிதத்தை ரூபிணியின் பெற்றோருக்கு அனுப்பினான்..

கவனமாக டைப் செய்யப்பட்டு தன் முன்னால் இருந்த அந்தக் கடிதத்தை நூறாவது முறையாக எடுத்துப் படித்தார் ரெங்கநாதன்.. அன்று காலையில் அவர் பேங்கிற்கு வந்து அமர்ந்ததும்,

"சார்... உங்களுக்கு ஒரு ஸ்பீடு போஸ்ட்..." என்றபடி போஸ்ட்மேன் வந்தார்..

கையெழுத்துப் போட்டு வாங்கின ரெங்கநாதன் தன் முகவரி டைப் அடிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தவுடன் யார் அனுப்பியது என்று பார்த்தார்.. நல்லான், தூத்துக்குடி என்றிருந்தது..

மூர்த்திதான் தன் கையெழுத்தை கவனமாய் தவிர்த்து டைப் செய்து தூத்துக்குடிக்கு போயிருந்தபோது அங்கேயிருந்த போஸ்ட் ஆபிஸில் ஸ்பீடு போஸ்டில் அனுப்பிவிட்டு வந்து விட்டானே..

ரெங்கநாதன் சாதாரணமான மனநிலையுடன் தான் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.. டைப் செய்யப்பட்டிருந்த கடித வரிகளில் அவரது பார்வை ஓட ஆரம்பிக்க.. அவரது இதயம் துடிக்க ஆரம்பித்தது..

'ஹலோ மிஸ்டர் ரெங்கநாதன்..!'

நலமா..? யார் நலம் விசாரிக்கிறார்கள் என்று யோசிக்கிறீர்களா.. எல்லாம் உங்கள் நலம் விரும்பி தான் நலம் விசாரிக்கிறேன்.. எப்படியிருக்கிறீர்கள்..?

உங்களுக்கென்ன சார்... விழுப்புரம் தொலைத் தூரத்தில் இருக்கிறது.. கோவில்பட்டியில் இருக்கும் உங்களுக்கு விழுப்புரத்தில் நடக்கும் கதை தெரியாமல் நிம்மதியாக உண்டு, உறங்கி,எழுவீர்கள்.. இங்கே உங்கள் மகள் ரூபிணி இந்த ஊரே மிரளும் தாதாவிடம் உறவாடிக் கொண்டிருப்பாள்.. மிஸ்டர் ரெங்கநாதன்.. அந்த ஹரிஹரனின் கண் முன்னால் அவனது பெற்றவர்களை ஒரு ரௌடி கொன்றுவிட்டான்.. இவன் பதிலுக்குப் பதில் அந்த ரௌடியை அதே இடத்தில் வெட்டிக் கொன்று பழிக்கும் பழி வாங்கினான்.. எவரேனும் அவனுக்கு எதிராய் ஓர் பார்வை பார்த்துவிட்டாலே பூண்டோடு அழித்து விடுவான்.. அப்படிப்பட்ட பயங்கரவாதியின் பள்ளியறைப் பாவையாய் உங்கள் மகள் வாழ ஆசைப்படுகிறாள்.. நீங்கள் தெருமுனையில் சத்தம் கேட்டால் ஜன்னல் கதவுகளைக் கூட இறுக மூடிக் கொண்டு வாழும் மிடில் கிளாஸ் பயந்த மனிதர்.. உங்கள் மகளுக்க கத்தி... துப்பாக்கி.. வெடி குண்டுடன் வாழ்க்கை நடத்தும் ஒரு மனிதனையா மாப்பிள்ளையாய் பார்ப்பீர்கள்..? இந்த விழுப்புரத்திற்கு

வந்து கேட்டுப் பாருங்கள்.. உங்கள் மகள் ஹரிஹரனின் காதலி என்று இந்த ஊரே சொல்லும்.. மனச்சாட்சிக்கு அஞ்சி வாழும் உங்கள் மகளை ஒரு பயங்கரவாதியின் கையில் ஒப்படைக்கப் போகிறீர்களா... யோசியுங்கள்.

- உங்கள் நலம் விரும்பி.

ரெங்கநாதனுக்கு நெஞ்சு வலிப்பது போல் இருந்தது. செல்போனை எடுத்து மனைவியை அழைத்தார்..

"என்னங்க... இப்போதுதானே வேலைக்குப் போனீர்கள் அதற்குள் அவசரமாய் கூப்பிடுகிறீர்களே..." என்றாள் அதே ஊரில் வேறு ஒரு பேங்கில் வேலை பார்க்கும் வீரலட்சுமி.

"லட்சுமி.. உடனே லீவு போட்டுவிட்டு வீட்டுக்கு வாடி.."

"ஏங்க.. உடம்பு சரியில்லையா..."

"எதுவுமே சரியில்லைடி.. கேள்வி கேட்காமல் கிளம்பி வா.. நானும் லீவ் சொல்லி விட்டு வருகிறேன்..."

அவசரமாய் எழுந்த வீரலட்சுமி பேங்க் மேனேஜரிடம் லீவு சொல்லிவிட்டு அவரின் அர்ச்சனைகளையும்

வாங்கிக் கட்டிக் கொண்டு பேங்கை விட்டு வெளியே வந்தாள்.

"ஏம்மா... லீவு வேண்டுமென்றால் நேற்று ஈவினிங்கே சொல்ல வேண்டியதுதானே.. காலையில் வந்தவுடன் சொன்னால் உங்கள் சீட்டிற்கு வேறு யாரை அரென்ஜ் பண்ணுவது..?"

"அர்ஜன்ட் சார்.. ப்ளீஸ்.."

"என்னவோ செய்ங்க.. அதுதான் வி.ஆர்.எஸ். ஸ்கீம் வந்து விட்டதே.. பேசாமல் வி.ஆர்.எஸ். கொடுத்து விட்டுப் போக வேண்டியதுதானே.. ஏன் வேலைக்கு வந்து என் உயிரை வாங்குகிறீர்கள்...?"

வீரலட்சுமி எரிச்சலுடன் மணி பார்த்தாள்..

'இந்த மனுசன் பண்ணிய அளும்பால் காலையில் வந்தவுடன் மேனேஜரிடம் திட்டு வாங்க வேண்டி யிருக்கிறது. எல்லாம் என் நேரம்..'

ரெங்கநாதன் தன் ஹீரோ ஹோண்டாவை அவளருகில் நிறுத்தி,

"ஏறு..." என்றார்..

"என்ன விசயம்...?"

"ரோட்டில் சொல்ல முடியாத விஷயம்.."

வீரலட்சுமி வாயை மூடிக் கொண்டு வண்டியில் ஏறினாள்.. வீட்டிற்குள் நுழைந்து கதவைச் சாத்தி தாழிடும் வரை ரெங்கநாதன் எதுவுமே பேசவில்லை..

"உஷ் அப்பாடா..." என்றபடி பேனின் சுவிட்சைத் தட்டிவிட்டு சோபாவில் சரிந்த வீரலட்சுமி.

"என்னன்னு சொல்லுங்களேன்.." என்றாள்.

"சொல்லாவிட்டால் என்ன.. படித்துத் தெரிந்து கொள்.." ரெங்கநாதன் அவள் முன்னால் கவரைத் தூக்கி எறிந்தார்..

"ஏன் இப்படி போடுறீங்க..?"

"உன் மகள் செய்திருக்கும் வேலைக்கு வேறு என்ன செய்வது..?"

"என் மகளா... உங்கள் மகளில்லையா..?"

"பேசாதேடி.. மூன்றைப் பெற்றோம்.. மூத்ததும், கடைசியும் ஒழுங்காய் நம் பேரைக் காப்பாத்துகிறதுகள்.. இரண்டாவதா ஒன்னு வந்து பிறந்திருக்கே.. நம்மை உயிரோடு கொன்று விடுவாள் போல இருக்குடி வீரலட்சுமி."

"யாரு.. நம்ம ரூபிணியா..? அவள் தங்கம்ங்க.."

"அதனால்தான் அவளை ஒரு தாதா கடத்தப் பார்க்கிறான்.."

"என்னங்க நீங்க என்னென்னவோ சொல்கிறீங்க.. எனக்குப் பயமாய் இருக்குதுங்க..."

"முதலில் அந்த லெட்டரைப் படி..."

"வீரலட்சுமியின் முகம் பயத்தால் வெளுத்திருந்தது. பதட்டத்துடன் லெட்டரைப் பிரித்துப் படித்தாள்."

"ஏங்க இது மொட்டைக் கடிதாசி.."

"ஆனால் அதில் இருக்கும் விவரம் உண்மை..."

"எதன் அடிப்படையில் சொல்கிறீர்கள்.."

"ஹரிஹரனைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.. இவன் மறைமுகமாய் பெயரைக் குறிப்பிடாமல் நேரடியாய் ஹரிஹரனைக் குற்றம் சொல்கிறான்.. விழுப்புரத்திற்கு வந்து கேட்டுப் பார் என்கிறான்.."

"இப்போது என்ன செய்வது...?"

"இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது..."

"என்னங்க.."

"என் அக்கா மகனுக்கு ரூபிணியை கட்டிக் கொடுத்து விடலாம்.."

"அவனுக்கா...? அவனைத்தான் வேண்டாமென்று ரூபிணி சொல்லி விட்டாளே.. நமக்கும் அவனைப் பிடிக்காதே..."

"ஏன்.. அவனுக்கென்னடி குறைச்சல்..? படித்தி ருக்கிறான்.. தாலுகா ஆபிஸில் வேலை பார்க்கிறான்.. என் அக்காவும் ரொம்ப நாளாய் பெண் கேட்குது..."

"ஏங்க.. அவன் குடியும்.. கூத்தியுமாய் அலைகிறானே.. அவனுக்கா நம் பெண்ணைக் கொடுப்பது..?"

"வேறு வழி...? பயங்கரவாதிக்கு பொறுக்கி பெட்டரில்லையா..?"

வீரலட்சுமி விக்கித்துப் போய் நின்று விட்டாள்...

## 27

"கிளியை வளர்த்து பூனையிடம் கொடுப்பதா..?"

"புலி கையில் கொடுப்பதற்கு பூனை கையில் கொடுப்பது பெட்டர்டி..."

"கல்யாணம் பண்ணிக்காமலே குடும்பம் நடத்து கிறவனுக்கு பெண்டாட்டி எதற்கு..?"

"இத்தனைக்கும் பின்னால் நம் பெண்ணை யார் கட்டுவார்கள்.."

"அதற்கு அவளுக்குக் கல்யாணம் என்ற ஒன்றையே பண்ணாமல் விட்டு விடலாமே..."

"விட்டால் அவளைப் பிடிக்க முடியாது போல இருக்கேடி..."

"அதுக்காக அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வர வேண்டாம்.. இப்போதைக்கு அவளை உடனே கிளம்பி வரச் சொல்லுங்க.. வந்தவுடன் லீவை எக்ஸ்டென்சன் பண்ணச் சொல்லலாம்.. நமக்குத் தோதான இடமாய் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்.. அதை விட்டு விட்டு கிடைத்தது சாக்குன்னு உங்க அக்காள் மகனுக்கு என் பெண்ணைக் கொடுக்கணும்னு பேசினீங்கன்னா நடக்கிறதே வேற.. நான் பொம்பளையா இருக்க மாட்டேன்.. சொல்லி விட்டேன்.."

ரெங்கநாதன் வேகம் தணிந்தார்..

"இல்லைடி வீரலட்சுமி.. நான் எதற்கு சொல்கிறேன்னு கொஞ்சம் கேட்டுப் பேசுடி..."

"என்னத்தைக் கேட்கிறது..? எனக்கு உங்கள் புத்தி போகும் போக்குத் தெரியாதா..? இப்ப என்ன... மொட்டைக் கடுதாசி வந்திருக்கு.. ரூபிணியைக் கூப்பிட்டு விசாரிப்போம்.. அவள் பக்கம் என்ன நியாயம் இருக்குன்னு கேட்போமே.."

"அவள் உண்மையிலேயே அந்த ஹரிஹரனைக் காதலித்திருந்தால்..."

"கேட்போம்.. அவள் சொல்லட்டும்.. அதன் பின்னால் ஒரு முடிவு எடுப்போம்.."

"என் அக்கா மகனைக் கூப்பிட்டுப் பேசும் முடிவுதானே.."

"அதற்கு என் மகளின் கழுத்தை நெரித்துக் கொன்று விடலாம்.." வீரலட்சுமி வெறி கொண்டவளாய் முறைத்தாள்.. ரெங்கநாதன் பின் வாங்க வேண்டிய நேரம் வந்து விட்டதை உணர்ந்து பின் வாங்கினார்.. செல்போனை எடுத்து ரூபிணியிடம் பேசினார்..

"அப்பா.." ரூபிணியின் குரல் கேட்டது..

"நீ உடனே லீவு போட்டுவிட்டு கிளம்பி வாம்மா..." ரெங்கநாதன் பல்லைக் கடித்தவாறு கூறினார்..

"என்னப்பா.. என்ன ஆச்சு..." ரூபிணி பதட்டமாகக் கேட்டாள்..

"இங்கே உன் அம்மாவுக்கு உடம்புக்கு முடியலைம்மா.. இழுத்துக்கோ.. பறிச்சுக்கோன்னு கிடக்கிறா.." மனைவியை முறைத்துக் கொண்டே கூறினார் ரெங்கநாதன்..

'உங்க அக்கா மகனுக்கு பொண்ணு கொடுக்க லைன்னா.. என்னை போய் சேர வைச்சிருவீங்களா..?' வீரலட்சுமி விழியால் கணவரை சுட்டெரித்தாள்.

"ஐயையோ.. அப்பா.. அம்மாவுக்கு இப்ப எப்படியிருக்கு..."

"உன்னைப் பார்த்தால்தான் உயிர் தங்குமாம்.. உடனே புறப்பட்டு வா.."

ரூபிணி கதறி அழுக ஆரம்பித்து விட்டாள்.. ப்ரீதி சமாதானப்படுத்த.. அலுவலகமே அவளைச் சூழ்ந்து கொண்டது.. ஒரு வழியாய் லீவு லெட்டரை எழுதிக் கொடுத்து விட்டு ரூபிணி ஹாஸ்டலுக்கு விரைய ஜவஹர் கேண்டின் பக்கம் சென்றான்.. இவன் வருவதைக் கவனிக்காமல் மூர்த்தி யாருடனோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தான்.

"ஆமாம்டா.. காரியம் சக்ஸஸ் ஆகிவிட்டது.. என் ஐடியா வொர்க் அவுட் ஆகி விட்டது.. நான் போட்ட மொட்டை கடுதாசி இன்னைக்கு அவங்க கையில் கிடைச்சிருச்சு போல.. அம்மாகாரிக்கு சீரியஸ்ன்னு அப்பன்காரன் போன் பண்ணினான்.. பட்சி பதறி அழுது கொண்டு ஓடுது.. திரும்பி வரும்போது மூக்கணாம் கயிறோடுதான் வரும்.. இந்த மிடில் கிளாஸ்காரங்க சைக்காலஜி எனக்குத் தெரியாதா..? எங்கே வெடி வைத்தால் எப்படி வெடிக்கும்ன்னு எனக்கு நல்லாவே தெரியும். யாரைப் பார்த்து தெனாவெட்டாய் சிரிக்கிறா... ம்.. இப்ப இந்த மூர்த்தி யாருன்னு காட்டி விட்டேனில்ல..? ஹா... ஹா..."

ஜவஹர் காபி குடிக்காமலே ப்ரீதியிடம் திரும்பிச் சென்றான்.

"என்னவாம் ஐயா முகம் வேர்த்து வழியுது...?"

"வெயில்.. அதுதான் உன் பக்கத்தில் இருந்தால் குளுகுளுவென இருக்கும்ன்னு நினைத்து வந்தேன்..."

ப்ரீதி முகம் சிவந்தாள்..

"ஐயே... ஆபிஸில் வழியாமல் போய் வேலையைப் பாருங்கள்.."

"ப்ரீதி..."

"ம்ம்.."

"இந்த ரூபிணியிடம் நீ ஒரு விசயம் சொல்ல வேண்டுமே..."

"என்ன...?"

ஜவஹர் விசயத்தைச் சொன்னான்.. ப்ரீதி முகம் மாறினாள்..

"இது இவனுடைய வேலையா..? பாவி... ரூபிணி துடித்துப் போய் விட்டாள்.. பெற்ற தாய்க்கு உடல் நிலை சரியில்லையென்றால் எந்த மகள்தான் தாங்கிக் கொள்வாள்..?"

ப்ரீதி செல்போனை எடுத்து ரூபிணியின் எண்களை அழுத்தினாள்..

"சொல் ப்ரீதி..."

"அழுகிறாயா... இதற்குத்தான் போன் பண்ணினேன்.. நீ அழுகாதே ரூபிணி.. உன் அம்மாவிற்கு ஒன்றும் இல்லை.. எல்லாம் இந்த மூர்த்தி ராஸ்கல் செய்த வேலை.."

ப்ரீதி விவரம் சொல்லிவிட்டு போனை அணைத்தாள்.. ஹாஸ்டலில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த ரூபிணி தன்நிலைக்கு வந்தாள்.. பதற்றம் தணிந்து புத்தி வேலை செய்ய ஆரம்பித்தது..

இப்போது அவளுக்கு உடனடியாக ஹரிஹரனின் ஆலோசனை தேவை... ஹரிஹரனை போனில் அழைததாள்.. அழைத்த மறுகணம் போனில் அவன் குரல் ஒலித்தது..

"என் கண்ணம்மாவிற்கு மதியத்திலும் என் நினைவா..?"

"ஆமாம்.. உச்சி வெயிலில் உங்களை நினைத்து உருகுகிறேன்.. அதனால்தான் உங்களோடு கொஞ்சிக் குழாவ அழைத்தேன்..."

"என்னடா... எதற்கு இந்தக் கோபம்..?"

"ஹரி.. என் வீட்டாருக்கு என் காதல் தெரிந்து விட்டது..."

"என்றைக்கு இருந்தாலும் தெரிய வேண்டிய மேட்டர்தானே.. அதற்கு ஏன் இவ்வளவு பதட்டம்...?"

"நான் சொல்லி அவர்களுக்கு என் காதல் தெரியவில்லை..."

"வேறு எப்படித் தெரிந்தது...?"

"என் ஆபிஸில் ஓர் அயோக்கியன் மொட்டைக் கடிதம் போட்டிருக்கிறான்.. அதில் என்ன என்ன தப்புத் தப்பாய் எழுதி இருந்தானோ.. தெரியவில்லையே..."

"வாட்... யார் அந்த ஸ்கௌன்ட்ரல்...?"

"நீங்கள் வேறு கோபப்படாதீர்கள் ஹரி..."

"யார் அவன்னு கேட்கிறேனில்ல..."

"எல்லாம் ஏற்கனவே நீங்கள் மொத்து மொத்தென்று மொத்திய ராஸ்கல்தான்.."

"ஹோட்டலில் உன்னை டார்ச்சர் பண்ணியவனா.."

"அவன்தான்.. என்ன எழுதி வைத்தானோ... தெரிய வில்லை.. அப்பா உடனே புறப்பட்டு வரச் சொல்லி போன் பண்ணி விட்டார்... சும்மாவும் சொல்லவில்லை.. அம்மாவுக்கு சீரியஸ்.. நீ உடனே வராவிட்டால் உன் அம்மாவின் உயிருக்கு ஆபத்துன்னு சொல்லி விட்டார்... என் உயிரே பறந்து விட்டது ஹரி.. இப்போதுதான் ஹாஸ்டலுக்கு வந்து துணிகளை பேக் பண்ணிக் கொண்டிருந்தபோது ப்ரீதி போன் பண்ணிச் சொன்னாள்.. மூர்த்தி யாரிடமோ போனில் அவனுடைய வீரப்பிரதாபத்தைச் சொல்லிக் கொண்டிருந்தானாம்.. ஜவஹர் கேட்டு விட்டு ப்ரீதியிடம் வந்து சொன்னாராம்.. ஹரி... என்னை எப்படி ஆட்டி வைத்து விட்டான் பார்த்தீர்களா..."

ரூபிணியின் குரலில் வேதனை வழிந்தது.. ஹரிஹரனின் கண்கள் சிவந்தன.. அவன் ரூபிணியிடம் போனில் பேசியபடியே ஒரு பேப்பரை எடுத்து எதையோ எழுதி அவனது உதவியாளரிடம் கொடுத்தான்.. அவன் வெளியேறினான்...

# 28

"ரூபிணி.. காரை எடுத்துக் கொண்டு வந்து தெரு முனையில் வெயிட் பண்ணுகிறேன் வந்து விடு..." ஹரிஹரன் கூறியதும் ரூபிணிக்கு தூக்கி வாரிப் போட்டது..

"வாட் இஸ் திஸ் ஹரி...? எனக்கு இருக்கிற பிரச்சனைகள் போதாதா...? இன்னும் ஒன்றும் வேண்டுமா..? நான் கோவில்பட்டிக்குப் போகப் போகிறேன்.. அங்கே உங்கள் காரில் எப்படிப் போக முடியும்.." ரூபிணி படபடத்தாள்..

"வெயிட்... வெயிட்.. ஏன் டென்சனாகிறாய்..? கோவில்பட்டிக்கு ரோடு கிடையாதா..? ஒற்றையடிப் பாதைதானா..? அங்கே கார் போகாதா...?"

"விளையாடுகிறீர்களா...?"

"ஆமாம்... நான் எல்.கே.ஜி. படிக்கிற பையன் பாரு.. உன்னுடன் விளையாடுகிறேன்.. என்ஜினியரிங் காலேஜ் நடத்துகிறவன்டி... உன் ஊருக்கு நடந்தா போகப் போகிறாய்..?"

"பஸ்ஸில் போவேன்..."

"அதற்குப் பதில் என் காரில் போகலாம் வா.."

"ஹரி.. என் அப்பாவிற்கு இது தெரிந்தால் என்னைக் கொலையே பண்ணி விடுவார்..."

"தெரிந்தால்தானே..."

"என்ன சொல்கிறீர்கள்...?"

"இதோ பார்... உன் ஹாஸ்டல் இருக்கும் தெரு முனையில் வந்து காரில் ஏறிக் கொள்.. கோவில்பட்டி போனதும் உன் வீடு இருக்கும் ஏரியா முனையிலேயே இறங்கி ஆட்டோ பிடித்துப் போய்விடு..."

"அதுதான் எதற்கு...?"

"எல்லாம் காரணமாகத்தான்.. என்னால் உன்னை அங்கே அனுப்பிவிட்டு இங்கே நிம்மதியாய் உட்கார்ந் திருக்க

முடியாது.. உன் வீட்டில் என்ன நடந்தாலும் அது எனக்கு உடனடியாகத் தெரிந்தாக வேண்டும்.."

"அதை நான் போனில் சொல்கிறேனே..."

"அதைக் கேட்க நான் விழுப்புரத்தில் இருக்க மாட்டேனே.. உன் கூட கோவில்பட்டிக்கு வந்து விடுவேனே.."

"இது என்ன பிடிவாதம் ஹரி...?"

"என் பிடிவாதத்தைப் பற்றி இப்போதுதான் உனக்குத் தெரியுமா..? நீ என்னுடையவள் என்று நான் தீர்மானித்த பின்பு தனியாக உன்னை இந்த விழுப்புரத்தின் எல்லையைத் தாண்ட விடுவேனென்று நீ நினைத்தாயா? சும்மா என் மனக் கதவை நீ லேசாய் தட்டியதற்கே உன்னைப் பற்றிய அனைத்து விவரங்களையும் சேகரித்து என் கண்காணிப்பில் உன்னைக் கொண்டு வந்து விட்டவன் நான்.. இப்போதோ என் நெஞ்சத்தில் நீ குடியேறி விட்டாய்.. உன்னை என் பிடியில் இருந்து விலகிச் செல்ல அனுமதிப்பேன் என்று நினைத்தாயா..?" ஹரிஹரனின் குரலில் கோபம் இருந்தது..

"யார் விலகிச் செல்வது ஹரி...? நானா...? உங்களை விட்டா...? நீங்களாய் ஏன் அப்படி நினைத்துக் கொள்கிறீர்கள்..?"

"அப்புறம் ஏன் கோவில்பட்டிக்குப் போகிறாய்...? போகாதே..."

"கூப்பிடுவது என் பேரண்ட்ஸ் ஹரி..."

"அவர்கள் கூப்பிட்டால் நீ போய் விட வேண்டுமா..?"

"போகாமல் எப்படி இருக்க முடியும்...?"

"இப்போது இப்படிச் சொல்கிறவள்.. நாளை அவர்கள் சொல்லும்போதே என்னால் எப்படி மறுத்தப் பேச முடியும்..? என்று சொல்லிக் கொண்டே அவர்கள் ஏற்பாடு பண்ணும் கல்யாணத்திற்கு சம்மதம் சொல்ல மாட்டாய் என்பது என்ன நிச்சயம்...?"

"ஹரி..." ரூபிணி அதிர்ந்து போனாள்...

அவனா இப்படிப் பேசுகிறான்..? பேசலாமா..? அவளைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்கலாமா..?

"சொல்லு.. நீ அவர்கள் சொல்வதைச் செய்ய மாட்டாய் என்பதற்கு என்ன உத்தரவாதம்..?" ஹரிஹரன் மீண்டும் கேட்டான்..

"உங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை..." ரூபிணியின் வார்த்தைகளில் சீற்றமிருந்ததது..

"என்னடி சொன்னாய்...? எனக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் உனக்கு இல்லையா...?" ஹரிஹரன் கோபமாய் கேட்டான்..

"ஆமாம்.. உங்களுக்கு நான் ஏன் பதில் சொல்ல வேண்டும்..? எனக்கென்ன கட்டாயம்...?" ரூபிணியும் கோபத்தில் வார்த்தைகளை சிதறி விட்டாள்..

"எனக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் உனக்கு இல்லையா..?" ஹரிஹரனின் குரலில் புயலை உள்ளடக்கிய அமைதி இருந்தது.

"இல்லை..." ரூபிணியின் குரலில் வேதனையால் பிறந்த வன்மம் இருந்தது..

"உனக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையா..?" ஹரிஹரன் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டான்..

"இல்லை..." ரூபிணியும் பல்லைக் கடித்துக் கொண்டே பதில் சொன்னாள்..

"அப்புறம் ஏண்டி... அன்று ஜமுனா.. நந்தகோபால் கல்யாண ரிசப்ஷனில் கல்யாண மண்டபத்தின் தோட் டத்தில் இருட்டில் என்னோடு கொஞ்சிக் குழாவினாய்..?"

ஹரிஹரன் அக்கினிப் பிழம்பாய் கேட்டான்.

"ஹரி..." மீண்டும் ரூபிணி அதிர்ந்தாள்..

என்னவெல்லாம் பேசி விட்டான்.. கோபம் வந்தால் இப்படியெல்லாம் பேசுவார்களா... கேட்பார்களா...?

எந்த முன்னிரவுப் பொழுது அவளது நெஞ்சத்தில் இனித்து உறைகின்றதோ... அந்தப் பொழுதை நினைத்து இப்பொழுது அருவெறுத்தாள் ரூபிணி.. எவனிடம் மயங்கினாளோ... அவனைக் கண்டு இன்று பயந்தாள்..

"சொல்லுடி... ஏன் வாயடைத்து மௌனமாகி நிற்கிறாய்...? பேசு... சம்பந்தமில்லாதவன் நெஞ்சிலா அன்று சாய்ந்து நின்றாய்...? உன்னைப் போன்றவளுக் கெல்லாம் அது விளையாட்டாய் போய் விட்டதா...? உனக்கு புது வண்டி வாங்கி அனுப்பும்போது என்ன எழுதியிருந்தேன்...?" ஹரிஹரன் குற்றம் சாட்டும் பாவனையில் பேசிக் கொண்டிருந்தான்..

"எனக்கு நினைவில்லை..." ரூபிணி விரக்தியுடன் பதிலளித்தாள்..

"உனக்கு எப்படி நினைவிருக்கும்...? எதை யெதையோ மறந்தவள் தானே நீ... இது எப்படி நினைவிருக்கும்.." ஹரிஹரன் எகத்தாளமாய் கூறினான்..

"நீங்கள் நினைவு வைத்திருக்கிறீர்களே... அது போதும்.. இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்..? நீங்கள் வாங்கிக் கொடுத்த புது வண்டி வேண்டுமா..? திருப்பி அனுப்பி விடுகிறேன்.. வாங்கிக் கொள்ளுங்கள்.." ரூபிணி எடுத்தெறிந்து பேசினாள்..

ஹரிஹரனுக்கு வெறி பிடித்து விட்டது..

"திருப்பி அனுப்புவாயா...? எதை...?"

"ஏன்... உங்கள் வண்டியைத்தான்.."

"வண்டியா.. அது வெறும் டூ வீலர்தானா...?"

"வேறு என்ன அது..."

காதல் அதீதமாக இருக்கும் இடத்தில் சிறு அனல் பொறி கூட பெரும் காட்டுத்தீயாகப் பரவி எரித்து விடும்.. இப்போதும் அதுதான் நடந்தது..

## 29

"நான் உன்னிடம் அனுப்பியது வெறும் டூ வீலரை இல்லைடி.. அது என் நெஞ்சம்டி... அது என் நெஞ்சம்..."

ஹரிஹரன் பொரிந்தான்.. ரூபிணி இதழ் கடித்தாள்.. அவள் கண்கள் கலங்கி விட்டன.. இவனது காதல் தீயில் பற்றி

எரிந்தாலும் ஏன் இவனை அவளால் வெறுக்க முடியவில்லை...?

"ஹரி... நானாக எதையும் சொல்லவில்லை.. நீங்கள் தான் என் வாயைப் பிடுங்கி வார்த்தைகளை வரவழைக் கிறீர்கள்.." அவள் எரிச்சலுடன் கூறினாள்..

"ஓகோ.. வாயைப் பிடுங்கினால் என்ன வேண்டு மானாலும் பேசி விடுவாயா..?" வெறுப்புடன் கேட்டான் அவன்..

"நீங்கள் பேசிய விதம் அப்படி...?"

"உனக்குப் பிடித்த மாதிரி பேச என்னால் முடியாது.. நான் இப்படித்தான் பேசுவேன்..."

"நான் மட்டும் உங்களுக்குப் பிடித்த மாதிரிப் பேச வேண்டுமா...?"

"ஏய்.. எனக்குப் பிடித்த மாதிரிப் பேசச் சொல்லி உன்னை எப்போதாவது கட்டாயப்படுத்தியிருக்கிறேனாடி.. பிடிக்காதவளின் நிழலைக் கூட இந்த ஹரிஹரன்

திரும்பிப் பார்க்க மாட்டான்.. நீதானேடி.... ஹோட்டலில் என் அருகே வந்து தானாக உட்கார்ந்தாய்.. விடிய விடிய நான் போனில் பேசும்போது தூங்காமல் விழித்திருந்து என்னோடு பேசினாய்.. அப்புறம் என்ன செய்தாய்..? அந்த அன்பில் நிலையாக நின்றாயா..? இல்லையே... ஊர் பார்க்கிறது... உலகம் பார்க்கிறது என்று பயந்தாய்..

நான் உன் அன்பைக் கேட்டு உன்னை வற்புறுத்தினேனா... விலகித்தானே சென்றேன்.. உனக்காக என் ஊரை விட்டே வட இந்தியாவிற்குப் போய் மாதக் கணக்கில் இருந்தேனடி.... திரும்பி வந்தவனைப் போகவிடாமல் மண்டபத்தில் மயக்கி நிறுத்தியது யார்..? நீதானேடி.. அன்று ஒரு பாட்டுப் பாடினாயே.. அது என்ன பாட்டு..? ம்ம்... நினைவு வந்து விட்டது. 'பொன் விலங்கை வேண்டுமென்றே பூட்டிக் கொண்டேனே...' நீ சிறையில் மாட்டியிருப்பதாய் கதறிப் பாடி என் மனதைக் கரைத்தது நீதானேடி.... அப்போதும் உன் அழைப்பில்லாமல் நான் உன்னிடம் வரமாட்டேன் என்ற என் உறுதியில் நிலையாய் நின்றேனடி.. உன் கண்ணில் படாமல் பின்பக்க மாடிப் படியில் இறங்கிப் போய் விட நினைத்து வந்தால்

தோட்டத்தில் நிற்கிறாய்.. உன் தோழிகள் போன பின்னாலும் இருட்டில் என்னை எப்படி அடையாளம் கண்டாய்..? ஏன் என் அருகில் நெருங்கி வந்தாய்..? நீயாக வாய் திறந்து ஏன் பேசினாய்..? நான் கை தொட்ட மறு நொடியில் என் நெஞ்சில் ஏன் முகம் புதைத்தாய்..? இத்தனையும் செய்து விட்டு நீ யார்... நான் யார்...? உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் என்று வேறு கேட்கிறாய்.. என்ன நெஞ்சழுத்தம்டி உனக்கு...?"

ஹரிஹரன் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ரூபிணியின் நெஞ்சைச் சுட்டன.. இவை அனைத்தும் இல்லையென்று அவள் மறுக்கவில்லையே.. ஆனால் 'நீயார்.. எனக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்..?' என்ற ரீதியில் அவள் பேசியதும் தவறுதானே...

கோபம் வந்து விட்டால் இன்னது பேசுகிறோம் என்று ஏன் தனக்கு மறந்து போகிறது என்று தன்னைத் தானே நொந்து கொண்டவளாய் அவள் கூறினாள்..

"ஹரி... நான் பேசியது தவறுதான்.. ஆனால் என் பேரண்ட்ஸின் சொல் கேட்டு மனம் மாறிவிடுவேன் என்று நீங்கள் நினைத்துப் பேசியதும் தவறுதான்..."

மறு முனையில் மௌனம் நிலவியது.. சற்று நேரம் கழித்துப் பேசிய ஹரிஹரனின் குரலில் கோபம் அப்படியே இருந்தாலும் வேகம் குறைந்திருந்தது..

"சரி... நீ பேசியது தவறா.. இல்லை நான் பேசியது தவறா என்று ஆராய்ச்சி பண்ண இப்போது நேரம் இல்லை.. ஒன்றை நீ உறுதியாக தெரிந்து கொள்.. நீ உன் பெற்றோரைப் பார்க்கப் போவதாக இருந்தால் என்னுடன் தான் போக வேண்டும்..."

"அது எப்படி சாத்தியம்..?"

"ஏய்.. சாத்தியமில்லாதது என்று என் வாழ்வில் எதுவும் இல்லை.. தெரிந்ததா...?"

"நீங்கள் உங்களைப் பற்றியேதான் பேசுகிறீர்கள்.. என்னைப் பற்றியும் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.."

"நீ வேறு நான் வேறு இல்லை.. உன்னைப் பற்றித் தனியாக நினைக்க என்ன இருக்கிறது..? என் வழி எதுவோ.. அதுதான் உன் வழி.. என்னைப் பின் பற்றி நடக்க நீ பழகிக் கொள்..."

ரூபிணி பேச வழியின்றி திகைத்து நின்றாள்.. பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவளாய்..

"ஓ.கே. நீங்கள் காரை எடுத்துக் கொண்டு வாங்க.. நான் வருகிறேன்.. சேர்ந்தே போகலாம்..." என்றாள்..

"தெருமுனையில் வெயிட் பண்ணவா..?"

"இவ்வளவு நடந்த பிறகு தெருமுனையில் எதற்கு வெயிட் பண்ண வேண்டும்..? கோவில்பட்டிக்கே சேர்ந்து போகப் போகிறோம் விழுப்புரத்தில் ஹாஸ்டல் வாசலில் இருந்து சேர்ந்து போவதில் என்ன வந்து விடப் போகிறது.. ஹாஸ்டலுக்கே வாங்க.."

"குட்..." மறுமுனை துண்டிக்கப்பட்டது..

ரூபிணி பெருமூச்சுடன் தரையில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்து யோசித்தாள்.. செல்போனை எடுத்து அவளது அக்காவை அழைத்தாள்..

"சொல் ரூபிணி..."

"அக்கா.. எனக்கு உன் உதவி வேண்டும்.."

"பணம் வேண்டுமா..?"

"இல்லை.. எனக்கு உன் சப்போர்ட் வேண்டும்.."

"எதற்கு..?"

"என் காதலுக்கு.."

"காதலா... நீயா..."

"ஏன் நான் காதலிக்கக் கூடாதா? அக்கா நீயும் காதலித்து கல்யாணம் பண்ணிக் கொண்டவள்தான்.. உன் காதலர் நம் இனம்.. வேறு பிரச்னைகள் இல்லாத குடும்பம்.. ஒரே படிப்பு.. ஒரே ஊரில் வேலையென்பதால் எளிதாக உன் காதலில் நீ ஜெயித்து விட்டாய்.. ஆனால் என் கதை அப்படியில்லை..."

"அவர் வேறு ஜாதியா..?"

"ஆமாம்..."

"என்ன வேலை பார்க்கிறார்..?"

"ஆயிரக்கணக் கானவர்களுக்கு வேலை கொடுக்கிறார்..."

"பெரிய இடமா...?"

"ஆமாம்.."

"பெயர் என்ன..?"

"ஹரிஹரன்..."

"வாட்...? விழுப்புரம் ஹரிஹரனா...?"

"அவரேதான்..."

"ரூபிணி... எப்படி பயமில்லாமல் சொல்கிறாய்..?"

"பயத்தையெல்லாம் தாண்டி விட்டேன்... வாழ்ந்தால் அவருடன் தான் வாழ்வேன்.. இது மட்டும் உறுதி அக்கா.."

"நம் அம்மா... அப்பாவிற்குத் தெரியுமா...?"

"தெரிந்துதான் என்னை வரச் சொல்லி இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.. அம்மாவுக்கு சீரியஸ் உடனே புறப்பட்டு வாவென்று அப்பா காலையில் போன் பண்ணினார்..."

"என்னிடம் சொல்லவில்லையே..."

"பொய்யை உன்னிடம் சொல்ல வேண்டிய அவசிய மில்லையே.. என்னைத்தானே அவர் வரவழைக்க வேண்டும்..."

ரூபிணி போனில் விசும்பினாள்.. அவளது தமக்கை செய்வது அறியாது திகைத்தாள்...

# 30

"அக்கா.... நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும். அம்மா அப்பாவை எதிர்த்து கல்யாணம் பண்ணிக் கொள்ள எனக்கு விருப்பமில்லை.. அதே சமயம் ஹரிஹரனை மறக்கவும்.. பிரியவும் என்னால் முடியாது.. எனக்கு என்

பெற்றவர்களின் சம்மதத்தோடு ஹரிஹரனுடன் என் கல்யாணம் நடக்க வேண்டும்.."

"இது நடக்கக் கூடிய காரியம் என்று எனக்குத் தோன்றவில்லை..."

"நீயே இப்படிச் சொன்னால் எப்படி அக்கா..."

"வேறு எப்படிப் பேச ரூபிணி..? நான் இருப்பது பெங்களூர்.. இங்கிருக்கும் எனக்கே ஹரிஹரன் என்ற பெயரைக் கேட்டதும் அவர் யார் என்று தெரிந்து விட்டது.. அம்மா அப்பா எப்படி இதற்கு சம்மதிக்கப் போகிறார்கள்..? திஸ் இஸ் இம்பாஸிபிள்..."

"ஸோ... நீ எனக்கு உதவ மாட்டாய்...?"

"அப்படி நான் சொன்னேனா...? நானும் உடனடியாகக் கிளம்பி ஊருக்கு வருகிறேன்.. உனக்காக நம் அம்மா... அப்பாவிடம் பேசிப் பார்க்கிறேன்..."

"தேங்க் யூ அக்கா..."

ரூபிணி போனை அணைத்துவிட்டு ஜன்னல் வழி சாலையைப் பார்த்தாள்.. ஹரிஹரனின் கார் நின்று கொண்டிருந்தது.. மளமளவென்று பெட்டியை எடுத்துக் கொண்டவள்.. அறையைப் பூட்டி சாவியை ஹேண்ட் பேகில் போட்டுக் கொண்டு படியிறங்கினாள்.. எதிர்ப்பட்ட ரோஜாரமணியிடம்,

"நான் ஊருக்கு அவசரமாகப் போகிறேன் ரோஜா ரமணி.. வார்டனிடம் சொல்லி விடு..." என்றாள்..

"சரிம்மா.. நீ கவலையில்லாமல் பூட்டு வா.." என்றபடி அவள் உள்ளே சென்று விட்டாள்...

வாசலுக்கு வந்த ரூபிணி பெட்டியை எங்கே வைக்க என்று தடுமாறி நிற்க கார் கதவைத் திறந்து கொண்டு ஹரிஹரன் இறங்கினான்.. அவளிடமிருந்த பெட்டியை வாங்கி பின் சீட்டில் வைத்து விட்டு முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான்..

'இவனோடு இது ஒரு தொல்லை.. எதையும் அச்சமின்றி செய்வான்.. இதை எத்தனை பேர் பார்க்கிறார் களோ என்று எண்ணமிட்டவள்.. வாயைத் திறந்தால் அவன் சும்மா விட

மாட்டான் என்ற பயத்துடன் வாயை மூடிக் கொண்டு காரில் ஏறி அவனருகில் அமர்ந்தாள்..'

காரை வேகத்துடன் கிளப்பிய ஹரிஹரனின் முகம் கல்லாக இறுகியிருந்தது.. இன்னும் அவன் கோபத்திலிருந்து விடுபடவில்லை என்பது புரிய அவள் நெஞ்சில் துயரம் மண்டியது.. இவனைக் கை பிடிக்க அவள் போராட வேண்டும்.. அதற்கு இவனது அன்பு துணை செய்ய வேண்டாமா..? இப்படி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வந்தால் அவளுக்கு எப்படி போராட சக்தி கிடைக்கும்..?

கார் உளுந்தூர்பேட்டையைத் தாண்டியிருந்தது.. நான்கு வழிப் பாதைகள் கொண்ட நெடுஞ்சாலையில் வேகம் கூட்டிப் பறந்து கொண்டிருந்தான் அவன்.. இருவருக்கும் இடையே இரும்புத் திரை போல் கனத்த மௌனம் நிலவியது.. அதைத் தாங்க முடியாத ரூபிணி தானே அவனை அழைத்தாள்.. அவன்தான் அவள் பேசாமல் பேச மாட்டானே...

"ஹரி..." மெல்லிய குரலில் அழைத்தாள் ரூபிணி..

"சொல்லு..." அவன் பார்வை சாலையில் பதிந்திருந்தது..

"ஐ ஆம் ஸோ ஸாரி..."

"ஸாரி சொல்லி விட்டால் சரியாகிப் போய் விட்டதா..?"

"நான் வேறு என்னதான் செய்ய வேண்டும்...?"

"எதையும் செய்ய வேண்டாம்.. வாயை மூடிக் கொண்டு வந்தால் போதும். உன்னுடன் பேசவே எனக்குப் பிடிக்கவில்லை..."

அவன் வார்த்தைகளில் வெறுப்பை உமிழ்ந்தான்.. அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

"என்னுடன் பேசப் பிடிக்கவில்லையா..? இல்லை என்னேயே பிடிக்கவில்லையா...?"

"ஏய்ய்.. வாயை மூடிக் கொண்டு பேசாமல் வாடி..."

"இல்லை.. நான் பேசுவேன்.. என்னைப் பிடிக்காதவர் ஏன் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்...?"

"பேசாதேன்னு சொன்னேன்..."

"அப்படித்தான் நான் பேசுவேன்.. என் மேல் நம்பிக்கை இல்லாமல் தானே என்னுடன் கோவில்பட்டிக்கு வருகிறேன் என்று சொன்னீர்கள்.. என் மேல் நம்பிக்கை இல்லாதவர் ஏன் என்னைக் காதலிக்க வேண்டும்...?"

"இப்போது பேச்சை நிறுத்தப் போகிறாயா இல்லையா...?"

"மாட்டேன்.. உங்களை நான் மயக்கினேன் என்றீர்களே.. என்னை நீங்கள் மயக்கவில்லையா..? லாரன்ஸிற்கு வேலை கொடுங்கள் என்று கேட்டேன்.. உனக்காக வேலை கொடுக்கிறேன் என்று கொக்கி போட்டது யார்...? நீங்கள்தானே.. ஹோட்டலில் ஒரு அயோக்கியனின் அருகாமையிலிருந்து தப்பிக்க உங்கள் அருகில் வந்து அமர்ந்தேன்.. மையலுடன் என்னிடம் பேசியது யார்..? நீங்கள் தானே... ஹாஸ்டலுக்கு நான் வந்த பின் விடியும் வரை என்னுடன் போனில் பேசியது யார்..? நீங்கள் தானே... பெரிதாய் விலகிச் சென்றேன் என்று சொல்கிறீர்கள்.. சும்மாவா விலகிச் சென்றீர்கள்..? புது டூ வீலரை வாங்கிக் கொடுத்து விட்டு.. 'இது என் நெஞ்சமடி நெஞ்சம்' என்று கடிதம் எழுதி விட்டுச் சென்றது யார்...? நீங்கள்தானே... அன்றைக்கு கல்யாண மண்டபத்தில் ஜமுனாவுடன் நான் வீடியோவுக்கு போஸ் கொடுக்கும் போது மின்னல் போல் மேடைக்கு வந்து நந்தகோபாலன் பக்கத்தில் நின்று கொண்டு போஸ் கொடுத்தது யார்...? நீங்கள்தானே.. தோட்டத்து இருட்டில் என் கைபற்றி இழுத்தது யார்..? நீங்கள்தானே... உங்கள் மேல் சாய்ந்த என் முகம் பற்றி... முகம் பற்றி..."

மேலே சொல்ல முடியாமல் அவள் வெட்கத்துடன் தடுமாற அவன் சரக்கென்று காரை ஒடித்துத் திருப்பி சாலையோரமாய் நிறுத்தினான்.. புயல்போல் அவள்

தோள் பற்றி இழுத்து அவள் முகத்தோடு முகம் வைத்து அவளது இதழ் மீது இதழ் பதித்தான்.. ரூபிணி தன் வசமிழந்து அவனது அணைப்பில் தஞ்சம் புகுந்தாள்..

சற்று நேரம் கழித்து அவளை விட்டு விலகியவன் அவளை முறைத்தான்..

"பேசாதே.. பேசாதேன்னு சொல்லச் சொல்லப் பேசினாயே... நான் தோட்டத்தில் என்ன செய்தேன் என்பதைச் சொல்ல வேண்டியதுதானே ஏன் வாயடைத்துப் போனாய்..? அதனால்தான் அன்று நடந்ததை இன்று மீண்டும் நினைவு படுத்தினேன்..." என்று கிறங்கிய குரலில் கூறவும் செய்தான்...

'இவனது ஒரு கண்ணில் நிலவும்.. மறு கண்ணில் சூரியனும் இருக்கிறார்கள் போல... முறைத்துக் கொண்டே கிறங்குகிறான்...'

வெட்கப் புன்னகையுடன் அவனது தோளில் முகம் புதைத்தாள் ரூபிணி...

"இந்தக் கொஞ்சலில் ஒன்றும் குறைச்சல் இல்லை.." மனத்தாங்கலுடன் பேசினான் ஹரிஹரன்...

"வேறு எதிலும் குறைச்சல் இல்லை.. ஹரி.. முக்கியமாய் என் காதலில்.. வாழ்ந்தால் உங்களுடன் வாழ்வேன்.. இல்லையென்றால் உங்கள் காலடியில் உயிரை விடுவேன்..." ரூபிணி கண்ணீர் மல்கக் கூறினான்..

ஹரிஹரன் விதிர்த்துப் போனான்.. 'என்ன வார்த்தைகளைச் சொல்லி விட்டாள் அவள்..?' அவளது தலை முடியைப் பற்றி அவளது முகத்தை உயர்த்தி விழியோடு விழி நோக்கினான்..

"எனக்கு இதுதான் தலை விதி என்று நீயும் தீர்மானித்து விட்டாயா..? அன்றைக்கு என் கண் முன் என்னைப் பெற்றவர்கள் இறந்தார்கள்... அது போல் நீயும் போக முடிவு செய்து விட்டாயா...?"

"இல்லை ஹரி... நான் வந்து..."

"நீ எதுவும் சொல்ல வேண்டாம்... பெற்றவர்கள் இல்லாமல் நான் வாழ்ந்தது பழி வாங்க.. படை பலத்தை உருவாக்க... ஆனால் நீயில்லாமல் நான் வாழ மாட்டேன்..."

"என் காதலின் உறுதியைச் சொன்னேன் ஹரி..."

"உன் காதலின் உறுதி பற்றி எனக்கும் தெரியும்டி..."

ஹரிஹரன் அவளை முரட்டுத் தனமாய் இழுத்து அணைத்துக் கொண்டான்.. அவனது காதலின் தீவிரம்

அதில் தெரிந்தது...

# 31

"உன் காதலில் எனக்கு சந்தேகமில்லை ரூபிணி... உன் மேல் நம்பிக்கை இல்லாமல் நான் அப்படிப் பேசவில்லை.. ஆனால் உனக்கு சமூகத்தைப் பற்றிய பயம் உண்டு.. என் மேல் உயிராய் இருந்தவள்.. உன் தோழிகளின் பேச்சுக்கும் கட்டுப்பட்டாய்... என்னை விட்டு விலகி நிற்கத் துணிந்தாய்... தோழிகளின் பேச்சுக்கே அவ்வளவு மதிப்புக் கொடுத்த நீ.. பெற்றவர்களின் பேச்சிற்கு எவ்வளவு மதிப்பு கொடுப்பாய்..?"

"அப்படியென்றால் உங்களை மறந்து... இன்னொரு வனை மணந்து கொள்வேனா...?"

"இல்லைடி... நான் அப்படிச் சொல்லவில்லை.. அன்று ஜமுனாவின் ரிசப்ஷனில் நீ பாடிய போது உன்னிடமிருந்து வெளிப்பட்ட வேதனையை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை.. மீண்டும் என்னைப் பிரிய வேண்டிய நிலை வந்தால் நீ உயிரோடு இருக்க மாட்டாய்.. அது எனக்கு நிச்சயமாய் தெரியும்.. இந்த ஹரிஹரன் ஒரு நாளும் அதை நடக்க விட மாட்டான்..."

"ஹரி..." ரூபிணி அழுது விட்டாள்..

"அழாதே.. என்னுடன் தான் நீ உன் பெற்றோரைப் பார்த்துப் பேச வேண்டும்.. அவர்கள் சம்மதித்தால் அவர்கள் சம்மதத்தோடு நம் கல்யாணம் நடக்கும்..."

"சம்மதிக்கா விட்டால்..."

"அப்போதும் ஊரையே அழைத்துப் பிரம்மாண்டமாய் கல்யாணம் நடத்தி பகிரங்கமாய்த்தான் உன் கழுத்தில் தாலி கட்டுவேன்..."

ரூபிணி மௌனமானாள்.. அவன் சொல்வதில் இருந்த நியாயம் புரிந்தது.. மெள்ள அவன் பக்கம் நெருங்கி அவன் தோள் மேல் தலை சாய்த்துக் கொண்டாள்..

ஹரிஹரனின் மனம் நிம்மதியாகி விட்டது.. 'இவள் பூஞ்சை மனம் கொண்டவள். என் மேலிருக்கும் காதல் பெரிதா... பெற்று வளர்த்தவர்களின் பாசம் பெரிதா என்ற கேள்வி இவள் முன் எழுந்து விடக்கூடாது.. இவள் அதைத் தங்கி நிற்க மாட்டாள்.. உயிரை விட்டு விடுவாள்.. இரண்டில் எது வேண்டும்..? என்ற கேள்வியையே தவிர்த்து விட வேண்டும்.. இது மட்டும்தான்.. என் காதல் மட்டும்தான் என் காதல் மட்டும்தான் உனக்கு... வேறு எதுவும்... எந்தவித பந்த பாசமும்.. நினைவும் உன் மனதில் இருக்கக் கூடாது என்று கட்டளையிட்டு சிறைப் படுத்தினால்தான் இவளைக் காப்பாற்றி கை பிடிக்க முடியும்...'

திருச்சியில் ஹோட்டலின் முன் காரை நிறுத்தினான்..

"வா... சாப்பிடலாம்.."

"எனக்குப் பசியில்லை ஹரி..."

"எனக்குப் பசிக்கிறதே.. நீ சாப்பிடாமல் நான் சாப்பிட மாட்டேனே..."

அவள் பதில் பேசாமல் இறங்கினாள்.. அவன் முகத்தில் இளநகை அரும்பியது.. இவள்தான் சில மணி நேரங்களுக்கு முன்னால் உனக்கும்... எனக்கும் என்ன சம்பந்தமென்று கேட்டாள்.. இப்போது அவனது பசிக்காக அவளுக்கு தேவையில்லாவிட்டாலும் சாப்பிட வருகிறாள்.. இவளுக்கு ஊடலும் தெரிகின்றது... கூடலும் இயல்பாய் வருகின்றது.. இவளில்லாத வாழ்வை நினைக்கவே முடியாதே...

"என்ன சாப்பிடுகிறாய்...?"

"உங்களுக்குப் பிடித்ததை ஆர்டர் கொடுங்கள்..."

"உனக்கு என்னடி பிடிக்கும்..."

'எனக்கு உன்னைத்தான் பிடிக்கும்...' மனதில் நினைத்துக் கொண்டவளின் முகத்தில் புன்னகை வந்தது.. அருகில் சர்வர் இருந்ததால்... விரல் நீட்டி 'நீ' என்று ஜாடை காட்டினாள்.. அவன் அவளை இமைக்காமல் ஒரு கணம் பார்த்தான்.. பின்னர் சர்வரிடம் தேவையானதை

சொல்லிவிட்டு அவளருகே சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்..

"என்னடி ஜாடை காட்டினாய்...?"

"ஏன்... புரியவில்லையா...?"

"உன் வாயால் சொல்லேன்..."

"உங்களுக்குத்தான் நான் வாய் திறந்தால் பிடிக்காதே.."

அவன் டேபிளுக்கு அடியிலிருந்த அவளது முழங்கையில் கிள்ளினான்.. அவள் சிரித்துக் கொண்டே தலை சரித்து அவனைப் பார்த்துச் சிரித்தாள்.. அவன் மயங்கிப் போனான்..

"வரிசையாய் நெருக்கிக் கட்டப்பட்ட முத்துச் சரம் போல் உன் பல் வரிசை என்னை மயக்குதுடி... சிரித்தே மயக்கு..."

"ரொம்பவும் மயங்கினவர்தான்... மயங்கியவர் பேசிய பேச்சைத்தான் காலையில் கேட்டேனே..."

"இந்த மாதிரியான நேரத்தில் எதை நினைவு படுத்துகிறாய் பார்... உன்னை..."

அவன் பல்லைக் கடித்துக் கொண்டு முறைத்தான்.. அவனது கோபத்தை ரசித்தவள் விஷமப் புன்னகையுடன் கூறினாள்..

"அப்பா... கோபத்தைப் பாரேன்.. மூக்கு நுனியில் கோபத்தை வைத்திருப்பீர்களா..? முசுட்டு ஹரிஹரன்.."

"என்னடி பட்டப் பெயர் வைக்கிறாயா..?"

"அப்படித்தான்... போங்களேன்.. ஆனால் ஒன்று ஹரி..."

"என்னடி...?"

"நான் சிரித்துத்தான் உங்களை மயக்குகிறேன்.. நீங்கள் முறைத்தே என்னை மயக்கி வைத்திருக்கிறீர்கள்.."

ஹரிஹரனின் கண்கள் மின்னின... அவளது கரத்தை இறுகப் பற்றி அதில் யாரும் கவனிக்காமல் இதழ் பதித்தான். அப்போது அவனது செல்போனின் மணியொலித்தது.. எடுத்துப் பேசினான்..

"ம்ம்... ஓகே... ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணி விடு."

செல்போனை அணைத்துப் பாக்கெட்டில் போட்டவன் சர்வர் கொண்டு வந்து வைத்திருந்த உணவு வகைகளை அவள் பக்கமாய் தள்ளினான்..

"சாப்பிடு..."

"யாருக்கும் உடம்பு சரியில்லையா...?"

"ஆமாம்... உன் ஆபிஸில் வொர்க் பண்ணும் மூர்த்தி ஒரு ஆக்ஸிடெண்டில் மாட்டி ரோட்டில் கிடக்கிறானாம்.. ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணச் சொன்னேன்... நீ சாப்பிடு..."

அவன் நிதானமாய் ரசித்துச் சாப்பிட ஆரம்பித்தான்..

# 32

ரூபிணியின் கையிலிருந்த முள் கரண்டியும் ஸ்பூனும் நழுவின.. அதிர்ச்சியுடன் விழியகல ஹரிஹரனைப் பார்த்தாள் அவள்.. இவனால் எப்படி ஒருவனை ரத்தக் காயம் வர அடிக்கச் சொல்லிவிட்டு அமைதியாய் சாப்பிட முடிகின்றது.. அவளுக்கு முதுகுத் தண்டு பயத்தில் ஜில்லிட்டது..

அவன் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்து அவளது உணர்வுகளை இனம் கண்டு கொண்டான்..

'பயந்து விட்டாள்...' மனம் கூற இதமாய் அவளைப் பார்த்துச் சிரித்தான்..

"என்னடி... என்னை புதிதாய் பார்ப்பது போல் பார்க்கிறாய்..."

"புதிதுதான்.. இந்த ஹரிஹரன் எனக்குப் புதிதுதான்.."

"ரூபிணி... அவனைக் கொல்லவில்லை... கைகால்.. உடல் உறுப்புகளுக்கு சேதம் விளைக்கவில்லை.. நாலு தட்டி தட்டி ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணச் சொல்லியிருக்கிறேன்..."

"அதைக் கூட ஏன் செய்ய வேண்டும்...?"

"செய்யாமல் விட்டால் அவன் கொட்டம் அடங்காது.. இவனும் ஒரு வகையில் ரௌடிதான்.. இவனை அடக்கித்

தான் ஆக வேண்டும்.. எனக்கு பெண்களை டார்ச்சர் பண்ணும் வீரர்களை என்றைக்குமே பிடிக்காது.. இவன் என்னடாவென்றால் என் பெண்டாட்டியையே டார்ச்சர் பண்ணுகிறான்.. சும்மா விட்டு விடுவேனா..?"

"உங்கள் பெண்டாட்டியா..? என்னையா சொல்கிறீர்கள்..?"

"இல்லைடி... ரோட்டில் போகிறவளைச் சொல்கிறேன்.. அறை வாங்கப் போகிறாய்.. பேசாமல் சாப்பிடு.."

"நமக்கு இன்னும் கல்யாணம் நடக்கவில்லை.."

"ஏய்ய்.. கல்யாணம் என்பது ஊருக்காகத்தான்.. என்று நீயாய் என் தோள் சாய்ந்தாயோ.. அன்றிலிருந்து நீதான் என் பெண்டாட்டி.."

ரூபிணியின் கலக்கம் விலகி காதல் வந்தது.. ஹரிஹரனைப் பார்த்துக் கொண்டே சாப்பிடும்போது உணவு கூட என்றையும் விட இன்று அதிகமாய் ருசிப்பது போல் ரூபிணிக்குத் தோன்றியது.. ஊடே ஓர் முறை அவளைப் பார்த்த ஹரிஹரன் அவளது பார்வையைக் கண்டு புருவங்களை உயர்த்தி கண் சிமிட்டினான்.. அவளது முகம் சிவந்து விட்டது..

'இவன் இருக்கிறானே.. காதல் ரௌடி..'

ஹோட்டலை விட்டு வெளியே வந்து காரில் ஏறி அமர்ந்தார்கள்.. காரைக் கிளப்பினான் ஹரிஹரன்.. ஏ.ஸி.யின் இதமான குளிர் காருக்குள் பரவியது.. அருகே அமர்ந்திருந்த ரூபிணியை ஓர் முறை திரும்பிப் பார்த்துக் கொண்ட ஹரிஹரனின் மனதில் உல்லாசமும்.. மகிழ்ச்சியும் போட்டி போட்டுக் கொண்டு பீறிட்டன.. ஒரு மணி நேரம் உடன் அமர்ந்து பேச மாட்டாளா.. என்று ஏங்கியவன் அவன்.. இன்று அவள் அவன் தோள் சாய்ந்து பல மணி நேரமாக அவனருகே பயணிக்கிறாள்..

ஹரிஹரன் சீழ்க்கையடித்தபடி காரை ஓட்டினான்.. ரூபிணி அவனது உற்சாகத்தை ரசித்தாள்.. ரசிக்கும் போதே கோவில்பட்டியில் ரெங்கநாதனும் வீரலட்சுமியும் அவர்களை எப்படி எதிர்கொள்வார்களோ என்ற பயம் அவள் மனதில் எழுந்தது.. முகம் வாட அவனிடமிருந்து விலகி அமர்ந்து ஜன்னல் வழி சாலையைப் பார்த்தாள்..

அவளது ஒதுக்கத்தைக் கண்ட ஹரிஹரன்..

"என்னடி..?" என்று வினவினான்..

"அப்பா.. அம்மாவை நினைத்துக் கொண்டேன்.."

"அதற்கெல்லாம் மூட் அவுட் ஆகாதே.. பார்த்துக் கொள்ளலாம்.."

ரூபிணி கலவரத்துடன் அவனைப் பார்த்தாள்..

'பார்த்துக் கொள்ளலாம் என்று என்ன அர்த்தத்தில் இவன் சொல்லுகிறான்..? எப்படிப் பார்த்துக் கொள்வான்..? மூர்த்தியை பார்த்துக் கொண்டது போலா..'

ஓரக் கண்ணால் அவளது முகத்தைப் பார்த்தவன் சிரித்து விட்டான்..

"பயப்படாதே.. மூர்த்தியைப் பார்த்துக் கொண்டது வேறு.. என் மாமனார் மாமியாரைப் பார்த்துக் கொள்வது என்பது வேறு.."

அவள் முகத்தில் அசடு வழிந்தது..

'என் பயத்தைக் கண்டு கொண்டான்.. ஜித்தன்..'

கோவில்பட்டி ஊர் எல்லைக்குள் கார் நுழைந்தது..

"உன் அப்பாவின் ஊரின் பெயரில்தான் கோவில் பட்டி என்று பட்டி இருக்கிறது.. ஆனால் ஊர் பக்காடவுன்.."

"என் அப்பாவின் ஊரா.. என் ஊரும் இதுதான்.."

"உன் ஊர் விழுப்புரம்தான்.."

ஹரிஹரனி குரலில் கண்டிப்பு இருந்தது.. ரூபிணி மௌனமானாள்..

'வீடு வந்து விட்டது.. இனிமேல் இவனிடம் வாய் கொடுக்கக் கூடாது.. வீட்டில் நிலைமை எப்படி இருக்கப் போகிறதோ..?'

வீட்டுக் காம்பவுண்டின் முன் கார் நின்றது.. ரூபிணி இறங்கி கேட்டைத் திறந்து விட்டாள்.. கார் வீட்டினுள் நுழைந்தது.. ரூபிணி நடுக்கத்துடன் ஹரிஹரன் வருவதற்காக காத்து நிற்கையில் வீட்டுக் கதவு திறந்தது..

கார் சத்தம் கேட்டு வாசல் கதவைத் திறந்து கொண்டு ரெங்கநாதனும்.. வீரலட்சுமியும் வந்தார்கள்.. ஹரிஹரன்

கார்க் கதவைத் திறந்து கீழே இறங்கி ரூபிணியின் அருகே நின்று கொண்டான்..

"பார்த்தாயா.. நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் உன் சின்ன மகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினாயே.. இப்போது அவள் ஜோடி போட்டுக் கொண்டு வந்து நிற்பதை உன் கண் குளிரப் பார்.."

வீரலட்சுமி பதட்டத்துடன் அக்கம் பக்கம் பார்த்தவாறு கணவனை அடக்கினாள்..

"சத்தம் போடாதீர்கள்.. அக்கம் பக்கம் கேட்டு விடப் போகுது.. உள்ளே வந்து பேசுங்கள்.."

"ஏண்டி ஊரே சிரிக்கப் பண்ணி விட்டாள் உன் செல்லப் பெண்.. நீ மூடி மறைக்கப் பார்க்கிறாய்.. எத்தனை நாள் மூடி மறைப்பாய்.."

"ஐயோ.. கொஞ்சம் மெதுவாய்த்தான் பேசுங்களேன்.."

வீரலட்சுமி அடக்கியும் கேட்காமல் வாயைத் திறந்த ரெங்கநாதன் கூரிய பார்வையுடன் நடுங்கிக் கொண்டிருந்த ரூபிணியின் கையைப் பிடித்துக் கொண்டு படியேறி வந்த ஹரிஹரனைக் கண்டதும் வாய் அடைத்துப் போனவராய் வீட்டுக்குள் பின் வாங்கினாள்..

வீட்டிற்குள் பிரவேசித்த ஹரிஹரன் ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டு ரூபிணியையும் அருகே அமர வைத்தான்.. பின்பு ரெங்கநாதனைப் பார்த்து எதிரேயிருந்த சோபாவைக் காட்டி,

"உட்காருங்களேன்.. ஏன் நிற்கிறீர்கள்..?" என்று உபசரித்தான்..

ரூபிணி பயத்துடன் கண்களிரண்டையும் மூடிக் கொண்டாள்..

"இது என் வீடு.." ரெங்கநாதன் உறுமினார்..

"ஸோ வாட்..?" அமர்த்தலாய் வினவினான் ஹரிஹரன்..

"என் வீட்டிற்குள் வந்து என்னையே உட்காரச் சொல்லுகிறீர்களா..?"

"உட்கார்ந்து பேச வேண்டிய விசயத்தை உட்கார்ந்து தானே பேச வேண்டும்..? உட்காருங்கள் மாமா.."

"மாமாவா..?"

"ஆமாம்.."

ரூபிணிக்கு அவர்களின் உரையாடலைக் கேட்டு சிரிப்பதா இல்லை அழுவதா என்று தெரியவில்லை.. விழி உயர்த்திப் பார்க்கக் கூட பயந்தவளாய் தரை மேல் விழிகளைப் பதித்திருந்தாள்..

ரெங்கநாதன் ஹரிஹரனைப் பார்ப்பதைத் தவிர்த்தார்.. மகளைப் பார்த்து, "ரூபிணி என்ன இதெல்லாம்" என்று கர்ஜித்தார்..

"அப்பா.. அம்மாவுக்கு உடம்பு சரியில்லையென்று சொன்னீர்களே.." ரூபிணி அச்சத்துடன் கேட்டாள்..

"நீ சரியில்லை.. அதனால்தான் அப்படிச் சொன்னேன்.."

"அப்பா.. நான் இவரைக் காதலிக்கிறேன்.. கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.."

"அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டாயா..? கேட்டியாடி.. உன் ஒன்றும் தெரியாத சின்னப் பெண் பேசுவதை.."

ரெங்கநாதனுக்கு ரூபிணியை இழுத்து நாலு அறை கொடுக்க வேண்டும் போல் ரத்தம் கொதித்தது.. ஆனால் அவரது ஆசையை நிறைவேற்ற முடியாமல் ஹரிஹரன் அவளது கையை இறுகப் பற்றிக் கொண்டு அவளுக்கு அரணாய் நின்றான்..

# 33

"என் பெயர் ஹரிஹரன் மாமா.."

"தயவு செய்து என்னை மாமாவென்று கூப்பிடாதீர்கள்.."

"வேறு முறை சொல்லிக் கூப்பிட முடியாதே.. அதனால் அதைப் பற்றிய பேச்சை விட்டு விட்டு என் பேச்சைக் கேளுங்கள்.. எனக்கு பல தொழில்கள் இருக்கின்றன..

கோடிக் கணக்கில் சொத்து இருக்கிறது.. நான் ரூபிணியை என் கண்ணுக்குள் வைத்து மகாராணி போல் பார்த்துக் கொள்வேன்.."

வீரலட்சுமிக்கு அவனை மிகவும் பிடித்திருந்தது.. இன்றைய உலகில் அடாவடியாய் இருந்தால்தான் பிழைக்க முடியும்.. இவன் என்ன அடுத்தவர் சொத்தை கொள்ள அடித்தானா..? சுயமாய் சம்பாதித்திருக்கும் கோடீஸ்வர மாப்பிள்ளை வீடு தேடி வந்து பெண் கேட்கும்போது.. ஜாதியாவது.. ஒன்றாவது.. இந்தக் காலத்தில் யார் அதையெல்லாம் பார்க்கிறார்கள்..

அவள் ஹரிஹரனைப் பார்த்து புன்னைக செய்தாள்..

"என்ன சாப்பிடுகிறீர்கள் மாப்பிள்ளை.."

"அம்மா.." ரூபிணி விழி விரிய தாயைப் பார்த்தாள்..

"சூடாய் ஒரு கப் காபி கொடுங்கள் அத்தை.. அதற்கு முன்னால் உங்களிடம் பேச வேண்டுமே.."

"பேசுங்கள் மாப்பிள்ளை.."

"எனக்கு அப்பா அம்மா இல்லை அத்தை.. என் சார்பில் பெரியவர்களாய் நிற்க என் தாய் மாமாவும் அத்தையும் தான் வருவார்கள்.. மற்ற கல்யாண வேலைகளை நீங்கள்தான் முன்னால் நின்று செய்ய வேண்டும்.."

வீரலட்சுமிக்கு உச்சி குளிர்ந்து விட்டது.. பெங்களூரில் கூட வேலை பார்க்கிறவனை காதலிக்கிறேன் என்று மூத்த பெண் தாரிணி வந்து நின்றாள்.. திருமணம் பேசிய போது மாப்பிள்ளையின் பெற்றோர் பெரிய லிஸ்டையே சீர் வரிசைப் பட்டியலாய் போட்டு நீட்ட காதல் செய்த மாப்பிள்ளை மௌனமாகிப் போனான்.. கடைசிப் பைசாவரை செலவழித்து தாரிணியின் திருமணத்தை முடித்து அனுப்பி வைத்தார்கள்..

இவன் என்னடாவென்றால் நீ என் கல்யாண வேலைகளை மட்டும் கவனித்தால் போதும் என்கிறானே..

"மாப்பிள்ளை.. எங்கள் பெண்ணுக்கு சீர் வரிசை.."

"அவளே எனக்குப் பெரிய சீர்வரிசை அத்தை.. கட்டிய புடவையுடன் அனுப்பி வையுங்கள் போதும்.."

வீரலட்சுமி மகிழ்ந்துபோய் காபி போட உள்ளே விரைய ரெங்கநாதன் அவளைப் பின் தொடர்ந்தார்.. ரூபிணி இவ்வளவு எளிதாக தன் திருமணம் முடிவாகி விட்டதா என்பதை நம்ப முடியாமல் திகைத்தாள்.. ஹரிஹரன் அவளைப் பார்த்து மர்மமாய் புன்னகைத்தான்..

"என்னடி நினைச்சுக்கிட்டு இருக்கே.. இது என்ன ஆம்பளை இல்லாமல் பொம்பளை ராஜ்ஜியம் கட்டி ஆள்கிற வீடா.. உன் இஷ்டத்துக்கு அவனிடம் கல்யாணம் பேசி முடிவு பண்ணுகிற.. என்ன விஷயம்..?" ரெங்கநாதன் விரோதமாய் மனைவியைப் பார்த்தபடி கேட்டார்..

சூடான காபியை ஆற்றியபடி கணவரின் முகம் பார்க்காமல் "வீட்டு ஆம்பளை.. பொண்டாட்டிக்கு நல்ல புருசனா பெத்த பொண்ணுக்கு நல்ல அப்பனா இருந்தால் வீட்டுப் பொம்பளை ஏன் ராஜ்ஜியம் கட்டி ஆள நினைக்கப் போகிறாள்..? தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் எங்காவது நெறி கட்டுமா..? காதல் பிடிக்கலைன்னா பெண்ணைக் கண்டிக்கலாம்.. அதை விட்டு விட்டு உங்க அக்காள் மகன் ஊரறிஞ்ச பொறுக்கி.. அவனுக்குப் போய் என் பெண்ணைக் கட்டிக் கொடுக்கத் திட்டம் போட்டிங்களே.. அப்பவே எனக்கு உங்க புத்தி தெரிஞ்சு போச்சு.. என் பொண்ணு எப்படா மாட்டுவா நாம் இதுதான் சாக்குன்னு அக்கா மகன் கையில் பிடிச்சுக் குடுத்திடலாம்கிறது தானே உங்க கனவு..? நான் அதை நடக்க விட மாட்டேன்.." என்று கடுகடுப்பாய் பதில் கூறினாள்..

"வீரலட்சுமி.. அதெல்லாம் நம் வீட்டு உள் விவகாரம்டி.. வந்திருப்பவன் நாடறிஞ்ச தாதா.."

"பொறுக்கிக்கு தாதா பெட்டர்.."

"ஏய்.. வேணாம்டி சொன்னால் கேளு.. அவன் கொலை செய்யவும் அஞ்சாதவன்.. அவனைக் கண்டால் அவனது ஜில்லாவே பயப்படுதாம்.."

"எனக்கு அதுதான் வேண்டும்.. உங்க அக்கா மகன்.. கண்டபடி அலைகிற அந்த நாதாரி.. என் மகளை கனவில் நினைச்சுப் பார்க்கக் கூட பயப்படுவான்.."

வீரலட்சுமி அலட்டிக் கொள்ளாமல் பேசியபடி காபிக் கோப்பைகளை எடுத்து டிரேயில் அடுக்கி ஹாலுக்குக் கொண்டு சென்றாள்.. ரெங்கநாதன் அடங்கிப் போனவர் போல் பின் தொடர்ந்து சென்று ஹால் சோபாவில் உட்கார்ந்து கொண்டார்..

"என்ன மாப்பிள்ளை செய்வது..? உங்களுக்கு தாய்க் குலத்தின் ஆதரவு எக்கச்சக்கமாக இருக்கிறது.. பெண்ணை விட்டு விட்டுப் போங்க.. நீங்க சொன்ன நாளில் வந்து உங்கள் கையில் பிடித்துக் கொடுக்கிறோம்.."

ரெங்கநாதனே ஒப்புக் கொண்டார் என்றதும் ரூபிணி மகிழ்ந்து போனாள்..

"அப்பா.. தேங்க்ஸ் அப்பா.." என்று ஓடிப்போய் அவரது கால்களில் விழுந்தாள்..

"எழுந்திரும்மா.. எப்படியோ நீ நன்றாக இருக்க வேண்டும்.. எங்களுக்கு அதுதானே வேண்டும்.." கண்ணாடியைக் கழற்றி கண்களைத் துடைத்துக் கொண்டார் ரெங்கநாதன்..

"மாமா.. வரும் புதன்கிழமை நல்ல முகூர்த்த நாள்.."

"இன்னும் ஆறே நாட்கள்தான் இருக்கிறது மாப்பிள்ளை.. மண்டபம் கிடைக்குமா..? இன்விடேசன் அடித்துக் கொடுக்க நாள் வேண்டாமா..?"

"எனக்குச் சொந்தமான மண்டபம் இருக்கும்போது ஊரில் வேறு ஒரு மண்டபத்தை நான் ஏன் தேட வேண்டும் அத்தை..?"

வீரலட்சுமி மகிழ்ந்து போனாள்.. ஹரிஹரன் எழுந்து கொண்டான்.. "அப்போ.. நான் கிளம்பட்டுமா மாமா.. கிளம்புகிறேன் அத்தை.."

ஹரிஹரனின் கார் கிளம்பிப் போன சற்று நேரத்தில் வாசலில் மீண்டும் கார் சத்தம் கேட்டது.. ஓடிப்போய் பார்த்தார்கள்.. தாரிணி தன் கணவன் குமாருடன் இறங்கிக் கொண்டிருந்தாள்..

"தாரிணி.. என்னம்மா திடீர்ன்னு கிளம்பி வந்திருக்கிறாய்.. வாங்க மாப்பிள்ளை.. நீங்கள் வந்ததும் நல்லதாகப்

போயிற்று.. ரூபிணிக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கிறோம்.."

வீரலட்சுமி மகிழ்வாய் மூத்தமகளையும் மருமகனையும் வரவேற்றாள்.. சற்று நேரத்தில் நவின் காலேஜிலிருந்து வந்து விட்டான்.. மூத்த சகோதரிகளைக் கண்டதும் அவனுக்குக் கொண்டாட்டம்.. வீரலட்சுமி வீட்டில் கல்யாணக் களை வந்து விட்டதாக நினைத்து மகிழ்ந்து போனாள்..

இரவுச் சாப்பாடு முடிந்ததும் ரெங்கநாதன் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்து,

"காலையில் நம்ம பெருமாள் கோவிலில் சிறப்பு அபிசேகத்திற்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்.. குடும்பத்தோடு போக வேண்டும்.. காலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து எல்லோரும் ரெடியாகி விடுங்கள்.. வேனை வரச் சொல்லியிருக்கிறேன்.." என்றார்..

"விடியற்காலை நான்கு மணிக்கேவா.." வீரலட்சுமி விழித்தாள்..

"அதிகாலையில் அபிஷேகம்டி.. சரிசரி.. பேச்சை வளர்க்காமல் எல்லோரும் காலா காலத்தில் படுத்துத் தூங்குங்க.. காலையில் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும்.." ரெங்கநாதன் படுக்கப் போய் விட்டார்..

விடிந்தும் விடியாத இருள் பிரியாத அதிகாலை நேரத்தில் பெருமாள் கோவில் வாசலில் போய் நின்றது அந்த வேன்.. ரெங்கநாதன் குடும்பத்தினர் இறங்கினார்கள்.. கோவிலுக்கு வெளியே முரட்டு ஆட்கள் பலர் வெட்டரிவாள்.. வேல் கம்பு சகிதம் நின்று கொண்டிருந்தனர்.

'யாரு இவங்க.. தெரிந்த முகங்களாக இருக்கிறதே..' வீரலட்சுமி யோசனையுடன் பார்க்க,

"ம்ம்... சீக்கிரமாய் கோவிலுக்குள் போங்க.." என்று விரட்டினார் ரெங்கநாதன்.

கோவிலுக்கு உள்ளே ரூபிணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது.. ரெங்கநாதனின் அக்காள் குடும்பமும் அவர்களது உறவினர் கூட்டமும் கோவிலுக்குள் இருந்தனர்..

மணமேடை அமைக்கப்பட்டு அதில் ரெங்கநாதனின் அக்காள் மகன் அமர்ந்திருந்தான்.. வீரலட்சுமி அதிர்ச்சியுடன் கணவனைப் பார்க்க அவரோ.. "பேசாமல் போய் உன் சின்ன மகளை மணவறையில் உட்காரச் சொல்.. இல்லா விட்டால் விசத்தைக் குடித்து விடுவேன்.." என்று தயாராய் வைத்திருந்த விஷப் பாட்டிலைக் காட்டி மிரட்ட ஆரம்பித்தார்..

"அப்பா.. சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுக்கப் பார்க்கிறீர்களே.. ஹரிஹரனுக்கு வாக்குக் கொடுத்து விட்டு ரூபிணியை உங்கள் அக்காள் மகனுக்குக் கட்டி வைக்க நீங்கள் நினைத்தது மட்டும் ஹரிஹரனுக்கு தெரிந்து விட்டால் உங்கள் கதி என்னவாகும் தெரியுமா..?" தாரிணி தலையில் அடித்துக் கொண்டாள்..

"அக்கா... பேசாமல் இரு.. அப்பா... நான் இன்னொருவர் பக்கத்தில் மணவறையில் போய் உட்கார மாட்டேன்.. உங்களுக்கு ஹரிஹரனைத் தெரியாது.. உங்கள் எண்ணம் ஒரு நாளும் நிறைவேறாது.." ரூபிணி அழுத்தமாய் கூறினாள்..

"அது உன் அப்பாவிற்குப் புரிந்தால் ஏன் இப்படி அன்மெச்சூர் தனமாய் வில்லத்தனம் செய்யப் போகிறார்.." என்ற குரலைக் கேட்டு ஆனந்தத்துடன் திரும்பிப் பார்த்தாள் ரூபிணி.. ஹரிஹரன் நின்று கொண்டிருந்தான்.. அவன் கையில் துப்பாக்கி இருந்தது.. வாசலில் நின்று கொண்டிருந்த முரடர்களை ஹரிஹரனின் ஆட்கள் கட்டி வைத்திருந்தனர்.. கோவில் முழுவதும் ஹரிஹரனின் ஆட்களால் சூழப்பட்டிருந்தது..

ஹரிஹரன் மணமேடைக்கு வந்தான்.. பலி ஆடு போல் நடுங்கிக் கொண்டிருந்த ரெங்கநாதனின் அக்காள் மகனைப் பார்த்து,

"எழுந்திருடா.." என்று அதட்டினான்.. அவன் தப்பித் தேன்.. பிழைத்தேன் என்று ஓடி விட்டான்.. ஹரிஹரன் மணவறையில் அமர்ந்து மாலையைப் போட்டுக் கொண்டான்.. ரூபிணியை பார்வையால் அழைத்தான்..

அவள் தயங்காமல் வந்த அவன் அருகே அமர்ந்து கொண்டாள்..

ரூபிணியின் ஆசைப்படி அவளது ஊரில்.. பெருமாள் கோவிலில்.. அவளைப் பெற்றவர்கள்.. அவளுடன் பிறந்தவர்கள்.. அவளது சொந்தக்காரர்கள் முன்னிலையில் ஹரிஹரன் ரூபிணியின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டு தாலியைக் கட்டினான்..

விழுப்புரத்தில் அவனது மாளிகை போன்ற வீட்டில் முதலிரவில் அவனது மனைவியாக அவன் கரங்களுக்குள் அடங்கினாள் ரூபிணி.. போராட்டத்தை மட்டுமே அதுவரை அறிந்த ஹரிஹரன்.. அவனைக் காதலித்தவளை அன்று அறிந்து கொண்டான்.. போர்க்குணம் கொண்டவனை தன் நெஞ்சத்திலே கொண்டாடிய அந்தப் பேதை அவனது நெஞ்சத்தை மஞ்சமாக்கி துயில் கொண்டாள்.. இனி அவன் அவளது பொறுப்பு.. தாயாய்.. தோழியாய்.. காதலியாய் மனைவியாய் அவனை மடிதாங்க அவள் வந்து விட்டாள்.. ஹரிஹரன் என்னும் சிங்கம்.. சிறுமயிலின் கண்ணசைவில் கட்டுண்டு விட்டது..

அவனது நெஞ்சம் அவளுக்கும்.. அவளது நெஞ்சம் அவனுக்கும்.. நிரந்தரமாய் சொந்தமாகி விட்டது..

- முற்றும் -